தமிழ் நூல் விவர அட்டவணை

பொதுப் பதிப்பாசிரியர் :

கொண்டல் சு. மகாதேவன், பி.எல்லி., எம்.ஏ.

தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி இயக்கக வெளியீடு

1977

தமிழ்நாடு அரசினருக்காக தமிழ்நாடு எழுதுபொருள்-அச்சுத் துறை இயக்குநரால் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.

விலை ரூ. 17-75

தமிழ் வளர்ச்சி இயக்ககம்
5 - JUL 1977
சென்னை - 1

TAMIL NŪL VIVARA AṬṬAVAṆAI

தமிழ்நூல் விவர அட்டவணை

THE MADRAS STATE TAMIL BIBLIOGRAPHY

1916-1920

1916-1920

நான்காம் தொகுதி—இரண்டாம் பகுதி

VOLUME IV—PART-II

V.4 PĀKAM 2

பொதுப் பதிப்பாசிரியர்:

கொண்டல் சு. மகாதேவன், பி.எஸ்ஸி., எம்.ஏ

Ed By

MAKĀTĒVAN (Koṇṭal Cu)

தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி இயக்கக வெளியீடு

1977

முதற் பதிப்பு: 1976

2763/11
3

Д4ЭЧЗ

பதிப்பாசிரியர் குழு

1. புலவர் க. கு. சம்பத்
2. புலவர் வை. கண்ணையன்
3. திரு. டி. சி. சந்திரபாபு,
எம்.ஏ., பி.எஸ்ஸி., பி.லிப்.எஸ்ஸி., டி.ஆந்த்.
நூலகர்.

O1"a14-331,1211 N20 ← N16
31L2.4-2

தமிழ் நாட்டு அரசாங்கத்திற்காகத் தமிழ்நாட்டு எழுதுபொருள் அச்சுத் தொழில் கட்டுப்பாட்டு அதிகாரியால் பதிபிக்கப்பெற்றது.

23 AUG 1977
MADRAS

பதிப்புரை

இந்நூல் தமிழ் நூல் விவர அட்டவணை நான்காம் தொகுதியின் இரண்டாம் பகுதியாகும். இதன்கண் 1916ஆம் ஆண்டு முதல் 1920 ஆம் ஆண்டு வரையுள்ள காலப்பகுதியில் தமிழ்நாட்டில் அச்சிடப் பெற்று, உரிமை பதிவு செய்யப்பெற்ற நூல்களுள், ஆவணக் காப்பகத்தில் கிடைக்கப்பெற்ற நூல்களைப் பொருட்பாகுபடுத்தி, அகர வரிசை முறையில் நூல்களுக்குரிய விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் டியூவி பொருட்பாகுபாட்டின்படி 800, 900 எண் பகுதிகளுக்குரிய, 1213 இலக்கிய, வரலாற்று நூல்களின் விளக்கங்கள் அடங்கியுள்ளன.

இதன் அமைப்பு முறை முதல் மூன்று தொகுதிகளின் அமைப்பு முறையினை அடியொற்றியே அமைந்துள்ளது. முதல் தொகுதி முதல் பகுதியின் முன்னுரையில் விரிவான விளக்கத்தைக் காணலாம்.

நான்காம் தொகுதியின் முதலிரு பகுதிகளுக்குரிய பொருளகராதி நூல்களின் ஆசிரியர் அகரவரிசை, நூல் அகரவரிசை முதலியனவும் இப்பகுதியில் இடம் பெற்றுள்ளன.

இக்காலப் பகுதியில் வெளியிடப்பெற்று, தற்போது ஆவணக் காப்பகத்தில் கிடைக்கப்பெறாத எஞ்சிய நூல்களின் விளக்கங்கள் மூன்றும் பகுதியில் தரப்பட்டுள்ளன.

—பதிப்பாசிரியர் குழு.

Ivzk 240999
01'914-331-1211N20

பொருள் அட்டவணை

800—இலக்கியம்

டியூவி எண். (1)	பொருள் (2)	பக்க எண். (3)
820	ஆங்கில இலக்கியம்	373
822	ஆங்கில நாடகம்	373
822, 33	ஷேக்ஸ்பியர்	373
823.4	ஆங்கில நவீனம்	377
891.2	வடமொழி இலக்கியம்	378
891.21	வடமொழிக் கவிதை	378
891.22	நாடகம்	381
891.3	வடமொழி நவீனம்	383
891.4	இந்தி இலக்கியம்	384
891.41	துளசி இராமாயணம்	384
891.44	வங்காள இலக்கியம்	384
891.441	தாகூர்	384
891.443	வங்க நவீனம்	385
894.8111	தமிழ்க் கவிதை: பத்துப்பாட்டு	385
894.8111	தமிழ்க் கவிதை: எட்டுத்தொகை	387
894.8111	தமிழ்க் கவிதை: ஐம்பெருங்காப்பியம்	391
894.8111	தமிழ்க் கவிதை: ஐஞ்சிறுகாப்பியம்	392
894.8111	தமிழ்க் கவிதை: பதினெண் கீழ்க்கணக்கு	388
894.8111	தமிழ்க் கவிதை: திருமுறை இலக்கியம்	392
894.8111	தமிழ்க் கவிதை: திவ்வியப்பிரபந்தம்	396
894.8111	தமிழ்க் கவிதை: பிற்காலக் காவியங்கள்	400
894.8111	தமிழ்க் கவிதை: பிரபந்த வரிசை	409
894.8111	அகவல்	409
894.8111	அட்டகம்	412
894.8111	அந்தாதி	412
894.8111	அந்தாதி—பதிற்றந்தாதி	417
894.8111	அந்தாதி—பதிற்றுப் பத்தந்தாதி ..	418
894.8111	அம்மானை	419

டியூவி எண். (1)	பொருள். (2)	பக்க எண். (3)
894.8111	அலங்காரம்	419
894.8111	அனுபூதி	420
894.8111	ஆசிரியவிருத்தம்	420
894.8111	ஆற்றுப்படை	423
894.8111	ஆனந்தக் களிப்பு	424
894.8111	இரட்டை மணி மாலை	425
894.8111	இருபா விருபது	..
894.8111	உலா	427
894.8111	ஊஞ்சற் பாட்டு	427
894.8111	எச்சரிக்கை	427
894.8111	எண்செய்யுள்	428
894.8111	எழுகற்றிருக்கை	..
894.8111	ஏசல்	428
894.8111	ஏற்றப்பாட்டு	429
894.8111	ஒப்பாரி	429
894.8111	கட்டியம்	429
894.8111	கண்ணிகள்	430
894.8111	கலம்பகம்	432
894.8111	கலித்துறை	432
894.8111	கவசம்	432
894.8111	காதல்	435
894.8111	கும்மி	436
894.8111	குறம்	453
894.8111	கையறு நிலை	455
894.8111	கொச்சகக் கலிப்பா	455
894.8111	கோவை	456
894.8111	சதகம்	456
894.8111	சிந்து	456
894.8111	சிந்து—காவடிச் சிந்து	467
894.8111	சிந்து—நொண்டிச் சிந்து	480
894.8111	சிந்து—வழிநடைச் சிந்து	481
894.8111	சிலேடை	482
894.8111	தர்க்கம்	..

டியூவி எண். (1)	பொருள். (2)	பக்க எண். (3)
894.8111	தாலாட்டு	483
894.8111	திருப்புகழ்	484
894.8111	தூது	489
894.8111	தெம்மாங்கு	489
894.8111	நவமணி மாலை	490
894.8111	நாமாவளி	492
894.8111	நான்மணி மாலை	494
894.8111	பஞ்சகம்	496
894.8111	பஞ்சரத்தினம்	497
894.8111	பதிகம்	501
894.8111	பரணி	526
894.8111	பள்ளு	526
894.8111	பாவைப் பாட்டு	527
894.8111	பிள்ளைத் தமிழ்	527
894.8111	புலம்பல்	530
894.8111	மஞ்சரி	531
894.8111	மும்மணிக் கோவை	531
894.8111	மும்மாரி மாலை	532
894.8111	லாவணி	533
894.8111	வண்ணம்	534
894.8111	வர்ணிப்பு	534
894.8111	வருக்கக் கோவை	535
894.8111	வருக்க மாலை	536
894.8111	வாழ்த்து	536
894.8111	விலாசம்	536
894.8111	வெண்பா	537
894.8111	வேறு பல்வகைப் பிரபந்தங்கள் ..	538
894.81104	தமிழ் உரைநடை	552
894.81104	உரைநடை: நகைச்சுவை	552
894.811108	திரட்டு நூல்கள்	541
894.811109	இலக்கிய வரலாறு	550
894.8112	நாடகம்	554
894.8113	கதைப் பாட்டு	588
894.8113	கதைகள்—நவீனங்கள்	597

900 சரித்திரம், பூவர்ணனே, பிரயாணம்

டியூவி எண். (1)	பொருள். (2)	பக்க எண். (3)
910	பூகோளம்	664
912	படம்	666
913	பழமைச் சின்னங்கள்	666
913.42	இங்கிலாந்து	667
915.4	இந்தியா	667
915.4 (1)	தென்இந்தியா	..
915.4 (1)	வடஇந்தியா	..
915.489	இலங்கை	..
920.01	வாழ்க்கை வரலாறு (பொது) ..	681
920.7	மகளிர் வரலாறு	682
921	தத்துவ ஞானிகள் வாழ்க்கை வரலாறு	682
921.9	கிரேக்கம்	686
922	கிறித்துவப் பெரியார்கள்	687
922.945	வைணவ பக்தர்கள்	688
922.945	சிவ பக்தர்கள்	688
923.142	ஆட்சியாளர்கள்	698
923.154	ஆட்சியாளர்கள் (இத்தாலி)	698
923.154	ஆட்சியாளர்கள் (இந்தியா)	698
923.173	அமெரிக்கா ஜனாதிபதிகள்	700
923.254	தேசபக்தர்கள்—தலைவர்கள் வரலாறு ..	701
923.6	சமூகத் தொண்டர்கள்—வள்ளல்கள் ..	705
923.654	இந்தியா	705
927.84	இசைக் கலைஞர்கள்	706
928.43	இலக்கியப் பேரறிஞர்கள்	707
928.948111	புலவர்கள்	708

940—999 தனி நாடுகளின் வரலாறு

940.3	உலகமகாயுத்தங்கள்	712
954	இந்தியாவின் வரலாறு	714
955	பாரசீகம்	724
978.729	ஸ்பார்டா தேச சரித்திரம்	724

கோலன் பகுப்பு முறையில் பொருள் அட்டவணை

z	பொதுவியல்	L	மருத்துவம்
1	பொது அறிவியல்	M	பயனுறு கலைகள்
2	நூலக இயல்	Δ	சித்தியல்
3	புத்தக இயல்	N	அழகுக் கலைகள்
4	செய்தித் தாளியல்	O	இலக்கியம்
A	அறிவியல்	P	மொழி இயல்
B	கணிதம்	Q	சமயம்
C	பௌதிகம்	R	தத்துவம்
D	பொறி இயல்	S	உளநூல்
E	இரசாயனம்	T	கல்வி
F	தொழில் இயல்	U	நில நூல்
G	உயிர் நூல்	V	வரலாறு
H	புவி இயல்	W	அரசியல்
HZ	சுரங்க இயல்	X	பொருளியல்
I	தாவர இயல்	Y	சமூக இயல்
J	விவசாயம்	Z	சட்டம்
K	விலங்கு நூல்		

குறியீடுகளும் அவற்றின் விளக்கமும்

உ. ப.	உரைநடைநூல் பக்கங்கள்
உ. ப. + செ மூ. எ. ..	உரைநடை பக்கங்கள் + செய்யுள் மூலம் எண்ணிக்கை.
உ. ப. + செ. மூ. ப. ..	உரைநடை பக்கங்கள் + செய்யுள் மூலம் பக்கங்கள் (அல்லது) உரைநடையும் செய்யுளும் சேர்த்து பக்கங்கள்.
செ. மீ.	சென்டி—மீட்டர்.
செ. மூ. எ.	செய்யுள் மூலம் எண்ணிக்கை.
செ மூ. உ எ.	செய்யுள் மூலமும் உரையும் எண்ணிக்கை.
தொ. எ. ..	தொடர் எண்.
தொ. து.	தொகுத்தது.
மொ. து.	மொழிபெயர்த்தது.
i.	நூலின் பெயர்.
ii.	பதிப்பாசிரியரின் பெயரும் பதிப்பகமும்.
iii.	நூல் பதிப்பித்த ஆண்டு.
iv.	நூலின் அளவு (உள்ளடக்கம்).
v.	நூலின் வடிவ அளவு.
vi.	விலை.
vii.	விளக்கம்.
viii.	நூலின் பதிவு எண் குறிப்பு.
[ ]	இவ்விதம் பகர அடைப்புக்குள் உள்ளவை ஒரு நூலோடு இணைந்துள்ள வேறு நூல்களின் பெயர்கள்.
....	இவ்விதம் புள்ளி இட்ட இடங்கள் விவரம் தெரிய இயலாத பகுதிகளும் விளக்கம் எழுதப் பெறாத பகுதிகளும்.
&	ஒன்றுக்கு மேற்பட்ட ஆசிரியர், பதிப்பாசிரியர் பதிப்பகங்களைக் காட்டும்.

CONNEMARA PUBLIC LIBRARY
2 3 AUG 1977
MADRAS

தமிழ்நூல் விவர அட்டவணை

800 இலக்கியம்

820 ஆங்கில இலக்கியம்

22 நாடகம் 8

ஷெரிடன்

1281. i. பைசாசரன் ; ii. கே.எஸ். பிரதர்ஸ், சென்னை ; கார்டியன் பிரஸ், சென்னை ; iii. 1916 ; iv. உ.ப. 134 ; v. 18×13 செ. மீ. ; vi. 0–8–0 ; vii. ஷெரிடன் என்னும் ஆங்கிலேய நாடக ஆசிரியரால் இயற்றப்பட்ட நாடகத்தின் மொழி பெயர்ப்பு. ஐந்து அங்கங்களுடன் அமைந்தது, இந்நாடகம். தமிழாக்கம் செய்தவர் கோ. இராமானுசர் என்பவராவார். நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்த முதலியார் அவர்களுக்கு, இந் நூலைச் சமர்ப்பணம் செய்துள்ளார் viii. 1125/1917/I.

O111,2

822·33 ஷேக்ஸ்பியர்

ஷேக்ஸ்பியர்

1282, i. அபாயத்திற்கு உபாயம் : முதற் பதிப்பு ; ii. சி. குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ், சென்னை ; காக்ஸ்டன் பிரஸ், சென்னை ; iii. அக்டோபர், 1916 ; iv. உ. ப. 52 ; v. 18×13 செ.மீ. ; vi. 0–1–6 ; vii. ஆங்கில மகாகவிஞர் ஷேக்ஸ்பியரின் நாடகத்தைப் பின்பற்றித் தமிழில், அழகிய நடையில், எளிய முறையில், 'அபாயத்திற்கு உபாயம்' என்ற இக்கதை எழுதப் பட்டிருக்கிறது. ஆங்கில நாடகக் கதைக் கொத்து வரிசையில் இது பதினைன்காவது புத்தகமாகும். viii. 449/1916/IV.

O111,2J64

1283. i. இனிது முடிவதே இனியது : திருத்திய பதிப்பு ; ii. சி குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ், சென்னை ; காக்ஸ்டன் பிரஸ். சென்னை ; iii. அக்டோபர், 1916 ; iv. உ. ப. 48 ; v. 18×13 செ.மீ. ; vi. 0-1-6 ; vii. ஷேக்ஸ்பியர் நாடகம் ஒன்றைப் பின் பற்றி இயற்றிய ஆங்கிலக் கதையைத் தமிழில், 'இனிது

முடிவவதே இனியது' என்ற தலைப்பில், சிறு கதையாக அழகிய நடையில், அமைத்துள்ளார் ஆங்கில நாடகக் கதைக் கொத்து வரிசையில், இது பதினொன்றாவது வெளியீடு viii. 446/1916/IV.

O 111,2J64

1284. i. சண்டியைச் சாதுவாக்கியது : முதற் பதிப்பு ; ii. சி. குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ், சென்னை ; காக்ஸ்டன் பிரஸ். சென்னை ; iii. அக்டோபர், 1916 ; iv. உ. ப. 44 ; v. 18×13 செ.மீ. ; vi. 0–1–6 ; vii. ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ள ஷேக்ஸ்பியரின் நாடகத்தைத் தழுவிய ஒரு கதை. ஆங்கில நாடகக் கதைக் கொத்து வரிசையில், இது பன்னிரண்டாவது புத்தகம். viii. 447/1916/IV.

O111,2J64

1285. டெம்ப்பெஸ்ட் நாடகம் ; ii. ஜி. வைத்தியநாத ஐயர் ; வெட்னெஸ்டே ரிவியூ பிரஸ், திருச்சிராப்பள்ளி ; iii. டிசம்பர், 1916 ; iv. உ. ப. 31 ; v. 18×12 செ.மீ. ; vi.......; vii. ஷேக்ஸ்பியரின் நாடகமான டெம்பெஸ்ட்டின் கதா நிகழ்ச்சிகளைத் தமிழில் தருவது. viii. 101/1917/I.

O111,2J64

1286. i. மாக்பெத் : முதற் பதிப்பு ; ii. லாங்மன்ஸ் கிரீன் அண்டு கம்பெனி, சென்னை ; மினர்வா பிரஸ், சென்னை ; iii. நவம்பர்; 1917 ; iv. உ. ப. 26 ; v. 14×12 செ. மீ. ; vi. 0-4-0 ; vii. ஷேக்ஸ்பியரின் நாடக நூல்களுள் ஒன்றாகிய 'மாக்பெத்' தின் தமிழாக்கமே இந்நூல். உரைநடை வடிவில் உள்ளது. ஷேக்ஸ்பியர் நாடகத்தை அனுசரித்து, லாம்ப் என்பவர் ஆங்கிலத்தில் எழுதியதிலிருந்து, இம்மொழி பெயர்ப்பு செய்யப் பெற்றுள்ளது. ஷேக்ஸ்பியர் நாடகக் கதா மஞ்சரி வரிசையில், இது மூன்றும் மலர் ஆகும். இதனைத் தமிழில் ஆக்கியவர் பவானந்தம் பிள்ளை ஆவார். viii. 482/1918/I.

O111,2J64

1287. i. மாக்பெத் சரித்திரம் : திருத்திய இரண்டாம் பதிப்பு ; ii. டபிள்யூ. ஆர். பிரஸ், திருச்சிராப்பள்ளி ; iii. 1916 ; iv. உ. ப. 14 ; v. 17×11 செ.மீ. ; vi. 0-1-0 ; vii. ஷேக்ஸ் பியரின் இலக்கியப் படைப்பான 'மாக்பெத்' என்னும் சரித்திர நாடகத்தின் மொழி பெயர்ப்பு. ஆங்கில இலக்கியத்தின் போக்கினை அறியும் பொருட்டு, எளிய உரைநடையில், கதை போன்று எழுதப்பட்டிருக்கிறது. திருச்சிராப்பள்ளி, ஜி. வைத்திய நாத ஐயர், இதனைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். viii. 135/1916/III.

O111,2J64

1288. i. ரோமியோ, ஜூலியத் : முதற் பதிப்பு ; ii. எம். கோபால கிருஷ்ண ஐயர், மதுரை ; தமிழ்ச்சங்க முத்திராசாலை, மதுரை ; iii. மே, 1920 ; iv. செ. மூ. எ. 376; v. 20×14 செ.மீ. ; vi. 0–8–0 ; vii. ஷேக்ஸ்பியரின் நாடகமான ரோமியோ ஜூலியத்தின் தமிழ் மொழிபெயர்ப்பே இது. இதனை மொழி பெயர்த்தவர், எ. ஆர். ஸ்ரீநிவாச முதலியாராவார். கருத்துரை, முன்னுரை, பிழைதிருத்தப் பட்டியல் ஆகியன இதனுள் அடங்கியிருக்கின்றன. விருத்தக் கவிதைகளால் ஆனது இந்நூல். இது, நாடகத்தை தழுவியதாயினும், காவிய முறையில், அமைத்துத் தரப்பட்டுள்ளது. ஆனைமலைத் தமிழ்ப்பண்டிதர், திரு. சிவசூரியன் பிள்ளை ; கோவை, திரு. ஜி. கே. சுப்ரமணிய முதலியார், முதலியோர் இந்நூலுக்குச் சாற்றுக் கவிகள் தந்துள்ளனர். viii. 639/1920/II.

O111,2J64

1289. i. வயோலா சரித்திரம் : முதற் பதிப்பு ; ii. டி. கிருஷ்ண சாமி ஐயர், கும்பகோணம் ; கிருஷ்ண விலாசம் பிரஸ், கும்பகோணம் ; iii. ஜனவரி, 1917 ; iv. உ. ப. 38 ; v. 19×13 செ.மீ. ; vi. 0–3–0 ; vii. ஷேக்ஸ்பியரின் நாடகமான 'பன்னிரண்டாம் இரவு' என்ற நூலின் தமிழாக்கமே இந்நூல். நாடகப் பொருள், கதை முறையில் அமைத்து எழுதப் பட்டிருக்கிறது. பொருத்தமான சில குறட்பாக்கள் இதில் எடுத்தாளப் பட்டிருக்கின்றன. இதனைத் தமிழில் தந்தவர் என். கல்யாணசுந்தரமையர் ஆவார். viii. 431/1917/I.

O111,2J64

1290. i. வியாமோக விலாசம் : முதற் பதிப்பு ; ii. சி. குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ் ; காக்ஸடன் பிரஸ், சென்னை ; iii. அக்டோபர், 1916 ; iv. உ. ப. 45 ; v. 19×13 செ.மீ. ; vi. 0–1–6 ; vii. ஷேக்ஸ்பியரின் ஆங்கில நாடகம் ஒன்றைத் தழுவிய கதை இவ் "வியாமோக விலாசம்" என்பது. இதனை மிகவும் எளிய முறையில் ஆசிரியர் எழுதியுள்ளார். இது, ஆங்கில நாடகக் கதைக் கொத்து வரிசையில் பதின்மூன்றுவது புத்தகம். viii. 448/1916/IV.

O111,2J64

1291. i. விரும்பிய விதமே : முதற் பதிப்பு ; ii. லாங்மன்ஸ் கிரீன் அண்டு கோ., சென்னை ; தாம்சன் அண்டு கோ., சென்னை ; iii. 1917 ; iv. உ. ப. 48 ; v. 18×13 செ.மீ. ; vi. 0–8–0 ; vii. ஷேக்ஸ்பியரின் 'ஆஸ் யூ லைக் இட்' என்னும் நாடகத்தை ஒட்டி, லாம்ப் என்பவர் எழுதிய நூலின் மொழி பெயர்ப்பே இந்நூல். மொழி பெயர்ப்பே யெனினும், மூலநூலைப் போன்றே இனிமையும், சுவையும் எய்ந்து, கற்பாருள்ளம்

கவருந் தகையதாயுள்ளது. 'ஷேக்ஸ்பியர் நாடக கதாமஞ்சரி' என்னும் தொடரில் இது, ஐந்தாவது மலராக வெளியிடப்பட்டது. இதன் மொழிபெயர்ப்பாசிரியர் ராவ்பகதூர் ச. பவானந்தம் பிள்ளையாவார்கள், viii. 832/1918/I.

O111,2J64

1292. i. வெனிஸ் வர்த்தகன்: முதற் பதிப்பு; ii. லாங்மன்ஸ் கிரீன் அண்டு கம்பெனி, சென்னை; மீனர்வா பிரஸ், சென்னை; iii. நவம்பர், 1917; iv. உ. ப. 36; v. 19×13 செ.மீ.; vi. 0–4–0; vii. ஷேக்ஸ்பியர் நாடகமான 'மெர்ச்சன்ட் ஆப் வெனிஸ்' என்பதன் தமிழாக்கமே, இவ்வுரைநடை நூல். தமிழாக்கம் செய்தவர் பவானந்தம் பிள்ளையாவார். இந்தத் தமிழாக்கம், ஆங்கிலத்தில், லாம்ப் என்பார் எழுதிய நூலிலிருந்து செய்யப்பெற்றது. இது, 'ஷேக்ஸ்பியர் நாடக கதாமஞ்சரி' வரிசையில் நான்காம் மலர் ஆகும். viii. 481/1918/I.

O111,2J64

1293. i. ஷேக்ஸ்பியர் நாடகக் கதைகள்: இரண்டாம் பதிப்பு; ii. டி. கிருஷ்ணசாமி ஐயர், கும்பகோணம்; கிருஷ்ண விலாச பிரஸ், கும்பகோணம்; iii. 1920; iv. உ. ப. 69; v. 16×11 செ.மீ.; vi. ....; vii. மெர்ச்சன்ட் ஆப் வெனிஸ், ஹாம்லெட், கிங் லீயர் என்ற மூன்று ஷேக்ஸ்பியர் நாடகங்களின் கதைச் சுருக்கங்கள் இதனகண் அடங்கியுள்ளன. இவற்றை, முறையே, வெனிஸ் வர்த்தகன் கதை, ஹேமவர்மன் கதை, லோஹீதன் கதை என்னும் பெயர்களால் வெளியிட்டுள்ளனர். கெ. வெங்கட்ராம ஐயரால் தமிழில் அச்சிடப்பெற்றது. viii. 1015/1920/III.

O111,2J64

1294. i. ஹாம்லெட் (டென்மார்க் தேசத்து இளவரசன்): முதற் பதிப்பு; ii. லாங்மன்ஸ் கிரீன் அண்டு கோ., சென்னை; கபாலி பிரஸ், சென்னை; iii. 1916; iv. உ. ப. 40; v. 18×13 செ.மீ.; vi. 0–4–0; vii. ஷேக்ஸ்பியரின் நாடகமான ஹாம்லெட்டின் தமிழாக்கமே இந்நூல். ஷேக்ஸ்பியர் நாடகத்தினை ஒட்டி லாம்ப் என்பார் எழுதிய கதையின் அமைப்பிலிருந்து இத்தமிழாக்கம் செய்யப்பெற்றது. அரும்பத விளக்கமும், செய்யுட்களின் உரையும் இறுதியில் தரப் பட்டுள்ளன. இத்தமிழாக்கம் பவானந்தம் பிள்ளை என்பவரால் செய்யப்பெற்றதாகும். viii. 675/1917/I.

O111,2J64

823.4 ஆங்கில நவீனம்

கிரிம்

1295. i. அபூர்வக் கதைகள்; ii. மாக்மில்லன் அண்டு கம்பெனி லிமிடெட், சென்னை; எஸ். பி. சி. கே. பிரஸ், சென்னை; iii. 1916; iv. உ. ப 32; v. 18×12 செ.மீ.; vi. 0–2–0; vii. கிரிம் என்பவர் ஆங்கிலத்தில் இயற்றியுள்ள கதைகளுக்கு இணங்க, சிறுவர்களின் உபயோகத்துக்காக, எளிய உரை நடையில் எழுதப்பெற்ற நூல். பசுவரசி, தவளைராஜன், ஆறு அன்னப்பட்சிகள், ஒரு ஜல தேவதை என நான்கு கதைகள் இதில் உள்ளன. viii. 60/1916/IV.

O111,3

1296. i. அபூர்வ கதைகள்: திருத்திய பதிப்பு; ii. மாக்மில்லன் அண்டு கோ., சென்னை; எஸ். பி. சி. கே. பிரஸ், சென்னை; iii. ஜூன், 1917; iv. உ. ப. 32; v. 18×13 செ.மீ.; vi. 0–2–0; vii. ....; viii. 1029/1917/II.

O111,3

பேல், ஆலிஸ், எம்.

1297. i. திரிபுரக் கதைகள்; ii. மாக்மில்லன் அண்டு கம்பெனி லிமிடெட், சென்னை; எஸ். பி. சி. கே. பிரஸ், சென்னை; iii. 1916; iv. உ. ப. 47; v. 18×12 செ.மீ.; vi. 0–2–6; vii. ஆங்கில மொழியில், ஆலீஸ், எம். பேல் என்பவர் எழுதிய, "Tales from Troy" என்னும் நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு. முதல் நூலிற்காணப்படும் சிறப்புப் பெயர்கள் தமிழ்நடைக்கு ஒத்தபடி அமைக்கப்பெற்றுள்ளன. கூடுமான வரை, எளிய நடையில் கடின சந்திகளை நீக்கி, இதனை எழுதியுள்ளார். படங்களும் சில உள. viii. 61/1916/IV.

O111,3

மார்ஷ், லூயி

1298. i. பல தேசத்துத் தேவதைகள் கதை: முதற் பதிப்பு; ii. ஆக்ஸ்போர்டு யூனிவர்சிடி பிரஸ், சென்னை; பீர்லெஸ் பிரஸ், சென்னை; iii. 1915; iv. உ. ப. 85; v. 19×13 செ.மீ; vi. 0–6–0; vii. 'தேவதைகளின் கதை' என்னும் ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. தமிழில் மொழி பெயர்த்தவர் சிவஞானம் என்பவராவார். இதில், பல தேசத்து தேவதைகளைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. இதில், பதினைந்து கதைகள் உள. இவை, அதிகச் சுருக்கமில்லாமலும், விரிவில்லாமலும் எழுதப்பட்டிருக்கின்றன. ஒரு சில படங்களும் உள. viii. 718/1916/III.

O111,3

ஜான்சன்

1299. i. ராசிலஸ் சரிதை : முதற் பதிப்பு ; ii. மாடபூஷி ராமானுஜாசாரியார், சென்னை ; கார்டியன் அச்சுக்கூடம், சென்னை. iii. 1916 ; iv. உ.ப. 164 ; v. 19×13 செ.மீ. ; vi. 0—12—0 ; vii. ஆங்கில மொழியில், டாக்டர் ஜான்சன் என்பவர் எழுதியதைத் தழுவித் தமிழில், இக்கதை,மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதனை மொழி பெயர்த்தவா, சென்னை, மாடபூஷி, ராமானுஜாசாரியா ராவார். ஆங்கில மூல நூலின் ஒவ்வோர் அத்தியாயததும் உள்ள செய்திகளைத் தொகுத்துத் தொடர்புபடுததியுள்ளார். ஆசிரியர் பழமொழிகளையும், சிறந்த மேற்கோள்களையும், இடத்திற்கேற்ப, எடுத்தாண்டுள்ளார். 49 அத்தியாயங்கள் கொண்டது இந்நூல். ஜி· சதாசிவ ஐயர், ஆங்கிலத்தில், இதற்கு ஒரு முன்னுரை எழுதியுள்ளார். viii. 121/1916/III.

O111,3

1300. i. ராசிலஸ் : திருத்திய இரண்டாம் பதிப்பு ; ii. எஸ். பீ.சி.கே. பிரஸ். சென்னை ; iii. ஆகஸ்ட், 1916 ; iv.உ.ப. 239 ; v. 18×12 செ.மீ.; vi. 0–12–0 ; vii..........; viii. 890/1916/III.

O111,3

ஸ்காட், ஸர்., வால்டர்

1301. i. ஐவன் ஹோ : திருத்திய பதிப்பு ; ii. சி. குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ், சென்னை ; காக்ஸ்டன் பிரஸ், சென்னை, iii. ஜூலை, 1917 ; iv. உ.ப. 176 ; v. 19×13 செ. மீ. ; vi. 0–12–0 ; vii. சர் வால்டர் ஸ்காட் என்பவர் எழுதிய; "ஐவன்ஹோ" என்ற நாவலின் தமிழாக்கமே இந்நூல். இந் நூலை ஆங்கிலத்தில் அவர் வெளியிட்டது 1819 ஆம் ஆண்டில் என்பர். அக்காலத்தில், இங்கிலாந்தில் வாழ்ந்த மக்களின் பழக்கவழக்கங்களை விளக்குவதாக உள்ளது. 24 அத்தியாயங் களைக் கொண்டது, இப்புதினம். இதனைத் தமிழில் மொழி பெயர்த்தவர், வி. ராஜகோபால ஐயங்கார் ஆவார். viii. 246/1917/III.

O111,3

891.2 வடமொழி இலக்கியம்

891.21 வடமொழிக் கவிதை

சுகர், வீ.

1302. i. பாகவதம் : தமிழ் வசனம் : வால்யூம் 4 : முதற் பதிப்பு ; ii. ஆநந்தா அச்சுக் கூடம், சென்னை ; iii. நவம்பர், 1916 ; iv. உ. ப. (1163–1515)—352 ; v. 19×13 செ. மீ, . vi.......; vii. பாகவதத்தில் உள்ள பஞ்சம ஷஷ்ட ஸ்கந்தங்கள் தமிழில், வசன நடையில், ஆசிரியரால் விளக்கப்பட்டுள்ளன

இத்தமிழ்நூலை ஆக்கியவர், ஆ வீ. நரசிம்மாச்சாரியாவார். இந்நூலில் சில பட விளக்கங்களும் உள. கதைப் போக்கினைத் தெரிந்து கொள்வதற்கு உதவியாகத் தக்கத் தலைப்புக்கள் இடையிடையே தரப்பட்டுள்ளன. viii. 699/1916/IV.

O15,1

1303. i. பாகவதம் : வால்யூம்--5 : முதற் பதிப்பு ; ii. ஆர். வெங்கடேஸ்வர் கம்பெனியார், சென்னை ; ஆநந்தா அச்சுக்கூடம், சென்னை ; iii. 1917 ; iv. உ. ப. (1517–1868)—352 ; v. 19×13 செ. மீ ; vi........... vii. வடமொழிப் பாகவதத்தின் 7வது, 8வது ஸ்கந்தங்கள் இதில் விவரிக்கப்பட்டுள்ளன. இடையிடையே படவிளக்கங்களும் உண்டு. கதைப்போக்கிற்கு ஏற்ற தலைப்புகளும் இடையிடையே தக்க இடங்களில் தரப்பட்டுள்ளன. viii. 533/1917/II.

O15,1

ராமப் பிரம்மாநந்த சரஸ்வதி

1304. i. தத்வ ஸங்க்ரஹ ராமாயணம் : முதற் பதிப்பு ; ii. நா. முனிசாமி முதலியார், சென்னை ; பி. ஆர். ராம ஐயர் அண்டு கோ., சென்னை ; iii. 1916 ; iv. உ.ப. 520 ; v. 25×18 செ.மீ. ; vi. 3–8–0 ; vii. தத்துவ விளக்கத்துடன் கூடிய ராமாயணக் கதை. இராம சரித்திர உண்மைகளைச் செவ்வனே உணர்த்துவது. ஆன்றோர் ஆங்காங்குத் திருவாய் மலர்ந்தருளியுள்ள தெய்வத்தன்மை பொருந்திய கருத்துக்களை நன்கு பொருத்த அமைத்து நவரத்ன மாலை போல் கோக்கப் பெற்றுள்ளது பரமசிவன் பார்வதி தேவிக்கு இராம சரிதத்தை விவரிப்பது போல அமைக்கப்பட்டுள்ளது. சமஸ்கிருதத்திலிருந்து, வரகவி திரு. அ. சுப்ரமணிய பாரதியாரின் உதவியைக் கொண்டு, எஸ். ராஜா சாஸ்திரி என்பார் இதைத் தமிழ்ப்படுத்தியுள்ளார். விஷய சூசிகை முதலில் தரப்பட்டிருக்கிறது. viii. 3/1916/II.

O15,1

வால்மீகி

1305. i. வால்மீகி ராமாயணம் : பாலகாண்டம், அயோத்தியா காண்டம் : முதற் பதிப்பு ; ii. ஹக்கீம் பிரஸ், போடிநாயக்கனூர் ; iii. எப்ரல், 1917 ; iv. செ. மூ. எ. 407 ; v. 21×15 செ. மீ. ; vi. 0–8–0 ; vii. வால்மீகி ராமாயணக் கதையில் வரும் நிகழ்ச்சிகள் சில இதில் இடம் பெற்றுள்ளன. பால கரண்டமும், அயோத்தியா காண்டமும், இதில் உள்ளது. 'வால்மீகி ராமாயணம் தமிழ்க் கவிகள்' என்று பெயர் குறிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கவிதை நூலை ஆக்கியவர், போடி நாயக்கனூர் எஸ். எஸ். ராமசாமி ஐயர் என்பாராவர். சின்னமனூர் செல்லமையர் என்ற வெங்கட நரசிம்ம பாரதியார்

முதலிய பலர் இதற்குச் சாற்றுக் கவிகள் பாடியுள்ளனர். ஏனைய காண்டங்களும் அச்சிலிருப்பதாக ஒரு குறிப்பு நூலிறுதியில் தரப்பெற்றிருக்கிறது. viii. 131/1917/III.

O15,1A1

1306. i. வால்மீகி ராமாயணம் : கிஷ்கிந்தா காண்டம் : முதற் பதிப்பு ; ii. ஹக்கீம் பிரஸ், போடிநாயக்கனூர் ; iii. 1918 ; iv. செ. மூ. எ. 620 ; v. 21×14 செ. மீ. ; vi. 0–12–0 ; vii. இதில் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தின் தமிழ்க் கவிகள் உள்ளன. அனுமப்படலம் முதல் ஆலோசனைப் படலம் வரை 12 படலங்கள் உள்ளன. அனைத்தும் நான்கு அடி விருத்தச் செய்யுள்களாகவே உள்ளன. ஆக இக்காண்டத்திற்குரிய திருவிருத்தம் 620 ஆகும். இத்தமிழ்க் கவிதை நூலின் ஆசிரியர், போடிநாயக்கனூர் எஸ். எஸ். ராமசுவாமி ஐயர் ஆவார். viii. 104/1919/II.

O15,1A1

1307. i. ராமாயணம் : சுந்தர காண்டம் : முதற் பதிப்பு ; ii. ஆர். வெங்கடேஸ்வர் அண்டு கோ., சென்னை ; ஆனந்தா அச்சுக்கூடம், சென்னை ; iii. 1914 ; iv. உ.ப. (1985–2448) 453 ; v. 19×14 செ.மீ. ; vi. 1–4–0 ; vii. இதில், வால்மீகி இராமாயணத்தின் சுந்தர காண்டம், தமிழ் வசன நடையில் அமைந்துள்ளது. மூல நூலை அடியொற்றி அமைந்தது, இம் மொழிபெயர்ப்பு. படங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. தனி ஸ்லோகியிற் சொன்ன பொருள்களோடும், விசேஷ விவரணத்தோடும் அச்சிடப்பட்டுள்ளது. இதனை மொழிபெயர்த்தவர், அ. வீ. நரசிம்மாச்சாரியாராவர். viii. 1029/1919/III.

O15,1A1

1308. i. ராமாயண தனிச்லோகம் ; ii. சி. ர. ஸ்ரீனிவாச பட்டராசாரியர், கும்பகோணம் ; ஸ்ரீகோபால விலாசம் பிரஸ், கும்பகோணம் ; iii. ஏப்ரல், 1920 ; iv. செ.மூ.உ.ப. 64 ; v. 22×14 செ. மீ. vi. 0–10–0 ; vii. வடமொழியில் உள்ள வால்மீகி ராமாயணத்தின் சில பகுதிகள் இதில் இடம் பெற்றுள்ளன. கூடவே கிரந்தம், தமிழ் உரைகள் உண்டு. இத்தொகுப்பினைத் தமிழில் தந்தவர் ரா. வே. கிருஷ்ணமாச்சாரியாராவர். viii. 146/1920/II.

O15,1A1

வியாசர்

1309. i. மகாபாரதம்–பீஷ்ம பர்வம்—22வது சஞ்சிகை : முதற் பதிப்பு ; ம. வீ. இராமானுஜாசாரியார், கும்பகோணம் ; கணேசா பிரஸ், சென்னை ; iii. நவம்பர், 1918 ; iv. உ.ப. 32 ; v. 21×14 செ.மீ. ; vi. 1–2–0 ; vii. மகாபாரதத்தின்

பிரிவான பீஷ்ம பர்வத்தின் பகுதி இதில் இடம் பெற்றுள்ளது. வசன நடையில் அமைந்துள்ளது இந்நூல். வடமொழி வியாச பாராதத்தின் மொழிபெயர்ப்பாகும், இத்தமிழ் மொழி பெயர்ப்பு நூலின் ஆசிரியர் திரிசிரபுரம் டீ. வீ. ஸ்ரீனிவாசா சாரியாராவர். viii. 182/1919/II.

O15,1

1310. i. மகாபாரதம்—பீஷ்ம பருவம்: 23-ஆவது சஞ்சிகை: முதற் பதிப்பு; ii. ம. வீ. இராமானுஜாசாரியார், கும்ப கோணம்; கணேசா பிரஸ், சென்னை; iii. மார்ச், 1919, iv. உ. ப. 190+11; v. 23×15 செ. மீ.; vi. 1–2–0; vii..............; viii. 183/1919/II.

O15,1

891.22 வடமொழி நாடகம்

காளிதாசர்

1311. i. மேகதூதக் காரிகை: முதற் பதிப்பு; ii. சி. குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ், சென்னை; காக்ஸ்டன் பிரஸ், சென்னை; iii. ஜனவரி, 1920; iv. செ.மூ. உ.ப. 40; v 22×14 செ. மீ.; vi. 0–4–0; vii. காளிதாசன் வடமொழியில் இயற்றிய மேக தூதத்தின் தமிழாக்கமே இந்நூல். இதன்கண் போஜராச னுடைய வரலாறும், காளிதாசன் வரலாறும் உரைநடையில் தரப்பட்டுள்ளன. நூல், செய்யுள் வடிவில் அமைந்துள்ளது. காப்பும், குரு வணக்கமும் நீங்கலாக ஐம்பத்தைந்து பாடல்கள் உள. கட்டளைக்கலித்துறைச் செய்யுளில் அமைந்துள்ளதால் 'மேகதூதக் காரிகை' எனப் பெயர் சூட்டியுள்ளார். தமிழாக்கம் செய்தவர் சுன்னாகம் அ. குமாரசுவாமிப் பிள்ளையவர்களாவார். viii. 812/1920/I.

O15,2D40

1312 i. ரகுவம்சம்: முதற் பதிப்பு; ii. மாக்மில்லன் அண்டு கம்பெனி, சென்னை; எஸ். பி. சி. கே. பிரஸ், சென்னை; iii ஜூன், 1919; iv. உ. ப. 77; v. 19×13 செ. மீ.; vi. 0–5–0; vii காளிதாசனின் காவியமான ரகுவம்சத்தின் தமிழாக்கமே இந்நூல். தமிழாக்கம் செய்தவர் காஞ்சீபுரம், ச. ஸ்ரீசைல தாதாசாரியாராவார். படவிளக்கங்களுடன் கூடியது; சிறந்த காவியங்களுள் இது ஒன்று. மூலக் கருத்தை விடாமல் வெளியிட்டிருப்பதோடு முக்கியமான இடங்களில் பொருத்தமான உவமைகளையும் சுட்டி விளக்கம் தந்துள்ளார். viii. 857/1919/II.

O15,2D40

பவபூதி

1313 i. உத்தரராம சரித்திரம்: முதற் பதிப்பு; ii. லாங்மன்ஸ் கிரீன் அண்டு கம்பெனி, சென்னை; மினர்வா பிரஸ், சென்னை; iii. ஆகஸ்ட், 1919; iv. உ. ப. 96; v. 19×13 செ. மீ.; vi. 1–0–0; vii. பவபூதி மகாகவியினால் வடமொழியில் எழுதப்பட்டுள்ள நாடகத்தின் தமிழாக்கம், இது. இராமருக்கு முடிசூட்டு விழா நடந்த பின்னர் நடந்த வரலாற்றை விளக்கமாக இப்புத்தகத்தில் காணலாம். வசன பாகத்தில் வரும் அரும் பதங்களுக்கு உரை விளக்கத்துடன் ஓர் அகராதியும் சேர்க்கப்பட்டிருக்கிறது. viii. 154/1919/IV.

O15,2D

பாணகவி

1314 i. காதம்பரி சங்கிரகம்: முதற் பதிப்பு; ii. கலைமகள் கல்விக் கழகத்தார், கும்பகோணம்; iii. அக்டோபர், 1920; iv. உ.ப.48; v. 19×13 செ.மீ.; vi. 0–5–0; vii. வடமொழியில் உள்ளதைத் தழுவித் தமிழில், காதம்பரி சங்கிரகம் என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள நூலாகும். தக்க மேற் கோள் பாடல்களையும் அங்கங்கே சேர்த்து எழுதியுள்ளார். இத்தமிழ் நூலின் ஆசிரியர், கும்பகோணம் ஸ்ரீ. சா. வேங்கடராம ஐயரவர்கள். viii. 434/1920/IV.

O15,2

1315 i. சந்திராபீட சரிதம்: முதற் பதிப்பு; ii. வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியார், சென்னை; கமர்ஷியல் அச்சுக் கூடம், சென்னை; iii. செப்டம்பர், 1918; iv. உ. ப. (68+3) 71; v. 19×13 செ. மீ.; vi. 0-5-0; vii. சமஸ்கிருத மொழியில் உள்ள, பாணகவி இயற்றிய 'காதம்பரி' என்பதன் மொழி பெயர்ப்பாகும். வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியார், இத்தமிழ் மொழி பெயர்ப்பை ஆக்கியுள்ளார். மனவடக்கம் இன்றியமையாதது என்பதும், முற்பகல் செய்யின், பிற்பகல் விளையுமென்பதும், தேவரும் சாபவயத்தவராவாரென்பதும், கனத் தவறுது பலிக்குமென்பதும், வேட்டையாடுதல் வருத்தத்தையுண்டாக்கு மென்பதும், கணவரைப் பிரிந்த பெண்டிரின் நிலை இன்னதென்பதும், நண்பர் நடந்து கொள்ள வேண்டிய வகை இன்னதென்பதும், வரம்பு கடந்த ஒழுக்கம் தீங்கு விளைவிக்குமென்பதும், பெற்றோரிடம் புதல்வர் ஒழுக வேண்டிய தன்மை இப்படியென்பதும், இதன் மூலம் விளங்கும். viii. 1079/1918/III.

O15,2

பாணபட்டர்

1316. i. பட்டபாண சரிதம்: முதற் பதிப்பு; ii. டி. கிருஷ்ண சாமி ஐயர், கும்பகோணம்; ஸ்ரீ கிருஷ்ணவிலாச அச்சாபீஸ், கும்பகோணம்; iii. ஜூன், 1919; iv. உ. ப. 98; v. 19×13 செ. மீ.; vi. 0–10–0; vii. பாணபட்டரால் செய்யப்பெற்ற ஹர்ஷ சரித்திர நூலில் காணும் பாண பட்டருடைய சரித்திர பாகம் மட்டும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஹர்ஷ சரித்திரத்தின் முதற்பாகமே, இது. இம்மொழி பெயர்ப்புச் செய்தவர், கும்பகோணம், ரா. வே. கிருஷ்ணமாசாரியார் ஆவார். மூன்று உச்சு வாசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இக்கவிஞர் இயற்றிய நூல், காதம்பரி, ஹர்ஷ சரிதம் என்பனவாம். ம. வீ. இராமானுஜாசாரியார் இந்நூலுக்கு எழுதியுள்ள முகவுரை யில், தமிழ் மொழியின் வசன நடைப் பாங்கையும் அதன் வரலாற்றையும் விளங்க உரைத்துள்ளார். viii. 836/1919/II.

O15,2

ஹர்ஷதேவர்

1317. i. ரத்நாவலி: முதற் பதிப்பு; ii. லாங்மன்ஸ் கிரீன் அண்டு கோ., சென்னை; தாம்சன் அண்டு கோ., சென்னை; iii. நவம்பர், 1918; iv. உ. ப. 48; v. 18×13 செ.மீ.; vi. 0–12–0; vii. இந்நாடகத்தில் காணப்படும் முக்கிய நீதியானது, எப்படிப்பட்ட செயலும், தெய்வ அருள் இருந்தால் கைகூடும் என்பதாம். அன்றியும், தக்க தோழமையிருந்தால், விரும்பியதை நிறைவேற்றிக் கொள் ளலாம் என்பதும், எப்படிப்பட்டவர்களுக்கும் பெரிய இடுக்கண் நேரிடுமென்பதும் விளக்கப்படுகிறது. இது, சமஸ் கிருதத்தில், காஷ்மீர தேச அரசன் ஹர்ஷ தேவன் இயற்றிய ரத்நாவலி நாடகத்தில் அமைந்த கதையாகும். இந்நாடகத்தில் வருபவர்களின் அட்டவணை, நூல் முதலில் கொடுக்கப்பட்டிருக்கிறது. viii. 500/1919/I.

891.3 வடமொழி நவீனம்

கோபாலகிருஷ்ணமாசாரியர், வை. மு.

1318. i. உதயணன் சரிதை; ii. வை. மு. கோபாலகிருஷ்ண மாசாரியர், சென்னை; வைஜயந்தி அச்சுக்கூடம், சென்னை; iii. 1916; iv. உ. ப. 154; v. 19×13 செ. மீ.; vi. 0–10–0: vii. உதயணன் சரித்திரத்தைக் கூறுவது. வட மொழியினின்றும் மொழிபெயர்க்கப்பட்ட நூல். வட

மொழியில் சோமதேவ பட்டர் என்பார் எழுதிய 'கதாசரித் சாகரம்' என்னும் நூலைப் பெரும்பாலும் தழுவி, அதில் கூறிய கிளைக் கதைகளைப் பெரும்பாலும் நீக்கி, முற்கதையை, இந்நூல் வடிவில் ஆசிரியர் எழுதியுள்ளார். இச் சரிதையில் வரும் அபிதான விளக்க அகராதியும், அருப்பத விளக்க அகராதியும், நூலிறுதியில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. viii. 122/1916/III.

O15,3

891.4 இந்தி இலக்கியம்

891·41 இந்தி : துளசி இராமாயணம்

துளசிதாசர்

1319. i. இராம சரித மானசம் என்னும் துளசி ராமாயணம் முதற் பதிப்பு ; ii. டி. ஆர். கிருஷ்ணமாசாரியார், சென்னை : மாடர்ன் பிரிண்டிங் ஒர்க்ஸ், சென்னை ; iii. 1916 ; iv.; உ.ப. 160 ; v. 25×17 செ.மீ. ; vi. 1–4–0 ; vii. இது இந்தியாவிலுள்ள துளசி ராமாயணத்தின் மொழிபெயர்ப்பு. குறிப்புகள் பல இதில் அடங்கியுள்ளன. கதைத் தொடர்பு விளங்க, அங்கங்கே, பக்கத் தலைப்புகளும் தரப்பட்டிருக்கின்றன. இதனைத் தமிழில் தந்தவர் நடாதூர் ஸ்ரீனிவாசாசாரியாவார். viii. 687/1916/III.

O152,1

1320. i. இராமசரித மானசம் என்னும் துளசி ராமாயணம் : முதற் பதிப்பு ; ii. டி. ஆர். கிருஷ்ணமாசாரி, சென்னை ; மாடர்ன் பிரிண்டிங் ஒர்க்ஸ், சென்னை ; iii. டிசம்பர், 1916 ; iv. உ. ப. (161–320) 160 ; v. 25×17 செ.மீ. ; vi. 1–8–0 ; vii. முன் வெளிவந்த தொகுதியின் தொடர்ச்சி இந்நூல். இடையிடையே தக்க தலைப்புகளும், வேண்டும் குறிப்புகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. viii. 892/1916/IV.

O152,1

891.44 வங்காள இலக்கியம்

891.441 தாகூர

ரவீந்திரநாத தாகூர்

1321. i. ரவீந்திரநாத் தாகூர் அருளிய பஞ்ச வியாசங்கள் : முதற் பதிப்பு ; ii. சுதேசமித்திரன் பவர் பிரஸ், சென்னை ; iii. 1919 ; iv. உ. ப. 97 ; v. 22×14 செ.மீ. ; vi. 0–10–0 ; vii. இதில், வங்கக் கவிஞர் ரவீந்திரநாத் தாகூரின்

கட்டுரைகள் உள்ளன. இதனைத் தமிழாக்கம் செய்தவர் சி. சுப்பிரமணிய பாரதியார். ஐந்து அழகிய கட்டுரைகள் இதன் கண் உள்ளன. நமது நாட்டின் தேசியகீதம், அன்றே, இந்நூலுக்கணியென, ஆசிரியரால், நூன்முகப்பில் வெளியிடப் பெறறிருக்கின்றது. viii. 3/1919/II.

O157,1M61

894.443 வங்கப் புதினம்

ரவீந்திரநாத தாகூர்

1322. i. ரவீந்திரநாதரின் சிறு கதைகள்: திருத்திய இரண்டாம் பதிப்பு; ii. சி. குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ், சென்னை; சென்னை காக்ஸ்டன் பிரஸ், சென்னை; iii. செப்டம்பர், 1920; iv. உ. ப. 61; v. 19×13 செ.மீ.; vi. 0–4–0; vii. சிறுவர்களுக் கேற்ற சிறு கதைகள் இதில் அடங்கியுள்ளன. வங்கக் கவிஞர் ரவீந்திரநாத் தாகூரின் கதைகளில் நான்கின் மொழிபெயர்ப்பே இந்நூல். இதனை ரா. ராஜசூடாமணி என்பார் தமிழிலே தந்துள ளார். viii. 936/1920/III.

O157,1M61

1323. i. தபாலாபீஸ்: முதற் பதிப்பு; ii. மாக்மில்லன் அண்டு கம்பெனி, சென்னை, கமர்ஷியல் பிரஸ், சென்னை; iii. ஆகஸ்ட், 1920; iv. உ.ப 57; v.18×13 செ.மீ., vi.0-12-0; vii. வங்கக் கவிஞன் தாகூர் அவர்கள் எழுதிய நாடகத்தினைத் தமிழில், "தபாலாபீஸ்" என்னும் தலைப்பில் இந்நூலில் ஆசிரியர் கே.வி. வீரராகவையர் எழுதியுள்ளார். உயிர்த் தத்துவத்தின் சிறப்பினை இந்நாடகம் நன்கு விளக்குகின்றது. viii. 211/1920/IV.

O157,1M61

894.8111 தமிழ்க்கவிதை : பத்துப்பாட்டு

நக்கீர தேவர்

1324. i. திருமுருகாற்றுப்படை: முதற் பதிப்பு; ii. ஸ்ரீராமானுஜ அச்சியந்திர சாலை, சென்னை; iii. மே, 1920; iv. செ.மூ.ப.20; v. 13×11 செ.மீ.; vi. 0–2–0; vii. முருகன் மீது புகழ்ந்து பாடப் பெற்றது இந்நூல். திருமுருகாற்றுப்படை யினைத் திருமுருகாற்றுப் படலம் எனத் தவறுக இந்நூலில் அச்சிட்டுள்ளனர். viii. 273/1920/IV.

O31,1B911

1325. i. திருமுருகாற்றுப்படை: புதிய பதிப்பு; ii. கோ. செல்வ ரங்கம் அண்டு கம்பெனி, சென்னை; மனோன்மணி விலாஸ அச்சுக்கூடம், சென்னை; iii. நவம்பர், 1920; iv. செ.மூ. உ.ப. 47; v. 12×9 செ.மீ.; vi. 0–1–0; vii. பத்துப்

பாடல்களில் ஒன்றான திருமுருகாற்றுப்படையின் மூலம் இந்நூலில் அடங்கியுள்ளது. பிரபந்த வரலாற்றுக் குறிப்பும் இதன்கண் உண்டு. ஆறுபடை வீடுகளின் சிறப்பும், தோத்திரப் பாக்கள் சிலவும் அவற்றிற்குரையும் நூலினிறுதியில் அமைந்துள்ளன. சுப்ரமணியரின் திருநாமங்களின் தொகுப்பொன்றும் உண்டு. viii. 708/1920/IV.

O31,1B911

நக்கீரர் முதலியோர்

1326. i. பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரையும்; இரண்டாம் பதிப்பு; ii. உ. வே. சாமிநாத ஐயர்; கமர்ஷியல் பிரஸ், சென்னை; iii. ஜூலை, 1918; iv. செ.மூ. உ.ப. 584; v. 22×14 செ.மீ.; vi. 4–8–0; vii. பண்டைத் தமிழ் இலக்கியப் பிரிவில் ஒன்றான பத்துப்பாட்டில் அடங்கிய பத்து நூல்களின் மூலமும் உரையும் இதில் உள்ளன. மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் உரையுடன் கூடியது. இதன் பதிப்பாசிரியர் உ.வே. சாமிநாத ஐயரவர்களாவார். அவர் எழுதிய முகவுரையும், பாடினோர் வரலாறும், பாடப்பட்டோர் வரலாறும் இந்நூலுக்கணியெனத் திகழ்கின்றன. உரையாசிரியர் நச்சினார்க்கினியர் வரலாறும், இப்பதிப்பில் எடுத்துக்காட்டிய நூற்பெயர் முதலியவற்றின் முதற் குறிப்பகராதியும் உண்டு. நூலிறுதியில் மூல அரும்பத விளக்க அகராதி, உரையிற் கண்ட சொற்கள் முதலியவற்றின் அகராதி ஆகியவை தனித்தனி உள, viii. 427/ 1918/III.

G31,1B9

வேதாசலம், சுவாமி, சென்னை

1327. i. பட்டினப்பாலை ஆராய்ச்சி: திருத்திய இரண்டாம் பதிப்பு; ii. சுவாமி வேதாசலம், சென்னை; டி.எம்.அச்சுக்கூடம், சென்னை; iii. மே, 1919; iv. செ.மூ.உ.ப. 221; v. 19×13 செ.மீ.; vi. 1–8–0; vii. இதில், பத்துப்பாட்டில் ஒன்றான பட்டினப்பாலை என்னும் நூலைப்பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரை அடங்கியுள்ளது. இவ்வாராய்ச்சி நூலின் மாண்பு மதிப்பிடற்கரியது. வடசொற்கலவாத் தெள்ளிய தமிழ்நடையால் ஆயது. பட்டினப்பாலை மூல பாடத்துடன், உரைவிளக்கமும், பாட்டின் இயல்பு, நடை முதலியன பற்றிய விளக்கமும் தரப்பட்டிருக்கிறது. வரலாற்றுக் குறிப்புகள், அருஞ்சொற்பொருள் ஆகியவையும் சேர்க்கப்பட்டுள்ளன. viii. 553/1919/II.

O31,1B

1328. i. முல்லைப்பாட்டு ஆராய்ச்சிஉரை: மூன்றும் பதிப்பு; ii. சுவாமி வேதாசலம், பல்லாவரம்; டி. எம். அச்சுக்கூடம், பல்லாவரம், சென்னை; iii. செப்டம்பர், 1919; iv. செ.மூ.உ.ப. 88; v. 19×13 செ.மீ.; vi. 1–4–0; vii. பத்துப்பாட்டுள் ஒன்றுன முல்லைப் பாட்டினைப் பற்றியது இந்நூல். முல்லைப் பாட்டினை ஆராய்ந்து, இலக்கியச்சுவை, சிறப்பு, மொழி வளம் ஆகியவற்றைக் குறித்து ஆசிரியர் சிறந்த முறையில் விளக்கி யுள்ளார். ஆங்கிலத்திலும், தமிழிலும் முன்னுரை அமைந் துள்ளது. பழந்தமிழ்ப் பாட்டின் சிறப்பியல்பும், முல்லைப் பாட்டின் இயற்கையும், அதன் பாட்டியற்றிறமையும், இதில் செவ்வனே விளக்கப்பட்டுள்ளன. முல்லைப்பாட்டின் அருஞ் சொற்பொருள் நூலிறுதியில் கொடுக்கப்பட்டிருக்கிறது. viii. 1167/1919/III.

O31,1B931:g

894. 8111 தமிழ்க்கவிதை : எட்டுத் தொகை

1329. i. பதிற்றுப்பத்து—மூலமும் உரையும்: இரண்டாம் பதிப்பு; ii. உ.வே. சாமிநாத ஐயர், உத்தமதானபுரம்; கமர்ஷியல் அச்சுக்கூடம், சென்னை; iii. அக்டோபர், 1920; iv. செ.மூ. உ.எ. 80; v. 21×14 செ.மீ.; vi. 1–14–0; vii. எட்டுத் தொகை நூல்களுள் நான்காவதாகிய பதிற்றுப்பத்தின் மூலமும், பழைய உரையும், இந்நூலில் உள்ளன. நூலா சிரியர்கள் வரலாறு, பதிற்றுப்பத்துச் செய்யுள் அகராதி அரும்பதம் முதலியவற்றின் அகராதி ஆகியன இதன்கண் அடங்கியுள்ளன. viii. 763/1920/IV.

O31,1B4

1330. பரிபாடல் மூலமும் உரையும்: முதற் பதிப்பு; ii. உ. வே. சாமிநாத ஐயர், உத்தமதானபுரம்; கமர்ஷியல் அச்சுக் கூடம், சென்னை; iii. ஜூன், 1918; iv. செ.மூ.உ.ப. 175; v. 21×14 செ.மீ.; vi. 2–8–0; vii. எட்டுத் தொகையுள் ஐந்தாவதாகிய பரிபாடல் மூலமும், உரையாசிரியர் பரிமேலழகர் இயற்றிய உரையும் உள்ளன. டாக்டர் உ.வே. சாமிநாத ஐயரால், கையெழுத்துப் பிரதிகளைக் கொண்டு பரிசோதித்து, புதிதாக எழுதப்பட்ட பல்வகையான குறிப்புகளும் இந் நூலின்கண் அடங்கியுள்ளன. டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்கள் எழுதப்பட்ட முகவுரையுடன் கூடியது. பாடினோர் வரலாறு, அரும்பதம் முதலியவற்றின் அகராதி ஆகியவையும் இடம் பெற்றுள்ளன. viii. 955/1918/II.

O31,1B5

894.8111 தமிழ்க் கவிதை : பதினெண் கீழ்க்கணக்கு

கண்ணன் சேந்தனார்

1331. i. திணைமொழி ஐம்பது: முதற் பதிப்பு ; ii. சோமசுந்தர தேசிகர், இலக்கண விளக்க பரம்பரை ; விக்டோரியா அச்சுக் கூடம், திருவாரூர் ; iii. செப்டம்பர், 1918 ; iv. செ.மூ. உ.எ. 5+50 ; v. 21×11 செ.மீ.; vi. 0–2–0; vii. பண்டைத் தமிழகக் காதலர்களின் நிலைமைகளைப் பற்றியும், அவர்கள் காதல் வாழ்க்கையில் கைக்கொண்டுள்ளது நடவடிக்கைகளைப் பற்றியும், ஐம்பது பாடல்கள் மூலமாக விளக்கப்பட்டுள்ளன. இப்பாடல்களுக்கு உரிய பழைய உரையும் கொடுக்கப்பட்டிருக் கிறது. திருவாரூர்த் தமிழ்ச் சங்கத்தாரின் முயற்சியால் பதிப் பிக்கப்பட்டது, இந்நூல். viii. 556/1919/I.

O31,1C43

கூடலூர்கிழார், மதுரை

1332. i. முதுமொழிக் காஞ்சி : திருத்திய இரண்டாம் பதிப்பு ; ii. தி. செல்வக் கேசவராய முதலியார், சென்னை ; எஸ்.பி. சி.கே. பிரஸ், சென்னை ; iii. ஆகஸ்ட், 1919 ; iv. செ.மூ.உ.எ. 100 ; v. 18×13 செ.மீ. ; vi. 0–5–0 ; vii. முதுமொழிக் காஞ்சி யென்பது, காஞ்சித்திணையின் துறைகளில் ஒன்று. பத்துப்பாடல்களாலான பத்துப் பிரிவுகளைக்கொண்டு பலவித கருத்துக்களை இது தெரிவிக்கின்றது. 'சிறந்த பத்து' 'அறிவுப் பத்து' முதலியனவாக வரும் பத்துப் பெயர்களுக்கேற்ற வகை யில், அவற்றின் கீழ்வரும் முதுமொழிகளும் அமைந்துள்ளன. viii. 583/1919/IV.

O31,1C65

திருவள்ளுவர்

1333. i. திருக்குறள் : முதற் பதிப்பு ; ii. வ. உ. சிதம்பரம்பிள்ளை, சென்னை ; கே. ஆர். பிரஸ், சென்னை ; iii. ஜூன், 1917 ; iv. செ.மூ.உ.எ. 380 ; v. 18×12 செ.மீ. ; vi. 1–0–0 ; vii. திருக்குறள் அறத்துப்பாலின் இல்லறவியல், துறவறவியல், ஊழியல் ஆகிய பகுதிகளுக்கு மணக்குடவரின் உரை இதில் தரப்பட்டுள்ளது. பல ஏட்டுப் பிரதிகளைப் பார்த்து, ஆராய்ந்து பதிப்பித்த ஆய்வுப் பதிப்பு. தமது பதிப்பு முயற்சிகளையும், உரையின் அருமைப்பாட்டையும், தமது பதிப்புரையில் ஆசிரியர் நன்கு விளக்கியுள்ளார். viii. 856/1917/II.

O31,1C5

1334. i. திருக்குறள் : முதற் பதிப்பு ; ii. எஸ். எஸ். பதி அண்டு கோ., சென்னை ; கணேச அச்சுக் கூடம், சென்னை ; iii. மார்ச், 1918 ; iv. செ.மூ.எ. 1,330 ; v. 14×10 செ.மீ. ;

vi. 0—8—0 ; vii. தெய்வநூல் என்ற சொல்லப்படுகின்றதும், முப்பால் என்று அழைக்கப்படுகின்றதுமாகிய திருக்குறள் 1330-ம் அடங்கிய சிறிய புத்தகம். நூலின் இறுதியில், திருக்குறளின் சிறப்பினைப் புகழ்ந்து பல புலவர்கள் பாடிய பாக்கள்டங்கிய திருவள்ளுவமாலை உள்ளது. அதிகாரத் தலைப்புகளுக்கு ஆங்கில மொழி பெயர்ப்பும் உண்டு. viii. 298/1918/II.

O31,1C5

1335. i. திருக்குறள் மூலம்: இரண்டாம் பதிப்பு; ii. கொ. செல்வரங்கம், சென்னை ; மனோன்மணி விலாச அச்சுக்கூடம், சென்னை ; iii. செப்டம்பர், 1918 ; iv. செ.மூ.எ. 1,330 ; v. 18×11 செ.மீ. ; vi. 0—4—0 ; vii. ஒரு பக்கத்திற்கு ஒரு அதிகாரம் அமையுமாறு அச்சிடப் பெற்றுள்ளது. viii. 1062/1918/III.

O31,1C5

1336. i. திருக்குறள் மூலமும் உரையும்—இரண்டாம் பாகம்: இரண்டாம் பதிப்பு ; ii. கோ. வடிவேலு செட்டியார் ; சச்சிதானந்த அச்சியந்திரசாலை, கோமளீசுவரன்பேட்டை, சென்னை ; iii. ஜூலை, 1919 ; iv. செ.மூ.உ.ப. 698+30 ; v. 22×14 செ.மீ. ; vi. 7—0—0 (இரண்டு பாகமும் சேர்த்து) ; vii. இதில் திருக்குறளின் பொருட்பாலில் அங்க இயல் முதல் உள்ள பகுதிகளும், காமத்துப்பாலும், இடம்பெற்றுள்ளன. குறட்பாக்களுக்குப் பொருளும், தெளிவுரையும், ஆங்கில மொழிபெயர்ப்பும் உண்டு. பரிமேலழகர் உரையை முதற்கண் கொடுத்து, அதற்குப் பதிப்பாசிரியராகிய கோ. வடிவேலு செட்டியார் தெளி பொருள் விளக்கமும், கருத்துரையும், குறிப்புரையும் சேர்த்துள்ளார். இவ்வாசிரியர் வெளியிட்ட திருக்குறள் வெளியீட்டில் இது, பிற்பாகமாகிய இரண்டாவது பகுதியாகும். viii. 617/1919/III.

O31,1C5

1337. i. திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும்: முதற் பதிப்பு ; ii. செ.மு.வேலு முதலியார், சென்னை ; கணேச அச்சுக்கூடம், சென்னை ; iii. ஜூன், 1920 ; iv. செ.மூ.உ.எ. 1330 ; v. 14×11 செ.மீ. ; vi. 2—8—0 ; vii. திருக்குறளின் மூலமும், அதற்குப் பரிமேலழகரின் உரையும் இதில் அடங்கியுள்ளன. திருவள்ளுவரின் வாழ்க்கைச் சுருக்கமும் உடன் தரப்பட்டுள்ளது. திருவள்ளுவ மாலையும், இறுதியில் தரப் பட்டிருக்கிறது. சென்னை, சூளை, சுவாமி விவேகாநந்தா இந்து பாலிகா பாடசாலைத் தலைமை உபாத்தியாயர், வித்துவான் சே.மு.வேலு முதலியார், பல பிரதிகளைக்கொண்டு பரிசோதித்து வெளியிட்டது. viii. 833/1920/II.

O31,1C5

நல்லாதனார் & விளம்பிநாகனார்

1338 i. பாலநீதிச்செய்யுள் நூற்றிரட்டு : திரிகடுகம், நான்மணிக் கடிகை : முதற் பதிப்பு ; ii. மாக்மில்லன் அண்டு கம்பெனி, சென்னை ; எஸ். பி. சி. கே. பிரஸ், சென்னை ; iii. ஆகஸ்ட், 1919 ; iv. செ.மூ.உ.எ. 100+104 ; v. 18×12 செ. மீ. ; vi. 0—5—0 ; vii. பால நீதிச் செய்யுள் நூற்றிரட்டு இரண்டாம் பகுதியாகும். இது எட்டாம் வகுப்பிற்குரிய பாடப் புத்தகமாகும். இந்நூலில், திரிகடுகம், நான்மணிக்கடிகை ஆகிய இரண்டு நூல்களின் பாடல்களும், அவற்றிற்குரிய விளக்க உரைகளும் அடங்கியுள்ளன. viii. 581/1919/IV.

O31,1C61

பெருவாயின் முள்ளியார்

1339. i. ஆசாரக்கோவை ; திருத்திய பதிப்பு ; ii. தி. செங்கல்வ ராய முதலியார், சென்னை ; எஸ்.பி.சி.கே. பிரஸ், சென்னை ; iii. நவம்பர், 1918 ; iv. செ.மூ.உ.எ. 100 ; v. 18×13 செ. மீ. ; vi. 0—8—0 ; vii. ஆசாரக்கோவை, கடைச்சங்கம் மருவிய பதினெண்கீழ்க் கணக்கில் ஒன்று. இதில் நூறு வெண்பாக்கள் உள்ளன. இந் நூலில் உண்ணல், உடுத்தல், உறங்கல், நீராடல், காலைக் கடன், ஐங்குரவரை வழிபடல், இல்லொழுக்கம், மன்னரைச் சேர்ந்தொழுகல் முதலியவற்றைப் பற்றி விளக்கப்பட்டுள்ளன. பாக்களுக்குப் பொருளும், விளக்கமும் அளிக்கப்பட்டுள்ளன. இந்நூலின் முகப்பில், பதினெண் கீழ்க் கணக்கு விளக்கம் ஒன்று தரப்பட்டுள்ளது. நூலிறுதியில், பொருளட்டவணை, அரும்பத அகராதி, பாட்டு முதற் குறிப்பு அகராதி ஆகியவை இடம்பெற்றுள்ளன. viii. 651/1918/IV.

O31,1C62

பொய்கையார்

1340. i. பொய்கையார் இன்னிலை : முதற் பதிப்பு ; ii. த. வேதியப் பிள்ளை, தில்லையாடி ; இந்தியா அச்சுக்கூடம், சென்னை ; iii. செப்டம்பர், 1917 ; iv. செ. மூ. எ. 45 ; v. 19×13 செ. மீ. ; vi. 0—8—0 ; vii. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான 'இன்னிலை', வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்களின் விருத்தியுரையுடன் இதில் தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு கவிதைக்கும், தெளிவான விளக்கம் தரப்பட்டிருக்கிறது. அறப்பால், பொருட்பால், இன்பப்பால். வீட்டுப்பால் ஆகிய பிரிவுகளைக் கொண்டது. 45 செய்யுட்களே உள்ள சிறு நூல். நூலைக் குறித்தும், நூலாசிரியரைக் குறித்தும், உரையாசிரியர்

விரிவாக ஆராய்ந்து, எழுதியுள்ளார். அரும்பத அகராதி, உரை மேற்கோள் அகராதி என்பனவும் சேர்க்கப்பட்டுள்ளன. viii. 69/1917/IV.

O31,1C67

மூன்றுறையரையர்

1341. i. பழமொழி நானூறு: முதற் பதிப்பு; ii. தி. செங்கல்வ ராய முதலியார், சென்னை; எஸ். பி. சி. கே. பிரஸ், சென்னை; iii. ஏப்ரல், 1917; iv. செ. மூ. உ. எ. 400; v. 18×12 செ. மீ.; vi. 2—0—0; vii. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகிய, பழமொழி நானூற்றின் மூலமும் உரையும், இதில் தரப்பெற்றிருக்கின்றன. பாடல்கள் அமைந்த பழமொழிகளின் தமிழ் உருவமும், ஆங்கில ஆக்கமும் இதில் உண்டு. பழைய பொழிப்புரையோடு, பதிப்பாசிரியரால் எழுதிச் சேர்க்கப்பட்ட பதவுரையும், கருத்து விளக்கமும், இப் பதிப்பில் உண்டு. 1874–ல் இந்நூலைச் சோடசாவதானம் சுப்பராயச் செட்டியார் பால், இயல், அதிகாரப் பாகுபாட்டுடன் வெளியிட்டார். இது, பழம்பிரதிக்கு மாறுபட்ட தொகுப்பு. பின், 1904–ல் திரிசிரபுரம் ச. ஆறுமுக நயினார் என்பார் பிரதிகளில் உள்ள முறைப்படியே மூலபாடத்தை வெளியிட்டார் என்று தெரிகிறது. இந்தப் பதிப்பு, 1874-ஆம், ஆண்டுப் பதிப்பை ஒட்டி அமைந்தது. viii. 337/1917/II.

O31,1C63

ராஜரத்தினம் பிள்ளை, டி. ஏ. (தொ. து)

1342. i. பன்மணிக்கொத்து—இரண்டாம் பாகம்—இரண்டாம் திருத்திய பதிப்பு; ii. கிறிஸ்டியன் லிட்டரேச்சர் சொஸைட்டி, சென்னை; சி. எல். எஸ். பிரஸ், சென்னை; iii. நவம்பர், 1920; iv. செ. மூ. ப. 75; v. 18×13 செ. மீ.; vi. 0—4—6; vii. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்களின் தொகுப்பு. சிறுவர், சிறுமியர்களுக்காகத் திரட்டப்பட்டது. அரும்பத விளக்கத்துடன் கூடியது. viii. 979/1920/IV.

O31,1C

894.8111 தமிழ்க்கவிதை: ஐம்பெருங்காப்பியம்

ஆறுமுகஞ் சேர்வை, வீ., செம்பூர்

1343. i. ஜீவகன்: முதற் பதிப்பு; ii. என். முனுசாமி முதலி, சென்னை; ஆனந்தபோதினி அச்சுக்கூடம், சென்னை; iii. பிப்ரவரி, 1920; iv. உ. ப. 240; v. 18×13 செ. மீ.;

vi. 1—0—0 ; vii. பஞ்ச காவியங்களுள் ஒன்றாகிய சிந்தாமணியின் கதை உரைநடையில் தரப்பட்டுள்ளது. இக்காலத்திற்குப் பொருந்தாத சில காமச்சுவைப் பகுதிகளை விடுத்து இதனை ஆசிரியர் எழுதியுள்ளார். viii. 870/1920/I.

O31,1C91

894.8111 தமிழ்க் கவிதை : ஐஞ்சிறுகாப்பியம்

கிருஷ்ணமாச்சாரியர், புதுப்பட்டு, கடாம்பி

1344. i. சூளாமணி : முதற் பதிப்பு ; ii. குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ் ; காக்ஸ்டன் பிரஸ், சென்னை ; iii. 1916 ; iv. உ. ப. 56 ; v. 19×13 செ. மீ. ; vi. 0—3—0 ; vii. தோலாமொழித் தேவர் இயற்றிய சூளாமணி என்னும் செய்யுள் நூலையும், ராவ்பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் இயற்றிய வசன சூளாமணியையும் தழுவி எழுதப்பட்டது. சூளாமணிக் காவியத்தின் சுருக்கமான இது பத்து அதிகாரங்களாகப் பகுத்துத் தெளிவுற எழுதப்பட்டுள்ளது. அரும்பத உரைக் குறிப்பும் நூலிறுதியில் சேர்க்கப்பட்டிருக்கிறது. உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்க்குத் துணைப் பாடமாகப் படிப்பதற்கு ஏற்றபடி இந்நூல் எழுதப்பட்டுள்ளது. viii. 616/1916/I.

O31,1

பலராம ஐயர், ந.

1345. i. சூளாமணி : முதற் பதிப்பு ; ii. கணேஷ் கம்பெனி, சென்னை ; கேம்பிரிட்ஜ் பிரஸ், சென்னை; iii. அக்டோபர், 1918 ; iv. உ. ப. 179 ; v. 19×12 செ. மீ; vi. 1—0—0 ; vii. சைன மதத்தைச் சார்ந்த தோலாமொழித் தேவரால் செய்யப்பட்ட சூளாமணிக் காவியத்தினை ஒட்டி வசன நடையில் யாவரும் எளிதில் படிக்கும் வண்ணம் ஆசிரியர் எழுதியுள்ளார். இவர் தாமோதரம் பிள்ளை அவர்கள் எழுதிய வசன சூளாமணி நூலையும் நோக்கியுள்ளார் என்றும் தெரியவருகிறது. இந்நூலைக் கற்பார்க்கு உதவியாக 'அரும்பதவகராதி' ஒன்றும் தொகுத்து அமைத்துள்ளார். viii. 579/1918/IV.

O31,1

894.8111 தமிழ்க் கவிதை: திருமுறைகள்

சுவாமிநாத பண்டிதர்

1346. i. திருமுறைப் பெருமை : முதற் பதிப்பு ; ii. சுவாமிநாத பண்டிதர், கும்பகோணம் ; ஸ்ரீ கிருஷ்ணவிலாச அச்சியந்திர சாலை, கும்பகோணம் ; iii. மார்ச், 1918 ; iv. உ. ப. 4:

. 21×14 செ. மீ. ; vi............ ; vii. சைவ சமயச் சார்பாகிய பன்னிரண்டு திருமுறைகளின் பெருமையும், தேவாரம் பாடிய மூவர் அருளிச்செய்த திருவெண்காட்டுத் தேவாரத் திருப்பதிகங்களும் இந்நூலில் அடங்கியுள்ளன. இலையமுது கூடம் க. சிதம்பரம் பிள்ளை அவர்கள் வேண்டுகோளின்படி அச்சிட்டதாகத் தெரிகிறது. நூலாசிரியர் தந்த முகவுரையுடன் கூடியது. viii. 228/1918/II.

Q23:417

செந்திநாதய்யர்

1347. i. தேவாரம் வேதசாரம்: முதற் பதிப்பு; ii. சி. ஏகம்பர முதலி, சென்னை ; சைவவித்யாநுபாலன பிரஸ், சென்னை ; iii. ஜூலை, 1917 ; iv. செ. மூ. உ. ப. 408 ; v. 22×14 செ. மீ ; vi. 0—3—0 ; vii. சைவசமயத்தின் கொள்கைகளைப்பற்றி விளக்கும் நூலே இது. கிரந்தவடிவிலும் சில பகுதிகள் உண்டு. சிவபெருமானைப்பற்றிய பல நூல்களிலிருந்து செய்திகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. தேவாரம் முதலிய சைவத் திருமுறைகள் வேதசாரமாக அமைந்தவை என்பதைப் பற்பல எடுத்துக்காட்டுக்களுடன் விளக்கும் பெருநூல். சைவ சித்தாந்த மகாசமாஜத்தார் விருப்பிற்கு இணங்க இது செய்யப்பெற்றது. viii. 461/1917/III.

Q23:417

சேக்கிழார்

1348. i. பெரியபுராணம் : சித்தாந்த போத ரத்நாகரம், உரையுடன்; ii. கா. வ. ஆலாலசுந்தரம் பிள்ளை; கணேச அச்சுக்கூடம், சென்னை; iii. 1919 ; iv. செ. மூ. உ. ப. 41 முதல் 128 வரை; v. 25×18 செ. மீ.; vi. 0–8–0; vii 'சித்தாந்த போதரத்நாகரம்'. இது சைவ அடியார் அறுபத்துமூவரின் வரலாற்றை விளங்க உரைக்கும் பெரிய புராணத்தின் ஒரு பகுதியையும், அதற்குச் சென்னை ஆலாலசுந்தரம்பிள்ளையவர்களால் எழுதப்பட்ட உரையையும் கொண்டுள்ளது. உரையாசிரியர், தமது உரைக்கு இட்ட பெயரே 'சித்தாந்த போதரத்நாகரம்' என்பது. பெரிய புராணத்தைப் பகுதி பகுதியாக வெளியிட்டு வரும் உரையாசிரியரின் வெளியீட்டில், இது ஒரு பகுதி. viii. 231/1920/I.

Q23:Wx1

சேந்தனர்

i. சேந்தனர் திருப்பல்லாண்டு (தொ. எ. 125 பார்க்க) : முதற் பதிப்பு; ii. டீ. எஸ். ராமானுஜ ஐயங்கார், திருவொற்றியூர்; ஸ்ரீராமானுஜ அச்சியந்திரசாலை, சென்னை :

iii. ஜூலை, 1920; iv. செ.மூ.எ. 13; v. ......; vi. ......; vii. சிவபெருமானுக்குப் பல்லாண்டு பாடி வாழ்த்துகிறார் ஆசிரியர். viii. 276/1920/IV.

Q23:417x7

திருஞானசம்பந்தர் முதலிய நால்வர்

1349. i. தேவாரத்திரட்டு : திருத்திய பதிப்பு; ii. எம். டி. ஜெயராம முதலியார், சென்னை ; வாணி விலாச அச்சுக்கூடம், சென்னை ; iii. மே, 1920 ; iv. செ. மூ. ப. 120 ; v. 18×11 செ. மீ. ; vi. 0-6-0 ; vii. இது, சைவ சமயாசாரியர்களாகிய நால்வரது சரித்திரத்தையும், நால்வருந் திருவாய் மலர்ந்தருளிய தேவார, திருவாசகத் திருமுறைகளினின்றும், தாயுமானவர், இராம லிங்கர் திருப்பாடல்களினின்றும் தெரிந்தெடுக்கப்பட்டன வற்றையும ஒருங்கு சேரத் தொகுத்து வெளியிடப்பெற்றது. viii. 900/1920/II.

Q23:417x1

1350. i. தேவாரத்திருவாசகத் தோத்திரத் திரட்டு: முதற் பதிப்பு ; ii. பி. ஸ்ரீனிவாச சாஸ்திரி, சென்னை ; சாஸ்திர சஞ்சீவிநி பிரஸ், சென்னை ; iii. நவம்பர், 1916 ; iv. செ. மூ. உ. எ. 160 ; v. 14×11 செ. மீ. ; vi. 0-4-0 ; vii. சைவ சமயா சாரியர்களான நால்வர் திருவாய் மலர்ந்தருளிய தேவாரத் திருவாசகத் தோத்திரத் திரட்டும், அவர்களது சரித்திரச் சுருக்கமும் இதில் அடங்கியுள்ளன. முதலில் சரித்திரமும், அதனையடுத்து அவர்தம் அருள்வாக்கும் ஆக அமைக்கப் பட்டிருக்கிறது. இவற்றோடு, தாயுமானவர், இராமலிங்க சுவாமிகள் திருப்பாடல்களினின்றும் சில பாக்கள், தெரிந்து சேர்க்கப்பட்டுள்ளன. viii. 480/1916/IV.

Q23:417x1.

பக்தபாத துளி (தொ. து.)

1351. i. சைவ சமய ஞானோபதேசத் திரட்டு : முதற் பதிப்பு ii. சம்பந்த முதலி, வேலூர் ; எஸ். வி. பிரஸ், வேலூர் ; iii. ஏப்ரல், 1917 ; iv. செ. மூ. ப. 56 ; v. 19×12 செ.மீ. ; vi. இலவசம் ; vii. இது, சைவப் பெரியார்களான, ஞான சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் இயற்றிய பாடல்களினின்று சிலவற்றை எடுத்துத் தொகுத்த நூல். சைவத்திருமுறை பன்னிரண்டிலிருந்தும், தேர்ந்து எடுக்கப் பெற்ற பாடல்கள் உள. நூலிறுதியில், மெய்கண்ட தேவரின் சிவஞான போதமும் சேர்க்கப்பெற்றிருக்கிறது. viii. 92/1917/II.

Q23:417

பட்டினத்துப் பிள்ளையார்

1352. i. பட்டினத்தார் பிரபந்த விருத்தியுரை ; ii. எஸ். ஆர். மாணிக்க முதலியார், ஸ்ரீபெரும்புதூர் ; அமெரிக்கன் டைமண்ட் பிரஸ், சென்னை ; iii. 1918 ; iv. உ. ப. 414+224 ; v. 21×14 செ. மீ. ; vi. 3–8–0 ; vii. இந் நூலில், பட்டினத்தார் இயற்றிய 39 தலைப்புகளைக் கொண்ட பல்வேறு வகையான பாடல்கள் உரையோடு அடங்கியுள்ளன. பட்டினத்துப்பிள்ளையாரின் வாழ்க்கை வரலாற்றுடன் கூடியது. படித்துப்படித்து இன்புறுந்தகையது. பத்திரகிரியார் பாடிய மெய்ஞ்ஞானப்புலம்பலும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. பச்சையப்பன் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஆனூர் சிங்காரவேலு முதலியார் முதலிய தமிழன்பர்கள் இயற்றிய உரைகள் இதன்கண் உள. இந்நூலின் உரையைப் பாராட்டி பலர் சாற்றுக்கவிகள் பாடியுள்ளனர். viii. 998/1918/I.

Q23:417x93

மாணிக்கவாசக சுவாமிகள்

1353. i. திருக்கோவையார் : முதற் பதிப்பு ; ii. லாங்மன் ஸ்கிரீன் அண்டு கோ, சென்னை ; கபாலி பிரஸ், சென்னை ; iii. ஜூலை, 1917 ; iv. செ. மூ. உ. எ. 40 ; v. 19×13 செ. மீ. ; vi. 1–8–0 ; vii. மாணிக்கவாசக சுவாமிகள் எழுதிய திருக் கோவையார் இதில் அடங்கியுள்ளது. பேராசிரியர் உரையைத் தழுவி எழுதப்பட்ட துறை விளக்கம் முதலியவற்றோடு கூடி யது. viii. 675/1917/III.

Q23:417x93

முருகேச முதலி, சி. எஸ். (தொ. து.)

1354. i. தேவாரம், திருவாசகம் முதலிய தமிழ்வேதத் திருமுறைத் திரட்டு : நான்காம் திருத்திய பதிப்பு ; ii. சி. எஸ். முருகேச முதலி, சென்னை ; கணேச பிரஸ், சென்னை ; iii. டிசம்பர், 1917 ; iv. செ. மூ. ப. 227 ; v. 17×13 செ. மீ. ; vi. 0–12–0 ; vii. இது, சைவ சமயாசாரியர்கள் அருளிச் செய்த தேவாரம், திருவாசகம் முதலிய தமிழ்வேதத் திருமுறைத் திரட்டு. இதில், பன்னிரு திருமுறை, திருப்புகழ், திருவகுப்பு இவைகளினின்றும் திரட்டப்பட்ட முக்கியமான பாடல்கள் உள. சமயாசாரியர் சரித்திர சங்கிரகங்களும் சேர்ந்துள்ளன. viii. 303/1918/I.

Q23:41

394.8111 தமிழ்க் கவிதை : திவ்யப் பிரபந்தம்

ஆண்டாள்

1355. i. ஆண்டாள் சரித்திரமும் திருப்பாவையும்: முதற் பதிப்பு: ii. கொ. செல்வரங்கம் கம்பெனி, சென்னை; மனோன்மணி விலாச அச்சுக்கூடம், சென்னை; iii. டிசம்பர், 1918; iv. செ.மூ.ப. 64; v. 12×9 செ.மீ; vi. 0—2—0; vii. வைணவ பக்தர்களுள் பெண்பாலரான ஆண்டாளின் வாழ்க்கைச் சரித்திரமும், அவளால் இயற்றப்பட்ட திருப்பாவையும் இதில் அடங்கியுள்ளன. இதோடு, இவ்வம்மையார் பாடிய 'வாரண மாயிரம்' என்னும் திருமொழியும் உள்ளது. தவிரவும், பெரியாழ்வாரின் 'திருப்பல்லாண்டு', தொண்டரடிப் பொடியாழ்வார் பாடிய 'திருப்பள்ளியெழுச்சி', மதுரகவியாழ்வார் அருளிச் செய்த, 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்பனவும் இடம் பெற்றுள்ளன. viii. 59/1919/I.

Q22:417x1,13

1356. i. ஆண்டாள் சரித்திரமும் திருப்பாவை முதலியனவும் ii. கொ. செல்வரங்கம் கம்பெனி, சென்னை; மனோன்மணி விலாச அச்சுக் கூடம், சென்னை; iii. டிசம்பர், 1920; iv. செ.மூ.ப. 64; v. 12×8 செ.மீ; vi. 0—2—0; vii. . . . .; viii. 1008/1920/IV.

Q22:417x1,13

i. திருப்பாவை (தொ. எ. 1363 பார்க்க); ii. ஸ்ரீ சரஸ்வதி விலாச புத்தக சாலை; ஷண்முக ஆனந்த அச்சுக்கூடம், போளூர்; iii. 1919; iv. செ. மூ. எ. 1+30+2; v. . . . . .; vi. . . . .; vii கன்னிப்பெண்கள் மார்கழி மாதத்தில் கொண்டாடும் பாவை நோன்பு பற்றிய பல செய்திகளைத் தரும் பாசுரங்கள் கொண்டது. viii. 769/1919/I.

Q22:417x1,13

1357. i. திருப்பாவை: திருத்திய பதிப்பு; ii. சே. கிருஷ்ணமாச்சாரியார், திருவல்லிக்கேணி, சென்னை; கமர்ஷியல் அச்சுக்கூடம், சென்னை; iii. மார்ச், 1919; iv. செ.மூ.உ.ப, 324; v. 22×14 செ.மீ; vi. 2—0—0; vii. மணிப்பிரவாள நடையில் உரை அமைந்துள்ளது. பெரியவாச்சான் பிள்ளை அருளிச் செய்த மூவாயிரப்படி வியாக்கியானமும், அரும்பத விளக்கமும் அமைந்துள்ளன. viii. 151/1919/II.

Q22:417x1,13

1357A. i. திருப்பாவை (திருப்பல்லாண்டு, திருப்பள்ளியெழுச்சி); ii. நற்றமிழ் விலாச அச்சியந்திர சாலை, புரசைப்பாக்கம், சென்னை, iii. மார்ச், 1920; iv. செ.மூ.எ. 48; v. 14×11 செ.மீ; vi. 0—2—0; vii. இதில், ஆண்டாள் இயற்றிய திருப்பாவை, பெரியாழ்வார் இயற்றிய திருப் பல்லாண்டு, தொண்டரடிப் பொடியாழ்வார் இயற்றிய கண்ணி நுண் சிறுத்தாம்பு முதலியவைகளுடன் ஆண்டாள் சரித்திர மும் அடங்கியுள்ளன. viii. 239/1920/II.

Q22:417x1,13

திருப்பாணாழ்வார்

i. அமலனாதிபிரான் (தொ.எ. 1363 பார்க்க); ii. ஸ்ரீசரஸ்வதி விலாச புஸ்தக சாலை, வேலூர்; ஷண்முகாநந்த அச்சுக் கூடம், போளூர்; iii. 1919; iv. செ.மூ.எ. 2+10; v.........; vi...............; vii. இது திருப்பாணாழ்வார் பாடிய பக்தி நூல். viii. 769/1919/I.

Q22:417x1,191

திருவரங்கத்தமுதனார்

1358. i. இராமானுஜ நூற்றந்தாதியும், மணவாள முனிகள் அருளிச் செய்த இயல்சாற்றும், சாற்று முறையும்: முதற் பதிப்பு; ii. சி. சென்ன கேசவலு நாயுடு, சென்னை: ஸ்ரீ நிகேதன அச்சுக்கூடம், சென்னை; iii. ஜூலை, 1917; iv. செ.மூ.உ.ப. 47; v. 13×9 செ.மீ. vi. 0—1—0; vii. தென்னிந்திய வைணவப் பெரியாரான இராமாநுஜரைப்பற்றிப் புகழ்ந்து எழுதப்பெற்ற நூற்றெட்டுப் பாடல்களைக் கொண்டது. இதற்குப் 'பிரபந்த காயத்திரி' என்னும் ஒரு பெயரும் உண்டு. மற்றும் மணவாள மாமுனிகள் அருளிய பக்திப் பாடல்களும் இறுதியில் உள்ளன. சாற்றுமுறைக் கிரமமும் விளக்கப்பட்டிருக்கிறது. viii. 158/1917/III.

Q22:417x1,42

தொண்டரடிப் பொடியாழ்வார்

1359. i. திருப்பள்ளியெழுச்சி, திருப்பாவை: முதற் பதிப்பு; ii ஆர். கோவிந்தராஜு நாயக்கர், சென்னை; மதாரியா பிரஸ், திருவல்லிக்கேணி, சென்னை; iii. டிசம்பர், 1917; iv. செ. மூ.எ. 43; v. 14×11 செ.மீ.; vi. 0—6—0; vii. திருமாலை வைகறையில் பள்ளியுணர்த்தும் பாடல்களைக் கொண்ட பகுதி. வைகறைக் காலத்திலே இயற்கையில் காணும் எழில் தலங்கள் நன்கு வருணிக்கப்பட்டிருக்கின்றன. viii. 1034/1917/IV.

Q22:417x1,18

i. திருப்பள்ளியெழுச்சி (தொ. எ. 1363 பார்க்க); ii. ஸ்ரீ சரஸ்வதி விலாச புத்தக சாலை, வேலூர்; ஷண்முக ஆனந்த அச்சுக் கூடம், போளூர்; iii. 1919; iv. செ.மூ.எ. 2+10; v......; vi ......; vii......; viii. 799/1919/I.

Q22:417x1,18

1360. i திருமாலை, திருமந்தரம், திருமலை திருவல்லிக்கேணி விஷயங்களும்; ii. சி. சென்ன கேசவலு நாயுடு, சென்னை; ஸ்ரீ நிகேதன அச்சுக்கூடம், சென்னை; iii. ஏப்ரல், 1917; iv. செ.மூ.ப. 56; 12×9 செ.மீ.; vi. 0—13—0; vii. தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிய திருமாலை முற்றும் உள்ளது. பின்னர், திருமங்கை மன்னன் அருளிய 'நாராயணா' என்னும் நாமத்தின் மகிமை உரைக்கும் திருமொழியும், திருவேங்கடத் திருமலை பற்றி அருளிய திருமொழிகளும் உள. 'பொய்ம்மாம் பொழில்', 'பொலிக பொலிக' என்னும் திருவாய்மொழிகள் சடகோபரின் வாக்குக்களாகும். viii. 660/1917/II.

Q22:417x1,17

i. திருக்கண்ணப்ப நாயனார் இரட்டை மணி மாலை (தொ. எ. 1452 பார்க்க); ii. தி. குப்புசாமி ஐயர், இராஜமன்னார்குடி; சம்பக லக்ஷிமி விலாச அச்சுக்கூடம், மன்னார்குடி; iii. 1918; iv. செ.மூ.எ. 20; v.........; vi.........; vii. சிவத் தொண்டரில் மிகக் கீர்த்திவாய்ந்த கண்ணப்ப நாயனாரைக் குறித்த துதிப்பாமாலை. viii. 735/1919/I.

O31,1

1452. i. மதுரை ஸ்ரீமீனாக்ஷியம்மை இரட்டைமணிமாலை [திருக் கண்ணப்ப நாயனார் இரட்டை மணி மாலை]; ii. தி. குப்புசாமி அய்யர், இராஜமன்னார்குடி; சம்பகலெக்ஷமி விலாச அச்சுக்கூடம், மன்னார்குடி; iii. டிசம்பர், 1918; iv. செ.மூ.எ. 20; v. 21×14 செ.மீ.; vi.........; vii. மதுரை மீனாட்சியம்மன் மீது பாடப் பெற்ற பக்திப் பாடல்கள். viii. 735/1919/I.

O31,1

நமச்சிவாய சுப்பராய முதலியார், பாலூர்

1453. i. கண்ணப்ப தேவர் இரட்டை மணி மாலை; ii. நமசிவாய சுப்பராய முதலியார், பாலூர்; பச்சையப்ப அச்சியந்திரசாலை, வேலூர்; iii. எப்ரல், 1918; iv. செ.மூ.எ. 4+20+1; v. 16×13 செ.மீ.; vi. 0—2—0; vii. திருக்காளத்தியிலுள்ள கண்ணப்பத் தேவரைப் பற்றிப் புகழ்ந்து பாடிய பாமாலை. இரட்டை மணி மாலை யென்பது வெண்பாவும் கட்டளைக் கலித்துறையும் மாறிவர அந்தாதித் தொடையால் தொகுக்கப்படுவது. பிங்கள வருடம், மாசி 28, சோமவாரம், மகா சிவராத்திரி, இரவு 8 மணிக்குத் திருக்காளத்தீசர் சந்நிதியில் தேவகோட்டை மெ. அருட. நா. இராமநாதஞ் செட்டியாரால் அமைக்கப்பட்ட பூமாலை மண்டபத்தில் அன்பரிடையே அரங்கேற்றப்பட்டது. சிவ ஸ்ரீகலியாண சுந்தர எதீந்திர சுவாமிகள், மணி. திருநாவுக்கரசு முதலியார், பா. வேலு தேசிகர் முதலியோர் தந்த சாற்றுக் கவிகள் நூல் முகப்பில் உள்ளன. viii. 351/1918/II.

O31,1

வங்கடாசலம் பிள்ளை, சிதம்பரம்

1454. i. குமரவேளிரட்டை மணிமாலை : முதற் பதிப்பு; ii. எஸ். சுப்பிரமணிய முதலி, சிதம்பரம்; விநாயக சுந்தர விலாசம் பிரஸ், சிதம்பரம்; iii. ஏப்ரல், 1917; iv. செ.மூ.எ. 20; v. 21×14 செ.மீ.; vi. ......; vii. சீர்காழியின் வடபால் எழுந்தருளியிருக்கின்ற குமரவேளைக் குறித்துப் பாடப் பெற்ற இரட்டை மணிமாலை. வெண்பாவும், கலித்துறையுமாக இருபது பாடல்கள் அந்தாதியாக அமைந்த பிரபந்தம். காழி முருகப் பெருமான் மீது அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் பாடலும் தரப்பட்டிருக்கிறது. viii. 462/1917/II.

O31,1

உலா

சுப்பிரமணிய கவிராஜ மூர்த்திகள்

1455. i. திருக்கடவூருலா : முதற் பதிப்பு ; ii. அ. சாமிநாத ஓதுவார் மூர்த்தி, திருக்கடவூர் ; மஹாலட்சுமி விலாச அச்சுக்கூடம், சென்னை ; iii. ஜூன், 1917 ; iv. செ. மூ. எ. 5+458+1 ; v. 21×14 செ.மீ.; vi. 1-2-0 ; vii. திருக்கடவூரில் வழிபடுகின்ற சிவனைக் குறித்துப் பாடப்பெற்ற உலாப் பாடல்கள் இதில் அடங்கியுள்ளன. இதற்குத் தரங்கம்பாடி ப. சு. முத்துத்தாண்டவராய பிள்ளை, திருப்பனந்தாள் சிதம்பர சுவாமிகள் முதலியோர் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளனர். தல விசேடம், உலாவைக் கண்ட பேதை, பெதும்பை முதலிய மகளிரின் நிலைமைகள் முதலியவற்றை விவரிப்பது. viii. 334/1917/III.

O31,1

ஊசல்

அன்னம்மாள், பை.

1456. i. திருக்கடன் மல்லைத் தாயார் ஊசற் பிரபந்தம் : (இலக்குமி வெண்பா வந்தாதி) : முதற் பதிப்பு; ii. கந்தசாமி, கினியா நகர் ; முரஹரி அச்சுக்கூடம், சென்னை ; iii. ஏப்ரல், 1917 ; iv. செ. மூ. ப. 8 ; v. 22×14 செ. மீ. ; vi. 0-2-0 ; vii. இந்நூலில் 'திருக்கடன் மல்லைத்தாயார் ஊசற் பிரபந்தம்' முதலில் உள்ளது. இதனோடு திருக்கடன்மல்லை இலக்குமி வெண்பா வந்தாதி என்பதும் அடங்கியுள்ளது. இருபகுதியிலும் இலட்சுமியைப் பற்றிப் புகழ்ந்து எழுதப் பட்டுள்ளது. வல்லை சண்முகசுந்தர முதலியார், பண்டிதை கிருஷ்ணவேணி அம்மாள் முதலியோர் சாத்துக் கவிகள் பாடியுள்ளனர். ஊசல் பிரபந்தம் பாடல்கள் 'ஆடிரூசல்' என்று வேண்டும் வகையில் முடிவுறுகின்றன. viii. 349/1917/II.

O31,1

வயித்திதை சர்மா, இராம.

1457. i. மாதர் கீதம்: முதற் பதிப்பு; ii. என். ஆர். கிருஷ்ணசாமி ஐயர், நாகப்பட்டினம்; ஸ்காட்டிஷ் பிராஞ்சு பிரஸ், நாகப்பட்டினம்; iii. மே, 1919; iv. செ. மூ. ப. 15; v. 22×15 செ. மீ.; vi. 0–2–0; vii. இது பெண்களுக்குரிய நலுங்கு, ஊஞ்சல், பத்தியம், சம்பந்திப்பாட்டு முதலிய பாடல்களைக் கொண்டுள்ளது. இப்பாடல்கள் திருமணக் காலத்தில் பாடப்படுவனவாம். ஈசன், கணேசன், முதலிய தெய்வங்களைக் குறித்த துதிப் பாடல்களும் சில ஈற்றில் இடம் பெற்றுள்ளன. viii. 525/1919/II.

O31,1

i. ஸ்ரீரங்கநாயகர் திரு ஊசல் (தொ. எ. 1647 பார்க்க); ii. நற்றமிழ் விலாச அச்சியந்திர சாலை, சென்னை; iii. நவம்பர், 1917; iv. செ. மூ. எ. 11; v........; vi........; vii. இது திருவரங்கத்தில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள அரங்கப் பெருமான் மீது பாடப்பெற்ற திருவூசல். அரங்கப்பெருமானை ஊஞ்சலிலே எழுந்தருளி ஆடியருளுமாறு வேண்டும் முறையில் பாடப்பெற்ற பாடல்களைக் கொண்டது. எனவே, இப்பாடல்கள் 'ஆடிரூசல்' எனும் வேண்டுதலுடன் முடிவு பெறுகின்றன. viii. 1029/1918/III.

O31,1

எச்சரிக்கை

வேதாசல முதலியார், க.

1458. i. திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதிப்பெருமாள் தசாவதார எச்சரிக்கை; ii. செங்கல்வராய நாயகர் ஆர்பனேஜ் அச்சியந்திரசாலை; iii. 1916; iv. செ. மூ. உ. எ. 15; v. 14×11 செ. மீ., vi. 0–1–0; vii. திருவல்லிக்கேணியில் கோயில் கொண்டருளும் பார்த்தசாரதிப் பெருமாள் மேல் அமைந்த துதி. ஒவ்வொரு பாடலிலும் 'எச்சரிக்கை' எனக்கூறி முடிக்கிறார். இது கட்டியம் கூறுவதுபோலக் கடவுள் திருமுன்னர்க் கூறப்படுவதோர் வார்த்தை. இது 'எச்சரிக்கைப்பாட்டு' என்று சொல்லப்பெறும். viii. 55/1916/IV.

O31,1

ஏசல்

இராமசுவாமி ஐயங்கார், சி., பாலையூர்

1459. i. வள்ளிக்கும் தெய்வானைக்கும் ஏசல்: முதற் பதிப்பு; ii. அ. மாமுண்டியா பிள்ளை, திருச்சி, சுப்பிரமணிய விலாசம் பிரஸ், தூத்துக்குடி; iii. ஜூன், 1918; iv. செ. மூ. ப. 7; v. 21×14 செ. மீ. vi. 0–1–0 vii. முருகப்

பெருமான் தேவியாராகிய வள்ளிக்கும் தெய்வானைக்கும் நடந்த ஏசலைப் பற்றிப் பாடல்கள் மூலமாக விளக்கப் பட்டுள்ளது. காவடிச்சிந்து வர்ண மெட்டில் இந்நூல் அமைந்துள்ளது. viii. 123/1918/III.

O31,1

ஏற்றப் பாட்டு

1460. i. விராட பர்வ ஏற்றப் பாட்டு : முதற் பதிப்பு ; ii. என். நாராயணசாமி பிள்ளை & பிரதர், சென்னை ; நற்றமிழ் விலாச அச்சியந்திரசாலை, சென்னை ; iii. மார்ச், 1918 ; iv. செ. மூ. எ. 16 ; v. 13×11 செ. மீ. ; vi. 0–0–6 ; vii. இப்புத்தகத்தில் மகாபாரதத்தில் வருகின்ற விராட பர்வதக் கதையினை ஏற்றம் இறைப்பவர்கள் பாடுவதற்கேற்ப ஏற்றப்பாட்டாக இயற்றப்பட்டுள்ளது. படங்களுடன் கூடியது 'செந் நெலுக்குப் பையசல மிறைத்துப் பாங்குடனே உய்ய இந்த ஏற்றப் பாட்டைப் பாடி' எனக் காப்புச் செய்யுள் தரும் குறிப்பும் இங்குக் கவனிக்கத் தக்கது. viii. 1120/1918/III

O31,1

ஒப்பாரி

புகழேந்திப் புலவர்

1461. i. மாதர்கள் ஒப்பாரிச் கண்ணி : திருத்திய இரண்டாம் பதிப்பு ; பி. நாராயணசாமி பிள்ளை அண்டு பிரதர், சென்னை; நற்றமிழ் விலாச அச்சியந்திரசாலை, சென்னை ; iii. ஆகஸ்ட், 1920 ; iv. செ. மூ. ப. 47 ; v. 13×11 செ.மீ. ; vi. 0–2–0 ; vii. இறந்தவர்களை எண்ணிப் புலம்புகின்ற ஒப்பாரிக் கண்ணியாகும் இந்நூல். இதனைப் புகழேந்திப் புலவர் பாடினார் என்பதற்காதாரம் எதுவும் இல்லை. viii 340/1920/IV.

O31,1

கட்டியம்

எம்பார்ஜியர் ஸ்வாமிகள், உ. வே. ம.

1462. i. உடையவர் திருமஞ்சனக் கட்டியம்: முதற் பதிப்பு: ii. வி. சென்னகேசவலு நாயுடு, சென்னை ; ஸ்ரீநிகேதன அச்சுக்கூடம், சென்னை ; iii. எப்ரல், 1917 ; iv. செ. மூ. ப. 23 ; v. 12×9 செ. மீ. ; vi. 0–1–0, vii. வசிஷ்டாத் வைதத்தின் ஆசிரியரான ராமானுஜரைப் பற்றிப் பாடப் பெற்ற பாடல்கள் இதில் உள்ளன. உடையவர் வடிவழகில் அடியார்களின் ஈடுபாடும், உடையவர் திருமஞ்சனம் பற்றிக் கூறும் கட்டியவுரைகளும் உள்ளன. கட்டியப் பகுதி 'எச்சரிக்கை' என்றும் 'பராக்' என்றும் கூறி முடிக்கப்பட்டிருக்கின்றன. viii.661/1917/II.

O31,1

கண்டசுத்தி

i. சங்கப்புலவர் கண்டசுத்தி (தொ. எ. 1739 பார்க்க) ii. நற்றமிழ் விலாச அச்சியந்திரசாலை, சென்னை; iii. 1919; iv. செ. மூ. எ. 9; v.......; vi.......; vii. கண்டசுத்தி யாவது ஆசுகவி பாடும்வல்லமையாம். குலோத்துங்கனை முன்னிலைப்படுத்தியும், அகப்பொருட்டுறையாகவும் சில பாடல்கள் அமைந்துள. இறுதிப் பாடல் தமிழுக்கு உரியரல்லாரைக் குறித்துக் கூறுகிறது. viii. 694/1919/IV.

O31,1

கண்ணி

இரத்தினம்ஸாமி, எம்., திருவாரூர்

1463. i. வள்ளிநாயகி திருமணப் பதிகம் (ஸ்ரீசுப்பிரமணியர் ஸ்தோத்திர மணிமாலை); ii. சி. எஸ். இராதாகிருஷ்ணய்யர்; ஆரியன் அச்சுக்கூடம், குடந்தை; iii. ஜூன், 1917; iv. செ. மூ. எ. 19; v. 10×7 செ. மீ.; vi. 0-2-0; vii. சுப்ரமணியர் வள்ளிநாயகியை மணந்ததை விளக்கும் பாடல்கள் இதில் அடங்கியுள்ளன. நூற்பெயரில் பதிகம் எனக் காணப்படினும் நூல் கண்ணி முறைப் பாடல்களால் அமைந்துள்ளது. இக்கண்ணிகள் எதுகுல காம்போதி இராகம் ஏகதாளத்தில் அமைந்துள. இதனோடு 'ஸ்ரீசுப்பிரமணியர் ஸ்தோத்திர மணிமாலை' என்னும் துதிநூலும் உள்ளது. viii. 1113/1917/III.

O31,1

சோணாசல பாரதி, காஞ்சிபுரம்

1464. i. அண்ணாமலைக் கண்ணி; ii. கே. பொன்னுசாமி முதலியார், காஞ்சிபுரம்; பெருந்தேவி விலாச பிரஸ்; iii. நவம்பர், 1916; iv. செ. மூ. எ. 70; v. 18×11 செ. மீ.; vi. இலவசம்; vii. திருவண்ணாமலையில் விளங்கும் அண்ணாமலையாரைக் குறித்துப் பாடப்பெற்ற பக்திப் பாடல் களைக் கொண்டது. இந்நூல் அண்ணாமலையை முன்னிலைப் படுத்திப் பாடும் கண்ணிமுறைப் பாடல்களைக் கொண்டது. viii. 214/1917/I.

O31,1

நடேச பத்தர், தி., நாகைவெளிப்பாளையம்

1465. i. மாரியம்மன் தோத்திரம்: முதற் பதிப்பு; ii. நீலலோசனி அச்சியந்திரசாலை, நாகப்பட்டினம்; iii. பிப்ரவரி, 1917; iv. செ. மூ. ப. 16; v. 18×11 செ. மீ.; vi. 0-2-0; vii. நெட்டாலில் டர்பன் நகரைச் சார்ந்த ஸ்பிங்கோலில்

எழுந்தருளியிருக்கும் மாரியம்மனைத் துதித்துப் பாடப்பெற்றது. கண்ணி முறைப் பாடல்கள் முற்பகுதியில் உள. பின்னர், பஞ்ச ரெத்தினப் பாமாலை ஒன்றும், கும்மிப் பாடல்கள் பதினொன்றும் உள. நாகை சிங்காரவேலு உபாத்தியாயர் ; ஜே. இராசகோபால் பிள்ளை முதலியோர் சாற்றுக் கவிகள் பாடியுள்ளனர். viii. 699/1917/I.

O31,1

மீனாக்ஷிசுந்தர சுவாமிகள்

i. பூரண மணிமாலைக் கண்ணி (தொ. எ. 209 பார்க்க) ; ii. விசேஷசுவாமிகள், அறந்தாங்கி & கே. எ. வடிவேலு செட்டியார் ; சச்சிதாநந்த அச்சுக்கூடம், சென்னை ; iii. 1916 ; iv. செ. மூ. எ. 235 ; v........; vi........; vii. 'பூரணமே' என்னும் விளியுடன் முடியும் கண்ணிப் பாடல்களைக் கொண்ட நூல். வாழ்க்கையில் தாம்பட்ட அல்லல்களை ஆண்டவனை நோக்கி முறையிட்டு நற்பேற்றை விழைகிறார், ஆசிரியர். குருவாகி வந்து ஆண்ட குருபரன் பெருமையும் பேசித் துதித்துள்ளார். viii. 8/1916/II.

O31,1

முருகைய நாடார், நாகப்பட்டினம்

1466. i. மாரியம்மன் தோத்திரம்: முதற் பதிப்பு ; ii. முருகய்ய நாடார், நாகப்பட்டினம் ; ஸ்காட்டிஷ் பிரஞ்சு பிரஸ், நாகப்பட்டினம் ; iii. எப்ரல், 1917 ; iv. செ. மூ. ப. 8 ; v. 23×15 செ. மீ. ; vi. 0-0-6 ; vii. மாரியம்மனைக் குறித்து எழுதப்பெற்ற தோத்திரப் பாடல்கள் அடங்கியது. கண்ணிமுறையில் அமைந்தது, காவடிச்சிந்து, நொண்டிச்சிந்து சந்தங்களிலும் பாடல்கள் உள. viii. 538/1917/II.

O31,1

விலக்ஷணனந்த சுவாமிகள், தேவாரநகரம்

1467. i. சுவானுபவக் கண்ணிகள் இருநூறு ; ii. விலக்ஷணனந்த சுவாமிகள், திருச்சிராப்பள்ளி ; நடராஜ அச்சுக்கூடம், திருச்சி. ; iii. ஜனவரி, 1918 ; iv. செ. மூ எ. 200 ; v. 13×11 செ.மீ. ; vi. இலவசம் ; vii. ஆசிரியர் அவ்வப்போது அடைந்த தன்னுடைய அனுபவத்தைக் கண்ணிகள் வடிவில் இதில் தந்துள்ளார். இவ்வகைக் கண்ணிகள் பதினாயிரத்துக்குமேல் உள்ளனவாம். அவற்றினின்றும் எடுத்து வெளியிடப்பட்டனவே இதில் உள்ள இருநூறு கண்ணிகளும். உலகம், உயிர், கடவுள் என்னும் தத்துவங்கள் பேசப்பட்டுள்ளன. viii. 572/1918/I

O31,1

கலம்பகம்

தொல்காப்பியத் தேவர்

1468. i. திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம்: திருந்திய இரண்டாம் பதிப்பு; ii. உ. வே. சாமிநாதய்யர், சென்னை; கமர்ஷியல் அச்சுக்கூடம்; சென்னை; iii. மார்ச்; 1919; iv. செ. மூ. ப. 101; v. 18×12 செ. மீ.; vi. 0–4–0. vii இந்நூல் திருப்பாதிரிப்புலியூரென்னும் தலத்தில் கோயில் கொண்டெழுந்தருளிய சிவபெருமான் மீது பாடப் பெற்றது. இத்தலம் நடு நாட்டில் உள்ள தேவாரம் பாடப்பெற்ற சிவதலங்களுள் ஒன்று. இத்தலம் ஞானசம்பந்தராலும் திருநாவுக்கரசு சுவாமிகளாலும் பாடப் பெற்ற சிறப்பினை உடையது. இராமச்சந்திராபுரம் நாச்சியப்ப செட்டியாரவர்களாலும், முருகப்ப செட்டியாரவர்களாலும் பொருட் செலவிட்டு வெளியிடப்பட்டதாகத் தெரிகிறது. திருப்பாதிரிப்புலியூர்த் தேவாரப் பாடல்களும் முதலில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. viii. 153/1919/II.

O31,1

கலித்துறை

கயிலாசம் பிள்ளை, மு., பனையூர்

1469. i. இருக்கன்குடி மாரியம்மன் பேரில் கலித்துறை: முதற் பதிப்பு; ii. மு. கயிலாசம் பிள்ளை, பனையூர்; லெக்ஷிமி விலாசம் பிரஸ், சாத்தூர்; iii. 1918; iv. செ. மூ. எ. 5+95; v. 23×14 செ. மீ.; vi. 0–1–0; vii. இதில் இருக்கன்குடியில் விளங்கும் மாரியம்மன் பேரில் பாடப்பெற்ற கலித்துறைப் பாடல்கள் அடங்கியுள்ளன. தேவியின் திருப்புகழைக் கவிஞர் பற்பல வகையாக எடுத்து உரைக்கின்றார். viii. 159/1918/I.

O31,1

1470. i. கொடுங்குன்றக் கலித்துறை மாலை: முதற் பதிப்பு; ii. சேவகப் பெருமாள்; ஸ்ரீ ராமச்சந்திர விலாச அச்சியந்திர சாலை; மதுரை; iii. செப்டெம்பர், 1920; iv செ. மூ. எ. 30; v. 21×14 செ. மீ.; vi. 0–1–0; vii. பிரான்மலையென்னும் கொடுங்குன்றத்தில் கோயில் கொண்டுள்ள சிவபெருமானைப் புகழ்ந்து பாடப்பெற்ற கலித்துறை பாடல்களைக் கொண்டதாகும் இந்நூல். இந்நூலாசிரியர் பெயர் உறுதியாய்த் தெரியக்கூடவில்லை என்றும், சிலர் முதலைப்பட்டி வெறிமங்கை பாகப்புலவர் என்று கூறுகின்றனர் என்றும், முகவுரையில் முத்துவருகன் என்பார் குறிப்பிட்டுள்ளார். viii. 23/1920/IV.

O31,1

சிவப்பிரகாச சுவாமிகள், துறைமங்கலம்

i. பெரிய நாயகியம்மை கட்டளைக் கலித்துறை (தொ. எ. 1682 பார்க்க); ii. கொ. செல்வரங்கம் அண்டு கோ.; மனோன்மணி விலாச அச்சியந்திரசாலை, சென்னை; iii. 1918; iv. செ. மூ. எ. 19; v. ....; vi.......; vii. (விருத்தகிரி) பழமலை அல்லது முதுகுன்றம் என்ற தலத்தில் கோயில் கொண்டுள்ள பெரிய நாயகியம்மையைப்பற்றி பாடப் பெற்ற 19 கட்டளைக் கலித்துறைகளால் ஆகிய பாமாலை. viii. 1064/1918/III.

O31,1

கவசம்

i. **சக்தி கவசம்** (தொ. எ. 1475 பார்க்க): முதற் பதிப்பு; ii. அ. மகாதேவ ரெட்டியார், அம்பாள்பேட்டை; மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை; iii. 1916; iv. செ. மூ. உ. எ. 12; v. ....; vi. ....; vii. தேவியின் அருட்காவலை வேண்டும் பாசுரங்களைக் கொண்டது. தேவர்கள் தங்களுக்கு நெடு நாள் இடரிழைத்திருந்த துர்க்கனென்னும் அவுணனை உமாதேவியானவள் சங்கரித்து அவ்விடரை நீக்கியது கண்டு அத்தேவியை வணக்கம் செய்து துதி செய்தது இக்கவசம் என்பர். காஞ்சீபுரம் இராமாநந்தயோகி என்பார் எழுதிய விருத்தியுரை இதற்கு உளது. viii. 1011/1916/IV.

O31,1

i. **சிவ கவசம்** (தொ. எ. 1475 பார்க்க): முதற் பதிப்பு; ii. அ. மகாதேவ செட்டியார், அம்பாள்பேட்டை; மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை; iii. 1916; iv. செ. மூ. உ. எ. 21; v. ....; vi. ....; vii. 'சிவபெருமான் காக்க' என வேண்டும். பிரபந்தம். இராமாநந்த யோகியாரின் விருத்தியுரையுடன் கூடியது. இந்தக்கவசம் பத்திராயு என்னும் இராஜ குமாரனுக்கு விட முனி அருளிச் செய்தது என்று நைமிசாரணிய முனிவருக்குச் சூத முனி அனுக்கிரகித்தார் என்பர். viii. 1011/1916/IV.

O31,1

தேவராய சுவாமிகள்

1471. i. கந்தர் சஷ்டி கவசம்: மூலமும் உரையும்; முதற் பதிப்பு; ii. எஸ். சிவசங்கர செட்டி, சென்னை; மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை; iii. நவம்பர், 1916; iv. செ. மூ. உ. எ. 119; v. 16×13 செ. மீ.;

vi. 0-5-9 ; vii. தேவராய சுவாமிகளால் சுப்பிரமண்ய சுவாமிகள் மீது பாடப்பெற்ற பாடல்களின் மூலமும், அதற்கு செம்பூர் வித்துவான் வீ. ஆறுமுகஞ் சேர்வை என்பார் ஆக்கிய உரையும் இந்நூலில் அடங்கியுள்ளன. அடியார் தம்மை வந்தடையும் துன்பம் நீங்கப்பெற்று நல்வாழ்வு பெறும் பேற்றை அருளுவது. இந்நூலை அன்றுடம் பாராயணம் செய்பவர்களுக்கு விரும்பியன எல்லாம் எய்தும் என்பர் சான்றோர். viii. 1012/1916/IV.

O31,1

1472. கந்தர் சஷ்டி கவசம்: முதற் பதிப்பு; ii. பி. நாராயணசாமி அண்டு பிரதர், சென்னை; நற்றமிழ் விலாச அச்சியந்திரசாலை, சென்னை; iii. மே, 1920; iv. செ. மூ. ப. 14; v. 14×11 செ. மீ.; vi. 0-0-5; vii. ......; viii. 188/1920/III.

O31,1

1473. i. கந்தர் சஷ்டி கவசம்; முதற் பதிப்பு; ii. டி. எஸ். ராமாநுஜ அய்யங்கார்; திருவொற்றியூர்; ஸ்ரீ ராமானுஜ அச்சியந்திரசாலை, சென்னை; iii. ஜூன், 1920; iv. செ. மூ. ப. 10; v. 13×11 செ. மீ.; vi. 0-1-0; vii. ....; viii. 274/1920/IV.

O31,1

1474. i. கந்தர் சஷ்டி கவசம் (சத்ரு சிங்கார வேற் பதிகம்); ii. கொ. செல்வரங்கம் அண்டு கம்பெனி, சென்னை; மனோன்மணி விலாச அச்சுக்கூடம், சென்னை; iii. 1920; iv. செ. மூ. ப. 25; v. 12×8 செ. மீ.; vi. ....; vii. ....; viii. 707/1920/V.

O31,1

நற்கீர தேவர்

i. விநாயகர் கவசம் (தொ. எ. 1403 பார்க்க); ii. அண்ணாமலை செட்டியார், மூறையூர்; வேலாயுதம் பிரிண்டிங் பிரஸ், தூத்துக்குடி; iii. 1920. iv. செ. மூ. ப. 10; v. ......; vi. ....; vii. இந்நூலைப் படித்தாலும், ஒருவர் சொல்லக்கேட்டாலும் பூசித்தாலும் எப்படிப்பட்ட துன்பமும் நீங்கிப் போகும் என முன்னுரையில் காணப்படுகிறது. ஆதியில் இக்கவசத்தைக் காசிப முனிவர் முற்கல முனிவருக்கு அருளிச்செய்ய, அவர் மாண்டவ்ய முனிவருக்கு உபதேசித்தருள, அவர் பல முனிவர்களுக்குத் திருவாய் மலர்ந்தருளினார் என்பர். இதனை ஓதுவோர் நித்திய

கருமங்களை முடித்து ஒன்றுபட்ட மனத்தோடு விநாயகரைத் தியானித்து இதனைச் செபித்தல் வேண்டும். viii. 216/1920/I.

O31,1

1475. i. விநாயக கவசம் (சிவகவசம், முதலியன): முதற் பதிப்பு; ii. அ. மகாதேவ செட்டியார், அம்மாள் பேட்டை; மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை; iii. நவம்பர், 1916; iv. செ. மூ. உ. எ. 9; v. 16×12 செ. மீ.; vi. 0–5–0; vii. விநாயகர், சிவன், சரஸ்வதி ஆகியவர்கள் மீது பாடப்பெற்ற தோத்திரப் பாடல்களைக் கொண்ட புத்தகமாகும் இது. இவற்றிற்கு காஞ்சீபுரம் இராமானந்த யோகி என்பார் விருத்தியுரை வரைந்துள்ளார். விநாயகர் தம்மை காப்பாராக என வேண்டும் ஒன்பது பாடல்கள் கொண்ட சிறுநூல். viii. 1011/1916/IV.

O31,1

காதல்

சுப்பிரமணியக் கவிராயர், எஸ்., சிவகாசி

1476. i. காளியப்ப நாடார் (சிவகாசி) மீது காதற் பிரபந்தம்; முதற் பதிப்பு; ii. தி. ரா. பெ. காளியப்ப நாடார், சிவகாசி, நூருல் இஸ்லாம் பிரஸ், திருநெல்வேலி; iii. மார்ச், 1917; iv. செ. மூ. எ. 428; v. 21×14 செ. மீ. vi. இலவசம்.; vii. சிவகாசியைச் சேர்ந்த தி. ரா. பெ. காளியப்ப நாடாரவர்களைப் புகழ்ந்து பேசும் முறையில் எழுதப்பெற்ற சிறு நூல். பாட்டுடைத் தலைவனுக்கு உறுப்பாகிய தசாங்கவருணனையும், பாட்டுடைத் தலைவன் சிறப்புக்களும் முதற்கண் பேசப்பட்டுள்ளன. பிற்பகுதியில் வேட்டை மேல் சென்ற தலைவன் பெண்ணொருத்தியைக் கண்டு மையல் கொண்டு அவளோடு காதல்மொழி புகல்வதாக அமைந்த நூல். இவ்வகையில் 'கூளப்ப நாயக்கன் காதலே' பிற காதல் நூல்களுக்கு வழிகாட்டி என்பர். viii. 78/1917/II.

O31,1

i. திருமலைக் கருப்பன் பேரில் காதல் (தொ. எ. 2465 பார்க்க); ii. பி. சி. சி. பாண்டியன் & பி. வி. சி. பாண்டியன்; மதுரைத் தமிழ்ச் சங்கம் பவர் பிரஸ்; iii. 1916; iv. செ. மூ. ப. 28; v. ....; vi. ......; vii. திருமலைப் பாதையில் வாழும் கறுப்பசாமி மேல் அமைந்தது இந்த பிரபந்தம். கறுப்பசாமி திருமலைக்கு வந்த வரலாறும் அவர்தம் பிரதாபங்களையும் விவரிக்கிறது. கறுப்பசாமி காதல் கொண்ட நிகழ்ச்சியையும் விரிவாகக் கூறுகிறது. viii. 49/1916/II.

O31,

கும்மி

அம்புஜத்தம்மாள், தேரழுந்தூர்

1477. i. மகாபாரதம் ஆரண்ய பர்வத்தில் மாம்பழக் கும்மி; திருத்திய இரண்டாம் பதிப்பு ; ii. ஆறுமுக முதலி, பெரம்பூர் ; முரஹரி அச்சுக்கூடம், சென்னை ; iii. 1916 ; iv. செ. மூ.எ. 20 ; v. .... ; vi. 0-1-0 ; vii. மகாபாரதத்தில் ஒரு பாகமாகிய ஆரண்ய பர்வத்தில் வரும் நிகழ்ச்சி ஒன்றைக் கும்மி வடிவமாகப் பாடப்பட்ட நூல். 'பழம் பொருந்து சருக்கத்தின்' கதை நிகழ்ச்சியே இது. 20 கட்டங்களாக அமைத்து இக்கதை புனையப்பட்டிருக்கிறது. viii. 917/1916/II.

O31,1

ஈசுரமூர்த்தியா பிள்ளை, மு. பொ., முன்னீர்ப்பள்ளம்

1478. i. நாட்டுப் பெண் கும்மி: முதற் பதிப்பு; ii. மு. பொ. ஈசுரமூர்த்தியா பிள்ளை, முன்னீர்ப்பள்ளம்; பெத்தாச்சி பிரஸ், பாளையங்கோட்டை; iii. டிசம்பர், 1920 ; iv. செ. மூ. ப. 39; v. 13×11 செ. மீ. ; vi. ..... ; vii. நாட்டுப் பெண்ணின் பெண்மை, கணவனைத் தொழுதல், கல்வி, பூச்சூடல் போன்ற வைகளைப்பற்றி 25 அதிகாரங்களாகப் பிரித்துக் கும்மிப் பாடல்கள் மூலமாக இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. மிகவும் பயனுடைய பல ஒழுக்க நெறிகள் இதன் மூலமாக விவரித்துக் கூறப் பட்டுள்ளன. viii. 940/1920/IV.

O31,1

ஐயர், எஸ். ஆர்.

1479. i. பாரத மாதா பலசந்தக் கும்மி: முதற் பதிப்பு; ii. எஸ். ஆர். அய்யர், மாயவரம்; கமலா பிரஸ், மாயவரம்; iii. எப்ரல், 1919 ; iv. செ. மூ. ப. 16 ; v. 14×11 செ.மீ. ; vi. 0-1-0 ; vii. இதில் பாரதமென்னும் இந்தியத் துணைக் கண்டத்தைத் தாயாகச் சிறப்பித்துப் பாடப் பெற்ற கும்மிப் பாடல்கள் அடங்கியுள்ளன. நாட்டின் சிறப்பையும் மக்களின் கடமையையும் நன்கு எடுத்துக் காட்டும் பாடல்கள் இதன்கண் உள. viii. 178/1919/II.

O31,1

கணபதி நாயகர், செ. கோ.

1480. i. சிறுமியர் மெய்ப் பழக்கும் சித்திரப் பாடலும் கலியாணப் பாடலும்: முதற் பதிப்பு; ii. ஸ்ரீலக்ஷ்மி விலாச புத்தகசாலை, பெங்களூர்; தி பிராக்ரஸிவ் பிரஸ், சென்னை; iii. ஜூலை, 1917; iv. செ. மூ. எ. 12; v. 15×12 செ.மீ.; vi. 0-1-0 ; vii. சிறுமியர் பாடத்தக்க சித்திரப் பாடல்களும், கலியாணப் பாடல்களும்

அடங்கியுள்ளன. விக்டோரியா மகாராணியார் வரலாறு உரைக்கும் கும்மிப் பாடலும் ஒன்று உளது. கலியாணப் பாடல்கள் மணப்பெண்ணையும், பிள்ளையையும் பரிகாசம் செய்யும் முறையில் அமைந்துள்ளன. viii. 304/1917/III.

O31,1

கந்தசாமி பிள்ளை, கவிராஜ்

1481. i. கற்பின் சாவித்திரி : முதற் பதிப்பு; ii. என். கணபதி முதலியார், சென்னை ; மாணிக்க விலாசப் பிரஸ், சென்னை ; iii. ஜூலை, 1918 ; iv. செ. மூ. ப. 16 ; v. 22×14 செ.மீ. ; vi. 1-2-0 ; vii. சாவித்திரியின் கற்பின் சிறப்பினைப் புகழ்ந்து பாடப் பெற்ற காவடிச் சிந்து, கும்மிச் சிந்து ஆகிய பாடல்களைக் கொண்டது இப்புத்தகம். இச் சாவித்திரி காலனை வணங்கிக் கணவனைக் காத்த கற்பின் சிறப்பினையுடையாள். viii. 478/1918/III.

O31,1

கமலவல்லி அம்மாள், ஸ்ரீவில்லிபுத்தூர்

1482. i. கோபிகா வஸ்திராபஹரணக் கும்மி : முதற் பதிப்பு; ii. பெ. ஆறுமுக முதலியார், சென்னை ; முராஹரி அச்சுக்கூடம் சென்னை ; iii. 1919 ; iv. செ. மூ. எ. 34 ; v. 21×14 செ.மீ. ; vi. 0-3-0 ; vii. இதில் கண்ணன் யமுனை நதிக் கரையில் புன்னை மரத்தில் நடத்திய கோபிகா வஸ்திராபகரணக் கும்மிப் பாடல்கள் அடங்கியுள்ளன. 34 கட்டங்களில் இச் சரிதம் அமைக்கப்பட்டுள்ளது. viii. 721/1920/I.

O31,1

கனகவல்லி அம்மாள், ஸ்ரீவில்லிபுத்தூர்

1483. i. சூடிக் கொடுத்த நாச்சியார் என்னும் கோதை கல்யாணம். முதற் பதிப்பு ; ii. பெ. ஆறுமுக முதலியார், முராஹரி அச்சுக்கூடம், சென்னை ; iii. மே, 1919 ; iv. செ. மூ. எ. 28 ; v. 21×14 செ.மீ. ; vi. 0-3-0 ; vii. வில்லிபுத்தூரைச் சேர்ந்த ஆண்டாளின் திருமணம் பற்றிப் பாடப்பெற்ற கும்மிப் பாடல்கள் இவை. 'ஆண்டாள் பரிணயக் கும்மி' என்றும் இதற்குப் பெயர் உண்டு. 42 கட்டங்களாகப் பகுத்து இச் சரித்திரம் பாடப்பட்டுள்ளது. பாடல்களின் சந்த வேறுபாட்டிற்கு இணங்க மெட்டு, இராகம், தாளம் முதலிய குறிப்புக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. viii. 199/1919/III.

O31,1

காதர் முகயித்தின்

1484. i. நான்கு மந்திரி கும்மிப் பாட்டு : திருத்திய இரண்டாம் பதிப்பு ; ii. காதர் முகயித்தீன் ராவுத்தர், சிதம்பரம் ; குஞ்சித சரண அச்சுக்கூடம், சிதம்பரம் ; iii. ஏப்ரல், 1919 ; iv.

செ. மூ. எ. 34 ; v. 14×11 செ.மீ. ; vi. 0–0–6 ; vii. இது கும்மிப் பாடல்களடங்கிய ஒரு நூல். இதில் எப்படி நான்கு பிரயாணிகள் ஒரு அரசனால் மந்திரிகளாக நியமிக்கப்பட்டார்கள் என்ற கதை விளக்கப்பட்டுள்ளது. 'கந்தனருள் செய்வான் காதர் முகயிதீன், காசினி மீதினிற் பாடினனே' என வரும் ஈற்றிலுள்ள 34 ஆம் கும்மிப் பாட்டின் குறிப்பினால் இதைப் பாடியவர் காதர் முகயித்தீன் என்பது புலனாகிறது. viii. 314/1919/II.

O31,1

கோபாலகிருஷ்ண அய்யர், அ.கி.ப., சுந்தரபாண்டியபுரம்

1485. i. ராஜகோபால சுவாமி தெப்பத் திருவிழாக் கும்மியும், கருட சேவைக் காட்சி அலங்காரச் சிந்தும், காவடிச் சிந்தும்; ii. கோமதி விலாஸம் பிரஸ, தென்காசி; iii. 1919; iv. செ. மூ. ப. 24, v. 16×11 செ. மீ., vi........ ; vii. சுந்தரபாண்டியபுரத்தில் எழுந்தருளியுள்ள ராஜகோபாலசுவாமி தெப்பத் திருவிழாக் கும்மியும், கருட சேவைக் காட்சி அலங்காரச் சிந்தும், காவடிச் சிந்தும் இதன்கண் அடங்கியுள்ளன. தென்காசி ஆ. சங்கரலிங்கம் பிள்ளை அவர்கள் தந்த சாத்துக் கவியுடன் கூடியது. viii. 42/1920/I.

O31,1

கோபாலகிருஷ்ண பாரதியார், ஆனைதாண்டவபுரம்

i. சிதம்பரக் கும்மி (தொ. எ. 1183 பார்க்க); ii. நற்றமிழ் விலாச அச்சியந்திரசாலை, சென்னை; iii. 1919; iv. செ. மூ. எ. 40; v. 21×14 செ. மீ.; vi ....; vii. சிதம்பரத்தின் பெருமையினைக் கூறும் கும்மிப் பாடல்களைக் கொண்டது. தில்லைப் பெருமானுக்குத் தினமும் நடக்கும் பூசைச் சிறப்பு முதலியவற்றையும் வர்ணித்துரைத்துள்ளார். viii.720/1919/IV.

O31,1

1486 i. சிதம்பரக் கும்மி: திருத்திய இரண்டாம் பதிப்பு; ii. பி. நாராயணசாமி பிள்ளை அண்டு பிரதர்ஸ், சென்னை; நற்றமிழ் விலாச அச்சியந்திரசாலை, சென்னை; iii. ஜூலை, 1920; iv. செ.மூ.எ. 40; v. 14×12 செ. மீ.; vi. 0–1–0; vii..........viii; 338/1920/IV.

O31,1

சஞ்சீவியம்மாள், ஏ.கே., ஆரணி

1487 i. வள்ளியம்மை திருக்கல்யாணக் கும்மிகள்: முதற் பதிப்பு; ii. கே. குப்புசாமி அய்யர், ஆரணி; அமெரிக்கன் ஆற்காட் மிஷன் அச்சுக்கூடம், ஆரணி; iii. நவம்பர், 1916; iv. செ. மூ. ப. 12; v. 17×11 செ. மீ.; vi. 0—1—0

vii. முருகப்பெருமானுக்கும், வள்ளியம்மைக்கும் நடந்த திருமண நிகழ்ச்சிகள் கும்மிப் பாடல்கள் மூலமாக இப் புத்தகத்தில் விளக்கப்பட்டுள்ளன. பலவகை மெட்டுகளில் அமைந்த கும்மிப் பாடல்கள் இதில் உள. viii. **464/1916/IV.**

O31,1

சந்தியாகு சுவாமி

1488 i. வேதோபதேசக் கும்மி; ii. ஜோசப் ஐயர் திருச்சி; செயிண்ட் ஜோசப்ஸ இண்டஸ்டிரியல் ஸ்கூல் பிரஸ், திருச்சிராப் பள்ளி; iii. ஏப்ரல், 1918; iv. செ. மூ. எ. 332 v. 18×13 செ. மீ.; vi. 0—3—0; vii. இதில், கத்தோலிக்கக் கிறிஸ்துவ மதத்தின் கோட்பாடுகளும், மத வழிபாடுகளும், கும்மி என்ற ஒரு வகைப் பாடல்கள் மூலம் விளக்கப்பட்டுள்ளன. இதி லுள்ள பாசுரங்கள் இரட்டித்த எழுசீர் கொண்ட விருத் தங்களாதலால், பொருளுக்குத் தகுந்தாற்போல இராகமும தாளமும் மாறி வரும் எழு பாகங்கள் இதில் அடங்கி யுள்ளன. ஒவ்வொரு பாகத்திற்கு முன்னரும் அப்பாகத்தின் சாரத்தைச் சுருக்கி உரைநடையில் தரப்பட்டுள்ளது. viii. 296/1918/II.

O31,1

சுப்பிரமணியக் கவிராயர், சே. ரா.

1489 i. மதுரை மீனாட்சியம்மை கொம்மைத் தமிழ்ப்பாட்டு: முதற் பதிப்பு; ii. எம். ஆர். ஸ்ரீநிவாஸையர், மதுரை, தமிழ்ச் சங்கம் பவர் பிரஸ், மதுரை; iii. ஜூலை, 1919; iv. செ. மூ. எ. 64; v. 14×11 செ. மீ.; vi. 0—0—6; vii. இதில் மதுரையில் விளங்கும் மீனாட்சியம்மையைக் குறித்துப் பாடப்பெற்ற கும்மிப் பாடல்கள் அடங்கியுள்ளன. கொம்மை கொட்டலாவது கைகுவித்துக் கொட்டல் ஆகும். மதுரையின் மாண்பும், அம்மையின் கருணையும் பலவகையாகப் புகழ்ந்து பாடப்பட்டிருக்கின்றன. viii. 381/1919/III.

O31,1

சுப்பிரமணிய சுவாமிகள்

1490 i. உத்தமர்கள் கும்மி; ii. ஸ்ரீராமச்சந்திர விலாசம் அச் சியந்திரசாலை; iii. 1919; iv. செ. மூ. எ. 57: v. 20×14 செ. மீ.; vi. 0—2—0; vii. மதுரை ஜில்லா நிலக்கோட்டை தாலுகா விருவீடு கிராமத்தில் மனமொத்த தம்பதிகளாய் வாழ்ந்து வந்த துரைச்சாமியென்கின்ற பெருமாள் கவுண்டரும் அவர்தம் துணைவி சில்லித் திருமலையம்மாளும் ஒரே நாளில் இறைவனடி சேர்ந்ததைப் பற்றி வியந்து பாடிய கும்மிப் பாடல் களைக் கொண்டது இந்நூல். viii. 95/1920/I.

O31,1

சுப்பிரமணிய தேசிகர். எல்.கே.ஆர்., பூவுற்றகுடி நகரம்

1491 i. சீதையம்மன்திருக்கல்யாணக் கும்மி : முதற் பதிப்பு ; ii. எல். கே. ஆர். சுப்பிரமணிய தேசிகர், பூவுற்றகுடி நகரம்; ஸ்ரீ குஞ்சிதசரண அச்சுக்கூடம், சிதம்பரம்: iii. ஆகஸ்ட், 1916: iv. செ. மூ. எ. 109; v. 21×14 செ. மீ.; vi. 0—1—0; vii. இராமாயணத்தில் சீதை இராமபிரான் திருமணத்தை விவரிப்பது. கும்மி வடிவில் அது உள்ளது. இக் கும்மிப் பாடல்கள் கற்பனாலங்காரங்களுடன் சந்த நயமும் வாய்க்கப் பெற்றனவாம். viii. 711/1916/III.

O31,1

சுப்பிரமணிய பாரதியார். அ.,வரகவி

i. கற்பிலக்கணக் கும்மி (தொ. எ. 2054 பார்க்க) ii. ஸ்ரீபால சுப்பரமணியம் கம்பெனி, இராயப்பேட்டை; சச்சிதானந்தம் பிரஸ், கோமளேசுவரன்பேட்டை, சென்னை; iii. ஆகஸ்ட், 1917; iv, செ. மூ. எ. 30; v.........; vi.........., vii. மாதர்தம் கற்பின் மேன்மையை விளக்கும் கும்மிப் பாடல்களைக் கொண்டது. viii. 1071/1917/III.

O31,1

சுப்பிரமணியன், டி.

1492. i. திருவில்லிப்புத்தூர் சிறப்பு கும்மி: முதற் பதிப்பு; ii. டி. சுப்பிரமணியம், ஸ்ரீவில்லிபுத்தூர்; ருக்மணிவிலாச அச்சுக் கூடம், சென்னை; iii. செப்டெம்பர், 1919; iv. செ. மூ. ப. 15; v. 17×11 செ. மீ.; vi. 0—1—0; vii. திருவில்லிபுத்தூரின் புனிதத் தன்மையைப் புகழ்ந்து பாடும் கும்மிப் பாடல்களைக் கொண்டது இந்நூலாகும். "பாடிய சுப்பிரமணியன் வாழி" என வரும் நூலிறுதிக் கும்மிப்பாட்டினால் இவர் பெயர் தெரியவருகிறது. ஜார்ஜ் மன்னர், மேரியரசி ஆகியோரையும் நூலுள் குறிப்பிட்டு வாழ்த்தியுள்ளார். viii. 769/1919/IV.

O31,1

சோமுதாசர், மு.,திருவாரூர்

1493. i. காரைக்கால் ஸ்ரீபுனிதவதி அம்மையின் சரித்திரத் திருப் புகழ்க் கும்மி : முதற் பதிப்பு ; ii. மு. சோமுதாசர், திரு வாரூர் ; டிசம்பர், 1918 ; iv. செ. மூ. ப. 33+1 ; v. 18×11 செ. மீ. ; vi. 0-0-6 ; vii. காரை வனமெனும் காரைக்காலில் தோன்றிய புனிதவதி அம்மையின் சரித்திரம் திருப்புகழ்க் கும்மியாக இந்நூலில் எழுதப்பட்டுள்ளது. இவர் அறுபத்து மூன்று நாயன்மாரில் ஒருவர் ஆவர். காரைக் காலம்மையார் என்றும் போற்றப்படுபவர் இவரே. viii. 757/1919/I.

O31,1

1494 i. ஞானக்கும்மி : புதிய பதிப்பு ; ii. பு. முனிசாமி நாயுடு, சென்னை ; சங்கநிதி விளக்க அச்சுக்கூடம், சென்னை ; iii. அக்டோபர், 1916 ; iv. செ. மூ. எ. 185 ; v. 17×11 செ. மீ. ; vi. 0–1–0 ; vii. உண்மையான முக்தி நிலையை அடையும் வழியை விளக்கியும் சில விவேகமற்ற முறைகளை இடித்தும் இந்நூலில் ஆசிரியர் கும்மிப் பாடல்கள் வடிவில் கூறியுள்ளார். தத்துவப் பொருள்கள் எளிய முறையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. viii. 800/1917/II.

O31,1

ஞானப்பிரகாசம் பிள்ளை, சி.எஸ்., பெங்களூர்

1495 i. மதுவிலக்குக் கும்மி : முதற் பதிப்பு ; ii. சி. எஸ். ஞானப்பிரகாசம் பிள்ளை, பெங்களூர்; பூலோக வியாஸன் பிரஸ், சென்னை; iii. ஆகஸ்ட், 1916; iv. செ.மூ.ப. 28; v. 18×13 செ.மீ.; vi. 0—2—0; vii. மது அருந்துவதலுல் உண்டாகும் தீமைகளை எடுத்துக் கூறி அதை அகற்றுவதற்கான வழிமுறைகள் கும்மிப் பாடல்கள் மூலமாக விளக்கப்பட்டுள்ளன. அர்ச். அன்னம்மாள் மதுவிலக்குச் சபையின் கருடோத்ஸவ தினத்தன்று இந்நூல் வெளியிடப் பெற்றது. எ.ஆர். ஜான் குருஸ்வாமி, சா. செ. துரைசாமிப் பிள்ளை முதலியோர் இதற்குச் சாற்றுக்கவி பாடியுள்ளனர். viii. 830/1916/III.

O31,1

தங்கவேலு பிள்ளை, டி.சி., பெங்களூர்

1496 i. ஆறுமுகன் மீது ஆறுவகைக் கும்மி: முதற் பதிப்பு; ii. டி. சி. தங்கவேலு பிள்ளை, சென்னை; கலாரத்நிகுகரம் அச்சுக்கூடம், சென்னை; iii. மார்ச், 1918; iv. செ.மூ.ப. 5+90+5; v. 19×12 செ. மீ.; vi. 0—2—0; vii. ஆறுமுகங்களைக் கொண்ட முருகப்பெருமானின் வரலாற்றைப் புகழ்ந்து கும்மிப் பாடலில் தரும் நூல். ஆறுவகைச் சந்தங்களில் கும்மிப்பாடல்கள் இதன்கண் அமைக்கப்பட்டுள்ளன. இதனை அச்சிட்டோர் மேலும் சிவன், சத்தி, விநாயகர், விஷ்ணு, லட்சுமி, அநுமார், மூகம்மது, ஏசுக்கிறிஸ்து, ஆகியோர்மீதும் அறுவகைக் கும்மி வெளியிடப் போவதாக குறிப்பு எழுதியுள்ளார். viii. 576/1918/II.

O31,1

தருமலிங்கஞ் செட்டியார், கே.வி.ஆர்.

1497. i. சௌடாம்பிகை பேரில் மஹாநவமி உற்சவ தபசு மான்மியக் கும்மி : முதற் பதிப்பு; ii. கே. வி. ஆர். தருமலிங்கஞ் செட்டியார்; சச்சிதானந்த அச்சியந்திரசாலை, விருதுபட்டி; iii ஏப்ரல், 1918; iv. செ. மூ. ப. 32;

v. 21×14 செ. மீ.; vi. 0—4—0; ..; vii. திருநல்லையில் கோயில் கொண்டிருக்கும் சௌடாம்பிகைபேரில் மஹா நவமி உற்சவத்தின்போது பாடப்பெற்ற கும்மிப் பாடல்களாகும். தபசு மண்டப வழிநடைக் கும்மியோடு அம்மன் தபசு ஊஞ்சல் பாட்டும் இதில் இடம் பெற்றுள்ளன. அருப்புக்கோட்டை, எஸ். நாகலிங்கம் செட்டியார், சின்னப் புளியம்பட்டி புராணிகர் ஸா. சண்முகசுந்தரம் பிள்ளை, அருப்புக் கோட்டை பூ. ஆ. கந்தசாமி செட்டியார், உறையூர் வாழவந்தான் பண்டாரம், விருதுபட்டி ப. வே. ப. முத்துபபழநி ஆச்சாரி முதலியோர் தந்த சாத்துக் கவிகள் உள்ளன. viii. 78/1918/II.

O31,1

தருமலிங்க முதலியார், ஆ., சென்னை

1498 i. *ராமநாம சாராமிர்தம்* : முதற் பதிப்பு; ii. ரீட் அண்டு கம்பெனி, மதராஸ்; iii. அக்டோபர், 1919; iv. செ.மூ.எ. 1+34+1; v. 15×12 செ. மீ.; vi. 0—0—3; vii. இராமனைப் புகழ்ந்து பாடும் அமுதமான பாடல்களைக் கொண்டது, இந்நூல். தோடி ராகம் ஆதி தாளத்தில் இப் பாடல்கள் அமைந்துள. viii. 516/1919/IV.

O31,1

திருவேங்கடக் கவிராயர், சாத்தூர்

1499. i. *காத்தாயம்மன் சந்தக்கும்மி*: முதற் பதிப்பு; ii. முனிசாமி முதலியார், சென்னை; ஸன் ஆப் இந்தியா பிரஸ், சென்னை; iii டிசம்பர், 1920; iv. செ.மூ. ப. 16; v. 21×14 செ.மீ.; vi. இலவசம்; vii. பட்டுக்கோட்டையில் கோயில் கொண்டுள்ள காத்தாயம்மனைப் பற்றிப் பாடப்பட்ட சந்தக் கும்மிப் பாடல்களைக் கொண்டது இந்நூல். viii. 1009/1920/IV.

O31,1

நடேச சாஸ்திரி, டி.எ.

1500. i. *ஐரோப்பா யுத்தக் கும்மி*; ii. வைசியமித்திரன் பிராஞ்சு பிரஸ், காரைக்குடி; iii. 1917; iv. செ.மூ.எ. 12; v. 21×14 செ. மீ.; vi. 0—2—0; vii. முதல் உலக யுத்தம் என வழங்கும் ஐரோப்பா யுத்தத்தின் போக்கினை விவரிப்பது. யுத்த நிகழ்ச்சிகளைப் பாடலில் தெரிவிக்கிறது. எனவே இது ஒரு வரலாற்றுக் கும்மி நூல் ஆகும். பலவகை மெட்டுகளில் அமைந்த கும்மிப் பாடல்கள் இதில் உள. viii. 858/1917/III.

O31,1

நாகலெக்ஷ்மி அம்மாள், கே.சி., மதுரை

1501. i. *சுந்தரேஸ்வரர் பிட்டுக்கு மண் சுமந்த சரித்திரக் கும்மி*: முதற் பதிப்பு; ii. கே. சி. நாகலெக்ஷ்மி அம்மாள், மதுரை; ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் அச்சியந்திரசாலை, மதுரை; iii.

செப்டம்பர், 1918; iv. செ.மூ.ப. 8; v. 21×14 செ. மீ. vi. 0—1—0; vii. சிவபெருமான் தன் பக்தருக்கு இரங்கிப் பிட்டுக்கு மண் சுமந்ததைப் பற்றிய கதையினைக் கும்மிப் பாடல் மூலமாக ஆசிரியை விளக்கியுள்ளார். இது திருவிளையாடற் புராணத்தில் வருகின்ற பிட்டுக்கு மண் சுமந்த திருவிளையாடலாகும். இது பதினைந்து கட்டங்களைத் தன்பாலுடையது. ஒவ்வொரு கட்டமும் தனித்தனி இசையமைதியுடையது. ஈற்றில் நலுங்கு என்ற தலைப்பில் சில பாடல்கள் அமைந்துள்ளன. viii. 63/1918/IV.

O31,1

1502. i. மஹா பக்த விஜய நாமதேவர் சரித்திரக் கும்மி: முதற் பதிப்பு; ii. கே. சி. நாகலெக்ஷ்மி அம்மாள், மதுரை; ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் அச்சியந்திரசாலை, மதுரை; iii. செப்டம்பர், 1918; iv. செ.மூ.எ. 34; v. 21×14 செ.மீ.; vi. 0—1—6; vii. விஷ்ணுபக்தரான நாமதேவரின் வரலாறு கும்மிப் பாடல்கள் மூலமாக விளக்கப்பட்டுள்ளது. 34 கட்டங்களையுடையது இந்நூல். ஒவ்வொரு கட்டமும் வேறுபட்ட இசையினையுடையது என்பது குறிப்பிடத்தக்கது viii. 64/1918/IV.

O31,1

நாராயணசாமி பண்டிதர், எம்., நாகப்பட்டினம்

i. மாரியம்மன் கும்மி (தொ. எ. 1736 பார்க்க); ii. எம். நாராயணசாமி பண்டிதர், நாகப்பட்டினம்; நீலலோசனி அச்சுக்கூடம், நாகை; iii. டிசம்பர், 1916; iv. செ.மூ.எ. 51; v....; vi....; vii. தஞ்சை மாவட்டத்திலே மாயூரத்தைச் சார்ந்த கிழையூர் உப்புச்சந்தை மாரியம்மன் பேரில் பாடப்பெற்ற கும்மிப் பாடல்களாகும். தேவியின் மகிமையைப் பல வகையில் கூறிப் புகழ்கிறது. viii. 54/1917/I.

O31,1

நாராயணராயர்

1503. i. கிருஷ்ணலீலை; முதற் பதிப்பு; ii. நாராயணராயர், ஸ்ரீவைகுண்டம்; ஸ்ரீகானவித்யா அச்சியந்திரசாலை, ஸ்ரீவைகுண்டம்; iii. அக்டோபர், 1919; iv. செ.மூ.ப. 8; v. 15×12 செ. மீ.; vi. 0—2—0; vii ஸ்ரீகண்ணனின் லீலைகளைப் பற்றி விளக்கும் கும்மிப் பாடல்களைக் கொண்டது இந்நூல், முதலில் "சீர் சிறக்குமேனிப் பசேர் பசேரென" என்னும் மெட்டில் ஒரு திருப்புகழ்ப்பாடல் உளது. viii. 466/1919/IV.

O31,1

i. பச்சைநாயகி பட்டுக்கோட்டையுற்ற வரலாறு (தொ. எ. 1740 பார்க்க); ii. எஸ்.கே. சொக்கலிங்கம் பிள்ளை,

ம. வடிவேல்சாமி பிள்ளை, திரிசிராமலை, யாதவர்புரம் நடராஜா அச்சுக்கூடம், திருச்சி; iii. 1917; iv. செ.மூ.எ. 1+31 ; v....; vi....; vii. பச்சைநாயகி அம்மன் பட்டுக் கோட்டைக்கு எழுந்தருளிய வரலாற்றை உரைப்பது. இந்த அம்மனைப் பூசித்து வந்த குமரப்ப பூசாரி என்பவரால் அம்மன் திருக்கோயில் பட்டுக்கோட்டையில் ஏற்பட்டதாம். நொண்டிச் சிந்து ஒயில் கும்மி மெட்டுகளிலும் பாடல்கள் உள. viii. 732/1917/III.

O31,1

பத்மாஸனி அம்மாள், இராமநாதபுரம்

1504. i. அற்புத இராமாயண சரித்திரக் கும்மி : முதற் பதிப்பு ; ii. பத்மாஸனி அம்மாள், இராமநாதபுரம் ; ஷம்ஸியா அச்சியந்திரசாலை, மதுரை ; iii. ஜூன், 1919 ; iv. செ.மூ.எ. 20 ; v. 14×11 செ.மீ ; vi.......... ; vii. இராமா யணக் கதை இந்நாலில் கும்மிப்பாடல்கள் வடிவில் கூறப்பட் டுள்ளது. 20 கட்டமாகப் பாகுபடுத்தி இச்சரிதம் அமைக்கப் பட்டுள்ளது. viii. 952/1919/II.

O31,1

1505. i. அனுசூயை சரித்திரக் கும்மி (கோராக்கும்பர் சரித்திரக் கும்மி) : திருத்திய இரண்டாம் பதிப்பு ; ii. ஷம்ஸியா அச்சுக் கூடம், மதுரை ; iii. ஆகஸ்ட், 1918 ; iv. செ.மூ.எ. 23 ; v. 20×14 செ.மீ. ; vi. 0–1–6 ; vii. அனுசூயை அத்திரி முனிவரின் பத்தினி ; கற்பின் மகிமையால் அற்புதங்கள் நிகழ்த்தியவள். இவளுடைய வரலாற்றைக் கும்மிப் பாடல் மூலமாக ஆசிரியை விளக்கியுள்ளார். 23 கட்டங்களாகப் பாகுபாடு செய்து இச்சரித்திரம் தரப்பட்டிருக்கிறது. viii. 780/1918/III.

O31,1

i. கோராக்கும்பர் சரித்திரக் கும்மி (தொ.எ. 1505 பார்க்க); ii. ஷம்ஸியா அச்சுக்கூடம், மதுரை ; iii. ஆகஸ்ட், 1918 , iv. செ.மூ.எ. 6; v. ; vi..;vii. கோராக்கும்பர் என்பார் ஒரு குலாலர் ; திருமாலடியார். உண்மையான பக்தி பூண்டு திருமாலினருட்குப் பாத்திரமானவர். அவரது வரலாறு கும்மிப் பாடலாக இங்கே தரப்பட்டுள்ளது. viii 780/1918/III.

O31,1

1506. i. நாரதர் விஜயம் என்னும் கும்மி : முதற் பதிப்பு ; ii. பத்மாஸனி அம்மாள், இராமநாதபுரம் ; ஷம்ஸியா அச்சியந்திரசாலை, மதுரை ; iii. ஆகஸ்ட், 1918 ; iv. செ.மூ.எ. 20 ; v. 22×14 செ.மீ. ; vi. 0–1–6;

vii. கண்ணனுடைய திருமணத்தின் போது நாரதர் அங்கு விஜயம் செய்ததைப் பற்றிக் கும்மிப் பாடலாகப் பாடப்பட்டுள்ளது. இஃது இருபது கட்டங்களையுடையது. பாடல்களுக்கு உரிய மெட்டுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. viii. 561/1918/III.

O31,1

பத்மாஸனி அம்மாள், கண்ணனூர்

1507. i. வத்சலா கல்யாணக் கும்மி : முதற் பதிப்பு ; ii. பத்மாசனி அம்மாள், கண்ணனூர் ; ஜி. ஆர். ஸி. பிரஸ், சென்னை ; iii. ஆகஸ்ட், 1920 ; iv. செ. மூ. ப. 84 ; v. 14×11 செ. மீ. ; vi. 0–6–0 ; vii. வத்சலா அபிமன்யுவை மணந்த கதை இதில் விளக்கப்பட்டுள்ளது. கும்மிப் பாடல்களால் ஆயது. 43 கட்டங்களாக அமைத்து இச்சரிதம் தரப்பட்டுள்ளது. viii. 901/1920/III.

O31,1

1508. i. ஸாவித்திரி சரித்திரக் கும்மி : முதற் பதிப்பு ; ii. இ. மா. கோபால கிருஷ்ணக் கோன், மதுரை ; பிரசன்ன வெங்கடேஸ்வர பிரஸ், மதுரை ; iii. ஆகஸ்ட், 1918 ; iv. செ.மூ.ப. 38 ; v. 23×14 செ.மீ. ; vi. 0–6–0 ; vii. புராண வரலாறுன சத்தியவான் சாவித்திரியின் சரித்திரம் கும்மிப் பாடல்கள் மூலமாக விளக்கப்பட்டுள்ளது. 49 கட்டங்களாகப் பிரித்து இச்சரித்திரம் அமைக்கப்பட்டுள்ளது. இசைப் பாடல்களுக்குரிய இராக தாளக் குறிப்புக்களும் அங்கங்கே சுட்டப்பட்டிருக்கின்றன. viii. 860/1919/I.

O31,1

பன்னிருகைப் பெருமாள் கவிராயர், கு.

1509. i. திருச்செந்தூர் கந்தர் அற்புதமாலை : முதற் பதிப்பு ; ii. எ. வெங்கடாசலம் பிள்ளை, தூத்துக்குடி ; வேலாயுதம் பிரிண்டிங் பிரஸ், தூத்துக்குடி ; iii. அக்டோபர், 1920 ; iv. செ.மு.எ. 1+83+33 ; v. 21×14 செ.மீ. ; vi. இலவசம் ; vii. இது திருச்செந்தூரில் கோயில் கொண்டுள்ள முருகப் பெருமானைப் போற்றிப் புகழ்ந்திடும் பாக்களைக் கொண்ட புத்தகமாகும். இதில் அற்புதக் கும்மிப் பாடல்கள் அமைந்துள. செந்தூரில் நிலவும் தீர்த்தங்களின் வரலாறுகளும் தரப்பட்டுள்ளன. viii. 483/1920/IV.

O31,1

பார்த்தசாரதி உபாத்தியாயர், வல்ல., வெ.

1510. i. பொக்காபூர் மாரியம்மன் பேரில் புதுமைக் கும்மி ii. வல்ல. வெ. பார்த்தசாரதி உபாத்தியாயர், பொக்காபூர் கமர்ஷியல் பிரஸ், உதகமண்டலம் ; iii. பிப்ரவரி, 1918

iv. செ. மூ. எ. 8 ; v. 22×14 செ. மீ. ; vi. 0-0-9 ; vii. நீலகிரி உதகமண்டலத்திற்கடுத்த பொக்காபூரில் விளங்கும் மாரியம்மனைப் போற்றி எழுதப்பெற்ற கும்மிப் பாடல்கள். இப் புதுமைக் கும்மி நீலகிரி திரு. முனிசாமி நாயுடு கோரிக்கைப்படி நீலகிரியில் தமிழ் விலாசம் நாடகம் கற்பிக்கும் வே. பார்த்தசாரதி உபாத்தியாயரால் இயற்றப்பட்டது. முனிசாமி நாயுடு முதலிய இந்நூல் அச்சிடுவதற்குக் காரணமாயிருந்தவர்களைப் பாராட்டும் வாழ்த்துதல் கும்மியும் உண்டு. நூல் முடிவில் பொக்காபூர் பாடலுக்கு உதவிய கையொப்பக்காரர்கள் பெயர்கள் அச்சிடப்பட்டுள்ளன. viii. 1123/1918/I.

O31,1

பாலசுப்பிரமணிய ஐயர், சி., காரைக்குடி

1511. i. காரைக்குடி கொப்புடை நாயகியம்மன் பேரில் வேதாந்தக் கும்மி, நவராத்திரிக் கும்மி பிரபந்தங்கள் : முதற் பதிப்பு ; ii. 'ஞானம்பிகா' பிரிண்டிங் வொர்க்ஸ், காரைக்குடி ; iii. ஜூன், 1918 ; iv. செ.மூ.ப. 59 ; v. 22×14 செ.மீ. ; vi. இலவசம் ; vii. காரைக்குடியில் கோயில்கொண்டுள்ள கொப்புடைநாயகியம்மன் பேரில் பாடப்பட்ட, சிங்காரக் கும்மி ஆகிய பிரபந்தங்களைக் கொண்டது. ஆசிரியர் தம்மைப் 'பாலகவி' என நூலுள் குறிப்பிடுகின்றார். சிலேடைப் புலி அஷ்டாவதானம் சாமிநாத ஐயர், காரைக்குடி சுப்பராம ஐயர் என்ற இராமசாமி ஐயர் முதலியோர் தந்த சாற்றுக் கவிகளைக் கொண்டுள்ளது இந்நூல். viii. 953/1918/II.

O31,1

பாலுசாமி நாயுடு, கி., திருவையாறு

1512. i. திருவையாறு ஸ்ரீநந்திகேசுவரர் திருமணச் சிறப்புக் கும்மி : முதற் பதிப்பு ; ii. அழகர்விலாஸ அச்சுயந்திரசாலை, திருவையாறு ; iii. மார்ச், 1917 ; iv. செ.மூ.ப. 12 ; v. 13×11 செ. மீ. ; vi. 0-0-6 ; vii. சிவபெருமானின் வாகனமாகிய நந்திகேசுவரர் திருமணத்தைப் பற்றியன, இக் கும்மிப் பாடல்கள். திருமழபாடியில் நடைபெறும் இந்த விழாவினைத் தரிசிக்க வருவார்க்கு நந்திகேசுவரர் சரித்திரம் தெரியும் பொருட்டாக எழுதப்பெற்ற சிறு நூல். viii. 240/1917/II.

O31,1

பெரியசாமி ஆச்சாரி, வி. ஆர்.

1513. i. துர்க்கை தியாகேஸ்வரி பேரில் இயற்றிய கவன ஒயிற் கும்மி, பஞ்ச ரத்தனப் பதிகம் ; ii.................... ; iii. 1916 ; iv. செ.மூ.ப. 12 ; v......... ; vi......... ; vii. கள்ளக்குறிச்சித் தாலூகாவிலுள்ள தியாசபாடியில்

அமைந்தருளும் துர்க்கை தியாகேஸ்வரியம்மையைத் துதித்துப் போற்றும் பாட்டு. இதனைக் கவன ஒயிற் கும்மி என்கிறார் பதிப்பாசிரியர். இதனோடு பஞ்சரத்தினப் பதிகமும் உளளது. viii. 666/1916/I.

031,1

மதுராம்பாள், வி.எஸ்., திருவையாறு

1514. i. மஹாபாரத காலவரிஷி அல்லது கந்தர்வ சித்திர சேனன் கும்மி (கீர்த்தனங்கள்) ; ii. வி. எஸ். மதுராம்பாள், திருவையாறு ; எஸ்டேட் பிரஸ், தேவகோட்டை ; iii. 1918 ; iv. செ. மூ. எ. 17 ; v. 18×11 செ.மீ. ; vi. .... ; vii. இதில் மகாபாரதத்தில் காணப்படும் கந்தர்வ சித்திர சேனனது செயல்கள் கும்மிப் பாடலாகப் பாடப்பட்டுள்ளன. 17 கட்டங்களாக இக்கதை அமைத்துத் தரப்பட்டுள்ளது. viii. 1072/1918/III.

031, 1

முகியித்தீன் பக்கீர் புலவர், பி., முத்துமாநகர்

1515. i. காரணக் கும்மி: முதற் பதிப்பு ; ii. முகமது காட்டுவா மரைக்காயர், முத்துப்பேட்டை ; எட்வர்டு அச்சுக் கூடம், திருவாரூர் ; iii. பிப்ரவரி, 1918 ; iv. செ. மூ. எ. 116 ; v. 14×11 செ.மீ. ; vi. 0–0–6 ; vii. முத்துப்பேட்டையைச் சார்ந்த ஜாம்புவானகர் ஹஜரத் ஷெய்கு தாவுது ஒலி ஆண்டவர் அவர்கள் பேரில் பாடப்பட்ட காரணக் கும்மியாகும் இது. ஆண்டவரின் சிறப்புக்கள் இதன்கண் பலபடியாகச் சித்தரிக்கப் பட்டிருக்கின்றன. viii. 907/1919/I.

031,1

முத்துராமையா, நா. பெ. நா. மு., கண்டனூர்

1516. i. சுந்தரராஜப் பெருமாள் கும்மி: முதற் பதிப்பு; ii. இராமசாமிச் செட்டியார் ; எஸ்டேட் பிரஸ், தேவகோட்டை ; iii. ஆகஸ்ட், 1920 ; iv. செ. மூ. ப. 15 ; v. 16×11 செ.மீ. ; vi. .... ; vii. புதுவயலில் கோயில் கொண்டுள்ள சுந்தரராஜப் பெருமானின் பெருமை, கும்மிப் பாடல்கள் மூலமாக இந்நூலில் விளக்கப்பட்டுள்ளது. லால்குடி சுப்பிரமணிய சாஸ்திரிகள், வித்தியாசாலை கிருஷ்ண சாஸ்திரிகள் முதலியோர் தந்த அபிப்ராயப் பாடல்களும், அரங்கேற்றச் சிறப்புக்கவி வெண்பாவும், கண்டனூர் இராமாயண வித்துவான் திரு. செல்லமையங்கார் இயற்றிய சிறப்புப்பாயிரப் பாடலும் இதில் உள்ளன. viii. 894/1920/IV.

031,1

முருகதாச சுவாமிகள், கீழக்கடலூர்

1517 i. இராமாயணக் கும்மி: முதற் பதிப்பு; ii. மு. நாராயண பிள்ளை, கீழக்கடலூர்: சாரதா அச்சாபீஸ், பாளையங் கோட்டை; iii. 1920; iv. செ. மூ. எ. 344; v. 20×13 செ.மீ.: vi. 0-2-0; vii. இராமனுஜம்புதூர் செல்வ விநாயகர் பேரில் ஆசிரிய விருத்தப் பாடல்களும் இராமாயண வரலாற்றைக் கூறும் கும்மிப் பாடல்களும் இதில் அடங்கியுள்ளன: இராமாயண ஆறுகாண்டக் கதைப் பகுதிகளும், 344 கும்மி மெட்டுக் கண்ணிகளில் அமைத்துப் பாடப்பட்டிருக்கிறது. இவ்வாசிரியரின் இயற் பெயர் ஆழ்வாரப்பன் என்பதாம். viii. 2/1920/IV.

O31, 1

1518. i. முருகர் ஒயிற் கும்மி: முதற் பதிப்பு; ii. த. இராமசாமி நாயுடு அண்டு சன்ஸ், சென்னை; ஸ்ரீலட்சுமி நாராயண விலாச அச்சுக் கூடம், சென்னை; iii. ஜுன், 1917; iv. செ. மூ. ப. 24; v. 22×14 செ.மீ.; vi. 0-1-0; vii. முருகனைக் குறித்து பாடப் பெற்ற ஒயிற் கும்மிப் பாடல்கள் இதில் அடங்கியுள்ளன. இதனை "ஒயிற் கும்மி சங்கீதம்" என ஆசிரியர் குறிப்பதனால் இது இசைப் பாட்டாதல் விளங்கும். முருகன் வள்ளியம்மையாரை மணந்த செய்தி விவரிக்கப்பட்டிருக்கிறது. viii. 300/1917/III.

O31, 1

ரங்கநாயகி அம்மாள், ஸ்ரீரங்கம்

1519. i. அநுசூயா சரித்திரக் கும்மி: முதற் பதிப்பு; ii. லக்ஷ்மீ விலாஸ் அச்சுக் கூடம்; திருச்சி; iii. மார்ச், 1920; iv. செ. மூ. எ. 16; v. 22×14 செ.மீ.; vi. 0-2-0; vii. அத்திரி என்னும் முனிவரின் மனைவியான அனுசூயாவின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் கும்மிப் பாடல்கள் இதில் அடங்கியுள்ளன. 29 கட்டங்களாகப் பகுத்து இச்சரித்திரம் தரப் பட்டுள்ளது. viii. 179/1920/II.

O31,1

1520. i. ஆண்டாள் கல்யாணம் என்னும் கோதை பரிணயக் கும்மி: முதற் பதிப்பு; ii. ரங்கநாயகி அம்மாள்; டாட்சன் பிரஸ், திருச்சிராப்பள்ளி; iii. 1916; iv. செ. மூ. ப. 22; v. 22×14 செ.மீ.; vi. ....; vii. திருவில்லிபுத்தூரில் திருமாலுக்கும் ஆண்டாளுக்கும் நடந்த திருமணத்தைக் குறித்த புராணக் கதை. பலகட்டங்களாகப் பாகுபடுத்தி இச்சரித்தத்தை விவரிக்கிறது. viii. 487/1916/I.

O31,1

1521. i. ஆண்டாள் கல்யாணம் என்னும் கோதை பரிணயக் கும்மி : திருத்திய மூன்றும் பதிப்பு ; ii . ரங்க நாயகி அம்மாள், ஸ்ரீரங்கம் ; சண்முக விலாச பிரஸ், திருச்சி ; iii . செப்டம்பர், 1918 ; iv . செ. மூ. ப. 24 ; v. 21 × 13 செ. மீ. ; vi 0-3-0 ; vii. இரங்கநாதனுக்கும் ஆண்டாளுக்கும் நடந்த திருமணத்தைக் கும்மிப் பாடல்கள் மூலம் ஆசிரியை விளக்கு கின்றார். 'ஆண்டாள் கல்யாணம் என்னும் கோதை பரிணயக் கும்மி' என்பது இந்நூலின் முழுப் பெயர். 43 கட்டங்களாகப் பாகுபடுத்தி இச்சரித்திரம் எழுதப் பட்டிருக்கிறது. viii. 1011/1918/III.

O31,1

1522. i. கண்ணன் லீலை காக்ஷியோடக் கும்மி : இரண்டாம் பதிப்பு ; ii. ரங்கநாயகி அம்மாள், திருச்சிராப்பள்ளி ; லக்ஷ்மி விலாஸ அச்சுக்கூடம், திருச்சிராப்பள்ளி ; iii. ஜூன், 1917 ; iv. செ. மூ. எ. 35 ; v. 22×14 செ.மீ. ; vi. 0-3-6 ; vii. ஓடத்தில் கிருஷ்ணன் கோபியருடன் பயணம் செய்ததை யொட்டி அமைந்த கும்மிப் பாடல்கள். 35 சந்தங்களில் கும்மிகள் இதில் உள. சந்தம் மாறும் இடங்களில் 'வேறு கும்மி' என்று குறிப்புக் கொடுத்துள்ளார். 'நௌகா சரிதம்' என்றும் இதற்குப் பெயர் உண்டு. viii. 361/1917/III.

O31,1

1523. i. கண்ணன் லீலை காக்ஷியோடக் கும்மி : மூன்றும் பதிப்பு ; ii. ரங்கநாயகி அம்மாள், ஸ்ரீரங்கம் ; சண்முக விலாஸ பிரஸ், திருச்சிராப்பள்ளி ; iii. அக்டோபர், 1918 ; iv. செ. மூ. ப. 24 ; v. 21×14 செ.மீ. ; vi. 0-3-6 ; vii .... ; viii. 328/1918/IV.

O31,1

1524. i. கோபிகா வஸ்திராபஹரணக் கும்மி ; ii. சுந்தரராஜு அய்யங்கார் ; பாகவத வர்த்தினீ அச்சுக்கூடம், கோயம்புத்தூர்; iii. 1916 ; iv. செ. மூ. ப. 16; v. 21×14 செ. மீ. ; vi. 0-2-0; vii. யமுனா நதி தீரத்தில் கண்ணன் கோபிகளுடன் நடத்திய லீலைகளைக் கும்மியாகப் பாடுவது. 34 கட்டங்களாக இச் சரித்திரம் வகுக்கப்பட்டிருக்கிறது. பாடல்களுக்கு உரிய மெட்டுகளும் சுட்டப்பட்டிருக்கின்றன. viii. 717/1916/I.

O31,1

1525. i. கோபிகா வஸ்திராபஹரணக் கும்மி : திருத்திய இரண்டாம் பதிப்பு ; ii. ரங்கநாயகி அம்மாள், திருச்சிராப்பள்ளி லக்ஷ்மி விலாஸ அச்சுக் கூடம், திருச்சி ; iii. ஜூலை, 1917 ; iv. செ. மூ. எ. 34 ; v. 22×14 செ.மீ. ; vi. 0-2-0 ; vii. .... ; viii. 360/1918/III.

O31,1

1526. i. கோபிகா வஸ்திராபஹரணக் கும்மி: இரண்டாம் பதிப்பு ii. லக்ஷ்மி விலாஸ அச்சுக் கூடம், திருச்சி ; iii. ஜுன், 1918 ; iv. செ. மூ. ப. 16 ; v. 21×14 செ.மீ. ; vi. 0–2–6 vii. .... ; viii. 153/1918/III.

O31,1

1527. i. கோபிகா வஸ்திராபஹரணக் கும்மி: திருத்திய நான்காம் பதிப்பு ; ii. எல்.வி. பிரஸ், திருச்சி ; iii. 1919 : iv. செ. மூ. ப. 16 ; v. 22×14 செ.மீ. ; vi. 0–3–0 ; vii. .... ; viii. 178/1920/II.

O31,1

1528. i. வத்சலா கல்யாணக் கும்மி: திருத்திய இரண்டாம் பதிப்பு; ii. ரங்கநாயகி அம்மாள், ஸ்ரீரங்கம் ; ஷண்முக விலாச அச்சுக் கூடம், திருச்சி ; iii. டிசம்பர், 1919 ; iv. செ. மூ. ப. 28 ; v. 21×14 செ.மீ. ; vi. 0–4–0 ; vii. புராண வரலாற்றில் உள்ள வத்சலா திருமணத்தைப் பற்றிய செய்தி கும்மிப் பாடல்கள் மூலமாக இந்நூலில் விளக்கப்பட்டுள்ளது. 50 கட்டங்களாகப் பிரித்து இச்சரித்திரம் உரைக்கப் பட்டுள்ளது. கதைப் போக்கினைத் தெரிவிக்கும் தலைப்புகளும், பாடல்களுக்கு இராக தாளக் குறிப்புக்களும் கொடுக்கப்பட்டுள்ளன. viii. 1062/1919/IV.

O31,1

லெக்ஷ்மி அம்மாள்

1529. i. அனிருத்தன் கும்மி ; ii. லெட்சுமியம்மாள் ; விநாயக விலாச அச்சுக்கூடம், சிதம்பரம் ; iii. மார்ச், 1916 ; iv. செ. மூ. எ. 36 ; v. 13×11 செ.மீ. ; vi. 0–0–6 ; vii. பாணாசுரனின் மகளாகிய உஷாவுக்கும் கண்ணன் பேரனாகிய அனிருத்தனுக்கும் நடந்த திருமண வைபவத்தை விளக்குவது. viii. 1023/1916/I.

O31,

வாலேசாமி

1530. i. ஞானக்கும்மி ; ii. நற்றமிழ் விலாசம் பிரஸ், சென்னை ; iii. 1919 ; iv. செ. மூ. எ. 185 ; v. 18×11 செ. மீ. ; vi.......... ; vii. ஞானத்தைப் பற்றி ஓரளவு செய்யுள் வடிவில் கூறப்பட்டுள்ளது. பாடல்கள் ஒவ்வொன்றும் "ஞானப்பெண்ணே" என்னும் முடிவுடன் அமைந்துள. நூலின் நான்காவது பாடலிலும் ஈற்றுப் பாடலிலும் வாலே சுவாமியென்பவர் இந்நூலைச் செய்ததாகக் குறிக்கப் பட்டுள்ளது. viii. 334/1920/I.

O31,1

விசுவநாத கனபாடிகள், எ. எஸ். ஸர்வமான்யம்புத்தூர்

1531. i. நடராஜர் பேரிலும் சிவகாமி பேரிலும் பாடிய அருள் அகராதிக் கும்மி: முதற் பதிப்பு; ii. விசுவநாத கனபாடிகள், ஸர்வமான்யம்புத்தூர்; பிரேஸர் அச்சுக்கூடம், குனனூர்; iii. செப்டம்பர், 1919; iv. செ. மூ. எ. 83; v. 14×11 செ. மீ.; vi. 0–2–0; vii. சிதம்பரத்தில் கோயில் கொண்டுள்ள நடராஜர் பேரிலும், சிவகாமி பேரிலும் பாடியுள்ள அருள் அகராதிக் கும்மியாகும் இந்நூல். கும்மிப் பாடல்களின் தொடக்கம் அகரம் முதலிய எழுத்து வருக்கங்களைக் கொண்டு அமைந்துள்ளது. இவ்வெழுத்துக்கள் தடித்த எழுத்தாக அகராதி முறை எளிதில் புலப்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. viii. 39/1919/IV.

O31,1

வீரபத்ர சிவாநந்த யோகி, திருமங்கலம்

1532. i. ஜெயவீரபத்திர காளியம்பாள் சந்தக் கும்மியும் பதிகமும்; ii. இ. ராம. குருசாமிக் கோனார், மதுரை; ஸ்ரீராமச்சந்திர விலாசம் அச்சியந்திரசாலை, மதுரை; iii. 1916; iv. செ. மூ. ப. 11; v. 21×14 செ.மீ.; vi. 0–1–0; vii. திருமங்கலத்திலுள்ள ஜெயவீர பத்ரகாளி யம்பாளைக் குறித்துப் பாடப்பெற்ற சந்தக் கும்மியும் பதிகமும் இதில் அடங்கியுள்ளன. பதிகப் பாடல்கள் 'ஜெயவீர பத்திரகாளி சிம்ம வாகனத்தேவி மகமாயி உமையே' என்னும் சிறப்பு விளியுடன் முடிவுறுகின்றன. viii. 45/1917/III.

O31, 1

வீராச்சாமி நாயுடு, திருப்பொற்கோட்டை

1533. i. திருப்பொற்கோட்டை மாரியம்மன் கும்மி; ii. சோ. முத்தழகுக் கோனார்; எஸ்டேட் பிரஸ், தேவக்கோட்டை; iii. அக்டோபர், 1917; iv. செ. மு. எ. 70; v. 16×10 செ. மீ.; vi. . . . .; vii. இதில் திருப்பொற்கோட்டை மாரியம்மனைக் குறித்துப் பாடப்பெற்ற கும்மிப் பாடல்கள் அடங்கியுள்ளன. வைகாசி மாதம் வளர்பிறைப் பக்கம் மங்கள வாரத்தில் இத்தேவிக்கு நடைபெறும் வழிபாடும் பிறவும் குறிக்கப்பட்டுள்ளன. viii. 372/1917/IV.

O31,1

வெங்கடேச சாஸ்திரிகள், எஸ். மஞ்சபுத்தூர்

1534. i. துரோபதா, சுபத்திரா, வத்ஸலா திருக்கலியாணக் கும்மிகள்: முதற் பதிப்பு; ii. வீராசாமி அய்யர், திருவண்ணாமலை; நேஷனல் அச்சுக்கூடம், திருவண்ணாமலை; iii. ஜுலை, 1920; iv. செ. மூ. எ. 62; v. 22×15 செ. மீ.;

vi. 0-2-0 ; vii. இந்நூலில் மகாபாரதக் கதையில் சொல்லப்படும் துரோபதை, சுபத்திரா, வத்சலா ஆகியோர் களின் திருமணங்களை விவரிக்கும் சரிதங்கள் பற்றிய கும்மிப் பாடல்கள் அடங்கியுள்ளன. viii. 242/1920/III.

O31,1

வேதநாயக சாஸ்திரி, சுவிசேடக் கவிராயர்

1535. i. சாஸ்திரக் கும்மி : திருத்திய எட்டாம் பதிப்பு ; ii. கிறிஸ்டியன் லிட்டரேச்சர் சொசைட்டி — தி மெட்ராஸ் ரிலிஜியஸ் டிராக்ட் அண்டு புக் சொசைட்டி ; சி.எல்.எஸ்.பிரஸ், சென்னை ; iii. அக்டோபர், 1919 ; iv. செ.மூ.எ. 850 ; v. 12×9 செ. மீ.; vi. 0—4—0 ; vii. இந்து மதத்தில் உள்ள மூடநம்பிக்கைகளை வெளிப்படுத்தும் பாடல்களைக் கொண்டதாகும் இந்நூல். ஒவ்வொரு பாடலும் 'ஞானப் பெண்ணே' என்னும் விளியுடன் முடிவுறுவதால் இதனை 'ஞானப்பெண் கும்மி' என்றும் கொள்ளலாம். இந்நூல் கிறித்துவ மதப் பிரசாரத்திற்காகச் செய்யப்பட்டமையின் இந்துக்களிடையே நிலவி வரும் நல்ல பழக்க வழக்கங்கள் எல்லாம் மூடநம்பிக்கையெனக் குறிப்பிடப்பட்டுள்ளன. உதாரணமாக வைசூரி வந்த வீட்டில் வேப்பிலையை வைத்திருத்தல் மிகவும் பயனுடையது என்பதையுணராது அதையும் மூடநம்பிக்கையின் பாற்படுத்துவது வியப்பாயுள்ளது. "வேதநாயகனாகிய நானிதை வேதசாஸ்திரத்தின் படியே யோதினேன்" (849) என்பது கொண்டும் இந்நூற் சொன்னேன் சிறப்பு என்னும் தலைப்பில் வரும் பாடல்களைக் கொண்டும் (432—437) இந்நூலின் ஆசிரியர் வேதநாயக சுவிசேடக் கவிராயர் என்பது விளங்கும். தொடக்கப் பாடலில் "வேதநாயக சாஸ்திரி விளம்பும் வேத சாஸ்திரக் கும்மி" என்று தம் பெயரைக் குறிப்பிடுதலும் கருதத்தகும். viii. 613/1919/IV.

O31, 1

வைத்திலிங்கம் ஆச்சாரியார்

1536. i. புதுமை நகரில் வாழும் வடக்கு வாச் செல்லியம்மன் கொம்மி ; ii. லெக்ஷ்மி விலாஸம் பிரஸ், சாத்தூர் ; iii. 1919 ; iv. செ. மூ. ப. 35 ; v. 17×11 செ. மீ. ; vi. 0-4-0 ; vii. இது புதுமை நகரில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள வடக்குவாச் செல்லியம்மன் மீது பாடப் பெற்ற கொம்மி. முல்லைநகரம் சமஸ்தான வித்வான் திரு. சின்னச்சாமி ஆச்சாரியார், பண்ணை மூணடப்பு திரு. சின்னச் சிவனடியாத் தேவர் குமாரர் சந்தனத் தேவர் முதலியோர் இந்நூலுக்குச் சாத்துக் கவிகள் தந்துள்ளனர். viii. 177/1920/I.

O31,1

ஸ்வாமி குஞனந்தா

1537. i. திருவேளூர் வைத்தீஸ்வரர் சமேத தையநாயகிக கும்மி : இரண்டாம் பதிப்பு ; ii. கொ. செல்வரங்கம்மாள் அண்டு கோ. ; மனோன்மணி விலாச அச்சுக்கூடம், சென்னை ; iii. 1918 ; iv. செ. மூ. எ. 25 ; v. 14×11 செ. மீ. ; vi. 0—1—0; vii. திருவேளூரில் கோயில் கொண்டுள்ள தைய நாயகியைப் போற்றிப் பாடப்பெற்ற கும்மிப்பாடல்கள் இருபத் தைந்து அடங்கிய புத்தகம். இது கு. தையநாயகி அம்மாள் அவர்கள் வேண்டுகோட்படி அச்சிடப்பட்டதாகத் தெரிகிறது. வைத்தீஸ்வரன் கோயிலைப் பற்றிய விளக்கப்படமொன்று நூன் முகப்பில் உள்ளது. "தையத்தாண்டவ குஞனந்த கும்மி" என்று இக்கும்மிப்பாட்டுக்கு வேறு ஒரு பெயரும் உண்டு. viii. 110/1918/II.

O31,1

குறம்

இலக்குமண பாரதியார், மடவளாகம்

1538. i. சிவமலைக் குறவஞ்சி: முதற் பதிப்பு. ii. தி. அ. முத்து சாமிக் கோனர்; விவேகதிவாகரன் அச்சுக்கூடம், திருச்செங்கோடு. iii. ஜுன், 1918; iv. செ. மீ. ப. 76 ; v. 21×14 செ. மீ. vi. 1—0—0 ; vii. சிவமலைக் குறவஞ்சி என்பது சிவமலையிலெழுந்தருளியுள்ள சிவசுப்பிரமணியக் கடவுளைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு எழுதப்பட்ட குறவஞ்சிப் பாடல்களைக் கொண்டது. 'சிவமலை' என்பது பட்டாழி என்னும் நகரத்தைச் சேர்ந்த மலையாகும். ஊற்றுக் குழி ரயில்வே நிலையத்திலிருந்து காங்கேயம் வரும் வழியில் காங்கேயத்திற்கு வடக்கே மூன்று மைல் தூரத்தில் உள்ளது. அருணகிரிநாதரின் திருப்புகழ் இத்தலத்துக்கு உள்ளது. நூலாசிரியர் வரலாற்றுச் சுருக்கமும் நூல் முகப்பில் அமைந்து உள்ளது. இந்நூலாசிரியர் 1767 முதல் 1859 வரை வாழ்ந்திருந்தார் என்று தெரிய வருகிறது. viii. 554/1918/IV.

O31,1

கவிகுஞ்சர பாரதி, பெருங்கரை

1539. i. அழகர் குறவஞ்சி : முதற் பதிப்பு ; ii. நா. கோமுசு வரய்யர் ; ஸ்காட்டிஷ் அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1916 ; iv. செ. மூ. ப. 81 ; v. 22×15 செ.மீ. ; vi. 0—8—0 ; vii. குறவஞ்சி என்பது நாடகத் தமிழ்ப பிரபந்தங்களுள் ஒன்று. இது, மதுரைக்கருகிலுள்ள அழகர் கோயிலென்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கும் சுந்தரராஜப் பெருமாள் மீது இயற்றப்பட்டது. இதிலமைந்துள்ள

பாவினங்களும் கீர்த்தனங்களும் சொல், பொருள், இசை முதலிய நயங்களால் கேட்போர் மனதை உருக்கிப் பக்தியில் ஈடுபடுத்தக் கூடியவை. சரவணப் பெருமாள் கவிராயர், வேலாயுதக் கவிராயர் என்போர் இதற்குச் சாத்துக் கவிகள் பாடியுள்ளனர். ஸ்கந்த புராணக் கீர்த்தனை, பேரின்பக் கீர்த்தனங்கள், பதங்கள், என்பன இவ்வாசிரியரின் வேறு நூல்களில் சில. viii. 164/1916/II·

O31,1

பாலபாரதி முத்துசாமி அய்யர், பவாநி

1540. i. பாம்பண கவுண்டன் குறவஞ்சி : முதற் பதிப்பு ii. முத்துசாமி கவுண்டர், கிழான்பாடி, ஈரோடு ; விவேக திவாகரன் அச்சுக்கூடம், திருச்செங்கோடு ; iii. ஏப்ரல். 1917 ; iv. செ. மூ. ப. 53 ; v. 21×14 செ.மீ. ; vi. 0–8–0 ; vii. கோயம்புத்தூர் மாவட்டம், ஈரோடு தாலூகா, கிழான் பாடியில் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னிருந்த 'பாம்பண கவுண்டன்' என்பவரைப் பற்றிக் குறவஞ்சி வடிவில் இந் நூலாசிரியர் கூறியுள்ளார். பாம்பண கவுண்டன் வரலாறும் இந்நூலாசிரியரின் வரலாறும் உடன் உண்டு. இதில் கொங்கு நாட்டுச் சரித்திரக் குறிப்புக்கள் பல பொதிந் துள்ளன. viii. 8/1917/III.

O31,1

மாரிமுத்துப் பிள்ளை, தில்லைவிடங்கன்

1541. i. வருணபுரிக் குறவஞ்சி : முதற் பதிப்பு ; ii. தி. சு. வேலுச்சாமிப் பிள்ளை ; யூனைடெட் அச்சியந்திர சாலை, காஞ்சீபுரம் ; iii. மார்ச், 1919 ; iv. செ.மூ.எ. 60 ; v. 18×10 செ.மீ. ; vi. 0–6–0 ; vii. சிவதலமான வருணபுரியைப் பற்றிச் சிறப்பித்துக் குறவஞ்சிப் பாடலாக எழுதப்பட்டுள்ளது. சிதம்பரத்திற்குக் கீழ்த்திசையில் வெள்ளாறு என வழங்கும் மணிமுத்தா நதிக்கு வடகரையில் உள்ளது இத்தலம். வருணனால் பூசிக்கப்பட்டமையின் "வருணபுரி" எனப்பெயர் வந்தது என்பர். இவரால் இயற்றப்பெற்ற பிற நூல்கள் வருணபுரி அமிர்தவல்லி சமேத ஆதிமூலீசர் மேல் குறவஞ்சி, ஒரான்டி, தாய் மகளேசல் என்பனவாம். viii. 93/1919/II.

O31,1

கையறுநிலை

கிருஷ்ணசாமி முதலியார், பூவை

i. **சத்ரு சங்காரவேற் பதிகம்** (தொ. எ. 1474 பார்க்க); ii. கே. செல்வரங்கம் அண்டு கம்பெனி, சென்னை; மனோன்மணி விலாச அச்சுக்கூடம், சென்னை; iii. நவம்பர், 1920; iv. செ.மூ.எ. 1+10; v........; vi.......; vii. தேவராய சுவாமிகள் அருளிச்செய்த கந்தர் சஷ்டிக் கவசமும், சத்ரு சங்கார வேற்பதிகமும் இந்நூலில் உள்ளன. இந்நூல்களைக் காலை மாலை ஓதின் விரும்பியது எய்தப் பெறும் என்பர் சான்றோர்: viii. 707/1920/IV.

O31,1

i. நடராஜ பத்து (தொ. எ. 1739 பார்க்க); ii. தற்றமிழ் விலாச அச்சியந்திரசாலை, சென்னை; iii. 1919; iv. செ. மூ. எ. 11; v........; vi........; vii........; viii. 694/1919/IV.

O31,1

நடராஜன், எம்.

1730. i. கன்னியம்மன் பேரில் பதிகம்: முதற் பதிப்பு: ii. செங்கல்வராய சுவாமி, திருவொற்றியூர்; கலைக்கியான முத்திராக்ஷரசாலை, சென்னை; iii. மே, 1917; iv. செ. மூ. எ. 3+10; v. 14×11 செ. மீ.; vi. 0-0-3; vii. திருவொற்றியூரில் விளங்கும் கன்னியம்மனைக் குறித்து எழுதப்பெற்ற பக்திப் பாடல்களை இதில் காணலாம். இப் பதிகம் எழு கன்னியர்களின் சிறப்புக்களைப் பேசுகின்றது. இப்பதிகப் பாடல்கள் ஒவ்வொன்றும் 'தவமிக்க கன்னியர்கள். மிகமெச்சு மன்னையர்கள் ஜெய சப்த கன்னியர்களே' என்னும் முடிவினைப் பெற்றுள்ளன. viii. 674/1917/III.

O31,1

...ச படையாக்ஷி, முடிகண்டநல்லூர்

1731. i. முடியனூர் கெங்கையம்மன் பதிகம்: முதற் பதிப்பு; ii. விநாயகசுந்தர விலாசம் பிரஸ், சிதம்பரம்; iii. மார்ச், 1917; iv. செ. மூ. எ. 11; v. 20×13 செ. மீ.; vi........; vii. முடியனூரில் விளங்கும் கெங்கையம்மனைக் குறித்துப் பாடப்பெற்ற பக்திப் பாடல்கள் இவை. முடியனூருக்கு 'நல்லூர்', 'சதாசிவபுரம்' என்னும் பெயர்களும் உண்டு. கெங்கையம்மனை ஒவ்வொரு பாடலிலும் 'கெங்கை உமையே' என விளிக்கின்றார். viii. 14/1917/II.

O31,1

நடேசானந்தர்

1732. i. யோகானந்த அம்மையார்மீது தோத்திரப் பதிகம்: முதற் பதிப்பு; ii. யோகானந்தாஸ்ரம சாது சங்கம், வெள்ளக் குட்டை; அமெரிக்கன் டைமண்ட் பிரஸ், சென்னை; iii. செப்டெம்பர், 1919; iv. செ. மூ. எ. 3+10+1; v. 19×11 செ. மீ.; vi. 0-1-0; vii. வாணியம்பாடிக் கடுத்த வெள்ளக்குட்டையில் ஜெயசுந்தர விநாயகர் மடாலயத்திலெழுந்தருளியிருக்கும் யோகானந்த அம்மையார்மீது புகழ்ந்து பாடப்பெற்ற தோத்திரப் பதிகமும் குருபூஜாகிரமங் களும் இந்நூலில் அடங்கியுள்ளன. மகா குருபூஜையிற்

செய்யும் கிரியை, திர்க்குண அஷ்டோத்திரம் ஆகிய இரண்டும் இதன் இறுதியில் அமைந்துள்ளன. விவேக சட்கம் என்ற தலைப்பில் ஆறு பாடல்கள் தனியாக அமைந்துள்ளன. viii. 212/1919/IV.

O31,1

நரசிம்ம பாகவதர், தி.

1733. i. எல்லையம்மன் பேரிற் பதிகம்: முதற் பதிப்பு; ii. எஸ். வீ. மாணிக்கச் செட்டி, பரங்கிப்பேட்டை; விநாயக சுந்தர விலாசம் அச்சுக்கூடம், சிதம்பரம்; iii. செப்டெம்பர், 1917; iv. செ. மூ. உ. ப. 18; v. 21×14 செ. மீ.; vi இலவசம்; vii. இந்நூலில் பரங்கிப்பேட்டை என்று வழங்கும் முத்துக் கிருஷ்ணபுரி எல்லையம்மன் பேரில் பாடப்பெற்ற பக்திப் பாடல்கள் உண்டு. 'முத்துக்கிருஷ்ணபுரிவாழ் மாரி சுகுமாரி கருணரிவரதாரியருண்மாரி எல்லம்மை உமையே' என்பதை மகுடமாகக் கொண்டு இப்பதிகப் பாடல்கள் அமைந்துள்ளன. viii. 94/1917/IV.

O31,1

1734. i. சிவசரவணப் பெருமான் பதிகம்: முதற் பதிப்பு; ii. வி. சோணசல நாயக்கர், திருக்கோவலூர்; கலைக்கியான முத்திராக்ஷரசாலை, சென்னை; iii. மே, 1919; iv. செ. மூ. எ. 1+11; v. 11×11 செ. மீ.; vi. 0-0-3; vii. திருவெண்ணெய்நல்லூரில் வழிபாடு செய்யப்பட்டு வருகின்ற சிவசரவணப் பெருமானைப் போற்றிப் புகழ்ந்திடும் பதிகத்தினைக் கொண்டது இந்நூல். viii. 742/1919/IV.

O31,1

1735. i. திருவண்ணமலை ஸ்ரீ கன்னிகா பரமேச்வரி பதிகம்; ii. கோவிந்தசாமிப் பிள்ளை, திருவண்ணமலை & ஸ்ரீமதேயாதி இராமாநுஜாசார்ய ஸ்வாமிகள்; மனோன்மணி நர்த்தனம் அச்சுக்கூடம், திருவண்ணமலை; iii. 1917; iv. செ. மூ. எ. 1+11+1; v. 14×11 செ. மீ.; vi.................; vii. திருவண்ணமலையில் விளங்கும் கன்னிகா பரமேச்வரியின் மீது அமைந்த தோத்திரப் பாடல் - எழுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தத்தாலாகியது. இதிலுள்ள பாடல்கள் 'மாசிலாக் குண சாலி கேசவார்ப்பித சீலி வாசவாம்பிகையம்மையே' என்பதனை மகுடமாக பெற்றுள்ளன. viii. 813/1917/III.

O31,1

நாரணப்ப நாயக்கர், இ.விஜயரங்கபுரம்

i. சீனிவாசகப் பெருமான் பதிகம் (தொ. எ. 1422 பார்க்க):, முதற் பதிப்பு; ii. குருசாமி நாயுடு; அஷ்டலக்ஷ்மி விலாசம் பிரஸ், மதுரை; iii. 1916; iv. செ. மூ. எ. 1+10; v.

22×14 செ. மீ.; vi . . . . .; vii. திருப்பதி ஸ்ரீனிவாசப்பெருமாள் பேரில் பாடிய தோத்திரமாலை. விருத்தப்பாவால் ஆகியது. viii. 603/1916/I.

O31,1

நாராயணசாமி பண்டிதர், எம்., நாகப்பட்டினம்

1736. i. மாரியம்மன் திருவருட் பதிகம் (கும்மிச் சிந்து]) ii. எம். நாராயணசாமி பண்டிதர், நாகப்பட்டினம்; நீலலோசனி அச்சுக்கூடம், நாகை; iii. டிசம்பர், 1916 ; iv. செ.மூ.எ. 11+9+2+51; v. 18×11 செ. மீ.; vi. 0–1–0; vii. தஞ்சை மாவட்டத்திலே மாயூரத்தைச் சார்ந்த மேலப்பாதிக் கிராமம் நாகார்ச்சுன திருத்தலத்தின் மத்தியில் காவேரி நதியின் உத்தரவாகினி வடபுறமிருக்கும் கிழையூர் உப்புச்சந்தை மாரியம்மன் பேரில் பாடப்பெற்ற பதிகம் முதலில் உளது. "வேதாந்தப் பொருள் முடிவில் நாதாந்த சத்தியாய் விளங் குப்புச் சந்தையுமையே" என இப்பதிகப் பாடல்கள் முடிவுறு கின்றன. அடுத்து ஒன்பது விருத்தப் பாக்கள் கொண்ட தோத்திரமாலை உளது. பின்னர் நொண்டிச்சிந்து மெட்டில் இரு பாடல்கள் உள. இறுதியில் கும்மிப் பாடல்கள் 51 அமைந்துள. viii. 54/1917/I.

O31,1

நாராயண செட்டியார், பி., வளவனூர்

1737 i. பாஞ்சாலியம்மன் பதிகம் : முதற் பதிப்பு; ii. சி. வரத ராஜலு நாயுடு, அப்புசம்பாளையம்; ருக்மணிவிலாசம் பிரஸ், விழுப்புரம்; iii. 1920; iv. செ. மூ. எ. 10; v. 22×14 செ. மீ.; vi. . . . .; vii. இதில் தென்னாற்காடு மாவட்டம், விழுப்புரம் தாலுகா அப்புசம்பாளையத்தில் விளங்கும் பாஞ்சாலியம்மனைப்பற்றிய துதிப்பாடல்கள் அடங்கியுள்ளன. புதுவை சாப்புக்கடை திரு. முத். ராமசாமி நாயுடு, வளவனூர் குமாரகுப்பம் திரு. மாணிக்க உபாத்தியாயர் முதலியோர் தந்த சிறப்புப் பாயிரத்துடன் கூடியது. viii. 719/1920/I.

O31,1

பக்தவச்சலு செட்டியார், நா.

1738. i. அற்புத சித்தி விநாயகரின் பேரில் பத்துப் பதிகம்; முதற் பதிப்பு; ii. ந. பக்தவச்சலு செட்டியார், பூண்டி. ஷண்முக ஆனந்த அச்சுக்கூடம், போளூர்; iii. 1917; iv. செ. மூ. எ. 1+10+2; v. 14×11 செ. மீ.; vi. இலவசம்: vii. இந்நூலில் வட ஆற்காடு மாவட்டம், போளூர் வட்டம், பூண்டிக் கிராமத்தைச் சார்ந்த செய்யாற்றின் வடகரையில் விளங்கும் சித்தி விநாயகரைத் துதித்து எழுதப்பட்ட பக்திப்பாடல்கள் உள்ளன. viii. 151/1918/I.

O11,1

1739. i. பஞ்சாட்சரப் பதிகம் (நடராஜப்பத்து, சங்கப்புலவர் கண்ட சுத்தி); ii. நற்றமிழ் விலாச அச்சியந்திர சாலை, சென்னை; iii. 1919; iv. செ.மூ.எ.5; v. 21×14 செ.மீ.; vi. 0–0–6; vii. சிவபெருமானை வழிபாடு செய்கின்றபொழுது கூறுகின்ற ஐந்து புனித எழுத்துக்களைப் பற்றியும் தில்லையில் கோயில் கொண்டுள்ள நடராஜப் பெருமானைப் பற்றியும் பாடிய பாடல்கள் இந்நூலின்கண் அடங்கியுள்ளன. இதில் உள்ள பாடல்கள் ஐந்தும் "அன்பிலுறை நடன பதியே" என்னும் முடிவினைக் கொண்டு அமைந்துள. viii. 694/1919/IV.

O31,1

1740. i. பட்டுக்கோட்டை பச்சை நாயகியம்மன் பதிகம் (அறை கண்டநல்லூர் வள்ளியம்மன் பதிகம், பச்சைமலை நாயகி அஷ்டதோத்திரம், பச்சைநாயகி பட்டுக்கோட்டையுற்ற வரலாறு); ii. எஸ். கெ. சொக்கலிங்கம் பிள்ளை, ம. வடிவேல் சாமி பிள்ளை, திரிசிராமலை, யாதவர்புரம், நடராஜா அச்சுக்கூடம், திருச்சி; iii. 1917; iv. செ.மூ.எ. 2+2+11; v. 15×12 செ.மீ.; vi.........; vii. பட்டுக்கோட்டையில் விளங்கும் பச்சைநாயகி அம்மனைக் குறித்த தோத்திரம். 'அரியச் சுதன் தங்கை அரன்குடி சடைக் கங்கை அருள் பச்சைமலை மங்கையே' என்னும் விளித்தொடருடன் முடிகிறது இப்பதிகம். viii. 732/1917/III.

O31,1

பரமேஸ்வரன், கொடிமங்கலம்

1741. i. இராமேஸ்வரம் ஸ்ரீஇராமநாதசுவாமி, ஸ்ரீபருவதவர்த்தனி அம்மாள் பதிகம், முதற் பதிப்பு; ii. எஸ். நாகலிங்கம் பிள்ளை, பரமக்குடி; மாணிக்கம் பிரஸ், பரமக்குடி; iii. 1915; iv. செ.மூ.எ. 2+20; v. 21×14 செ.மீ.; vi. 0–0–6; vii. இராமேசுவரம் இராமநாதசுவாமி மீதும் பருவதவர்த்தனி அம்பாள் மீதும் பாடிய தோத்திர மாலை. இவை விருத்தப் பாவால் ஆகிய இரு பதிகங்கள் ஆகும். இவை முறையே 'இராமேச்வரத்தில் மலை மங்கையொடிலங்கிடு மிராமநாதக் கடவுளே' என்றும், 'மகிமை தங்கிய ராமநாதர் மகிழ்கின்ற பருவத வர்த்தனி தேவியே' என்றும் மகுடங்கள் பெற்றுள்ளன. viii. 540/1916/I.

O31,

1742. i. பழனியங்கிரி அறுமுகவர் திருநீற்றுப் பதிகம். முதற் பதிப்பு; ii. பகடால முனிரத்தினம் நாயுடு, இராயவேலூர், கிருஷ்ண விலாஸ் அச்சுக்கூடம், இராயவேலூர்; iii. நவம்பர், 1916; iv. செ.மூ.எ.12; v. 14×11 செ.மீ.; vi. 0–0–3; vii. பழனிமலையில் கோயில் கொண்டுள்ள முருகப் பெருமான் அணிந்துள்ள புனிதமான திருநீற்றின் மகிமையினை

விளக்கும் பக்திப்பாடல்களைக் கொண்டது இப்புத்தகமாகும். 'அடியவர்க்கருள் கிருபை மொழி பழனியங்கிரி அறுமுகவர் திருவெண்ணீறே' என இப்பதிகப் பாடல்கள் முடிவுறுகின்றன. viii. 773/1916/IV.

O31,1

பழநியப்ப சுவாமிகள், அ.

1743. i. முறட்டுமாநகர் கணேசர் பதிகம் முதலியவை ; ii. ஸ்டார் அச்சாபீஸ், திருப்பூர் ; iii. 1920 ; iv. செ.மூ.ப. 26 ; v. 21×14 செ.மீ. ; vi. 0–4–0 ; vii. முறட்டுமாநகர் கணேசர், அவிநாசி ஈஸ்பரர், திருமுருகன் பூண்டி மாதேசுவரர், முயங்குபூண்முலையம்மன், சுப்பிரமணியர், திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரர், தண்டபாணி வீரபாகுதேவர் என்னும் தெய்வங்களின்மீது பதிகங்கள் இந்நூலில் அமைந்துள. பெருங்கருணாம்பிகை மாலை, சிவமலை சுப்பிரமணிய மாலை என இரு தோத்திர மாலைகளும் உள. viii. 60/1920/IV.

O31,1

பெரியசாமி சேர்வை, வெ.

1744. i. கரூரென்னும் கருவைக் கடவுள் பதிகம் ; ii. வெ. பெரியசாமி சேர்வை, கரூர் ; விவேகபானு அச்சியந்திரசாலை, கரூர் ; iii. மார்ச், 1918 ; iv. செ.மூ.எ. 1+10+1 ; v. 20×13 செ.மீ. ; vi....... ; vii. கரூரில் திருவாநிலைக்கண் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள பசுபதீஸ்வரரின் மேல் பாடப்பெற்ற பக்திப்பாடல்கள் அமைந்த பதிகமே இந்நூலாகும். பதிகம், பத்துப் பாடல்களைக் கொண்ட சிறிய பிரபந்தம் என்னும் பொருளையுடையது. பாடல்கள் பக்திச் சுவையினை யூட்டும் பான்மையன. கடைசியில் அமைந்துள்ள வாழ்த்துப் பாடலில் பெத்தாச்சி என்பவரின் வள்ளற்றன்மை பேசப் படுவதால் அவர் இந்நூலாசிரியரை ஆதரித்த வள்ளல் எனத் தெரிய வருகின்றது. viii. 74/1918/II.

O31,1

பெரியசாமி பிள்ளை, தெ., உறையூர்

1745. i. ஸ்ரீரங்கம் ஸ்ரீசித்தி விநாயகர் பதிகம்: முதற் பதிப்பு ii. யு.ஆர். பாலகிருஷ்ணம் பிள்ளை, ஸ்ரீரங்கம் ; வெட்னஸ்டே ரிவ்யூ பிரஸ், திருச்சிராப்பள்ளி ; iii. 1915 ; iv. செ.மூ.எ. 7+10+1 ; v. 17×13 செ.மீ. ; vi....... ; vii. ஸ்ரீரங்கம் ஸ்ரீசித்திவிநாயகர் பேரில் தோத்திர மாலை. 'சித்தரொடு முத்தர்களு நித்தமும் பத்திபுரி சித்திக் களிற்று முகனே' என்பதை மகுடமாகக் கொண்டு ஒவ்வொரு பாடலும் முடி வுறுகின்றது. ஆசிரிய விருத்தத்தால் ஆகியது. பதிக இறுதியில் சந்த விருத்தம் ஒன்றும், ஒரு வெண்பாவும் உள: viii. 34/1916/I.

O31,1

மணிமுத்துப் பிள்ளை

1746. i. சோழபுரம் பத்திரகாளியம்மன் பதிகம்: முதற் பதிப்பு; ii.......; iii. மே, 1918; iv. செ.மூ.எ. 4+1+10+1; v; 21×14 செ.மீ.; vi. 0-1-0; vii. சோழபுரத்தில் கோயில் கொண்டுள்ள பத்திரகாளியம்மன் மீது பாடப்பெற்ற பக்திப் பாடல்களைக் கொண்டது இப்புத்தகம். எட்டயபுரம் சமஸ்தானம் சேட்டய மணியக்காரர் குமாரர் வாலைதாசனென்னும் பேர் விளங்கிய சோதிட இராமசாமிக் கவிராயர், எட்டயபுரத்தைச் சார்ந்த சோழபுரம் சி. மா. அ. ராமசாமி முதலியோர் சாத்துக் கவிகள் தந்துள்ளனர். viii. 122/1918/III.

O31,1

மணியன் பிள்ளை, எம்.எஸ்.

1747. i. அர்ச். மரியம்மை பதிகம்: முதற் பதிப்பு; ii. எம்.எஸ். மணியம் பிள்ளை, திருச்சிராப்பள்ளி; செயிண்ட் ஜோஸப்ஸ் இண்டஸ்ட்ரியல் ஸ்கூல் பிரஸ், திருச்சிராப்பள்ளி; iii. டிசம்பர், 1917; iv. செ.மூ.எ. 5+10+1; v.....; vi. 0-0-6; vii. கிருத்துவ, கத்தோலிக்க சமயத்தார் தொழும் தேவமாதா மேரியம்மையைப் போற்றி எழுதப்பெற்ற பாடல்கள் அடங்கியுள்ளன. திரிசிரபுரம் அ. சிவப்பிரகாசம் பிள்ளை, திரிசிரபுரம் அ. சுந்தரநாத பிள்ளை, திரிசிரபுரம் ரா. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, நாவல்பாட்டு அ. குப்புசாமிப் பிள்ளை, வரகநேரி ஆ.து.பி. தேவதாசு, இந்நூலாசிரியரின் மாணவர் தேவதானம் ப.செ. இராயப்புலவர் என்போர் பாடிய சாற்றுக் கவிகளும் இச்சிறு நூலுக்கு உண்டு. viii. 908/1917/IV.

O31,1

1748. i. அர்ச். மரியம்மை பதிகம்: இரண்டாம் பதிப்பு; ii. ஜோசப் ஐயர், திருச்சி; செயிண்ட் ஜோசப் இண்டஸ்ட்ரியல் பிரஸ், திருச்சிராப்பள்ளி; iii. ஆகஸ்ட், 1918; iv. செ.மூ.எ. 10; v. 18×11 செ.மீ.; vi. 0-1-0; vii. ....; viii. 828/1918/III.

O31,1

மருதாசலக் கவுண்டர், விலாங்குறிச்சி

1749. i. பேரூர்ப் பட்டீசுரன் பதிகம் (விளாங்குறிச்சி அங்காளம்மன் பதிகம்) முதற் பதிப்பு; ii. மருதாசலக் கவுண்டர், விலாங்குறிச்சி; இராமச்சந்திர விலாஸ் அச்சியந்திரசாலை, கோயம்புத்தூர்; iii. நவம்பர், 1916; iv. செ.மூ.எ. 10; v. 15×10 செ.மீ.; vi. இலவசம்; vii. பேரூரில் கோயில் கொண்டுள்ள பட்டீசுவரன் மீது பாடப்பெற்ற பதிகப் பாடல்கள் கொண்ட நூல். தவிரவும் விளாங்குறிச்சியில் கோயில் கொண்டுள்ள அங்காளம்மனின் மீது பாடப்பெற்ற பதிகப்பாடல்களும் இப்புத்தகத்தில் உள்ளன. திருப்போரூர் சுப்பிரமணிய சுவாமி, கருணையெய சுவாமிகள் முதலியோர் இதற்குச் சாத்துக் கவிகள் பாடியுள்ளனர். viii. 558/1916/IV. O31, 1

i. விளாங்குறிச்சி அங்காளம்மன் பதிகம்(தொ. எ. 1749 பார்க்க): முதற் பதிப்பு; ii. இராமச்சந்திர விலாஸ் அச்சியந்திரசாலை, கோயம்புத்தூர்; iii. 1916; iv. செ. மூ.எ.. 10+10; v.......; vi....; vii.விளாங்குறிச்சியில் எழுந்தருளியிருக்கும் அங்காளம்மனைப்பற்றிய துதி. மேலும் அங்காளம்மன் திரிவூசல் பாடல் பத்தும் உள. இது இறைவியை ஊஞ்சலாடியருளுமாறு வேண்டும் வகையில் அமைந்துள்ளது. viii. 558/ 1916/ IV.

O31,1

1750. i. **மலையனூர் அங்காளம்மன் பேரில் பதிகம்**: முதற் பதிப்பு; ii. **ஆர்.** நாராயணசாமி பிள்ளை & பிரதர், சென்னை; நற்றமிழ்; விலாச அச்சியந்திரசாலை, சென்னை; iii. மார்ச், 1918; iv. செ.மூ.எ. 10; v. 13×11 செ.மீ.; vi. 0-0-3; vii. மலையனூரில் கோயில் கொண்டுள்ள அங்காளம்மன் பேரில் பாடப்பெற்ற தோத்திரப் பாடல்களைக் கொண்டது இப்புத்தகம். மாரியம்மன் படமும் முதலில் தரப்பட்டிருக்கிறது. இப்பதிகப் பாடல்கள் ஒவ்வொன்றும் 'ஓங்கார சக்தியே பூங்காவனத் தாயியே' என்னும் விளியுடன் முடிவுறுகின்றது. viii. 1103/1918/III.

O31,1

மீனாக்ஷிசுந்தரஞ் செட்டியார், சு.வை., பூவுற்ற குடிநகரம்

1751. i. சித்த கன்னி வீரசத்தி விநாயகர் பதிகம்; ii. சுப்பிரமணியய்யர், கருத்தட்டான்குடி, தஞ்சாவூர்; ஸ்ரீகுஞ்சித சரண அச்சியந்திரசாலை, சிதம்பரம்; iii. 1917; iv. செ. மூ. எ. 5+1+1+10; v. 13×11 செ.மீ.; vi.........; vii. சித்த கன்னி என்னும் திருப்பதியில் விளங்கும் விநாயகப் பெருமானைப் பற்றிய தோத்திரம். இவருடைய திருநாமம் வீரசத்தி விநாயகர் என்பது. தஞ்சைச் சதாவதானம் சுப்பிரமணிய ஐயரால் பார்வையிடப்பட்டுப் பதிப்பிக்கப் பெற்றது இந்நூல். நா. சிவராமச் செட்டியாரும் மற்றொருவரும் பாடிய சாற்றுக் கவியும் இதற்கு உண்டு. viii. 929/1917/III.

O31,1

முத்துசாமி உடையார், கு., பாதாங்கி

i. பாதாங்கி சிவசுப்பிரமணியக் கடவுள் பதிகம் (தொ. எ. 1752 பார்க்க): முதற் பதிப்பு; ii. கு. முத்துசாமி உடையார், பாதாங்கி; ஸ்ரீகுஞ்சித சரண அச்சுக்கூடம், சிதம்பரம்; iii. மார்ச், 1917; iv. செ.மூ.எ. 1+10+1; v....; vi......; vii. பாதாங்கி சிவசுப்பிரமணியக் கடவுள் மீது பாடப் பெற்ற பதிகப் பாடல்கள் இவை. viii. 1085/1917/I.

O31,1

1752. i. பாதாங்கி செல்வவிநாயகக் கடவுள் பதிகம் (சிவசுப்ரமண்யக் கடவுள் பதிகம், வரதராஜப் பெருமாள் பதிகம், விஸ்வநாதீஸ்வரர் பஞ்சகம்): முதற் பதிப்பு; ii. கு. முத்துசாமி

உடையார், பாதாங்கி; ஸ்ரீகுஞ்சித சரண அச்சுக்கூடம், சிதம்பரம்; iii. மார்ச், 1917; iv. செ.மூ.எ. 4+1+10+1; v. 21×13 செ.மீ.; vi. 0–2–0; vii. பாதாங்கி செல்வவிநாயகக் கடவுளைக் குறித்துப் பாடப் பெற்ற பதிகப் பாடல்கள் உள்ளன. இவர் பாடி அச்சிடப் பெறாது இருக்கும் நூல்களைக் குறித்தும் விவரம் தந்துள்ளார். அவையாவன : ஸ்ரீஅழகேஸ்வரர் பதிகம், அழகேஸ்வரியம்மன் பதிகம், ஸ்ரீசுப்பிரமணியர் வண்ண விருத்த பஞ்சரத்னம், திருப்போரூர் சிவசண்முக மாலை, திருவண்ணாமலை ஸ்ரீஅருணாசலேசுரர் பதிகம், ஸ்ரீஉண்ணாமுலை யம்மன் பதிகம், திருப்பழநி கந்தவேள் விருத்தம் முதலியன. viii. 1085/1917/I.

O31,1

i. பாதாங்கி வரதராஜப் பெருமாள் பதிகம் (தொ.எ.1752 பார்க்க): முதற் பதிப்பு; ii. கு. முத்துசாமி உடையார், பாதாங்கி; ஸ்ரீகுஞ்சித சரண அச்சுக்கூடம், சிதம்பரம்; iii. மார்ச், 1917; iv. செ.மூ.எ. 1+10+1; v......; vi....; vii. பாதாங்கியில் விளங்கும் வரதராஜப் பெருமாளின் மீது பாடப் பெற்ற தோத்திர நூல். viii. 1085/1917/I.

O31,1

முத்துசாமி உபாத்தியாயர், சி., பசும்பலூர்

i. சித்தநாத சுவாமிகள் பதிகம் (தொ.எ. 1766 பார்க்க); ii. கு. முத்துசாமி உடையார், பாதாங்கி; ஸ்ரீகுஞ்சித சரண அச்சுக்கூடம், சிதம்பரம்; iii. 1915; iv. செ.மூ.எ. 4+10; v. 14×11 செ.மீ.; vi. 0–1–0; vii. குகையூர் சித்த நாதரைப் பற்றிய தோத்திரப் பதிகம். இதன் தொடக்கத்தில் சுவாமிகளின் திருச்சரிதம் உரைநடையில் உள்ளது. ‘சித்த நாதேந்திரச் சிவமே’ என்னும் முடிவினைக் கொண்டு இப் பதிகப் பாடல்கள் அமைந்துள்ளன. viii. 20/1916/I.

O31,1

முத்துசாமிப் பிள்ளை, ந., அச்சிறுபாக்கம்

1753. i. ஜமீன் நல்லாமூர் ஸ்ரீதிரௌபதையம்மன் பேரில் பதிகம்: முதற் பதிப்பு; ii. ந. முத்துசாமிப் பிள்ளை, அச்சிறுபாக்கம். சத்தாரியா பிரஸ், திண்டிவனம்; iii. ஜூன், 1919; iv. செ.மூ.எ. 1+1+11; v. 15×11 செ.மீ.; vi..........; vii. இந்நூலில் மதுராந்தகம் தாலுகா, ஜமீன் நல்லாமூரின்கண் விளங்கும் திரௌபதையம்மனைக் குறித்து பாடப் பெற்ற தோத்திரப் பாடல்கள் அடங்கியுள்ளன. ‘கருணீக வம்ஸ முத்துச்சாமி வழுத்துமிப் பதிகம் வாழி’ என ஆசிரியர் இறுதிப் பாடலில் தம் பெயரையும் குலத்தையும் குறிப் பிட்டுள்ளார். ‘வளமுறும் நல்லாவூர் வாழுமென்றல்லியே மாது திரௌபதி வல்லியே’ என இப்பதிகப் பாடல்கள் முடிவுறுகின்றன. இங்கே ‘தல்லி’ என்பது தாய் என்னும்

பொருள் தரும் தெலுங்குச் சொல். தேவனந்தல் பு. நாராயணசாமி நாயுடு என்பார் இதற்குச் சாற்றுக் கவி பாடியுள்ளார். viii. 28/1919/III.

O31,1

முத்து சுப்ப பாரதி, பு. வே., அரிகேசநல்லூர்

1754. i. கருவூர் பசுபதி நாதர் பதிகம்: முதற் பதிப்பு; ii. பு.வ. முத்து சுப்ப பாரதி; தமிழ்ச் சங்கம் பவர் பிரஸ்; மதுரை; iii. மார்ச், 1920; iv. செ.மூ.எ. 1+10; v. 14×11 செ.மீ.; vi.........; vii. கருவூரில் விளங்கும் பசுபதிநாதரைப் பற்றிய தோத்திரப் பாடல்கள் இதில் அடங்கியுள்ளன. இப்பதிகப் பாடல்கள் ஒவ்வொன்றும் "பாலலோசன கால பாச மோசன சூலபாணி பசுபதிநாதனே" என்று முடிவுறுகின்றது. viii. 334/1920/II.

O31,1

1755. பதிகத் திரட்டு—முதற்பாகம்; ii. எம். ஹரிஹரமையர், அரிகேசநல்லூர்; ஸ்ரீகிருஷ்ணவிலாச அச்சியந்திரசாலை, திருமங்கலம்; iii. 1917; iv. செ.மூ.ப. 56; v. 14×12 செ.மீ.; vi.........; vii. இந்நூலில் அரிகேசநல்லூர் விநாயகர் பேரிலும், பஜனை மடாலயத்து ஷண்முகப் பெருமான் பேரிலும், அரியநாதர் என்ற அரிகேச சுவாமி பேரிலும், பிருகந் நாயகியம்மாள் பேரிலும் பதிகப் பாடல்கள் உள்ளன. ஏற்கெனவே அச்சில் வெளிவந்த பதிகங்கள் ஸ்ரீஸ்காந்தப் பதிகம், ஸ்ரீமத் இராமாயணப் பதிகம் என்னும் இவ்விரண்டுமாம். இவையாவும் தெய்வ தோத்திரங்களாக அமைந்தனவாகும். viii. 117/1917/II.

O31,1

முத்துவடிவேலு பத்தர், தில்லையாளி

1756. காத்தாயி அம்மன் பதிகம்: முதற் பதிப்பு; ii. கே. வெங்கட்ராம அய்யர், மாயவரம்; ஸரஸ்வதி விலாஸ பிரஸ், மாயவரம்; iii. செப்டம்பர், 1918; iv. செ.மூ.எ. 10; v. 14×12 செ.மீ. vi. இலவசம்; vii. மாயூரத்தைச் சார்ந்த மூங்கில் தோட்டத்தில் கோயில் கொண்டுள்ள காத்தாயி அம்மன் மீது பாடப்பெற்ற பாடல்களைக் கொண்டது இப்பதிகம். இப்பதிகப் பாடல் ஒவ்வொன்றும் 'தேங்கு புகழ் மூங்கில் வனமோங்கு காத்தாயியே தேவியே எனதாவியே' என்று முடிவுறுகின்றது. மாயவரம் ஸ்ரீ ந. விஸ்வலிங்கக் கண்டர் இயற்றிய சிறப்புப் பாயிரத்துடன் கூடியது. viii. 133/1918/IV.

O31,1

முனுசாமி முதலியார், சிறுமணவை

1757. i. நடராஜப் பத்து; ii. பகடால. முனிரத்தினம் நாயுடு இராயவேலூர்; கிருஷ்ண விலாச அச்சுக்கூடம், இராயவேலூர்; iii. 1916; iv. செ.மூ.எ. 11; v. 14×11 செ.மீ.;

vi. 0–0–3; vii. சிதம்பரத்தில் கோயில் கொண்டருளும் நடராசப் பெருமானைப் பற்றிய தோத்திரமாலை. 'ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே' என்பதனை மகுடமாகப் பெற்று இப்பதிகப் பாடல்கள் அமைந்துள்ளன. இறுதிப்பாடல் 'கோள் நீக்கம்' பற்றி வேண்டுகிறது. மேலும், இப்பாடலில் ஆசிரியர் 'இனிய வளமருவு சிறுமணவை முனிசாமி எனையாள்வது இனி உன் கடன் காண்' எனக் கூறுதலின் இப்பதிக ஆசிரியர் சிறுமணவை முனிசாமி முதலியார் என்பது புலனாகும். viii. 838/1916/I.

O31,1

1758. i. மெய்கண்ட தேசிகன் பதிகம்; ii. நரசிம்ம பாகவதர், திருவெண்ணெய்நல்லூர்; பு. வி. பிரஸ், திருக்கோவலூர்; iii. செப்டெம்பர், 1919; iv. செ.மூ.எ. 10+1; v. 11×8 செ.மீ.; vi. இலவசம்; vii. சைவசமய சந்தான ஆசிரியர்கள் நால்வரில் முதல்வராய்ச் சிவஞான போதம் என்னும் அரிய நூலைத் திருவாய் மலர்ந்தருளிய மெய்கண்ட தேசிக சுவாமிகளின் மீது பாடப்பெற்ற அழகிய கட்டளைக் கலித்துறைகளைக் கொண்டது இந்நூல். viii. 822/1920/II.

O31,1

1759. i. மெய்யாற்றூர் பதிகம்: முதற் பதிப்பு; ii. மெய்கண்ட தேவருரைமுகம் மாணிக்கன், சிதம்பரம்; ஸ்ரீகுஞ்சித சரண பிரஸ், சிதம்பரம்; iii. பிப்ரவரி, 1919; iv. செ.மூ.எ. 10; v. 11×8 செ.மீ.; vi. இலவசம்; vii. மெய்யாற்றூரில் கோயில் கொண்டுள்ள சிவபெருமான் மீது பாடப்பெற்ற பதிகப் பாடல்களைக் கொண்டது இப்புத்தகம். viii. 792/1919/I.

O31,1

ரமண மகரிஷி

i. அருணாசல பதிகம் (தொ.எ. 1793 பார்க்க); முதற் பதிப்பு ii. எஸ். நாராயண செட்டி; மினர்வா அச்சுக்கூடம், சென்னை; iii. டிசம்பர், 1916; iv. செ.மூ.எ. 11; v........;vi........; vii. அண்ணாமலைப் பெருமானைக் குறித்த துதிப்பதிகம். இப்பதிகம் அந்தாதியாக அமைந்துள்ளது. viii. 238/1917/I.

O31,1

ராமபத்திர பிள்ளை, கம்பர்

1760. i. மதுரை செல்வத்தம்மன் தோத்திரப் பதிகம்: முதற் பதிப்பு; ii. கவிராஜ ராமசாமி; ஸ்ரீராமச்சந்திர விலாசம் அச்சியந்திரசாலை, மதுரை; iii. அக்டோபர், 1918; iv. செ.மூ.எ. 10; v. 14×11 செ.மீ.; vi. 0–0–6; vii. மதுரையில் வடக்கு வாசலில் கோயில் கொண்டுள்ள செல்

வத்தம்மன் மீது பாடப்பெற்ற தோத்திரப் பாடல்களைக் கொண்டது இப்புத்தகம். 'திருமாது புகழ் வல்லி, செகமெங்கி லுந்தல்லி, செண்பகச் செல்வி உமையே' என்னும் முடிவினை இப்பதிகப் பாடல்கள் கொண்டுள்ளன. viii. 445/1918/IV.

O31,1

ராமக்குருக்கள், முத்துநாடு, இராமநாதபுரம்

1761. i. அங்காளம்மன் பதிகமும் தாலாட்டும் : முதற் பதிப்பு ii. கணபதிசாமிக் குருக்கள், அமராவதிபுதூர் ; வைசிய மித்திரன் பிரஸ், காரைக்குடி ; iii. 1916 ; iv. செ.மூ.எ. 1+10+8 ; v. 21×14 செ.மீ. ; vi.............. ; vii. நன்னிலந் தாலூகா, மாப்பிள்ளைக்குப்பத்தில் எழுந்தருளி யிருக்கும் அங்காளம்மன் மீது பாடப்பட்ட பதிகமும் தாலாட்டும் அடங்கியது. பதிகப் பாடல்கள் ஆசிரியவிருத்தத்தால் அமைந்தவை. "ஆதாரமான பொருள் வேதாந்த ரூபி நீ அங்காள வல்லி உமையே" என்பதனை மகுடமாகக் கொண்டு ஒவ்வொரு பாடலும் முடிவுறுகின்றது. தாலாட்டுப் பற்றிய பாடல்கள் எட்டு உள்ளன. viii. 354/1916/III.

O31,1

வாஞ்சலிங்க படையாச்சி, க.

1762. i. சுப்பிரமணியர் பதிகம்: முதற் பதிப்பு ; ii. சிங்கார வேலு படையாச்சி, சின்னசாமி உடையார் & எ. எஸ். பெரிய தம்பிதேவர், சிதம்பரம் ; ஸ்ரீபாலாம்பிகா விலாச அச்சுக் கூடம், சிதம்பரம் ; iii. 1916 ; iv. செ. மூ. எ. 1+10 ; v. 21×14 செ.மீ. ; vi. 0—1—0 ; vii. அறந்தாங்கியில் கோயில் கொண்டிருக்கும் ஆறுமுகனைத் துதிக்கும் தோத்திர மாலை. நாடியே அறந்தாங்கி தேடியே விளையாடும் நாதனே சுப்பிரமணியம்' என்னும் முடிவைப் பெற்று இப்பதிகப் பாடல்கள் அமைந்துள. பதிகத்தை அடுத்துச் சிந்துப்பாடல் ஒன்றும் அமைந்துள்ளது. viii. 481/1916/I.

O31,1

1763. i. வீரவாகு தேவர் பதிகம்: முதற் பதிப்பு ; ii. த. சு அப்பாவு பிள்ளை, தவத்துறை ; அழகர் விலாஸ அச்சுக் கூடம் திருவாதி ; iii. செப்டெம்பர், 1920 ; iv. உ. ப. 12. v 19×11 செ.மீ. ; vi. 0-1-0 ; vii. வீரவாகு தேவரைப் போற்றிப் பாடப்பெற்ற வீரவாகு தேவர் பதிகமும், நவ வீரரைப் புகழ்ந்து பாடப்பெற்ற பதிகமும் இதன்கண் உள்ளன. viii. 931/1920/III.

O31,1

வீராசாமிப் பிள்ளை, கே., திண்டுக்கல் & வெங்கடாசலம் பிள்ளை பி.எம்., திண்டுக்கல்

1764. i. அபிராமி அம்மன் பதிகம் (பஞ்சரத்னப் பாமாலை) ; ii. கே. வீராசாமிப் பிள்ளை, திண்டுக்கல் ; அபிராமி விலாசம் பிரஸ், திண்டுக்கல் ; iii. டிசம்பர், 1916 ; iv. செ.மூ.எ. 11 ; v. 16×11 செ.மீ. ; vi. 0-0-6 ; vii. திண்டுக்கல்லில் விளங்கும் அபிராமி அம்மனைக் குறித்துப் பாடப்பெற்ற பக்திப் பாடல்கள் கொண்டது. திண்டுக்கல் 'பிளீடர்' வெங்குஸாமி ஐயரவர்கள் இயற்றிய சாத்துக்கவி இதில் உள்ளது. 'அருண் ஞான முதல்வியே யணி திண்டி நகர் மேவும் அபிராமியம்மை உமையே' என்னும் விளியைப் பாடல்களின் மகுடமாகப் பெற்றுள்ளது இப்பதிகம். இங்கே திண்டி நகர் என்பது திண்டுக்கல் நகரைக் குறிப்பிடுவதாகும். viii. 327/1917/I.

O31,1

வெள்ளையாண்டிப் பிள்ளை, போடிநாயக்கனூர்

1765. i. பரங்கிரிப் பதிகம்: முதற் பதிப்பு ; ii. எச். எஸ். ரகமதுல்லா சாகிப், போடிநாயக்கனூர் ; ஹக்கீம் பிரஸ், போடிநாயக்கனூர் ; iii. நவம்பர், 1916 ; iv. செ. மூ. எ. 14 ; v. 18×14 செ.மீ. ; vi. 0-2-0 ; vii. திருப்பரங்குன்றம் சுப்பிரமணியக் கடவுளைக் குறித்துப் பாடப்பெற்ற தோத்திரப் பாக்கள் கொண்டது இந்நூல். "திருப்பரங்குன்றிலுறை தேசிகா மெஞ்ஞான சிவ சுப்ரமண்ய தேவே" என்பதனை மகுடமாகக்கொண்டு அமைந்துள்ளன இப்பதிகப் பாடல்கள். இதனை அச்சிடப் பொருளுதவியவர் போடிநாயக்கனூர் ஜமீன்தாரிணி காமுலம்மாள் ஆவர். போடிநாயக்கனூர் கே. பாலசுப்பிரமணிய பாரதி, கு. அண்ணாமலைப் பிள்ளை முதலியோர் பாடிய சாற்றுக் கவிகள் நூலின் தொடக்கத்திலும் இறுதியிலுமாகத் தரப்பட்டுள்ளன. viii. 143/1917/I.

O31,1

வேங்கட சுப்புப் பிள்ளை, அரன்வாயில்

i. சித்தநாத சுவாமிகள் தோத்திரப்பா (தொ. எ. 1766 பார்க்க) ; ii. சி. முத்துசாமி உபாத்தியாயர், பசும்பலூர் ; ஸ்ரீகுஞ்சித சரண அச்சுக்கூடம், சிதம்பரம் ; iii. 1915 ; iv. செ.மூ.எ. 10 ; v. 14×11 செ.மீ. ; vi. 0-1-0 ; vii. கூகையூரில் தவசிரேஷ்டராய் விளங்கிய வீர சைவப் பெரியார் சித்தநாதரைப் பற்றிய துதிநூல். viii 20/1916/I.

O31,1

வேங்கட சுப்புப் பிள்ளை முதலியோர்

1766. i. சித்தநாத சுவாமிகளின் திருப்பதிகங்களும் திவ்ய சரிதமும்: முதற் பதிப்பு; ii. சி. முத்துசாமி உபாத்தியாயர் பசும்பலூர் & முத்துசாமி உடையார், பாதாங்கி; ஸ்ரீ குஞ்சித சரண அச்சுக்கூடம், சிதம்பரம்; iii. 1915; iv. செ.மூ.எ. 10+10+16; v. 14×11 செ.மீ.; vi. 0—1—0; vii. கூகையூர் சித்தநாத சுவாமிகளின் பேரில் தோத்திரப் பதிகமும் அவருடைய வாழ்க்கை வரலாறும் அடங்கியுள்ளன. அரன் வாயில் வேங்கட சுப்புப் பிள்ளை, சப்தகூடல் வைத்தியலிங்க அய்யர், பசும்பலூர் சி. முத்துசாமி உபாத்தியாயர் ஆகியோர் பாடிய பதிகங்கள் இதில் உள்ளன. சுவாமிகளின் வாழ்க்கை வரலாறு உரைநடையில் உள்ளது. விநாயகர் சோடசக் குறள் வெண்பா என்னும் நூல் இறுதியில் உள்ளது. viii. 20/1916/I.

031,1

1767 **வேம்புலியம்மன் பேரில் பதிகம்**: i. முதற்பதிப்பு. ii. பகடால முனிரத்தினம் நாயுடு, இராயவேலூர்; கிருஷ்ண விலாச அச்சுக்கூடம், இராயா வேலூர்: iii நவம்பர், 1916; iv. செ. மூ. எ. 10; v. 14×12 செ. மீ.; vi. 0-0-3; vii. சுப்பிரமணிய சுவாமிகள் பேரில் பாடப்பெற்ற பதிகப் பாடல்களைக் கொண்டது இப்புத்தகமாகும். வேம்புலி மகமாயின் மகிமையைப் பேசுகிறது. viii. 779/1916/IV.

031,1

வேல்ச்சாமி கவிராயர், எம்.ஆர்.எஸ்., பழ.

1768. i. தோத்திரப் பிரபந்தம்: முதற் பதிப்பு; ii. பெ.மு. முத்து வயிரவ பிள்ளை; அஷ்டலக்ஷ்மி விலாசம் பிரஸ், மதுரை: iii. ஏப்ரல், 1918; iv. செ. மூ. எ. 7+20; v. 21×14 செ. மீ.; vi. ....; vii. காராள வம்ச பரம்பரைப் பக்திமான்களுக்குக் காரணக் கொண்டாட்டமாகிய திருவையாற்றுச் சமீபம் எழுந்தருளிய இஷ்ட குல தெய்வப் பிரயத்தனமாகிய வரந்தற் பாசுரசேகரம், உதிய மரக் கருப்பணசாமி பதிகம், கரைமேல் அழகர் சுவாமி பதிகம், மதுரை வீரசாமி பதிகம் ஆகியன இதன்கண் உள்ளன. viii. 421/1918/II.

031,1

வேலாயுதம் பிள்ளை, பி.

i. கற்பாத்தி லக்ஷ்மி நாராயணர் பதிகம் (தொ. எ. 608 பார்க்க); ii. ஆர். பஸவைய்ய நாய்க்கர், பாலக்காடு; வித்ய சந்தானம் அச்சியந்திர சாலை, பாலக்காடு; iii. 1913;

iv. செ. மூ. எ. 10; vii. கற்பாத்தியில் கோயில் கொண்டுள்ள இலக்குமிநாராயணர் மேல் பாடப் பெற்ற பத்து ஆசிரிய விருத்தங்களைத்தன்பால் கொண்டது இப்பதிகம். viii. 604/1918/IV.

O31,1

i. கற்பாத்தி விஸ்வநாதர் பதிகம் (தொ. எ. 607 பார்க்க); ii. பஸவைய நாய்க்கர், பாலக்காடு; வித்யா சந்தானம் அச்சியந்திரசாலை, பாலக்காடு; iii. 1918; iv. செ. மூ. எ. 10; v.........; vi..........; vii. பாலக்காட்டுக் கருகில் உள்ள கற்பாத்தியில் எழுந்தருளியிருக்கும் விஸ்வநாதப் பெருமானைப் பற்றிப் பாடப் பெற்ற பத்து திருவிருத்தங்களையுடையது இப்பதிகம். viii. 604/1918/IV.

O31,1

i பழனித் தண்டபாணி பதிகம் (தொ. எ. 607 பார்க்க); ii. ஆர். பஸவைய நாய்க்கர், பாலக்காடு; வித்யா சந்தானம் அச்சியந்திரசாலை, பாலக்காடு; iii. 1918; iv. செ. மூ. எ 10; v.........; vi ....; vii. தென் பழனியில் கோயில் கொண்டெழுந் தருளியுள்ள முருகப்பெருமான் திருவருளை வேண்டிப் பாடப்பெற்ற பதினொரு பாடல்களைக் கொண்டது இப்பதிகம். viii. 604/1918/IV.

O31,1

வைகுண்டராம, மூப்பனார், பெ.

i. சுந்தர மகாலிங்க சுவாமி பதிகம் (தொ. எ. 1558 பார்க்க ii. த. குப்புசாமி நாயுடு, மதுரை; ஸ்ரீராமச்சந்திர விலாசம் அச்சியந்திர சாலை, மதுரை; iii. செப்டம்பர், 1917; iv. செ மூ. எ. 10; v.........; vi.........; vii. இதில் சதுரகிரி சுந்தர மகாலிங்க சுவாமியைப் போற்றி எழுதப் பெற்ற பாடல்கள் அடங்கியுள்ளன. 'துங்கசதுரங்கிரியி லங்கிவளர் தங்கமே சுந்தர மகாலிங்கமே' என இப்பதிகப் பாடல்கள் முடிவுறுகின்றன. viii. 29/1917/IV.

O31,1

வைத்தியலிங்க அய்யர், சாத்துக்குடல் என்னும் சப்தகூடல்

i. சித்தநாத சுவாமிகள் திருவிருத்தம் (தொ. எ. 1766 பார்க்க); ii. சி. முத்துசாமி உபாத்தியாயர், பசும்பலூர்; ஸ்ரீ குஞ்சித சரண அச்சுக்கூடம், சிதம்பரம்; iii. 1915; iv. செ. மூ. எ. 10; v. 14×11 செ. மீ.; vi. 0–1–0; vii. இதற்குக் குகையூர் சித்தநாதர் பதிகம் என்றும் பெயர் உண்டு. "திசைபுகழ் குகையூரிசை பெறமருவும் சித்தநாதாநந்த தேசிகனே" என்னும் மகுடத்தைக் கொண்டு ஒவ்வொரு பாடலும் முடிவுறுகின்றது. ஆசிரியவிருத்தத்தால் ஆகியது இப்பதிகம். viii. 20/1916/I.

O31,1

ஜிவகாருண்ணியம் பிள்ளை, எஸ்.

1769. i. பெருமுளை ஸ்ரீ சுப்பிரமணிய கடவுளாகிய முத்தையர் பேரில் பதிகம் ; ii. ஸ்ரீகுஞ்சித சரண அச்சுக்கூடம், சிதம்பரம் ; iii. 1917 ; iv. செ. மூ.எ. 1+ 10+1 ; v. 13×11 செ. மீ. ; vi. 0–1–0 ; vii. பெருமுளை என்னும் ஊரில் விளங்கும் சுப்பிரமணியக் கடவுளைக் குறித்த தோத்திரம். 'பெருமுளை முத்தையர் பேரில் பதிகம்' என்றும் இது கூறப்படும். இறுதியில் உள்ள வாழ்த்துப் பாடலில் "வாழி ஜார்ஜ் மஹிபரும் வாழியே" என மன்னருக்கும் வாழ்த்துக் கூறியுள்ளார். viii. 859/1917/III.

O31,1

ஷண்முக ஐயர், மா.

1770. i. கடலங்குடி ஸ்ரீ மாரியம்மன் பதிகம் ; ii. அப்புப் பிள்ளை, சிதம்பரம் ; விநாயக சுந்தர விலாச அச்சுக்கூடம், சிதம்பரம் ; iii. எப்ரல், 1917 ; iv. செ. மூ. எ. 5+10 ; v. 14×11 செ. மீ. ; vi. .... ; vii. கடலங்குடியில் விளங்கும் மாரியம்மனைக் குறித்துப் பாடப் பெற்ற பதிகப் பாடல்கள். 'கன்னியே சகலர்க்கு மன்னையே மீனன்ன கண்ணி மகமாரி யுமையே' என இப்பதிகப் பாடல்கள் முடிவுறுகின்றன. சிதம்பரம் ஷண்முக சுவாமிகள் என்பாரும் அரசங்குடி அப்பாவு பிள்ளை என்பாரும் இதற்குச் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளனர். viii. 747 / 1917 / II.

O31,1

ஷண்முகானந்த சுவாமிகள்

1771. i. ஸ்ரீகாழிக் கவுணியின் பதிகமும் உயிர் வருக்க நாமாவளியும் பிறவும் : முதற் பதிப்பு ; ii. கலைக்கியானம் பிரஸ் சென்னை ; iii. மே, 1917 ; iv. செ. மூ. ப. 8 ; v. 22×14 செ. மீ. ; vi. இலவசம் ; vii. சைவப் பெரியாரான திருஞானசம்பந்தரைப் போற்றி எழுதப்பெற்ற பாடல்கள் அடங்கியது. இதில் ஸ்ரீகாழிக் கவுணியின் பதிகமும் உயிர்வருக்க மாலையும் நாமாவளியும் பிறவும் அடங்கியுள்ளன. viii. 673/1917/III.

O31, 1

பள்ளு

இராமநாதன் கவிராயர், ஆழ்வார்குறிச்சி

1772. i. சிவசயிலப்பள்ளு : முதற்பதிப்பு ; ii. சிவசயில முதலியார். மேலப்பண்ணை ; பாளையங்கோட்டை பிரிண்டிங் பிரஸ், பாளையங்கோட்டை ; iii. நவம்பர், 1918 ; iv. செ. மூ. எ. 107 ; v. 12×10 செ. மீ. ; vi. 0–4–0 ; vii. தமிழுக்குரியனவாகச் சொல்லப்படுகின்ற தொண்ணூற்ருறு வகைப் பிரபந்தங்களுள் இது (பள்ளு) 'உழத்திப்பாட்டு', என்ற வகையைச் சார்ந்தது.

சிவசயிலநாத சுவாமியினைப் போற்றிப் புகழும் பாடல்களை உடையது. முக்கூடற் பள்ளினைப் போல இதன் கண்ணும் இனிய கவிநயம் அமைந்துள்ளது. இவ்வாசிரியர் 200 வருடங்களுக்கு முன்பு வாழ்ந்தவர் என்று முன்னுரையில் கூறப்பட்டிருக்கிறது. இந்நூலுள் ஆறை. அழகப்ப முதலியாரைச் சிறப்பித்துக் கவி பாடியுள்ளார் இவர். திருவாங்கூர் மன்னர் மார்த்தாண்டவர்மா காலத்து வாழ்ந்து அரசியல் தொடர்பு கொண்டவர். ஏட்டுப் பிரதியைச் சோதிக்கும் போது திருநெல்வேலி வக்கீல் வையாபுரிப் பிள்ளையும் பதிப்பாசிரியருக்கு உடனிருந்து உதவியதாகத் தெரியவருகிறது. viii. 783/1918/IV.

O31, 1

கடிகை முத்துப் புலவர்

i. வடகரைத் துரையவர்கள் பேரில் பட்பிரபந்தம் (தொ. எ. 2465 பார்க்க) ; ii. பி. சி. சி. பாண்டியன் அண்டு பி. வி. சி. பாண்டியன் ; தமிழ்ச் சங்கம் பவர் பிரஸ், மதுரை ; iii. 1916 ; iv. செ. மூ. ப. 37 ; v ....; vi....; vii. குற்றாலலிங்க சுவாமி கோவில் தூணிலுள்ள கற்சிலையிரண்டில் ஒருவரான வடகரைத் துரையவர்கள் பேரில் பாடப்பெற்ற பட்பிரபந்தம். நாட்டுவளம் முதலிய கூறுவதுடன், பள்ளன், பள்ளியர் வாழ்க்கையையும் சித்தரிப்பது. viii. 49/1916/II.

O31,1

பாவைப் பாட்டு

அவிரோதி நாதர்

1773. i. திருவெம்பாவை. முதற் பதிப்பு ; ii. சக்கரவர்த்தி நயினார், மேல்மின்னல் ; தருமசீலன் அச்சுக்கூடம், சென்னை ; iii. ஆகஸ்ட், 1920 ; iv. உ.ப. 13 ; v. 16×13 செ. மீ. ; vi. 0–1–6 ; vii. இறைவனைப் புகழ்ந்து பாடப்பெற்ற பாடல்களைக் கொண்டது திருவெம்பாவை. நூலின் இறுதியில் கடினமான வார்த்தைகளுக்குப் பொருள் விளக்கம் உள்ளது. மணிவாசகரின் திருவெம்பாவை போலவே இதுவும் இருபது பாடல்களைக் கொண்டுள்ளதோடு அமைப்பு முறையிலும் பெரிதும் ஒப்புமை உடையது. viii. 386/1920/IV.

O31, 1

பிள்ளைத் தமிழ்

அரிகரமையர், அம்பாசமுத்திரம்

1774. i. குமாரக் கடவுள். பிள்ளைத் தமிழ் : முதற் பதிப்பு ; ii. அரிகரமையர், அம்பாசமுத்திரம் ; லாலி எலக்டிரிக் அச்சுக்கூடம், தஞ்சாவூர் ; iii. 1915 ; iv. செ. மூ. எ. 100

v. 22×14 செ. மீ. ; vi. . . . .; vii. அரிகேச நல்லூ ரென்ற அரிகையில் பஜன மடாலயத்திலெழுந்தருளி விளங்கும் குமாரக் கடவுள் மீது பாடப்பெற்ற பிள்ளைத்தமிழ். "அரிகை பசன மடாலயத்து குமாரக் கடவுள் பிள்ளைத்தமிழ்" எனவும் இது வழங்கப்படும்; viii. 510/1916/II.

O31,1

இராமநாதப் பிள்ளை, சாணுங்குப்பம்

1775. i. திருத்துருவமலை முருகன் பிள்ளைத் தமிழ் : முதற் பதிப்பு ; ii. மு. சுந்தர முதலியார், ஆரணி ; சுந்தர விநாயகர் அச்சுக்கூடம், வேலூர் ; iii. பிப்ரவரி, 1920 ; iv. உ.ப.+செ.மூ.ப. 30 ; v. 21×14 செ. மீ. ; vi. 0–2–0 ; vii. கைலாசகிரி என வழங்கிவரும் திருத்துருவ மலையில் விளங்கும் முருகனைப்பற்றிய பிள்ளைத் தமிழ். திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் மடாலயத்து சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகள், ஆரணி சாகீர் காமக்கூர் தமிழ்ப் பண்டிதர் சுந்தர முதலியார் முதலியோர் இந்நூற்குச் சாத்துக் கவிகள் தந்துள்ளனர். இது தெள்ளிய இனிய எளிய நடை யினையுடையது. viii. 633/1920/I.

O31,1

கைலாசநாத கவிராயர்

i. வடகரைப் பெரிய சாமித்துரையவர்கள் பேரில் பிள்ளைத் தமிழ் (தொ. எ. 2465 பார்க்க) ; ii. பி.சி.சி. பாண்டியன் & பி.வி.சி. பாண்டியன் ; தமிழ்ச்சங்கம் பவர் பிரஸ், மதுரை ; iii. 1916; iv. செ.மூ.ப. 15; v. . . . ;vi. . . . ;vii. பெரியசாமித்துரையவர் களின் குழந்தைப் பருவத்தையும் விளக்குவது. காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபாறை, சிறு தேர் என்னும் பத்துப் பருவங்களுக்கும் ஐந்தைந்து பாடல்கள் வீதம் 50 பாடல் களைக் கொண்டது இந்தப் பிள்ளைத் தமிழ் நூல். viii. 49/1916/II.

O31, 1

சாமி கவி காளருத்திரர்

1776. i. திருமாலிருஞ்சோலை அழகர் பிள்ளைத் தமிழ் : முதற் பதிப்பு ; ii. நாராயணையங்கார், மதுரை ; தமிழ்ச் சங்க முத்திராசாலை, மதுரை ; iii. ஜூன், 1919 ; iv. செ.மூ.ப. 72 ; v. 22×15 செ. மீ. ; vi. 0–8–0 ; vii. திருமாலிருஞ்சோலை மலையில் விளங்கும் அழகரைப் பற்றிய பிள்ளைத் தமிழ் இதில் அடங்கியுள்ளது. இறைவனைக் குழந்தையாகக் கற்பனை செய்து பத்துப் பருவங்கள் அமையப் பாடுவது பிள்ளைத் தமிழாகும். இந்நூலின் பாயிரச் செய்யுளில் 'வள்ளைத் தமிழ் கூர்வேம்பத் தூர் வருமாண் புலவோர் வகுத்தது' என வருதலால் இவர் வேம்பத்தூரைச் சார்ந்தவர் எனக் கொள்வர். viii. 921/1919/II

O31,1

சோணாசல பாரதி, காஞ்சிபுரம்

1777. i. திருவருணை உண்ணாமுலையம்மை பிள்ளைத் தமிழ் : முதற் பதிப்பு ; ii. கன்னியப்ப முதலியார், காஞ்சிபுரம் ; பெருந்தேவி விலாச அச்சுக்கூடம், காஞ்சிபுரம் ; iii. டிசம்பர், 1919 ; iv. செ. மூ. எ. 1+101+1 ; v. 21×14 செ. மீ. ; vi. இலவசம்; vii. திருவண்ணாமலையில் எழுந்தருளியுள்ள உண்ணாமுலையம்மையைப் புகழ்ந்து பாடப்பெற்ற பாடல்களைக் கொண்டது இந்நூல். பிள்ளைத் தமிழ்ப் பிரபந்த இயல்புகளை மேற்கொண்டு பக்திரசம் துளும்பப் பாடப்பெற்ற நூல். பெண்பாற் பிள்ளைக் கவிக்கு ஏற்ப அம்மானை, நீராடல், ஊசல் என்னும் பருவங்கள் தரப்பட்டுள்ளன. viii. 978/1919/IV.

O31,1

மீரான்சாகிப் புலவர்

1778. i. பாத்திமா நாயகம் பிள்ளைத் தமிழ் : முதற் பதிப்பு ; ii. பாவாமுகியத்தீன் பாவலர், மேலச்செவல் ; நூருல் இஸ்லாம் பிரஸ், திருநெல்வேலி ; iii. ஜூன், 1920 , iv. செ. மூ. எ. 40+6+7+10 ; v. 22×15 செ.மீ.; ; vi. 0–6–0 ; vii. முகமதியப் பெரியாரான பாத்திமா நாயகத்தினைப் போற்றி எழுதப் பெற்ற பிள்ளைத் தமிழ் இந்நூல். பெண்பாற் பிள்ளைத்தமிழாகிய இதில் அம்மானை, நீராடல்; ஊசல் என்னும் பருவங்கள் சேர்த்துப் பாடப்பட்டுள்ளன. இந்நூலாசிரியரின் போதகாசிரியர் செவல் தலைமைப் புலவர், வெண்பாப்புலி பாவா முகியத்தீன் பாவலர், நாகூர் தர்க்கா மகாவித்வான் குலாம் காதிறு நாவலரின் மாணாக்கர் தர்கா பிரசங்கி க. காதிறு முகியித்தீன் சாகிபு முதலியோர் இந்நூலுக்குச் சாத்துக் கவிகள் தந்துள்ளனர். viii. 785/1920/II.

O31,1

1779. i. றசூல் நாயகப் பிள்ளைத்தமிழ் என்னும் புகழுதயப் புஞ்சம் முதற் பதிப்பு ; ii. பாவா முகயத்தீன் பாவலர், மேலசெவல் ; ஸ்ரீபத்மநாப விலாச அச்சுக்கூடம், சென்னை: ii. டிசம்பர், 1918 ; iv. செ. மூ. ப. 66 ; v. 22×14 செ. மீ. ; vi. 0–4–0 ; vii. எல்லா உலகங்களையும் படைத்து அரசாளுகின்ற ஏகவல்லவனாகிய அல்லாஹுசுபுகானஹுத்தாலாவின் கருணைத் தோழராகிய நபிகள் நாயகத்தின் மீது புகழ்ந்து பாடப் பெற்ற பாமாலையாகும். பிள்ளைத் தமிழ் மரபுப்படி பத்துப் பருவங்களாக அமைத்துப் பாடியுள்ளார். நபிநாயகத்தின் பேரில் பதங்களும் பல உள. இறை புகழ்ச்சியாகப் பாடிய கீர்த்தனைப் பாடற் பகுதிக்கு "புகழுதயப் புஞ்சம்" என்பது பெயர். இசைப் பாடல்களுக்கு இராக தாளக் குறிப்புகளும் உள. கோட்டாறு மகா வித்துவான் சதாவதானி கா. பா. செய்குதம்பிப் பாவலரும் இன்னும் பலரும் பாடிய சாத்துக் கவிகளையும் இதன்கண் காணலாம். viii. 909/1918/IV.

O31,1

வேதமாணிக்கம், ச., சென்னை

1780. i. நாரேசர் பிள்ளைத் தமிழ் : முதற் பதிப்பு ; ii. ச. வேத மாணிக்கம், சென்னை ; அமெரிக்கன் டைமெண்ட் அச்சுக்கூடம், சென்னை ; iii. மே, 1919 ; iv. செ.மூ.ப. 101 ; v. 17×11 செ. மீ. ; vi. 0-8-0 ; vii. ஏசு கிருத்துவைப் போற்றிப் பாடப் பெற்ற பிள்ளைத் தமிழ் இந்நூலில் அடங்கி யுள்ளது. கத்தோலிக்கு மதாசாரத்துக்கு ஒத்த வண்ணம் பாடப் பெற்றது. பிள்ளைத் தமிழுக்குரிய இலக்கண வரம்பை மட்டும் மேற்கொண்டு, கத்தோலிக்கு மத பிரார்த்தனை, செபம். சரித்திரம், மகிமை, அற்புதம் முதலியவைகளையே பெரும் பாலும் அமைத்துப் பாடியுள்ளார். நூலாசிரியர் தம் முகவுரையில் தாம் பாடமுற்பட்ட காரணத்தை விளக்கி யுள்ளார். பாடல்கள் ஆற்றொழுக்காய், சந்தநயம் வாய்ந்து பொருட்பொலிவுடன் உள்ளன. viii. 215/1919/III.

O31,1

வேலு தேசிகர், பா.திருக்கச்சூர்

1781. i. சுந்தரமூர்த்தி சுவாமிகள் பிள்ளைத் தமிழ் : முதற் பதிப்பு ; ii. பா. வேலுதேசிகர், திருக்கச்சூர் ; ஞான சம்பந்தர் அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1916 ; iv. செ. மூ. எ. 1+100 ; v. 21×14 செ.மீ. ; vi. 0-2-0 ; vii. ஸ்ரீசுந்தர மூர்த்தி சுவாமிகளின்மீது பாடப்பெற்ற தோத்திர நூல். இது பிள்ளைத் தமிழ் என்னும் பிரபந்த முறைப்படி அமைந்துள்ளது. காப்பு முதல் சிறுதேர் ஈறுகப் பத்துப் பருவங்கள் கொண்டது. அஷ்டாவதானம் கலியாணசுந்தர யதீந்திரரும், இவருடையவும் சுவாமி வேதாசலம் அவர்களு டைய மாணவருமான மணி. திருநாவுக்கரசு முதலியாரும் இதற்குச் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளனர். viii. 516/1916/III.

O31,1

புலம்பல்

பத்திரகிரியார்

i. பத்திரகிரியார் புலம்பல் (தொ. எ. 7 பார்க்க) ; ii. வா. சரவணமுத்துப் பிள்ளை & கே. பெ. சிங்காரவேலு முதலியார் ; ஸன் ஆப் இந்தியா அச்சுக் கூடம், சென்னை ; iii. 1917 ; iv. செ.மூ.எ. 232; v. . . . .;vi. . . . .; vii. இதில் பத்திரகிரியார் சரித்திரம் உரைநடையில் முதலில் தரப்பட்டுள்ளது, பின்னர், அவர் பாடிய பத்திரகிரியார் புலம்பல் என்பது கொடுக்கப் பெற்றுள்ளது. இதில் 232 கண்ணிகள் உள. ஒவ்வொன்றும் 'எக்காலம்' என முடிந்து, ஞானப் பேற்றில் ஆசிரியர் கொண்ட பெரு வேட்கையை உணர்த்துவதாயுள்ளது. viii. 445/1917/I.

O31, 1

மஞ்சரி

கடிகை முத்துப் புலவர்

i. சந்திரகலா மஞ்சரி (தொ.எ. 2465 பார்க்க) ;ii. பி.சி. பாண்டியன் & பி. வி. சி. பாண்டியன் ; தமிழ்ச் சங்கம் பவர் பிரஸ், மதுரை ; iii. 1916 ; iv. செ. மூ. ப 22 ;v....;vi....;vii.குற்றாலலிங்க சுவாமி கோவில் கொடிக்கம்பத்துக்கு அருகே நாட்டியிருக்கிற தூணிலுள்ள கற்சிலையிரண்டில் மூத்தவராகிய வடகரை ஜமீன்தார் பெரியசாமி செம்புலிச் சின்னணைஞ்சாத் துரையவர்கள் புத்திரி பூத்தாய் என்றவளின் மாப்பிள்ளை பெரியசாமித் தேவரவர்கள் பேரில் பாடியவை. viii. 49/1916/II.

O31,1

மும்மணிக்கோவை

இராமலிங்கம் பிள்ளை, ஏ. டி., தலைவன்கோட்டை

1782. i திருசெந்தூர் மும்மணிக் கோவை : இரண்டாம் பதிப்பு ; ii. கோமதிவிலாசம் பிரஸ், தென்காசி ; iii. 1917 ; iv. செ. மூ. எ. 4+1+30 ; v. 10×14 செ.மீ. ; vi. .. .... ; vii. இந்நூல் 1904 ஆம் வருடம் உறையூர் சைவசித்தாந்த சபையாரால் முதன் முறை பதிப்பிக்கப்பெற்றது. இப்பதிப்பிற்குப் பூவை. கலியாணசுந்தர முதலியார் சாத்துக் கவிகள் பாடியருளினர். இந்த இரண்டாம் பதிப்பில் ஊற்றுமலைச் சமஸ்தான வித்துவான் கோட்டையூர் சு. கந்தசாமி புலவர் பாடிய சாற்றுக்கவி மட்டும் உள்ளது. திருசெந்தூர் முருகப் பெருமானைத் துதித்துப் பல்வேறு சிறப்புக்களையும் கூறுகிறது. நிலை மண்டில ஆசிரியப்பா, நேரிசை வெண்பா, கட்டளைக் கலித்துறை இவை மூன்றும் மாறி மாறி வர முப்பது பாடல்கள் கொண்ட அந்தாதியாக உள்ளது இப்பிரபந்தம். viii. 981/1917/III.

O31,1

சந்திரசேகர நாயகர், ந, கலியமலை

1783. i. திருவேங்கட மும்மணிக் கோவை : முதற் பதிப்பு ; ii. எ. பி. கோவிந்தசாமி படையாச்சி, சிதம்பரம் ; விநாயக சுந்தர விலாசம் பிரஸ், சிதம்பரம் ; iii. பிப்ரவரி, 1917 ; iv. செ. மூ. ப. 21 ; v. 21×14 செ.மீ. ; vi. .... ; vii. இந்நூல் திருவேங்கடத்துத் திகழும் வெங்கடேசப் பெருமாளைக் குறித்துப் புகழ்ந்து பாடப்பெற்றது. புவனகிரி அழகிய மணவாள ராமானுஜ ஏகாங்கி சுவாமிகள் முதலியோர் இயற்றிய சிறப்புப் பாயிரங்கள் இதில் உண்டு. இது அகவல், வெண்பா, கலித்துறை என வரும் மூன்று வகைப்பாடல்களாலும் ஆன அந்தாதித் தொடை பிரபந்தம். viii. 907/1917/I.

O31,1

சொக்கலிங்க செட்டியார், ராம. சொ., காரைக்குடி

1784. i. முத்தல நாயக மும்மணிக் கோவை: முதற் பதிப்பு; ii. ராம. சொ. சொக்கலிங்க செட்டியார், காரைக்குடி; எஸ்டேட் பிரஸ், தேவகோட்டை; iii. 1920; iv. செ. மூ. ப. 37; v. 17×13 செ.மீ.; vi. இலவசம்; vii. கடம்பந்துறை, இரத்தினகிரி, ஈங்கோய் மலை ஆகிய மூன்று தலங்களில் விளங்கும் சிவனைப் போற்றி எழுதப்பெற்ற தோத்திரப் பாடல்கள் இதில் அடங்கியுள்ளன. மும்மணிக் கோவை என்பது ஆசிரியப்பா, வெண்பா, கட்டளைக் கலித்துறை ஆகியவை முறையே வர முப்பது பாடல்களைக் கொண்டமைந்த நூலெனப் பொருள்படும். தேவகோட்டை வெ. ஆ.தி. மா. சிதம்பரஞ் செட்டியார் மேற்படியூர் பழ. அ. வேங்கடாசலச் செட்டியார் ஆகியோர்இந்நூலுக்குச் சாத்துக்கவிகள் தந்துள்ளனர். திருவீங்கோய் நாதர் பதிகம் ஒன்றும் நூலிறுதியில் உளது. viii. 12/1920/III.
O31,1

மும்மணிமாலை

இராமஸாமி அய்யர்

1785. i. கானாடுகாத்தநகர் ஸௌந்தரநாயகியம்மன் பேரில் மும்மணி மாலை: முதற் பதிப்பு; ii. இராமஸாமி அய்யர், காரைக்குடி; வைசியமித்திரன் பிரஸ், காரைக்குடி; iii. ஜனவரி, 1918; iv. செ. மூ. ஏ. 1+25+1; v. 16×12 செ.மீ.; vi. இலவசம்; vii. கானாடு காத்தன் என்ற ஊரில் கோயில் கொண்டுள்ள ஸௌந்தரநாயகியம்மன் பேரில் பாடப் பெற்ற வெண்பா, கலித்துறை, ஆசிரியம் ஆகியவையாக மூன்று பாமாலை மண்டலித்து வர அந்தாதியாக அமைந்தது இந் நூல். நூலிறுதியில் இரண்டு கீர்த்தனைக் கவிதைகளும் உள. 'குஞ்சரமலை' 'திருநெல்லிக் காவற் பதிகம்' என்பன இந்நூலாசிரியர் பாடிய வேறு நூல்களாம். மழவாபுரிச் சிதம்பரமய்யரும், வேம்பத்தூர் சங்க வித்துவான் மகா தேவய்யர் முதலியோரும் இதற்குச் சாத்துக் கவிகள் பாடியுள்ளனர். viii. 679/1919/I.

O31,1

குப்புச்சாமி ஐயர், சி., இராஜமன்னார்குடி

1786. i. இராஜ மன்னார்குடி விநாயகர் மும்மணி மாலை; ii. சம்பக லெக்ஷுமி விலாச அச்சுக் கூடம், மன்னார்குடி; iii. ஜனவரி, 1918; iv. செ. மூ. ஏ. 30; v. 21×14 செ. மீ.; vi. ......; vii. ராஜ மன்னார்குடியில் கோயில் கொண்டுள்ள ஒற்றைத் தெரு விநாயகர் மீது பாடப் பெற்ற பக்திப் பாடல்களைக் கொண்டது இந்நூல். வெண்பா, கலித்துறை, அகவல் என்னும் மூன்று பாடல்கள் மண்டலித்து வர அந்தாதியாக அமைந்த

பிரபந்தமாகும். 'செண்பகாரண்யம் என்னும் இராஜமன்னார் குடி ஒற்றைத் தெரு விநாயகர் மும்மணிமாலை' என்பது இதன் முழுப் பெயர். viii. 736/1919/I.

O31,1

சுப்ரமண்யச் செட்டியார், சி.

1787. i. பாலானந்தவப்பர் சற்குரு மும்மணிமாலை ; ii. சு. அர்த்தனாரீச வர்மா ; சௌராஷ்டிரா அச்சியந்திரசாலை, சேலம் ; iii. ஜனவரி, 1917 ; iv. செ. மூ. ப. 14 ; v. 14×12 செ.மீ.; vi. .... ; vii. சைவ குருவாகிய பாலானந்தவப்பர் என்பவர்மீது பாடப்பெற்றபக்திப் பாடல்கள் அடங்கியது. சேலம் சுகவனம் தமிழ் வித்வான் சு. அர்த்தனாரீச வர்மா முதலியோர் சாற்றுக் கவிகள் பாடியுள்ளனர். viii. 206/1917/I.

O31,1

லாவணி

முருகேசன், ஏ.எஸ்., சென்னை

1788. i. சிங்கார லாவணி, சிந்து: முதற் பதிப்பு ; ii. ஏ.எஸ். முருகேசன், சென்னை ; சுப்பிரமணிய விலாஸ பிரஸ், சென்னை ; iii. ஜூலை, 1919 ; iv. செ. மூ. எ. 23 ; v. 21×14 செ.மீ. ; vi. 0–0–6 ; vii. பெங்களூரைச் சேர்ந்த பன்னேரி கட்டா திருவிழா வழி நடை, சிங்கார லாவணி, சிந்து' என்பது இந்நூலின் முழுப் பெயர். விநாயகர் துதியில் ஆசிரியர் "பாடினேன் சென்னை பாலன் முருகேசன் நாடினேன் உந்தனடி தான்" என்று குறிப்பிடுகின்றார். 'காமரசக் குயிலெ' யென்ற லாவணி வர்ண மெட்டில் முதற் பாடல் உளது. பின்னர், ஆண், பெண் இருவரும் சொல் தெம்மாங்கு, காவடிச் சிந்து மெட்டுப் பாடல், நொண்டிச் சிந்து, கும்மிப் பாடல் ஆகியவைகளும் உள. ஆதலால் இது இசைப் பாடற் கலம்பகமாகும். viii. 861/1919/IV.

O31,1

வண்ணம்

1789. i. **வண்ணம்** (தொ. எ. 2465 பார்க்க) ; ii. பி. சி. சி. பாண்டியன் & பி.வி.சி. பாண்டியன் ; தமிழ்ச் சங்கம் பவர் பிரஸ், மதுரை ; iii. 1916; iv. செ. மூ. ப. 3 ; v....... ; vi....... ; vii. இதுகளியர் பாட்டாக உளது. இறுதியில் வரும் தொங்கல் விருத்தத்தாலும் இது புலப்படும். viii. 49/1916/II.

O31,1

வர்ணிப்பு

இராமசாமிக் கவிராயர்

1789A i. திருமாலிருஞ்சோலைமலை பெரிய அழகர் வர்ணிப்பு : முதற் பதிப்பு ; ii. இ. ராம. குருசாமிக் கோனர் ; ஸ்ரீராமச் சந்திர விலாசம் அச்சியந்திரசாலை, மதுரை ; iii. 1916 ; iv. செ. மூ. எ. 40; v. 21×14 செ. மீ. ; vi. 0–1–0 ; vii. திருமாலிருஞ்சோலை மலையில் திருமாலை அழகராக வழிபடுந் தன்மையினையும் அழகரின் பெருமையினையும் உரைப்பது. திருமாலின் தசாவதார சரிதங்களும் இதில் கூறப் பட்டுள்ளன. அழகர்மலைச் சிறப்பும், அத்தலம் பற்றிய புராண நிகழ்ச்சிகளும் விவரிக்கப்பட்டுள்ளன. அங்கங்கே பொருட் போக்கிற்கேற்ற தலைப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அம்மானைப் பாட்டு முறையில் இந்நூலின் பாடற்போக்கு உள்ளது. viii. 146/1916/II.

O31,1

கருப்பணதாசர், பெருங்குடி

1790. i. கிருஷ்ணவதாரன் வர்ணிப்பு: முதற் பதிப்பு; ii. கலியாண சுந்தரம் பிள்ளை, மதுரை; சங்கநிதி விளக்க அச்சுக்கூடம், சென்னை; iii. ஜூன், 1919; iv. செ.மூ.ப. 24; v. 21×14 செ.மீ.; vi. 0–2–0; vii. கண்ணனுடைய திருவிளையாடல்கள் அனைத்தையும் நல்ல அழகிய பாடல்கள் மூலமாக விளக்கும் நூல். பாகவதம் தசம ஸகந்தத்தைப் பின்பற்றி எழுதப்பட்டது. viii. 924/1919/IV.

O31,1

குருசாமிக் கோனர்

சதுரகிரி வர்ணிப்பு (தொ. எ. 1558 பார்க்க): முதற் பதிப்பு; த. குப்டசாமி நாயுடு, மதுரை; ஸ்ரீராமச்சந்திர விலாசம் அச்சியந்திரசாலை, மதுரை; iii. செப்டெம்பர், 1917; iv. செ. மூ. ப. 80; v. 14×11 செ. மீ.; vi. 0–6–0; vii. சுந்தர மகாலிங்கர் விளங்கும் சதுரகிரியைப் பற்றிய பாடல்கள் இதில் அடங்கியுள்ளன. அம்மானைப் பாட்டு முறையில் அமைந்தது. தெய்வ வணக்கம், பசுக்கிடைச் சிறப்பு, மகாலிங்கர் திருவவதாரச் சிறப்பு,அபிஷேகச் சிறப்பு, அலங்காரச் சிறப்பு, சன்னிதி விசேடம், ஸ்தலவிசேடம், மூர்த்தி விசேடம், தீர்த்த விசேடம், மகாமேருகிரிச் சிறப்பு, தெரிசனை செய்யும் சிறப்பு, பிரார்த்தனைச் சிறப்பு முதலிய பொருள்களை விவரித்து உரைப்பது. viii. 29/1917/IV.

O31,1

1791. i. திருமாலிருஞ் சோலைமலை அழகர் வர்ணிப்பு : முதற் பதிப்பு; ii. அ. பெ. சுப்பையா பிள்ளை, மதுரை; ஸ்ரீ ராமச் சந்திர விலாச அச்சியந்திரசாலை, மதுரை; iii. செப்டெம்பர், 1917; iv. செ. மூ. ப. 16; v. 23×15 செ. மீ.; vi. 0–2–0; vii. இது திருமாலிருஞ்சோலைமலையில் வழிபடப்பெறும் அழகரைப்பற்றிய நூல். அழகரின் பெருஞ்சிறப்பையும், அத்தலத்தில் நடைபெறும் வேறுசில சிறப்பு நிகழ்ச்சிகளையும் விவரிக்கிறது. viii. 224/1917/IV.

O31,1

வருக்கக் கோவை

சிவகுருநாதக் கவிராயர்

i. செம்புலிப் பெரியசுவாமித் துரையவர்கள் பேரில் வருக்கக் கோவை (தொ. எ. 2465 பார்க்க); ii. பி. சி. சி. பாண்டியன் & பி.வி.சி. பாண்டியன்; தமிழ்ச் சங்கம் பவர் பிரஸ், மதுரை; iii. 1916; iv. செ.மூ.ப. 21; v......; vi......; vii. செம்புலிப் பெரியசுவாமித்துரை அவர்கள் பேரில் சிவகுருநாதக் கவிராயர் பாடிய காதல் பிரபந்தம். அகரம் முதலிய வருக்க எழுத்துக்களை முறையே கொண்டமைந்த பாடல்களை உடையது இந்த அகப்பொருள் நூல். அகப்பொருட் கோவை நூல்களைப் போன்ற அமைப்பில் 115 பாடல்களைக் கொண்டு அமைந்துள்ளது. viii. 49/1916/II.

O31,1

படிக்காசுப் புலவர்

1792. மோரூர்ப் பாம்பலங்காரர் வருக்கக் கோவை; ii. தி. அ. முத்துசாமிக் கோனார்; விவேக திவாகரன் அச்சுக்கூடம், திருச்செங்கோடு; iii. 1916; iv. செ. மூ. எ. 100; v. 21×14 செ. மீ.; vi. 0–2–0; vii. மோரூர்ப் பதியில் எழுந்தருளியிருக்கும் பாம்பலங்காரர் என்னும் சிவனைக் குறித்து வருக்க கோவை என்னும் முறையில் பாடப்பெற்ற நூறு பாடல்களைக் கொண்ட நூல். நூலாசிரியரின் வரலாறு முதலில் தரப்பட்டிருக்கிறது. வருக்கக்கோவையின் அமைப்பு முறை முதலியவற்றை முகவுரையில் காணலாம். viii. 674/1916/I.

O3ளl

i. வடகரைச் சமஸ்தானம் முத்துசாமி துரையவர்கள் பேரில் வருக்கக் கோவை(தொ.எ. 2465 பார்க்க); ii. பி சி.சி. பாண்டியன் & பி.வி.சி. பாண்டியன்; தமிழ்ச் சங்கம் பவர் பிரஸ், மதுரை; iii. 1916; iv. செ.மூ.எ. 1+92; v.......; vi.......; vii. வடகரைச் சமஸ்தானம் முத்துசாமித் துரையவர்கள் பேரில் பாடப்பட்ட வருக்கக்கோவை என்னும் பிரபந்தம். அகப்பொருள். துறைப் பொருள் அமைதிகொண்டது. அகரம் ஆதி எழுத்து வரிசையில் பாடல்கள் தொடங்குகின்றன. viii. 49/1916/II

O31,1

வருக்கமாலை

ரமண மஹரிஷி

1793. அருணசல அக்ஷர மணிமாலை (பஞ்சரத்னம் பதிகம் அஷ்டகம்): முதற் பதிப்பு, ii. எஸ். நாராயண ரெட்டி; மினர்வா அச்சுக்கூடம், சென்னை; iii. டிசம்பர், 1916; iv. செ. மூ. எ. 108; v. 17×11 செ. மீ.; vi. 0–0–6; vii. அருணசலேஸ் வரரைக் குறித்துப் பாடப்பெற்ற பக்திப் பாடல்கள். அ, ஆ முதலிய எழுத்துக்களைப்பாடல் தொடக்கமாகக் கொண்டு அமைந்தது. 108 கண்ணி முறையில் அமைந்த பாடல்களைக் கொண்டது. ரமணமகரிஷியின் உருவப் படமும் முதலில் தரப் பட்டிருக்கிறது. viii. 238/1917/I.

O31,1

வேங்கடராம ஐயர், ஊ.சா.

1794. i. படிப்பின் பயன்: முதற் பதிப்பு; ii. சி. இராஜகோ பாலய்யர், கும்பகோணம்; கிருஷ்ணவிலாஸ பிரஸ், கும்ப கோணம்; iii. நவம்பர், 1919; iv. செ. மூ. எ. 96; v. 18×13 செ. மீ.; vi. 0–1–0; vii. படிப்பின் பயனை விளக்கும் 96 குறட்பாடல்களைக் கொண்டது இந்நூலாகும். மேலும் கலைமகள் வணக்கமாக ஒரு நேரிசை வெண்பாவினை யும் கடவுள் வணக்கமாக ஒரு குறள் வெண்பாவினையும் கொண்டுள்ளது. அகரம் முதலிய எழுத்து வருக்கங்களின் அடிப்படையில் இந்நூல் இயற்றப்பெற்றுள்ளது. எனவே, இது ஒரு குறட்பா வர்க்க மாலையாகும். viii. 709/1919/IV.

O31,1

வாழ்த்து

கடிகை முத்துப் புலவர்

i. சிவகிரி ஜமீன்தாரவர்கள் வரகுண ராமபாண்டியதுரை அவர்கள் மீது திக்குவிஜயம் (தொ. எ. 2465 பார்க்க); ii. பி. சி. சி. பாண்டியன் அண்டு பி. வி. சி. பாண்டியன்; தமிழ்ச்சங்கம் பவர் பிரஸ், மதுரை; iii. 1916; iv. செ.மூ.எ. 30; v.....; vi....; vii. சிவகிரி ஜமீன்தாரர் வரகுணராமபாண்டித் துரையவர்கள் மீது பாடப்பட்ட திக்குவிஜயம் என்னும் பிரபந்தம் வரகுணேந்திரனின் செல்வ வாழ்வைச் சிறப்பித்து உரைப்பது. இவரது படைவளம், வெற்றிச் சிறப்பு முதலியன சிறப்பிக்கப் பட்டுள்ளன. viii. 49/1916/II.

O31,1

விலாசம்

திருமலைவேற் கவிராயர்

i. வடகரைப் பெரிய சுவாமித்துரையவர்கள் பேரில் இரத்தினகர விலாசம் (தொ. எ. 2465 பார்க்க); ii. பி. சி. சி. பாண்டியன் & பி.வி.சி. பாண்டியன்; மதுரைத்தமிழ்ச் சங்கம் பவர்பிரஸ்,

மதுரை; iii. 1916; iv. செ.மூ.எ. 101; v.....;vi.....; vii. வட கரைப் பெரியசுவாமித் துரையவர்கள் பேரில் திருமலைக் கவிராயர் இயற்றிய பிரபந்தம். 'வாழி தரும நீதி செங்கோல் வாழி யிரத்தினகரமே' என்று முடிவுறுகிறது இப்பிரபந்தம். viii. 49/1916/II.

O31,1

வெண்பா

கோவிந்தசாமி ஐயர், மு., மதுரை

1795. ஞானசம்பந்த வெண்பா: முதற் பதிப்பு; ii. மு. கோவிந்த சாமி ஐயர், மதுரை; மீனும்பிகை பிரஸ், மதுரை; iii. ஆகஸ்ட், 1916; iv. செ. மூ. எ. 14+2+246; v. 18×13 செ. மீ.; vi. 0–4–0; vii. சைவப் பெரியாரான திருஞானசம்பந்தரின் பெருமையினைப் போற்றிப் பாடப்பட்ட வெண்பாப் பாடல்களைக் கொண்டது இந்நூலாகும். திருஞானசம்பந்தரின் சிறப்புக்கள் பலவற்றையும் கூறிப்புகழ்வது. உ. வே. சாமிநாதையர், ரா. இராகவையங்கார் முதலியோர் இதற்குச் சாற்றுக்கவி அளித்துள்ளார்கள். viii. 933/1916/III.

O31,1

1796. i. மாணிக்கவாசக வெண்பா: முதற் பதிப்பு; ii. இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன், மதுரை; எக்ஸெல்ஸியர் பிரஸ், மதுரை; iii. ஏப்ரல், 1918; iv. செ. மூ. எ. 5+267; v. 18×13 செ. மீ.; vi.......; vii. இது சைவப்பெரியா ரான மாணிக்கவாசகரைப் பற்றி பாடப்பெற்ற 267 வெண்பாக் களைக்கொண்ட ஒரு வரலாற்று நூல். முகவுரையில் ஆசிரியரின் புலமைத் திறனைப் பாராட்டி ஐவர் பாடிய பாக்கள் சிறப்புப் பாயிரமாகக் காணப்படுகின்றன. இந்நூலிலுள்ள வெண்பாக் கள் இனிமையும் எளிமையுமமைந்து மிளிர்கின்றன. viii. 308/1918/II.

O31,1

சங்கரப்ப நாயுடு, கொ.ந., தூத்துக்குடி

1797. i. தன்மய வெண்பா மாலை: முதற் பதிப்பு; ii. கொ. ந, சங்கரப்ப நாயுடு, தூத்துக்குடி அண்டு நல்லசிவம் பிள்ளை. வேலாயுதம் அச்சியந்திரசாலை, தூத்துக்குடி,; iii. மார்ச்; 1919; iv. செ. மூ. எ. 2+1+33; v. 22×13 செ. மீ; vi. இலவசம்; vii. இது திருமந்திர நகரமென்னும் தூத்துக்குடி கைவல்யசுவாமி மடத்துத் தலைவராகிய சிதம்பர சுவாமிகளைப் போற்றி எழுதப்பெற்ற வெண்பாமாலை. காலயுக்த ஆண்டு பங்குனிமீ 14உ யாகிய ஷ சுவாமிகள் மண்டலாபிஷேக நாளில் வெளியிடப் பெற்றது. viii. 211/1919/II.

O31,1

திருச்சிற்றம்பல முனிவர், வேதாரண்யம்

1798. i. மறைசை வெண்பா: முதற் பதிப்பு; ii. சி. சண்முகவேற் பிள்ளை, வேதாரண்யம்; பிர்ம்ம வித்தியா அச்சுக்கூடம், பேரளம், திருமீயச்சூர்; iii. பிப்ரவரி, 1920; iv. செ. மூ. எ. 1+100; v. 17×12 செ. மீ.; vi. 0–2–0; vii. வேதாரண்யம் எனப்பெறும் மறைசையைப் பற்றிய சிறப்புக்களைக் கூறும் சிறு நூல். இது வெண்பாக்களால் ஆகியது. பாடலின் ஒருபாதி மறைசைப்பதியின் புகழும் மற்றொரு பகுதி மறைசைப் பெருமான் புகழும் உரைக்கின்றன. இந் நூலாசிரியர் இயற்றிய வேறு நூல்கள் மறைசையமகவந்தாதி, காவேரிப் புராணம், தண்டலைச்சேரிப் புராணம், கீழ்வேளூர்ப் புராணம் முதலியனவாம். viii. 938/1920/I.

O31,1

நாராயண பிள்ளை, அ., புதுக்கோட்டை

1799. i. அரிச்சந்திர திரிபு வெண்பா: முதற் பதிப்பு; ii. சிவசாமி பிள்ளை; ஸ்ரீ மட்டுவார்குழலாம்பாள் அச்சுக்கூடம், திருச்சி; iii. மே, 1919; iv. செ. மூ. எ. 103; v. 21×14 செ. மீ.; vi. 1–0–0; vii. அரிச்சந்திரன் புராணக்கதை இதில் விளக்கப் பட்டுள்ளது. திரிசிரபுரம் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, அவர் தம் மாணவர் வித்வான் தியாகராஜ செட்டியார் முதலியோர் இந்நூலுக்குச் சிறப்புப் பாயிரம் தந்துள்ளனர். இது 703 வெண்பாக்களாலானது. இந்நூலாசிரியர் இயற்றிய பிற நூல்களாவன: பழனி வெண்பா, திருக்கோகர்ணம் பெரிய நாயகியம்மன் நவரத்தினம், திருவரங்குளம் பெரியநாயகியம்மன் சந்தப்பதிகம், நளச்சக்கரவர்த்தி கும்மி, குன்றக்குடி மாலை, நகரம் இரட்டைமணி மாலை, தனிப்பாடல்களும் சித்திரக் கவிகளும் அடங்கிய கோவை என்பனவாம். viii. 196/1919/III.

O31,1

வேறுவகைப் பிரபந்தம்

அய்யாசாமி பிள்ளை, எஸ்.

1800. i. காவடிப்பாட்டு: திருத்திய மூன்றும் பதிப்பு; ii. எஸ். அய்யாசாமி பிள்ளை, மதுரை; ஸ்ரீ ராமாநுஜ விலாசம் அச்சுக் கூடம், மதுரை; iii. மார்ச், 1920; iv. செ. மூ. 14. 8; v. 23×14 செ. மீ.; vi. 0–1–0; vii. தினைப்புனம் காத்த வள்ளியம்மையைச் சிறையெடுத்த சுப்ரமணியரைப் பற்றிய காவடிப் பாடல்கள் இதில் அடங்கியுள்ளன. இனிய எளிய நடையுடன் கூடியது. viii. 92/1920/II.

O31,1

இராஜு நாயுடு

1801. i. காப்பிகுடித்தங்கம்: முதற் பதிப்பு; ii. டி. சங்கரன் பிள்ளை, அம்பாசமுத்திரம்; விவேகாநந்தா அச்சுக்கூடம், அம்பாசமுத்திரம்; iii. ஜூலை, 1920; iv. செ. மூ. ப. 8; v. 23×14 செ. மீ.; vi. 0–1–0; vii. காப்பி குடிப்பதனுல் ஏற்படும் தீமைகளை விளக்கி எழுதப்பட்ட வேடிக்கைப் பாடல்கள் இதில் அடங்கியுள்ளன. viii. 423/1920/III.

O31,1

கணபதி பிள்ளை, தி.சு.,சேலம்

1802. i. இராஜவிஸ்வாச பாக்கள்: இரண்டாம் பதிப்பு; ii. கணபதி பிள்ளை, சேலம்; ஷண்முக விலாஸ் பிரஸ், சேலம்; iii. அக்டோபர், 1918; iv செ. மூ. ப. 8; v. 11×14 செ. மீ.; vi……; vii. ஆங்கிலேய அரசாங்கத்தைப் பற்றி எழுதப்பட்ட இராஜ விசுவாசப் பாடல்களைக் கொண்டது இப்புத்தகம். சென்னை பிராமணரல்லாதார் கான்பிடரேஷனைச் சேர்ந்த ராஜா வெங்கிட்டகிரி, டாக்டர். டி. எம். நாயர் இவர்கள் முன்னிலையில் 1917 ஆம் ஆண்டு வாசிக்கப்பட்டது. viii. 677/1918/IV.

O31,1

சண்முக முதலியார், சி.வே.

1803. i. கல்பட்டு கன்னையநாயுடவர்கள் கிருகப்பிரவேச மகோற்சவச் சிறப்புப் பாடல்: முதற் பதிப்பு; ii. எம். ஆதி அண்டு கோ., சென்னை; சந்திரா முத்திராக்ஷரசாலை, சென்னை; iii. ஜூன், 1917; iv. செ. மூ. உ.எ. 12; v. 33×21 செ. மீ.; vi. இலவசம்; vii. கல்பட்டு கன்னைய நாயுடவர்கள் புதுவீடு கட்டி மனைபுகுவிழா நடத்திய காலத்து வாழ்த்திப் பாடப்பெற்ற சிறப்புப் பாடல்களை இதில் காணலாம். 1917ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 5 ஆம் நாள் புதுமனை புகுவிழா நிகழ்ந்த அன்று மாலையில், அங்குக் குழுமியிருந்த சபையோர் முன்னிலையில் பாடி விளக்கப்பட்டவை. பாடல்களுக்குப் பதவுரை, பொழிப்புரை, குறிப்புரை என்னும் உரை விளக்கங்களும் உள. viii. 326/1917/III.

O31,1

சர்மா, நா.ச., கல்லிடைக்குறிச்சி

1804. i. திலகீய கீதம்: முதற் பதிப்பு; ii. டி. சி. சங்கரய்யர் கல்லிடைக்குறிச்சி; விவேகானந்த அச்சுக்கூடம், அம்பாசமுத்திரம்; iii. அக்டோபர், 1920; v. செ. மூ. ப. 12; v. 14×11 செ. மீ.; vi. 0–1–0; vii. சிறந்த தேசபக்தரான பாலகங்காதர திலகரின் பெருமையினைப் புகழ்ந்து பாடப்பெற்ற பாடல்களின் தொகுப்பாகும் இந்நூல். viii. 362/1920/IV.

O31,1

சர்வகோபால பிள்ளை, டி., திண்டிவனம்

1805. i. நவீன சம்பாஷணை பாட்டுக் கதைகள்: முதற் பதிப்பு; ii. டி. சர்வகோபால பிள்ளை, திண்டிவனம்; சதரியா பிரஸ், திண்டிவனம்; iii. டிசம்பர், 1917; iv. உ. ப.+செ. மூ. ப. 12; v. 21×14 செ. மீ.; vi. 0–1–6; vii. மூன்றும் நான்காம் வகுப்புச் சிறுவர்களுக்கு ஏற்ற இரண்டு பாட்டுக் கதைகள் உரையாடல் முறையில் இதில் அடங்கியுள்ளன. உரைநடையும் பாட்டுமாக அமைத்து எழுதப்பட்டுள்ளன. viii. 888/1917/IV.

O31,1

சுப்பிரமணிய பாரதியார், சி.

1806. i. நாட்டுப்பாட்டு: முதற் பதிப்பு; ii. பரலி. சு. நெல்லை யப்ப பிள்ளை, சென்னை; இந்தியா அச்சுக்கூடம், சென்னை; iii. அக்டோபர், 1917; iv. செ. மூ. ப. 16; v. 14×11 செ.மீ.; vi. 0–1–0; vii. பாரதியாரின் நாட்டுப் பாடல்களின் தொகுப்பே இந்நூல். இந்நூலில் "ஜாதி மதங்களைப்பாரோம்" "செந்தமிழ் நாடெனும் போதினிலே", "பாரத தேசமென்று பெயர் சொல்லுவார்", "எந்தையுந்தாயும் மகிழ்ந்து குலாவி", "மன்னு மிமயமலை யெங்கள்மலையே" எனத்தொடங்கும் பல பாடல்கள் அடங்கியுள்ளன. தெய்வத்திரு நாடாம் நம் தாய் நாட்டினைக் குறித்த பாடல்களை எவ்வளவு காலம் பாடினும் ஆவல் தீராது என்கிறார் பதிப்பாசிரியர். viii. 590/1917/IV.

O31,1

நாராயணராயர், ஆர்., ஆழ்வார்திருநகரி

1807. i. கோலாட்டப்பாட்டு; ii. ஆர். நாராயணராயர், ஆழ்வார் திருநகரி; ஸ்ரீகான வித்யா அச்சியந்திர சாலை, பெருங்குளம்; iii. ஜனவரி, 1917; iv. செ. மூ. ப. 16; v. 14×11 செ. மீ.; vi......; vii. கிருஷ்ணனின் திருவிளையாடல்களைக் குறித்துப் பாடப்பெற்ற கும்மிப்பாடல்கள் கொண்டது. பெண்கள் கோலாட்டத்தில் பாடுதற்கு ஏற்ற சந்த இசையமைப்புக் கொண்டது; viii. 401/1917/I.

O31,1

முத்துஸாமி, ஆர்., மாயவரம்

1808. i. பாரததேவி பஜனையும் அஷ்டோத்ரமும்: முதற் பதிப்பு; ii. கே. வெங்ட்ராம அய்யர், மாயவரம்; சரஸ்வதி விலாஸ் பிரஸ், மாயவரம்; iii. செப்டம்பர், 1918; iv. செ. மூ. ப. 16; v. 13×11 செ. மீ.; vi. 0–2–0; vii. பாரத மாதாவாகிய இந்தியத் தாயினைப் புகழ்ந்து பாடப்பெற்ற பஜனைப் பாடல்களைக் கொண்டது இப்புத்தகம். வந்தேமாதர சங்கீர்த் தனம், தேசபஜனை, ஜெகதம்பிகையின் பக்திமேலீடு, இந்திய தேவிபஜனை, ஸ்வதேச கும்மி, பாரததேவி பாதம் பணிதல்,

பக்தர்களை பூஜித்தல், ஸ்வதந்திர வாழ்வு, முறையிடுதல் முதலிய தலைப்புக்களால் பாடல்கள் உள. ஸ்ரீபாரததேவி அஷ்டோத்ரமும் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. viii. 134/1918/IV.

O31,1

வெங்கட்டராமய்யர், சிவகெங்கை

1809. i. பாரதி கீதங்கள்: முதற் பதிப்பு; ii. சிவகங்கைச் சுய ஆட்சிச் சங்கம்; விக்டோரியா பிரஸ், மதுரை; iii. 1917, iv. செ. மூ. எ. 20+71; v. 21×14 செ. மீ.; vi. 0–1–0; vii. ராமகிருஷ்ண பரமஹம்ஸர், விவேகானந்தர், கோகலே; காந்தியடிகள் போன்ற பெரியார்களைப் போற்றி கீர்த்தனை வடிவில் பாடியுள்ளார் ஆசிரியர். மேலும் கும்மிப்பாடல்கள் மூலமாகவும் தேசப்பெரியார்களை பாராட்டியுள்ளார். முகவை மாவட்டத்தில் சரித்திரப்பிரசித்தி பெற்ற முக்கிய நகரங்களுள் ஒன்றான சிவகெங்கை நகர சுய ஆட்சிச்சங்கத்தால் இப்புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலின்கண் காணப்படும் பாடல்கள் அனைத்தும் விடுதலை இயக்கப்பாடல்களே. பாரதகீதங்கள் என்பது பாரத நாட்டைப் பற்றிய கீதங்களாகும். "ஆரிய நாட்டின் கீதம்" என்றும் ஆசிரியர் முதலில் உள்ள விநாயக வணக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். கும்மிப்பாடல் ஈற்றில் ஐந்தாம் ஜார்ஜ் அரசர் முதலாயினோர்க்கு வாழ்த்தும் உண்டு. viii. 758/1918/III.

O31,1

894.811108 தமிழ்க் கவிதைத் திரட்டு

ஆறுமுக முதலியார், வி.கே., பெங்களூர் (தொ.து.)

1810. i. சாந்தோபதேச மஞ்சரி: மூன்றும் பதிப்பு; வி. கே. ஆறுமுக முதலியார், பென்ரோஸ் கம்பெனி, பெங்களூர்; iii. ஜூலை, 1918; iv. செ.மூ.ப. 184; v. 23×14 செ.மீ.; vi. 1–4–0; vii. சைவ, வைணவ சமயங்களின் சார்பாக எழுந்த பாடல்களின் தொகுப்பே, இந்நூல். இதன்கண் தேவார, திருவாசகப் பாடல்களும், திருப்புகழ், திருவாய் மொழி, திருவருட்பா ஆகியனவும், பட்டினத்தார் பாடல், ஒளவை பாடல், தாயுமானவர் பாடல், திருக்குறள் போன்ற நீதிப்பாடல்களும் அடங்கியுள்ளன. ஒவ்வொரு பக்கத் தலைப்பிலும், தமிழில் பொன்மொழியும் பக்க இறுதியில் ஆங்கிலத்தில் பொன்மொழியும் தரப்பட்டுள்ளன. சித்தாந்த சரபம், அஷ்டாவதானம், சிவ ஸ்ரீ கல்யாண சுந்தரயதீந்திர சுவாமிகள் முதலியோர் இதற்குச் சாற்றுக் கவிகள் தந்துள்ளனர். சிதம்பரம், மதுரை, திருவண்ணாமலை, ஸ்ரீரங்கம் போன்ற தலங்களின் படங்களும், நடராஜர், முருகன் போன்ற தெய்வங்களின் திருஉருவப் படங்களும் அணி செய்கின்றன. ஆத்திச்சூடிப் பாடல்கள், ஆங்கில

மொழி பெயர்ப்புடன் தரப்பட்டுள்ளன. இந்நூலுக்குப் பத்திரிகை ஆசிரியர்களும், பிறரும் வரைந்து வெளியிட்ட மதிப்புரைகள் நூலிறுதியில், தொகுத்துத் தரப்பட்டுள்ளன. viii. 398/1918/III.

O31,1x

இரத்தினம், ஆரூர்

1811. i தோத்திர மஞ்சரி ; ii. பி. ஆர். இராம ஐயர் கம்பெனி, சென்னை ; iii. 1919 ; iv. செ.மூ.ப. 102 ; v. 18×13 செ.மீ. ; vi ...... ; vii. பல தெய்வங்களைப் பற்றிப் பாடப்பெற்ற இசைப்பாடல்களாலாயது இந்நூல். சிவபெருமான், உமாதேவி, இலக்குமி முதலியோர் அடங்கிய படமொன்று இதன்கண் உண்டு. viii. 149/1920/I.

O31,1

இராமசாமி ஆசாரி, கந்தே கவுண்டன்சாவடி

1812. i. தோத்திரப் பிரபந்தங்கள் ; ii. த. பூ. முருகேச நாயகர், சென்னை ; அமெரிக்கன் டைமண்ட் அச்சுக்கூடம், சென்னை ; iii. 1917 ; iv. செ.மூ.ப. 16 ; v. 20×13 செ. மீ. ; vi. இலவசம் ; vii கந்தமாநகர் விநாயகர், சிவசுப்ரமண்யர் முதலியோர் மீது பாடப்பெற்ற தோத்திரப் பிரபந்தங்கள். அவையாவன : ஐங்கரன்மாலை (30), கணேச பஞ்சகம் (5), கந்தமாநகர் ஆலடி விநாயகர் மீது தேவாரப் பதிகம் (10), கந்தமாநகர் பரமேஸ்வரப் பதிகம் (11), கந்தமாநகர் தண்டபாணிப் பதிகம் (11). ஆகியன சென்னை புரசை பு. எ. வரதாராஜு நாய்க்கர் முதலியோர் சாத்துக் கவிகள் பாடியுள்ளனர். viii. 394/1917/I.

O31,1

இராமலிங்கசுவாமிகள், சிதம்பரம்

1813. i. இராமலிங்க சுவாமிகள் திருவருட்பாவின் நிரதிசயாநந்தத் திரட்டு : முதற் பதிப்பு ; ii. மூர்த்தி சுவாமிகள் ; சிவரகசியம் அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1916 ; iv. செ.மூ.ப. 96 ; v. 17×14 செ.மீ. ; vi. 0–3–0 ; vii. இராமலிங்கசுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவருட்பாவின் திரட்டு. பரம்பொருளை உணர்தலைப் பற்றி இந்நூலில் விவரிக்கப்பட்டிருக்கிறது. இதனைத் தொகுத்து அச்சிட்டவர் வியாசர்பாடி ஆனந்தாஸ்ரமம் ஸ்ரீமூர்த்தி சுவாமிகள் ஆவார். viii. 174/1916/II.

O31,1

1814. i. திருவருட்பாத் திரட்டு ; ii. லாங்மன் ஸ்கிரீன் அண்டு கம்பெனி, சென்னை ; கபாலி பிரஸ், சென்னை ; iii. 1916 ; iv. செ.மூ.ப. 32 ; v. 19×13 ; vi. 2–0–0 ; vii. இராமலிங்க சுவாமிகள், பத்தொன்பதாம் நூற்றுண்டில் சிறந்து விளங்கிய அருட்கவி. எல்லா உயிர்களிடத்தும் அன்புடையராய்,

சமரச சுத்தசன்மார்க்க நெறியைப் போதித்து, மக்களுக்கு நல்லறிவூட்டியவர். சுவாமிகளின் சரித்திரச் சுருக்கமும், உருவப்படமும் முதலில் கொடுக்கப்பட்டுள்ளன. 'பார்த்தாலும் படித்தாலும், படிக்கப் பக்கம் நின்று கேட்டாலும்,' 'சிந்தனைக்குத் தித்திக்கும்' இனிய செந்தமிழ்ப் பாடல்களின் தொகுப்பு ; அம்பலவாணனின் புகழ்கூறும் அரும்பாடல்கள் கொண்டவை. viii. 337/1916/IV.

O31,1x

1815. i. பாமாலை : முதற் பதிப்பு ; ii. சுதேசமித்திரன் ஆபீஸ். சென்னை ; சுதேசமித்திரன் பிராஞ்ச் அச்சுக்கூடம், சென்னை ; iii. ஆகஸ்ட், 1920 ; iv. செ.மூ.ப. 48 ; v. 19×13 செ.மீ. ; vi. 0–4–0 ; vii. சிதம்பரம் இராமலிங்கசுவாமிகளும், மணிவாசகப் பெருமானும் திருவாய் மலர்ந்த சில கவிகளை மக்கள் படித்துய்யும் பொருட்டுத் தொகுத்து இந்நூலாக வெளியிடப்பட்டுள்ளது. மாணிக்கவாசகப் பெருமான் என்று இதில் குறிக்கப்பட்டுள்ளவர், திருவாசகம் பாடிய மாணிக்கவாசகரல்லர். பிற்காலத்தவராக இருக்கலாம். viii. 807/1920/III.

O31,1x

இராமானந்த சுவாமிகள், திருப்பூவணம்

1816. i. இராமானந்த சுவாமிகள் திருப்பாடற்றிரட்டு : முதற் பதிப்பு ; ii. த. குப்புசாமி நாயுடு, மதுரை ; இ. ராம. குருசாமிக் கோனார், மதுரை ; ஸ்ரீராமச்சந்திர விலாசம் அச்சியந்திரசாலை, மதுரை ; iii. ஜூன், 1917 ; iv; செ.மூ. ப. 88 ; v. 22×13 செ. மீ. ; vi........ ; vii. இத்திரட்டில் மனோன்மணிமாலை, தேஜோமயமாலை, ஆனந்தம், ஆதியே நல்லவள், திருமுகத்தான், வாழ்வெனவும், சந்திரரும் சூரியரும், பூரணிக்கண்ணி, குருபரன் கண்ணி, கீர்த்தனம் முதலிய தலைப்புக்களின்கீழ்ப் பாடல்கள் உள்ளன. இச்சுவாமிகள், திருப்பூவணம், நெல்முடிக்கரையைச் சேர்ந்த வராவார். பூரணிக்கண்ணி அம்பிகையைக் குறித்தும், குருபரன்கண்ணி சற்குருவைக் குறித்தும் அமைந்துள்ளன. இறுதியில், சில கீர்த்தனங்களும் பதிகங்களும் உள்ளன. viii. 44/1917/III.

O31,1x

குணவேல் முதலியார், பி.

1817. i. அருள்விளக்கமாலை : ii. குணவேல் முதலியார் ; விக்டோரியா அச்சுக்கூடம், வேலூர் ; iii. 1915 ; iv. செ. மூ.ப. 24 ; v. 21×14 செ.மீ. ; vi........ ; vii. முக்தி நிலை அடையும் மார்க்கத்தைச் செய்யுள் வடிவாக விளக்கும் நூல். தேவாரம் முதலிய திருமுறைப் பாடல்களின் கருத்து இசையமைதியில் இயன்ற தோத்திரங்கள் கொண்டது. தேவாரத்திற் போன்று இவர், தம் பாடல்களுக்குப் பண்

குறிப்பிட்டுள்ளார். திருச்சின்னம், ஞானக்கும்மி, ஜோதி தரிசனக் கண்ணிகள் என்னும் எளிய இசைப்பாடல்கள் இதில் உள. இவர் பாடிய வேறு செய்யுள் நூல்கள், 'குருத் தியான மஞ்சரி', 'மானச தியான மஞ்சரி,' என்பன வாம். நூலாசிரியர் வரலாறும், உருவப்படமும் சேர்க்கப் பட்டிருக்கின்றன. viii. 531/1916/I.

O31,1x

குமரகுருபர சுவாமிகள், பாம்பன்

1818. i. குமரகுருதாச சுவாமிகள் சிறுநூற்றிரட்டு: இரண்டாம் பதிப்பு ; ii. டி.எம். அச்சுக்கூடம், பல்லாவரம் ; iii. 1917 ; iv. செ.மூ.ப. 100 ; v. 15×12 செ. மீ. ; vi. 0–3–0 ; vii. சுவாமிகள் அருளிச் செய்த நூல்களுள் பொருளிற் பெரியனவாய் உருவிற் சிறியனவாயுள்ள பத்து நூல்கள் இத்தொகுப்பில் உள. அவையாவன: 1. சண்முக கவசம்; 2. பஞ்சாமிர்த வண்ணம் ; 3. திருத்தொடையல் ; 4. கந்தரொலியந்தாதி ; 5. .... ; 6. ஞான வாக்கியம் ; 7. கந்தக்கோட்ட மும்மணிக்கோவை ; 8. வடதிரு முல்லைவாயிற் குபேரர் வண்ணம் ; 9. நவ வீரர் நவரத்தினக்கலி விருத்தம் ; 10. அட்டாட்ட விக்கிரக லீலை விருத்தம். இவற்றுள், ஞானவாக்கியம் அகர வரிசையில் எழுத்துருவக் கவிகளைக் கொண்டு அமைந்த 110 வாக்கியங்கள் கொண்டதாகும். viii. 889/1917/III.

O31,1x

கோடீஸ்வர ஐயர், என்.

1819. i. தோத்திரத்திரட்டு ; ii. கல்யாணராம ஐயர் அண்டு கோ., சென்னை ; கல்யாணசுந்தரம் முத்திராசாலை, தஞ்சாவூர் ; iii. 1915 ; iv. செ.மூ.எ. 84 ; v. 17×13 செ.மீ. ; vi. ......; vii. சைவ சமயக் கடவுளர் பலரைப்பற்றிய தோத்திரப் பாமாலை. மதுரைச் சித்தி விநாயகர் பதிகம், மதுரைச் சண்முக மாலை, மதுரை மீனாக்ஷி பதிகம், மதுரை மீனாக்ஷி சுந்தரேசுவரர் பதிகம், மயிலை சித்தி விநாயகர் பதிகம், மயிலைச் சண்முகப் பஞ்சரத்தின மாலை, என்பவை இதன் கண் உள. viii. 970/1916/I.

O31,1x

சந்திரசேகர கவிராஜ பண்டிதர், தில்லையம்பூர் & கச்சபாலைய ஐயர், காஞ்சிபுரம்

1820. i. தனிப்பாடற்றிரட்டு ; ii. ம. திருவேங்கட முதலியார், சென்னை ; வாணி விலாச அச்சுக்கூடம், சென்னை ; முரஹரி பிரஸ், சென்னை ; iii. 1919 ; iv. செ.மூ.உ.ப. 206 ; v. 21×14 செ.மீ. ; vi. 1–4–0 ; vii. வெவ்வேறு காலங் களில் இருந்த புலவர் பெருமக்கள் பாடிய பாடல்

களின் தொகுப்பே இந்நூலாகும். கோ. சபாபதி முதலியார், திருத்தணி விசாகப்பெருமாள் ஐயர் முதலியோர் இந்நூலுக்கு சாத்துக் கவிகள் தந்துள்ளனர். இராமநாதபுரம் சமஸ்தானம் பொன்னுச்சாமித் தேவரின் ஆதரவினால் இது வெளியிடப் பெற்றது. viii. 397/1920/I.

O31,1x

சிதம்பர சுவாமிகள்

1821. i. திருப்போரூர் சந்நிதி முறை: முதற் பதிப்பு; ii. பி. இரத்தின நாயகர் அண்டு சன்ஸ், சென்னை; அமெரிக்கன் டயமண்ட் பிரஸ், சென்னை; iii. ஜூன், 1917; iv. செ. மூ.ப. 220; v. 14×11 செ.மீ.; vi. 0–12–0; vii. இந்நூலில், திருப்போரூர் ஆதீனம் சிதம்பர சுவாமிகளின் சரித்திரச் சுருக்கமும், பிள்ளைத்தமிழ், மாலை, தாலாட்டு, பெரிய கட்டியம், சின்ன கட்டியம், குயிற்பத்து, கிளிப்பத்து, வண்டு விடுதூது, அடைக்கலப்பத்து முதலிய பிரபந்தங்களும் அடங்கியுள்ளன. viii. 171/1917/III.

O31, 1x

சிவசுப்ரமணிய ஐயர், வி.

1822. i. வெங்கடரமணம்; ii. பிரேசர் பிரஸ், கூனூர்; iii. ஜூன், 1917; iv. செ.மூ.ப. 51; v. 21×14 செ.மீ. vi. 0–6–0; vii. இது, உலகில் உயர்ந்த சத்தியமாக விளங்கும் கடவுளைப்பற்றிப் பாடப்பெற்ற எட்டுப் பாடல்களின் தொகுப்பு. விநாயகர் பாதாதி கேசம், முகவை விநாயகர் திருவிரட்டை மணிமாலை, பரமசிவ மும்மணிக்கோவை, கண்மணி மாலை, தூய்பொருளாட்சி, திருநான்மணிமாலை. ஏகநாயக வாதப்பதிகம், குறையொழித்தல், ஆகிய எட்டுத் தலைப்புக்களைத் தன்னகத்துக் கொண்டொளிர்கிறது. ஆசிரிய ரின் தந்தையின் பெயர், இந்நூலுக்கிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடலையும் ஆசிரியர் பாடிய இடமும், ஆண்டுக் குறிப்பும், அவ்வப் பாடல்களின் தொடக்கத்தில் தரப்பட்டுள்ளன. viii. 672/1918/I.

O31,1x

சிவப்பிரகாச சுவாமிகள், துறைமங்கலம்

1823. i. பிரபந்தத் திரட்டு (கருணைப் பிரகாச சுவாமிகள் இட்டலிங்கவகவல்): முதற் பதிப்பு; ii. சுவாமிநாத பண்டிதர்; சைவ வித்யாநுபாலன யந்திரசாலை, சென்னை; iii. 1916; iv. செ.மூ.ப. 19+239; v. 22×14 செ.மீ.; vi. 1–4–0; vii. இப்பிரபந்தத் திரட்டில் சோணசைல மாலை, நால்வர் நான்மணிமாலை, திருச்செந்திலந்தாதி, பழமலையந்தாதி, பிட்சாடன நவமணிமாலை, பெரியநாயகியம்மை விருத்தம், பெரியநாயகியம்மை கலித்துறை, நன்னெறி, திருவெங்கைக் கோவை, திருவெங்கைக் கலம்பகம் திருவெங்கையுலா, இட்டலிங்கவபிஷேக மாலை,

இட்டலிங்கக் குறுங்கழி நெடில், இட்டலிங்க நெடுங்கழி நெடில், இட்டலிங்க நிரஞ்சனமாலை, இட்டலிங்கக் கைத்தல மாலை, சிவஞான பாலைய சுவாமிகள் தாலாட்டு, சிவஞான பாலைய சுவாமிகள் நெஞ்சு விடுதூது, சிவஞான பாலைய சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி, சிவஞான பாலைய சுவாமிகள் பிள்ளைத்தமிழ், சிவஞான பாலைய சுவாமிகள் கலம்பகம் முதலியன அடங்கியுள்ளன. அரும்பதக் குறிப்புரை இறுதியில் உண்டு. சிவப்பிரகாச சுவாமிகளின் வாழ்க்கை வரலாறும் நூல் முதலில் கொடுக்கப்பட்டிருக்கிறது. viii. 1208/1917/I.

O31,1x

தத்வராய ஸ்வாமிகள்

1824. i. பாடுதுறை : திருத்திய இரண்டாம் பதிப்பு ; ii. கொ. லோகநாத முதலியார், சென்னை ; மனோன்மணி விலாச அச்சுக் கூடம், சென்னை ; iii. 1917 ; iv. செ.மூ.ப. 331 ; v. 14×13 செ.மீ. ; vi. 0–12–0 ; vii. சுத்தாத்வைத வேதாந்தாச் சாரியாரான தத்துவராய சுவாமிகள் ஸ்வரூபானந்த சுவாமிகள் மீது பாடிய பல பாமாலைகள் இதில் இடம் பெற்றுள்ளன. ஆசிரியரின் சரித்திரச் சுருக்கமும், குரு பரம்பரைக் குறிப்பும், சிறப்புப் பாயிரப் பகுதியும் நூல் முதலில் அமைந்துள்ளன. இதில் கழல், பிந்து, நையாண்டி, கானம் போன்ற சில பிரபந்த வகைகளைக் காணலாம். viii. 371/1917/I.

O31,1x

தாயுமானவர்

1825. i. தாயுமானசுவாமிகள் திருப்பாடற்றிரட்டு ; ii. எஸ். ஆர். மாணிக்க முதலியார் ; பிரசிடெண்ட் பிரஸ், சென்னை ; ஸ்ரீகாந்தா பிரஸ், சென்னை ; iii, 1916 ; iv. செ.மூ.உ.ப. 601 முதல் 730 வரை ; v. 22×14 செ.மீ. ; vi. 4–0–0 ; vii. தாயுமான சுவாமிகள் பாடல்களுக்கு பூவை கல்யாண சுந்தர முதலியார் கண்ட 'மெய்கண்ட விருத்தியுரை'யுடன் கூடிய நூல். பராபரக்கண்ணி 71 முதல் நூல் முடிய உள்ளது. ஆசிரியரது வாழ்க்கைச் சரித்திரமும் தொகுக்கப் பட்டிருக்கிறது. சுவாமிகளைக் குறித்து, அவர் மாணவர் அருளையர் பாடிய அருள் வாக்கிய அகவலும் இறுதியில் சேர்க்கப்பெற்றிருக்கிறது. viii. 27/1916/IV. O31,1x

பட்டினத்துப் பிள்ளையார்

i. திருப்பாடற்றிரட்டு (தொ.எ. 7 பார்க்க) ; ii. வா. சரவண முத்துப் பிள்ளை ; கெ. பெ. சிங்காரவேலு முதலியார் ; சன் ஆப் இந்தியா அச்சுக்கூடம், சென்னை ; iii. 1914 ; iv. செ.மூ.ப. 93—184=91 ; v......; vi.......; vii. இந்

நாலின் முற்பகுதியில் பட்டினத்துப் பிள்ளையாருடைய சரித்திரச் சுருக்கம் தரப்பெற்றுள்ளது. கோயிற்றிருவகவல் என மூன்றும், கச்சித்திருவகவல், திருவேகம்பமாலை, திருத்தில்லை முதலிய தலங்கள் பற்றியும் பொது வெண்பா உடற்கூற்றுவண்ணம், பட்டினத்தார் புலம்பல், சட்டமுனி ஞானம் முதலியனவும் இதில் உள்ளன. viii. 445/1917/I.

O31,1x

1826. i. திருப்பாடற்றிரட்டும், உடற்கூற்று வண்ணமும்; ii. ஜெயராம் முதலியார், கோடம்பாக்கம், சென்னை; சாஸ்திர சஞ்சீவினி அச்சியந்திரசாலை, சென்னை; iii. பிப்ரவரி, 1917; iv. செ.மூ.ப. 48; v. 18×11 செ.மீ.; vi. 0–2–0; vii. இந்நூலில் பட்டினத்தடிகள் உடலின் நிலையாமையைக் குறித்தும், ஈசனின் திருவடி நிழலின் சுகத்தைக் குறித்தும், மனிதனின் அலையும் மனத்தினைப்பற்றியும், தெளிவாக-சுவையாக எழுதுகிறார். கோயிற்றிருவகவல், திருஏகாம்பமாலை முதலியனவும், பொதுப்பாடல்களும், உடற்கூறு வண்ணமும் அதில் இடம் பெற்றிருக்கின்றன. பட்டினத்தார் சரித்திரச் சுருக்கமும் உள்ளது. viii. 886/1917/I.

O31,1x

1827. i. பட்டினத்துப் பிள்ளையார் திருபாடற்றிரட்டு: முதற் பதிப்பு ii. மணி அண்டு கம்பெனி, மதுரை; பிரசன்ன வெங்கடேஸ்வரா பிரஸ், மதுரை; iii. ஜூலை, 1919; iv. செ.மூ.ப. 32; v. 16×12 செ.மீ.; vi. 0–3–0; vii. பட்டினத்துப் பிள்ளையார் அருளிச்செய்த திருப்பாடற்றிரட்டாகும் இது. அடிகளார் பாடல்களின் ஒரு பகுதி மட்டும் ஈண்டு தரப்பட்டுள்ளன. கோயிற்றிருவகவல் முதலிய அகவல்களும் திருவேகம்பமாலை முதலிய தோத்திரங்களும் இதில உள. தன் தாயாரைச் சிதையில் வைத்து எரிமூட்டுகையில், அடிகள் பாடிய வெண்பாக்களும் கொடுக்கப்பட்டுள்ளன. viii. 205/1919/IV.

O31,1x

1828. i. திருப்பாடற்றிரட்டும், உடற்கூறு வண்ணமும் (சேந்தனார் திருப்பல்லாண்டு); ii. ராமானுஜ ஐயங்கார்; ஸ்ரீராமானுஜ அச்சியந்திரசாலை, சென்னை; iii. 1920; iv. செ.மூ.ப. 45; v. 17×11 செ.மீ; vi.......; vii. கோயில் திருவகவல் முதலிய அகவற் பாடல்களும், பற்பல காலங்களில் பாடிய தோத்திரப்பாடல்களும் இதில் உள. பட்டினத்துப் பிள்ளையார் சரித்திரச் சுருக்கமும் முதலில் உளது. நூலிறுதியில், சேந்தனார் பாடிய திருப்பல்லாண்டு தரப்பட்டிருக்கிறது. viii. 276/1920/IV.

O31,1x

1829. i. பலபாடற்றிரட்டு ; ii. ஷேக்மீரான் மொய்தீன், சென்னை. முகம்மதியாப் பிரஸ், சென்னை ; iii, ஜூன், 1917 ; iv; செ.மூ.ப. 400 ; v. 21×14 செ.மீ. ; vi. 1–12–0 ; vii. இதில், இஸ்லாம் கொள்கைகளை விளக்கும் பாடல்கள் முதல் பலதரப்பட்ட லௌகிகக் கொள்கைகளை விளக்கும் பாடல்கள்வரை அடங்கியுள்ளன. viii. 41/1918/I.

031,1x

பார்த்தசாரதி நாயுடு, பா. மு., சிவகாசி

1830. i. சுப்ரமண்யக் கடவுள் மீது நவரச மஞ்சரி : முதற் பதிப்பு ; ii. பா. மு. பார்த்தசாரதி நாயுடு, சிவகாசி ; சேதுபதி அச்சியந்திரசாலை, மதுரை ; iii. மே, 1917 ; iv. செ.மூ.ப. 56 ; v. 21×14 செ.மீ. ; vi. 0 6–0 ; vii. சிவகாசியில் வழிபடப்பெறும் சுப்ரமண்ய சுவாமியைக் குறித்துப் பாடப்பெற்ற பக்திப்பாடல்கள் 'காவடிச்சிந்து', திருப்புகழ், வகுப்பு, வண்ணம், கீர்த்தனைகள் ஆகிய தலைப்புகளில் பாடப்பெற்றிருக்கின்றன. புதுமையாகிய சுவையையுடைய பாட்டுக்கள் என்ற மலர்களின் கொத்து என்னும் கருத்தால், இதற்கு நவரச மஞ்சரி என்று பெயரிடப்பட்டுள்ளது. இவர் பாடிய வேறு நூல்கள், திருவிருதை கலம்பகம், திருப்புகழ் என்பனவாம். இவ்வாசிரியர் தண்டபாணி சுவாமிகளின் மாணவராவர். viii. 9/1917/III.

O31,1x

பீர்முகமது சாகிப், திருச்சி

1831. i. பாமஞ்சரி ; முதற் பதிப்பு ; ii. பீர்முகமது சாகிப், திருச்சி ; ஸ்ரீவாணி விலாஸ் பிரஸ், ஸ்ரீரங்கம் ; iii. அக்டோபர், 1920 ; iv. செ.மூ.ப. 63; v. 18×12 செ.மீ.. vi. 0–8–0 ; vii. இதன் ஒரு பகுதியில், நபிகள் பெருமான் முதலானோர்மீது இயற்றப்பட்ட பாடல்களும், மற்றொரு பகுதியில், நாடகத்தமிழ் பாடல்களும், தேசபக்தர் முதலாயினோர் வாழ்த்துக் கவிகளும் அடங்கியுள்ளன. தேசாபிமான செல்வராகிய திரிசிரபுரம் டாக்டர் டீ. எஸ். ராசன் அவர்களது அன்பிற்கறிகுறியாக இந்நூல் சமர்ப்பிக்கப்பட்டதாகத் தெரிகிறது. viii. 289/1920/IV.

O31,1x

1832. i. புறத்திரட்டு — அறத்துப்பால் — முதற் பகுதி : முதற் பதிப்பு ; ii. சோமசுந்தர தேசிகர், திருவாரூர்; விக்டோரியா அச்சுக்கூடம், திருவாரூர் ; iii. டிசம்பர், 1918 ; iv. செ. மூ. எ. 191 ; v. 23×14 செ. மீ. ; vi 0–4–0 ; vii, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில், சில முக்கியமான நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட பாடல்களின் தொகுப்பாகும் இது. இதில் பல்வேறு பொருள்களைப்பற்றி விளக்கப்பட்டுள்ளன. திருக்குறளைப்போல அதிகாரப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. 'ஏட்டுப் பிரதிகளிலிருந்து முதல் தடவையாக

அச்சிடப்படுவது. இது, பகுதி பகுதியாக வெளிவரும். முற்றிலும் அச்சிட்ட பிறகு, முகவுரை முதலியன பிரசுரம் செய்யப்படும்' என்று பதிப்பாசிரியர் குறிப்பிட்டுள்ளார். இது, திருவாரூர்த் தமிழ்ச் சங்கத்தின் இரண்டாவது பிரசுரமாகும். viii. 547/1919/I.

O13,1x

1833. i. மனோன்மணித் திரட்டு; ii. கே. சையதிமாம் புலவர், உறையூர்; ஸ்ரீகிருஷ்ணவிலாசம் பிரஸ், திருச்சிராப்பள்ளி; iii. 1919; iv. செ. மூ. எ. 2+16+1; v. 17×11 செ. மீ.; vi........; vii. மனநிலை அமைதியாகவும், சாந்தமாகவும் இருப்பதற்காக, சிவசக்தியான பார்வதியைப் புகழ்ந்து பாடிய பாடல்களைக் கொண்டது இப்புத்தகம். இதில் மனோன்மணி அகவல், பூஜை, சித்தர்களின் பூஜை சமாதி ஸ்தலம், ஆகியவைகளைப் பற்றிய விளக்கங்களும் அடங்கியுள்ளன. இதில், மனோன்மணி அஷ்டோத்திர சத நாமங்கள் மனோன்மணி அகவல், அமாவாசை முதல் பௌர்ணமி வரையில் மனோன்மணி பூஜை, சோடச விருத்தம் என்பவை உள. மேலும் சித்தர்கள், பதினெண் பாஷைகள், சித்தர்கள் சமாதிஸ்தலம் என்பவற்றைத் தெரிவிக்கும் பாடல்களும் உள. viii. 377/1619/I.

O31,Ix

மஸ்தான் சாகிபு

1834. i மஸ்தான் சாகிபு திருப்பாடற்றிரட்டு; ii. முத்துவடிவேலு முதலியார், சென்னை; பூமகள் விலாச அச்சுக் கூடம், சென்னை; iii, 1916: iv. செ. மூ. எ. 1011; v. 22×14 செ. மீ.; vi ....; vii. முப்பது தலைப்புகளின் கீழ் பாடப்பெற்ற பக்திப்பாடல்களைக் கொண்டது. ஒவ்வொரு பாடலுக்கும் பதவுரை, கருத்துரை, இறுதியில் தரப்பட்டுள்ளன. இவ்வுரையை ஆக்கியவர் காஞ்சிபுரம் இராமஸ்வாமி நாயுடு ஆவார். இவருடைய பாடல்கள் தாயுமானவர் பாடல்களைப் போன்று காணப்படுகின்றன. மஸ்தான் சாயபுவின் பேரில் திருத்தணிகைச் சரவணப் பெருமாளையர் பாடிய நான்மணிமாலையும், ஐயாசாமி முதலியார் முதலிய வேறுபலர் பாடிய தோத்திரப் பாக்களும் பிறவும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. viii. 255/1917/I.

O31,Ix

முத்துசாமி ஐயர், வே,. மதுரை

1835. i. தனிப்பா கோவை; ii. வே முத்துசாமி ஐயர், மதுரை தமிழ்ச்சங்கப் பவர் பிரஸ், மதுரை; iii. செப்டம்பர், 1919; iv. செ. மூ. எ. 438; v. 17×11 செ. மீ.; vi. 0-8-0;

vii. இந்நூலின் ஆசிரியர், தனது மனத்தில் தோன்றிய கருத்தினையமைத்து இயற்றிய தனிப்பாக்களின் தொகுப்பாகும். இதில் தோத்திரப் பாக்கள், வாழ்த்துப் பாக்கள், இரங்கற் பாக்கள், பல் வகைப் பாக்கள் என நான்கு வகையான பாடல் தொகுப்புக்கள் அடங்கியுள்ளன. பற்பல தமிழ்ப் பெரியார்களைக் குறித்த வரலாற்றுக் குறிப்புக்கள் சிலவும் இவர் பாடலால் தெரியவரும். திருவாடுதுறை ஆதீன வித்வான் கே.ரா. சுப்ரமணியக் கவிராயர், மதுரைக் கல்லூரித் தமிழ்ப் பண்டிதர் கோபாலகிருஷ்ணய்யர் முதலியோரும் சிறப்புப் பாயிரம் தந்துள்ளனர். viii. 352/1619/IV.

O31,1x

ஸ்ரீநிவாச ஐயங்கார், சு.& ஸ்ரீநிவாச ஐயர், பி. (தொ. கு.)

1836. i. செய்யுள் தொகுதி: முதற் பதிப்பு; ii. டி.கிருஷ்ணசாமி ஐயர், கும்பகோணம்; ஸ்ரீகிருஷ்ணவிலாச பிரஸ், கும்பகோணம், iii. செப்டெம்பர், 1920; iv. செ.மூ. எ. 230; v. 18×13 செ.மீ.; iv. 0—4—6; vii. பல நீதிகளை யுணர்த்தும் கவிதை, கதை ஆகியவற்றின் தொகுப்பே இந்நூல். vii. 1016/1920/III.

O31,1x

1837. i ஸ்ரீரங்கமகாத்மியத் தோத்திரத் திரட்டு: முதற் பதிப்பு ii. கோ. செல்லப்ப முதலியார், சென்னை; ஜீவகாருண்ய விலாச அச்சுக்கூடம், சென்னை; iii. நவம்பர், 1916; iv. செ. மூ. ப. 142; v. 15×13 செ.மீ; vi. 0-6-0; vii. அரங்கநாத சுவாமியைப் புகழ்ந்து பாடப்பெற்ற பாடல்களின் தொகுதியே இது. அருள்விளக்கும் பதிகம் தொடங்கி, ஸ்ரீகேசவப்பெருமாள் பதிகம் ஈறாக 33 சிறு பிரபந்தங்கள் உள. இவற்றை ஆக்கியோர் பெயர்கள் தெரியவில்லை. ஆழ்வார்களின் பாசுரங்களும் இத்தொகுதியில் சேர்க்கப்பட்டுள்ளன. viii. 1031/1917/I.

O31,1x

894·811109 இலக்கிய வரலாறு

இராகவய்யங்கார், மு.

1838 i. வேளிர் வரலாறு: இரண்டாம் பதிப்பு; மு. ii. இராவகய்யங்கார், இராமநாதபுரம்; தமிழ்ச் சங்க முத்திராசாலை, மதுரை; iii. 1916; iv. உ.ப. 76; v. 22×14 செ.மீ; vi.0-8-0; vii. சங்க காலத்துத் தமிழ் நூல்களில் காணப்படும் வேளாளர் சமுதாயத்தின் ஆதி வரலாறு இந்நூலின் கண் பேசப்படுகிறது. வேளிர்காலத்தைச் சேர்ந்த மன்னர் பலரைப் பற்றியும் பேசப்படுகிறது. வேளிர் குல அரசர்களில் ஆய், ஆவி, எவ்வி, பேகன், பாரி, வெண்மான் என்னும் அறுவரைப்பற்றிய வரலாறும், பிற வேளிர்களைப்பற்றிய வரலாறும் விவரிக்கப்பட்டுள்ளன. viii. 1916/III.

O31,1x

இராகவையங்கார், வி.

1839. i. வஞ்சிமாநகர்; ii. தமிழ்ச் சங்க முத்திராச் சாலை, மதுரை. iii. 1917; iv. செ.மூ. உ. ப. 160; v. 21×14 செ.மீ.; vi. . . .; vi. சேரர் பேரூர் மேல் கடற்கரைக்கண் உள்ள கொடுங்கோளூர் தானோ கொங்குநாட்டுக் கருவூர் தானோ என வாதப் பிரதி வாதங்கள்; நூல் வடிவிலும், பத்திரிகை வாயிலாகவும் உலவி வர, இராஜராஜேஸ்வர சேதுபதி அவர்கள் தூண்டுதலினால், இவற்றின் உண்மைகள் குறித்து இந்நூலில், ஆசிரியர் ஆராய்கிறார். இறுதியில் கொல்லிமலைப் பக்கத்தே ஆண் பொருநைக் கரையில் உள்ள கருவூரே வஞ்சி மாநகர் என்னும் முடிவிற்கு வருகிறார். தமது துணிவிற்கு ஆதாரமாகப் பற்பல சான்றுகள் காட்டி ஆசிரியர் விளக்கம் தந்துள்ளார். viii. 920/1917/III.

O31v

கிருஷ்ணசாமி ஐயங்கார், சா.

1840. i. கடை வள்ளலார் காலம்: முதற் பதிப்பு; ii. பீ, ஆர். ராம ஐயர் அண்டு கம்பெனி, சென்னை; பி. ஆர். ராமஐயர் & கம்பெனி பிரிண்டர்ஸ், சென்னை; iii. 1914; iv. உ. ப. 34; v. 21×14 செ.மீ. vi. ; vii. தமிழ் இலக்கியத்தில் காணும் கடையெழு வள்ளல்களைப்பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரை. இறுதியில் சில குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. viii. 320/1917/II.

O31v

சோமசுந்தர பாரதி, எஸ். , வக்கீல், தூத்துக்குடி

1841. i. சேரர் பேரூர்; ii. தமிழ்ச் சங்க முத்திராச் சாலை, மதுரை; iii. 1197; vi. உ. ப. 72; v. 21×14 செ.மீ. vi. 0–10–0; vii. சேர மன்னரின் தலைநகரமாகிய வஞ்சி மாநகரம் எது என்பது பற்றிய ஆய்வுரை நூல். சேரர் பேரூர், கருவூர் வஞ்சி என்னும் கொள்கைக்கு மாறாகப் பல கருத்துக்களைச் சான்றுகளுடன் எடுத்துக் காட்டுவது. பன்னிரண்டு பகுதிகளாகப் பகுத்து, ஆராய்ச்சிப் பொருள்களைத் தெளிவுற விளக்குகிறது. viii 766/1917/III.

O31v

நாராயணையங்கார், மதுரை

1842. i. வஞ்சிமாநகராய்ச்சி—முதற் பகுதி; முதற் பதிப்பு ; iii. திரு நாராயணைய்யங்கார், மதுரை; தமிழ்ச்சங்க முத்திரச்சாலை, மதுரை; iii. பிப்ரவரி, 1918; iv. உ.ப. 48; v. 21×14 செ.மீ. ; vi. 0–2–0 vii. பண்டைய நகரான வஞ்சி மாநகர் இருந்த இடம்பற்றித் தோன்றியுள்ள கருத்து வேறுபாடுகளை ஆராய்ந்து எழுதப்பெற்ற நூலிது. சிலப்பதிகாரம் முதலிய சங்க நூல்களிற் சொல்லப் பட்ட சேரர் தலைநகராகிய வஞ்சி மாநகரம் கொங்கிற் கருவூராமென்று ஒரு சாராரும், கடன் மலை நாட்டதென்று மற்றொரு சாராரும், வாதப் பிரதிவாதமான கட்டுரைகள் எழுதி வெளியிட்டு வந்தனர், அவருள், கொங்கிற் கருவூராமென்பார் வாதக் கட்சியாரும், அஃதன்றென்பார் எதிர்க் கட்சியாரும் ஆகிறார்கள். இந்நூல், எதிர்வாதக் கட்சியின் சார்பாக. சேரர் தலைநகரமாகிய

வஞ்சி மாநகரம், கொங்கிற் கருவூர் அன்று எனப் பல ஆதாரங் கொண்டு நிறுவுகின்றது. இது, மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைவரான, மாட்சிமை தங்கிய சேது மன்னர் கட்டளைக்கிணங்க செய்யப்பட்டதாகத் தெரிகிறது. vii. 790/1918/I.

O31v

பக்தவத்சலம், டி.

1843. i. சக்தி இலக்கியம் அல்லது பலமது வாய்ந்த நலமுறு நூல்கள்; ii. டி. பக்தவத்சலம், விவேகாநந்த அச்சியந்திரசாலை, சென்னை; iii. 1915; iv. உ. ப. 16; v. 22×14 செ.மீ.; vi.....; vii. 1915-ஆம் வருடம், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில், தமிழ் இலக்கியத்தின் பெருமையைப் பற்றி ஆற்றிய சொற்பொழிவு; viii. 714/1916/I.

O31v

894. 81104 தமிழ் உரைநடை

வடிவேலு செட்டியார், கோ.

1844. i. வியாச போதினி, இரண்டாம் பாகம்: முதற் பதிப்பு; ii. சண்முக முதலி; சச்சிதானந்த அச்சியந்திரசாலை, சென்னை; iii. 1915; iv. உ. ப. 86; v. 18×12 செ.மீ.; vi. 0—4—0; vii. ஒழுக்க முறையினை ஓதும் கட்டுரைகளின் தொகுப்பு இவ்வாசிரியரின் கட்டுரைத் தொகுப்பில் இது, இரண்டாவது பாகமாகும். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பது தொடங்கி, 'அஃகமும் காசும் சிக்கனத்தேடு' என்பது வரையில் உள்ள கொன்றை வேந்தன் நீதியுரைகளுக்கு ஏற்ற கதைகள் இடம் பெற்றுள்ளன. அரசனும் குடிகளும் என்னும் பெயரில் ஒரு கட்டுரை இறுதியாக உள்ளது. viii. 178/1916/I.

O31,6

894·81104 உரைநடை: நகைச்சுவை

இராமச்சந்திரன், கும்பகோணம்

1845. i. காப்பிக்கும் பழையதுக்கும் சண்டை, தேத்தண்ணீர் மத்திசம்: திருத்திய இரண்டாம் பதிப்பு; ii. பெ. ஆறுமுக முதலியார், சென்னை; முரகரி அச்சுக் கூடம், சென்னை; iii. டிசம்பர் 1917; iv. உ.ப. 7; v. 21×14 செ.மீ; vi. 0—1—0; vii. காப்பிக்கும் பழையதுக்கும் சண்டை ஏற்பட்டதற்குத் தேத்தண்ணீர் சந்து செய்வது போன்று கற்பனை செய்து எழுதப்பெற்ற நகைச்சுவையான உரையாடல் இதில் அடங்கியுள்ளது. தென்னாட்டு மக்களுக்குக் காப்பி முதலிய பானங்கள் தீங்கு விளைவிக்குமென்பதை யுணர்த்துவதற்காக எழுதப்பட்டது; viii. 351/772/1918/I.

O31,8

சுப்புலக்ஷ்மி அம்மாள், கும்பகோணம்

1846. i. சம்பந்தி பரிகாசப் பாடம்: முதற் பதிப்பு; ii. ம. நாராயணசாமிப் பிள்ளை, கும்பகோணம்; ஸ்ரீமகள் விலாச அச்சுக் கூடம், சென்னை; iii. மார்ச், 1918; iv. செ. மூ. ப. 20; v. 21×14 செ. மீ.; vi. 0–1–0; viii, திருமண காலத்தில் சம்பந்திகளுக்கிடையே நடக்கும் நகைச்சுவை மிக்க உரையாடல்கள், சம்பந்தி பரிகாசப் பாடல் என்ற தலைப்பில், கீர்த்தனை வடிவில், இந்நூலில் தரப்பட்டுள்ளன. கும்பகோணம் புத்தக வியாபாரி நாராயணசாமி பிள்ளை அவர்களால் பார்வையிடப் பட்டது. viii. 1161/1918/I.

031,8

செய்குதம்பிப் பாவலர், கா. ப., கோட்டாறு

1847. i. தேவலோகக் கிரிமினல் கேஸ்: திருத்திய நான்காம் பதிப்பு; ii. எம். ஆதி அண்டு கோ, சென்னை; சந்திரா பிரஸ், சென்னை; iii. எப்ரல், 1917; iv. உ.ப. 362; v. 19×13 செ.மீ.; vi. 1–8–0, vii. புராணக் கதைகளிலிருந்து சில சுவையான பகுதியை எடுத்து, நகைச்சுவையாக இக்காலத்தில் நீதி மன்றத்தில் நடக்கும் வழக்கைப் போன்று உருவாக்கி, வாதி, பிரதிவாதி, வக்கீல் வாதம், குறுக்கு விசாரணை முதலிய அம்சங்களோடு எழுதப்பட்டுள்ளது. அரிச்சந்திர சரித்திரம், சூர்ப்பனகை பங்கம், வாலிவதம், இலங்கா தகனம் அரம்பை பலவந்தம், கோபிகாஸ்திரீகளின் வஸ்திராபகரணம், துரோபதை வஸ்திராபகரணம், கீசகன் பலவந்தம் முதலிய வழக்குகள், இதில், இந்தியன் பீனல்கோடு அடிப்படையில் விசாரிக்கப்பட்டதாக இந்நூலில் காணலாம். இதற்கு இராமசாமி நாயுடு, திருவேங்கட நாயுடு, மற்றும் இராமலிங்க முதலியார், சாற்றுக் கவிகளும், ஆறுமுகஞ் சேர்வை அவர்கள் சிறப்புப் பாயிரமும் பாடியுள்ளனர். viii. 426/1917/II.

031,8

மீனாட்சி அம்மாள்

1848. i. வழி நடை உப்புமாப் பாட்டு; திருத்திய நான்காம் பதிப்பு; ii. ஆறுமுக முதலியார்; முரகரி அச்சுக் கூடம், சென்னை; iii 1916; iv. செ.மூ.எ. 12; v....; vi. 0–1–0; vii. வேடிக்கைப் பாடல்களின் தொகுப்பு. உப்புமா செய்து போடச் சொல்லுதல், கச்சேரிக்குப் போதல், இராச் சாப்பாடு, உறக்கம் என்று இவற்றைப் பொருளாகக் கொண்ட இசைப் பாட்டுகள் இதில் உள. கும்மி, சிந்து மெட்டுகளில் பாடல்கள் அமைந்துள்ளன. viii. 916/1916/II.

031,8

1849 i. ஹாஸ்ய மஞ்சரி: முதற் பதிப்பு; ii. ஜி.எ. வைத்தி நாதன் அண்டு கம்பெனி, சென்னை; தாம்சன் அண்டு கோ. பிரிண்டர்ஸ், சென்னை iii. செப்டம்பர். 1917; iv. உ.ப. 96; v. 18×13 செ.மீ. vi. 0-6-0; vii.

இந்நூல், பல நகைச் சுவையான சிறு கதைகளும், துணுக்குகளும் அடங்கிய தொகுப்பு ஆகும். 160 பகுதிகள் உள. இவை குடும்ப வாழ்க்கையைப் பற்றியவை, கோர்ட்டு சம்பந்தமானவை, சிறுவர்களைப் பற்றியவை, பள்ளிக்கூடச் சம்பந்தமானவை, வைத்தியர்கள் சம்பந்தமானவை, அசட்டுத் தனமானவை, இதர வேடிக்கைகள் என்னும் பெருந் தலைப்பின் கீழ் ஹாஸ்யத் துணுக்குகள் பாகுபடுத்தப்பட்டுள்ளன. viii. 263/1917/IV.

O31,8

1850. i. ஹாஸ்யமஞ்சரி: இரண்டாவது பதிப்பு; ii. ஜி.எ. வைத்திய நாதன் அண்ட் கம்பெனி, சென்னை; டாட்டா பிரின்டிங் ஒர்க்ஸ், சென்னை; iii. 1920; iv. உ.ப. 96; v. 18×13 செ.மீ. vi. 0–8–0; vii. இதில் வேடிக்கையான சிறு கதைகளும், விகடத் துணுக்குகளும் அடங்கியுள்ளன. இதன் முற்பகுதியில் குடும்ப வாழ்க்கையைப் பற்றியும், பிற்பகுதியில் இதர வேடிக்கைகளும் தொகுக்கப்பட்டுள்ளன, viii. 305/1920/IV.

O31,8

894. 8112 நாடகம்

1851. i. அரிச்சந்திர விலாசம்: முதற் பதிப்பு; ii. பி. முனுசாமி நாயுடு, சென்னை; சங்க நிதி விளக்க அச்சுக் கூடம், சென்னை; iii. மே, 1919; iv. செ.மூ.ப. 36; v. 18×11 செ.மீ.; vi. 0–0–6; vii. அரிச்சந்திரன் வரலாறு செய்யுள் வடிவமாக எழுதப்பட்டுள்ளது. இது ஆறு பாகங்களைக் கொண்ட நாடகமாகும். பட விளக்கங்களுடன் கூடியது. அரிச்சந்திரன் சரிதையின் பிற்பாகமாகிய காசி நகர் நிகழ்ச்சிகள் பற்றி இந்நூல் விளக்குகிறது. viii. 922/1919/IV.

O31,2

அருணாசலக் கவிராயர், சீர்காழி

1852. i. இராம நாடகக் கீர்த்தனை: முதற் பதிப்பு; ii. லாங்மன்ஸ் கிரீன் அண்டு கோ., சென்னை; மினர்வா பிரஸ், சென்னை; iii. நவம்பர், 1916; iv. செ.மூ.ப. 280; v. 17×13 செ.மீ.; vi. 2–0–0; vii. இந்நூலில், இராமாயண வரலாற்றை நாடக வடிவினில் இசைக்கேற்ப கீர்த்தனைகள் மூலமாக ஆசிரியர் எழுதியுள்ளார். சுந்தர காண்டம் வரையுள்ள பகுதிகள் இதில் உள. நூலாசிரியர் வரலாறும் நூலாசிரியர் பிறர்மேல் பாடிய பாடல்களும் தரப்பட்டுள்ளன. 'இராமாயண ஓரடிக் கீர்த்தனை' என்னும் பாடற் பகுதியும் இதில் உளது. viii. 838/1916/IV.

O31,2

இராகவாசாரியர், தூ. கோ.

1853. i. காந்தாமணி: முதற் பதிப்பு; ii. எஸ். மூர்த்தி & கம்பெனி, சென்னை; கபாலி பிரஸ், சென்னை; iii. டிசம்பர், 1916; iv. உ.ப. 182; v. 19×13 செ.மீ; vi. 0–8–0; vii. உண்மையான ஒரு மனைவி, தன் கணவன்பாற் கொண்ட தூய அன்பினால் தன் முயற்சியில் வெற்றி கொள்வதை விளக்கும் ஐந்து அங்கங்கள் கொண்ட நாடகம். viii. 124/1917/I.

O31,2

இராமச்சந்திர கவிராயர், இராயநல்லூர்

1854. i. மகாபாரத விலாசம், வில் வளைத்து மாலையிடுதல்: திருத்திய பதிப்பு; ii. கருணானந்த சுவாமிகள், சிதம்பரம்; கலைக்கியான முத்திராக்ஷர சாலை, சென்னை; iii. நவம்பர், 1915; iv. உ.ப.+செ.மூ.ப. 88; v. 21×14 செ.மீ.; vi. 0–3–0; vii. அர்ச்சுனன் வில்லை வளைத்து வென்று, திரௌபதியை மணமுடிக்கின்ற நிகழ்ச்சியினைச் செய்யுளும் விளக்கவுரைகளும் அடங்கிய நாடகமாக ஆசிரியர் எழுதியுள்ளார். இசைப்பாடல்களுக்கு இராகதாளக் குறிப்புகளும் கொடுக்கப் பட்டிருக்கின்றன. viii. 780/1916/III.

O31,2

இராமாநுஜம், ச.

1855. i. விராட்போதுலூர் வீரப்பிரமங்கார் நாடகம்; ii. நாகப்ப ஆச்சாரி, அரும்பாக்கம்; முரஹரி அச்சுக்கூடம், சென்னை; iii. ஜனவரி, 1920; iv. உ.ப.+செ.மூ.ப. 51; v. 21×14 செ.மீ.; vi. இலவசம்; vii. இதில் இக்கலியுகத்தில் நடக்கப் போகிற பல நிகழ்ச்சிகளைப் பற்றியும் சொல்லப்பட்டுள்ளது. viii. 623/1920/I.

O31,2

இராஜவடிவேல் தாசர், மதுரை

1856. i. மாருதி விஜயமென்னும் மயிலிராவணன் சரித்திரம்: முதற் பதிப்பு; ii. பார்த்தசாரதி நாயுடு, சென்னை; சக்கர வர்த்தி அச்சுக்கூடம், சென்னை; iii. 1916; iv. செ.மூ.ப. 44; v. 21×14 செ.மீ.; vi. 0–4–0; vii. இராவண னுக்கும் ஹனுமானுக்கும் நடந்ததாகக் கூறப்படும் யுத்தத்தை விவரிக்கும் புராணக் கதை. இது பாட்டு வடிவமாக அமைந்த நாடக நூல். வசனமும் கீர்த்தனைப் பாடல்களும் விரவி அமைந்தது. viii. 884/1916/II.

O31,2

இராஜேந்திரம் பிள்ளை, பா. அ அ.

1857. i. ஆபிரகாம் சாராள் விலாசம்: முதற் பதிப்பு; ii. பா.அ. அ. இராஜேந்திரம் பிள்ளை, சென்னை; மெர்குரி பிரஸ், சென்னை: iii. ஏப்ரல், 1918; iv. செ.மூ.ப. 118; v. 21×14 செ.மீ.; vi. 0–6–0; vii. இதில் ஆதாம் ஏவாள் இவர்களின் வாழ்க்கை வரலாறு நாடகமாக விளக்கப் பட்டுள்ளது. சென்னை அமிர்தகவி அப்பாவுப் புலவரின் குமாரர் இந்நூலாசிரியர் எனத் தெரியவருகின்றது. நாடக அலங்காரத்திற்குரிய முறையில் நாட்டுப் பழமொழிகள், கற்பனைகள், வழக்கப் பேச்சுக்கள், படிப்பினைகள் முதலியன இதில் கலந்துவருகின்றன. viii. 214/1918/II.

O31,2

1858. i. இசாக்கு–ரெபெக்காள் விலாசம் முதற் பதிப்பு; ii. ஆர். எ. ந. நடேசன், சென்னை; மெர்குரி பிரஸ், சென்னை; iii. ஆகஸ்ட், 1918; iv. செ.மூ.ப. 164; v. 21×14 செ.மீ.; vi. 0–6–0; vii. இது கிறித்துவச் சமயக் கொள்கை கொண்ட ஒரு நாடகம். இசாக்கு ரெபெக்காள் நாடகத்தின் இரண்டாம் பாகமே இப்புத்தகம். viii. 941/1918/III.

O31,2

1859. i. ஒட்ட நாட்டார் நாடகாலங்காரம்: திருத்திய பதிப்பு; ii. தி. இராகவலு நாயுடு, சென்னை; ஸன் ஆப் இந்தியா பிரஸ், சென்னை. iii. செப்டெம்பர், 1920; iv. உ.ப.+செ. மூ. ப. 96; v. 22×14 செ.மீ.; vi. 0–6–0; vii. இஃது ஆறுபாகங்களடங்கியது. ஐதீகப் பிரகாரம் விசித்திர படங்களமைந்த நூதன பெரிய ஒட்ட நாட்டார் நாடகாலங்காரம் வரலாற்றுச் சுருக்கத்துடன் கூடியது. ஓர் ஒட்டப்பெண் தன் கணவனை வஞ்சித்துப் பிறனுடன் சென்று வாழ்ந்து, குழந்தைகள் பெற்றுப் பின்னர் அச்சோர நாயகனாலும் கைவிடப்பட்ட நிலையில், காளிகா தேவியின் அருளால் மூவரும் தேவர் களும் அவளுக்குக் காட்சியீந்து வரந்தந்த வரலாறு இதன்கண் கூறப்பட்டுள்ளது. viii. 904/1920/III.

O31,2

கங்காதர சிவா, சி. மு.

1860. i. கீசகன்: முதற் பதிப்பு; ii. சி.மு. கங்காதர சிவா, சென்னை; வேவர்லி பிரஸ், சென்னை; iii. செப்டெம்பர், 1918; iv. உ.ப. 66; v. 22×14 செ. மீ.; vi. 0–6–0; vii. மகா பாரதத்தில் பேசப்படுகின்ற கீசகனுடைய கதையை நாடகமாக ஐந்து அங்கங்களாகப் பிரித்து ஆசிரியர் எழுதியுள்ளார். கெடுவான் கேடு நினைப்பான் என்ற பழமொழியின்

உண்மையினை நாம் இந்தக் கதை மூலம் அறியலாம். இது மிகவும் இனிய நடையில் எழுதப்பட்ட ஓர் அரிய நாடகம். இன்னிசைப் பாடல்கள் பல இடையிடையே விரவி வருகின்றன. திரு. சிந்நய நாயகர் என்பார் அளித்த சாற்றுக் கவியுடன் கூடியது. viii. 698/1918/III.

O31,2

1861. i. பட்டினத்தடிகள்: முதற் பதிப்பு; ii. சி.மு. கங்காதர சிவா, சென்னை; வேவர்லி அச்சியந்திர சாலை, சென்னை; iii. நவம்பர், 1919; iv. உ.ப.+செ.மூ.ப. 92; v. 21×14 செ.மீ.; vi. 0–8–0; vii. மிகவும் புகழ்பெற்ற சிவ பக்தரான திருவெண்காடரென்னும் பட்டினத்தடிகளைப் பற்றிய வரலாற்றினைக் கொண்ட ஓர் இனிய தமிழ் நாடகம். இன்னிசை பாடல்களும் இதில் அமைந்துள்ளன. சென்னை கோ. வடிவேல் செட்டியார், திருவிசை நல்லூர்ப் புராணிகர் சிந்நய நாயகர், நாகை சொ. தண்டபாணிப் பிள்ளை முதலியோர் இதற்குச் சாற்றுக்கவிகள் பாடியுள்ளனர். viii. 761/1919/IV.

O31,2

1862. i. பாண்டவர் வனமேகுதல்; ii. எஸ். வி. என். பிரஸ், சென்னை; iii. 1917; iv. உ.ப. 75; v. 21×14 செ.மீ.; vi. 0–8–0; vii. மகாபாரதத்தினின்றும் எடுக்கப் பெற்ற சரிதம், நாடகத் தமிழ் முறையில் இச்சரிதத்தை ஆசிரியர் அமைத்துள்ளார். ஐந்து அங்கங்கள் கொண்டது இந்நாடகம். நாடகப்பாத்திரங்களின் பட்டியல் முதற்கண் தரப்பட்டிருக்கிறது. viii. 738/1917/III.

O31,2

கண்ணுசாமிக் கோனர், மு., பிரான்மலை

1863. i. காம சௌந்தரி சரித்திரம்: முதற் பதிப்பு; ii. மு. கண்ணுச்சாமிக் கோனர், பிரான்மலை; கமலா பிரஸ்; திருப்பாப்புலியூர்; iii. செப்டெம்பர், 1918; iv. உ.ப.+செ.மூ.ப. 91; v. 21×14 செ.மீ.; vi. 0–10–0; vii. காம சௌந்தரி என்பவள் எவ்வளவு துன்பங்கள் தன் வாழ்க்கையில் வந்த பொழுதும் சிறிதும் தவறுமல், கற்பு நெறியோடு ஒழுகி, முடிவில் இறையருளால் மணம் முடித்த வரலாற்றினை இக்கதை நன்கு விளக்குகின்றது. இந்நூல் முழுதும் இசைப்பாடல்களாலாகியது. மதுரைக் கந்தசாமிக் கவிராயர் எழுதிய வசன நூலைப் பின்பற்றி நடிக்கத்தக்க வண்ணம் இசைப்பாடலும் உரையாடலும் அமைய இவ்வாசிரியர் எழுதியுள்ளார். இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர் பிரான்மலை திரு. முத்துவருகு உபாத்தியாயரவர்கள், திரு. எம். ஆர். கே. கந்தசாமிக் கவிராயர் முதலியோர் பாடிய சாத்துக்கவிகள் இதற்கு உண்டு. viii. 1009/1919/I.

O31,2

கந்தசாமிப் பிள்ளை, கவிராஜ, மதுரை

1864. i. கமலமதி: திருத்திய மூன்றும் பதிப்பு; ii. நா. முனிசாமி முதலியார், நாகவேடு; ஆனந்த போதினி அச்சியந்திர சாலை, சென்னை; iii. பிப்ரவரி, 1919; iv. உ. ப. 101; v. 22×14 செ. மீ.; vi. 0–8–0; vii. தனது கனவினுல் பல செயல்களைச் செய்து இன்பம் பெற்ற கமலமதி என்ற பெண்ணின் வரலாறு இதில் அடங்கியுள்ளது. இரண்டு அங்கங்களில் நாடக உருவில் எழுதப்பட்டிருக்கிறது. "வரும் விதி வருமுன் பெருமதி துணைக் கொள்" என்றபடி தக்க அறிவுரைகள் கூறப்பட்டுள்ளன; viii. 958/1919/I.

O31,2

1865. i. சற்குண சாவித்திரி அல்லது கற்பின் வெற்றி; ii. என். கணபதி முதலியார்; மாணிக்க விலாச அச்சுக்கூடம் சென்னை; & ஸன் ஆப் இந்தியா அச்சுக்கூடம், சென்னை; iii. 1916; iv. செ. மூ. ப. 42; v. 21×14 செ. மீ.; vi. 0–2–0; vii. இது தி. முருகேச நாயகர் அவர்களின் கம்பெனியில் நடந்து வந்த நாடகமாகும். பாடல்களும் உரையுமாகக் கலந்து செல்லும் நடையினது. சாவித்திரி—சத்தியவான் என்னும் புராணக் கதையே புதிய நடையில் பல நாடகச் சிறப்புக்கள் விளங்க இதில் அமைந்துள்ளது. viii. 135/1916/IV.

O31,2

கன்னைய செட்டி (ப. து.)

1866. i. புலந்திரன் களவு: புதிய பதிப்பு; ii. முனிசாமி முதலியார், சென்னை; சண்முகம் பிரஸ், சென்னை; iii. 1918; iv. உ. ப.+செ. மூ. ப. 80; v. 20×14 செ. மீ.; vi. 0–4–0; vii. புலந்திரன் என்னும் இளவரசனுக்கும் கலந்தாரி என்னும் இளவரசிக்கும் நடந்த இரகசியத் திருமணத்தை விளக்கும் கதையைக் கொண்ட நாடகம். புலந்திரன் தாயாகிய அல்லி ராணி பாரதக் கதையில் பார்த்தனின் மனைவியும் பாண்டியன் புதல்வியுமாகக் குறிப்பிடப்படும் சித்திராங்கதையே என ஊகிக்க இடமுண்டு. viii. 794/1918/I.

O31,2

கன்னைய நாயுடு, வேலூர்

1867. i. கார்த்திருந்த மாதைப் பார்த்திருந்த வேந்தன் கொண்டு போன மதன சேகரன்; ii. வே. ஜெயவேலு முதலியார்; டைமண்டு அச்சுக்கூடம், சென்னை; iii. 1916;

iv. உ. ப. 132; v. 22×14 செ. மீ.; vi. 0-8-0; vii. 'ஊழின் விளைவை ஒருவராலும் மாற்ற இயலாது' என்பதனைக் கருப்பொருளாகக் கொண்டது. இதன் ஆசிரியர் பால ஸ்வரூபானந்த சுவாமிகளின் பேரப் புதல்வராவர். கதை நிகழிடங்களைத் தலைப்புக்கள் போலக் காட்டி, அங்கங்கு நிகழும் செயல்களை விவரித்து உரைக்கின்றது. viii. 508/1916/I.

O31,2

1868. i. காலவரிஷி என்னும் சித்திர சேன கெந்தர்வ உபாக்கியானம்; ii. எம். ஏ. சடகோபாசாரி, கும்பகோணம்; லக்ஷ்மி விலாசா பிரஸ், கும்பகோணம்; iii. 1915; iv. உ. ப. 42; v. 18×13 செ. மீ.; vi. 0-4-0; vii. பெண்கள் சொல்லுகிறபடி நடவாமலும் தனக்கொவ்வாத செயல்களில் ஈடுபடாமலும் இறைவன் அருளுக்குப் பாத்திர மாக வேண்டுமென இந்நூல் பகர்கிறது. நமது பாவங்களைப் பொறுத்து அருள்புரியுமாறு கடவுளை வேண்டுவோமாயின் அவர் நம்மை மன்னித்து அருளுவார் என்றும் அறிவுறுத்தப்படுகிறது. பத்துக் களங்களாகப் பாகுபடுத்தப் பட்டிருக்கிறது. viii. 526/1916/I.

O31,2

கிருஷ்ணசாமி பாவலர், தெ., சதாவதானம்

1869. i. சாவித்திரி: முதற் பதிப்பு; ii. வி. ஏ. செங்கல் வராய நாயுடு, சென்னை; கார்ஜான் பிரஸ், சென்னை; iii. 1916; iv. உ. ப. 77; v. 21×14 செ. மீ.; vi. 0-8-0; vii. சாவித்திரி சத்தியவந்தன் என்னும் புராணக் கதை. இதில் மூன்று அங்கங்கள் உள்ளன. முதனூல் கருத்துக்கு முரணாகாதபடி எழுதப் பெற்றது. நாடக அமைப்பையும் நாடக மேடை அமைப்பையும் எண்ணி எழுதப் பெற்றது இந்த நாடகம். viii. 800/1916/II.

O31,2

1870. i. சாவித்திரி: இரண்டாம் பதிப்பு, ii. ஆர். வெங்கடா சலம் கம்பெனி, திருவல்லிக்கேணி, சென்னை; கே. ஆர். பிரஸ், சென்னை; iii. ஜூன், 1918; iv. உ. ப. 104; v. 18×13 செ. மீ.; vi. 0-8-0; vii. சத்தியவான் சாவித்திரி வரலாற்றை நாடகமாக எழுதப்பட்டுள்ளது. இடையிடையே செய்யுட்கள் தரப்பட்டுள்ளன. மூன்று அங்கங்களையுடையது. இறுதியில் இந்நாடகத்திற்கு வேண்டிய சில கீர்த்தனைகள் உள்ளன. நாடக அமைப்பையும் நாடகமேடை அமைப்பையும் கருதி, நடிப்போரை மனத்துட்கொண்டு அமைக்கப்பட்டது இந் நாடகம். viii. 878/1918/II.

O31,2

1871. i. பிரகலாதன்: திருத்திய இரண்டாம் பதிப்பு; ii. பி.வி கண்ணன் அண்டு கம்பெனி, சென்னை; சச்சிதானந்தம் பிரஸ், கோமளேசுவரன்பேட்டை, சென்னை; iii. 1917; iv. உ.ப.+செ.மூ.ப. 92; v. 19×13 செ. மீ. vi. 0–8–0; vii. புராணக் கதையான பிரகலாதனின் சரித்திரம் இதில் நாடக வடிவில் கூறப்பட்டுளளது. நாடகப் பாத்திரப் பட்டியல் தரப்பட்டுள்ளது. மூன்று அங்கங்களில் அமைந்தது இந்நாடகம். தெருக்கூத்தாடும் கூட்டத்தார் நடித்த பிரகலாத சரித்திரமே ஆசிரியரை இந்நாடகம் எழுதத் தூண்டியதாம். தாம் பாடிய புதுப் பாடல்களோடு ஆன்றோர் செய்யுட்கள் சிலவற்றையும் இதன்கண் சேர்த்துள்ளார். viii. 1069/1917/II.

O31,2

1872. i. விஜய விலோசனை: முதற் பதிப்பு; ii. சி. எ. செங்கல்வராய நாயுடு, சென்னை; கர்சான் பிரஸ், சென்னை; iii. பிப்ரவரி, 1916; iv. உ. ப. 80; v. 21×14 செ. மீ.; vi. 0–8–0; ஓர் உண்மையுள்ள மனைவியின் கதையைப் பற்றி மூன்று அங்கங்களில் விளக்கும் நாடக நூல். நாடகப் பாத்திரப் பட்டியல் ஒன்று நூன் முதலில் தரப் பட்டுள்ளது. பிரகலாதன், சாவித்திரி, கமலேசன் என்பன இவ்வாசிரியர் எழுதிய பிற நாடகங்களாகும். சென்னை சுகுண விலாச சபையாரின் நாடகப் பரிசு அறிவிப்பினை முன்னிட்டு எழுதப் பெற்றது இந்நூல். viii. 438/1917/I.

O31,2

கிருஷ்ணப்பிள்ளை, விக்கிரவாண்டிசாலை

1873. i. கெங்கையம்மன் நாடகம்: திருத்திய பதிப்பு; ii. அருணாசல முதலியார், கோகுலாபுரம்; கலைக்கியான முத்திராக்ஷரசாலை; iii. அக்டோபர், 1915; iv. செ. மூ. ப. 87; v. 22×14 செ. மீ.; vi. 0–4–0; vii. திருப்பதியில் கோயில் கொண்டுள்ள வழிபடு தெய்வமான கெங்கையம்மனின் வாழ்க்கை நாடகமாகச் செய்யுளில் விவரிக்கப்பட்டுள்ளது. கதைத் தொடர்பு விளங்க உரைநடையும் இடையிடையே கலந்துவர இயற்றப் பெற்றது. viii. 779/1916/III.

O31,2

1874. i. சயிந்தவ நாடகாலங்காரம்: முதற் பதிப்பு; ii. அருணாசல முதலியார், கோகுலாபுரம்; கலைக்கியான முத்திராக்ஷர சாலை, சென்னை; iii. ஜூன், 1919; iv. செ. மூ. ப. 88; v. 21×14 செ. மீ.; vi. 0–5–0; vii. மகாபாரதக் கதையில் வருகின்ற சயிந்தவன் என்பானின் கதை நாடகமாகச் செய்யுள் வடிவத்தில் எழுதப்பட்டுள்ளது. கீர்த்தனை, இசைப் பாடல்களும் உரைநடையும் கலந்த நடையில் அமைந்துள்ளது. viii. 743/1919/IV.

O31,2

கிருஷ்ணமூர்த்தி அய்யர், எம்., செருநுங்கூர்

1875. i. சுகுண சுந்தரீயம்: முதற் பதிப்பு; ii. எம். கிருஷ்ண மூர்த்தி அய்யர், கும்பகோணம்; லக்ஷ்மி விலாசம் பிரஸ், கும்பகோணம்; iii. ஏப்ரல், 1918; iv. உ. ப. 29; v. 21×14 செ. மீ.; vi. 0–12–0; vii. கல்விச் செல்வத்தால் விளையும் இன்பமே பல்வகை இன்பங்களையும் விட மேலானது என்பதைப் பற்றியும் காதலன் காதலி ஆகிய இருவரும் தம்முள் எல்லாவற்றிலும் ஒத்து வாழ்தலே மேன்மையானது என்பதைப் பற்றியும் எடுத்துக்கூறும் நாடக நூல் இது. கும்பகோணம் எ. சுந்தரேச சாஸ்திரி அவர்கள் இந்நூலுக்குப் பாராட்டுரை தந்துள்ளார். viii. 63/1918/II.

O31,2

கிருஷ்ணசாமி சர்மா

1876. i. துருவன்: முதற் பதிப்பு; ii. மேனேஜர், சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னை; தாத்தா பிரிண்டிங் ஒர்க்ஸ், சென்னை; iii. ஜனவரி, 1920; iv. உ. ப.+செ.மு.ப. 50; v. 19×13 செ. மீ.; vi. 0–5–0; vii. துருவனைக்குறித்த புராணக்கதை மூன்று அங்கங்களில் நாடகமாக்கித்தரப் பட்டுள்ளது. viii. 224/1920/II.

O31,2

கோபாலகிருஷ்ண பிள்ளை, ஸி., நாகை

1877. i. கண்ணகி: திருத்திய நான்காம் பதிப்பு; ii. லலிதா விலாச புத்தகசாலையார், சென்னை; கார்டியன் பிரஸ், சென்னை; iii. செப்டம்பர், 1917; iv. உ. ப. 186; v. 19×13 செ.மீ.; vi. 0–14–0; சிலப்பதிகாரக் கதையான இதில் கண்ணகியின் சிறப்புப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. ஐந்து அங்கங்கள் கொண்ட நாடகம். நாடகக்கதைச் சுருக்கமும், பாத்திரப்பட்டியலும் இதில் தரப்பட்டுள்ளன. 'கண்ணகி அல்லது காதலிற் சிறந்த காரிகை' என்பது இதன் முழுப்பெயர். மணிமங்கலம் திருநாவுக்கரசு முதலியார் என்பார் இதற்கு 'நூன்முகம்' எழுதியுள்ளார். viii. 529/1917/IV.

O31,2

கோபாலகிருஷ்ணய்யர், எம்.

1878. i. மௌன தேசிகர்: முதற் பதிப்பு; ii. எம். கோபால கிருஷ்ணய்யர், மதுரை; கிருஷ்ண விலாசம் பிரஸ், திருமங்கலம்; iii. 1918, iv. உ. ப. 28; v. 23×15 செ. மீ.; vi......; vii. இது ஒரு நகைச்சுவை நாடகமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. நாடகபாத்திரப்பட்டியல் நூல் முதலில் உண்டு. viii. 351/1910/I.

O31,2

1879. i. விசுவநாதன் அல்லது கடமை முரண்: முதற் பதிப்பு; ii. எம். கோபாலகிருஷ்ணையர், மதுரை; தமிழ்ச்சங்கம் பவர் பிரஸ், மதுரை; iii. மார்ச், 1919; iv. செ. மூ. ப. 67; v. 18×12 செ. மீ.; vi. 0–8–0; vii. இது ஐந்து அங்கங்கள் கொண்ட நாடகம். அரசன் கட்டளையை நிறைவேற்ற வேண்டும், அப்படி நிறைவேற்றுவதாயிருந்தால் தன் தந்தையை எதிர்த்துப் போர் புரிந்தாகவேண்டும். இந்நிலையில் தந்தையுடன் போராடி வெற்றியும் கண்டு, தந்தையின் உயிருக்கு ஊறு நேராவண்ணம் அரசனிடம் உயிர்ப்பிச்சையும் பெற்ற ஒரு தனயனது வீர சரிதம் இது. viii. 18/1919/II.

O31,2

சண்முக முதலியார், க.

1880. i. ஜெய சேனு: முதற் பதிப்பு; ii. எம். வ. சுப்பிரமணிய முதலியார்; மனோன்மணி விலாசம் பிரஸ், சென்னை; iii. அக்டோபர் 1920; iv. உ. ப. 36; v. 21×14 செ.மீ.; vi. 0–6–0; vii. ஜெயசேனு என்ற பெண்ணின் தீரச்செயல் களைப் பற்றியும், அவள் காதலித்த காதலனையே மணமுடிக் கின்ற நிகழ்ச்சியினையும் மூன்று அங்கங்களாக அமைத்து எழுதப்பெற்ற நாடகமாகும் இது. viii. 233/1920/IV.

O31,2

சம்பந்த செட்டி, ஜி. வி.

1881. i. சாவித்திரி: திருத்திய இரண்டாம் பதிப்பு, ii. ஜி. வி. சம்பந்த செட்டி; கபாலி பிரஸ், சென்னை; iii. 1916; iv. உ. ப. 76; v. 21×14 செ. மீ.; vi. 0–8–0; vii. புராணக் கதையாகிய சாவித்திரி என்னும் கற்புக்கரசி வரலாறு நாடகஉருவமாக விளக்கப்பட்டுள்ளது. மூன்று அங்கங் கள் கொண்ட சிறு நாடகம். இந்நூலாசிரியரால் இயற்றப்பெற்ற மற்ற தமிழ் நாடகங்கள் கீசகன், உத்தரை, சுனந்தனி முதலியனவாம். viii. 376/1916/III.

O31,2

1882. ருக்மணி கல்யாணம்—பாகம் 1: முதற் பதிப்பு; ii. எஸ். மூர்த்தி அண்டு கம்பெனி. சென்னை; கபாலி அச்சுயந்திர சாலை, சென்னை; iii. அக்டோபர், 1917; iv. உ. ப. 16; v. 22×14 செ. மீ.; vi. 0–12–0; vii. கிருஷ்ணன் ருக்மணியை மணந்த புராணக் கதை இந்நூலில் நாடகமாகத் தரப்பட்டுள்ளது நாடகப் பாத்திரப்பட்டியல் ஒன்றும் உண்டு. மூன்று அங்கங்களில் அமைந்தது இந்நாடகம். "கிருஷ்ண லீலை" என்னும் தொடரில் இது முதற்பாகம் ஆகும். viii. 358/1917/IV.

O31,2

சம்பந்த முதலியார், ப.

1883. i இரண்டு நண்பர்கள்: மூன்றாம் பதிப்பு; ii. ப. சம்பந்த முதலியார், சென்னை, கபாலி அச்சுக்கூடம், சென்னை; iii. ஜூன், 1919; iv. உ. ப. 139; v. 21×15 செ. மீ.; vi. 0–14–0; vii. பொய்க்காதலின் தீமையை விளக்கும் ஐந்து அங்கங்கள் கொண்ட நாடகம். viii. 965/1919/II.

O31,2

1884. i. ஊர்வசியின் சாபம்: முதற் புத்தகம்; ii. ப. சம்பந்த முதலியார், சென்னை; பீர்லஸ் பிரஸ். சென்னை; iii. ஆகஸ்ட், 1917; iv. உ. ப. 71; v. 22×14 செ. மீ.; vi. 0–8–0; vii. மகாபாரதத்தின் ஒரு கிளைக்கதையே இது. அர்ச்சுனன் ஊர்வசியிடம் சாபம் பெற்றதை நாடகவடிவில் ஆசிரியர் தந்துள்ளார். நாடகப் பாத்திரங்களின் விவரமும் கதை நிகழிடம் முதலிய விவரங்களும் முதற்கண் கொடுக்கப் பட்டுள்ளன. viii. 681/1917/III.

O31,2

1885. i. கள்வர் தலைவன்: மூன்றாவது திருத்திய பதிப்பு; ii. மூர்த்தி அண்டு கோ., சென்னை; கபாலி பிரஸ், சென்னை; iii. நவம்பர், 1917; iv. உ. ப. 104; v. 22×14 செ. மீ.; vi. 0–12–0; vii. இது ஒரு துன்பியல் நாடகம். மூன்று அங்கங்கள் கொண்டது. இந்நூலாசிரியரால் இயற்றப்பட்ட நாடகங்களின் விவரமும் முகப்புப் பக்கத்தில் சேர்க்கப்பட்டிருக் கிறது. viii. 812/1917/IV.

O31,2

1886. i. சபாபதி: முதற் பதிப்பு; ii. ப. சம்பந்தம், சென்னை; பீர்லெஸ் பிரஸ், சென்னை; iii. ஜனவரி, 1918; iv. உ. ப. 60; v. 22×14 செ. மீ.; vi. 0–8–0; vii. சபாபதி என்ற சமூக நாடகத்தின் முதல் பாகம் இது. சமூகப் பழக்க வழக் கங்களை வேடிக்கையாகவும், நகைச்சுவை ததும்பவும் ஆசிரியர் சித்தரித்துள்ளார். ஆங்கிலம் கலந்து பேசும் நவநாகரிகத்தின் போக்கையும் இந்நாடகத்துள் அங்கங்கே காணலாம். viii. 478/1919/I.

O31,2

1887. i. பிரஹசனங்கள்: முதற் பதிப்பு; ii. ப. சம்பந்த முதலியார், சென்னை; பீர்லெஸ் பிரஸ், சென்னை; iii. ஏப்ரல், 1917; iv. உ. ப. 66; v. 22×14 செ. மீ.; vi. 0–8–0; vii. இந்நூலில் கோனேரி அரசகுமாரன், கண்டு பிடித்தல்,

'சந்தையிற் கூட்டம்' என்ற மூன்று நாடகங்கள் உள்ளன. நகைச்சுவை மிகுந்தது. இதனை ஆசிரியர் 'பிரஹசனம்' என்று வழங்குகின்றார். viii. 216/1917/II.

O31,2

1888. i. புத்த அவதாரம்: முதற் பதிப்பு; ii. டௌடன் கம்பெனி, சென்னை; பீர்லெஸ் பிரஸ், சென்னை; iii. ஜூலை, 1918; iv. உ. ப. 123; v. 22×15 செ. மீ.; vi. 1–0–0; vii. உலகில் தோன்றிய மிக முக்கிய சமுதாயச் சீர்திருத்தப் பெரியார்களில் முதல்வரான புத்த தேவனின் வாழ்க்கை வரலாற்றை நாடகமாக இதில் ஆசிரியர் நமக்கு அளித்துள்ளார். ஐந்து அங்கங்கள் கொண்டது. லீலாவதி, சுலோசனை, கள்வர் தலைவன், இரண்டு நண்பர்கள், மனோகரன் முதலிய பல நூல்கள் இவ்வாசிரியரால் செய்யப்பட்டன. இதில் புத்த பகவானின் பெருமையையும் அவர்தம் போதனையின் சிறப்பையும் விளக்குகிறார். viii. 402/1918/III.

O31,2

1889. i. மனோகரா: நான்கா பதிப்பு; ii. எஸ். மூர்த்தி அண்ட் கம்பெனி, சென்னை; கபாலி பிரஸ், சென்னை; iii. செப்டெம்பர், 1920; iv. உ. ப. 171; v. 21×14 செ. மீ.; vi. 0–12–0; vii. சிறிய தாயாரின் கொடுமைக்கும், தந்தையின் கொடுமைக்கும் ஆளாகி முடிவில் தன்சொந்த முயற்சியால் சோழ நாட்டின் அரியணை ஏறியதோடு மட்டுமல்லாது தன்தந்தையையும் தாயாரையும் ஒன்று சேர்க்கும் ஒரு சுத்தவீரனை மனோகரனின் வீரச்செயலை நாடகமாக இந்நூலில் காணலாம். viii. 116/1920/IV.

O31,2

1890 i. மார்க்கண்டேயர்: இரண்டாம் பதிப்பு; ii. கபாலி அச்சுக் கூடம், சென்னை; iii. ஜூன், 1919; iv. உ. ப. 64; v. 22×14 செ. மீ.; vi. 0–10–0; vii. இது மார்க்கண்டேயரைப் பற்றிய மூன்று அங்கங்கள் கொண்ட ஒரு நாடகம். சில இசைப்பாடல்களும் இடத்திற்கேற்றவண்ணம் சேர்க்கப் பட்டுள்ளன. viii. 120/1919/III.

O31,2

1891. i. முற்பகற் செயின் பிற்பகல் விளையும்: முதற் பதிப்பு, ii. டௌடன் அண்ட் கம்பெனி, சென்னை; பீர்லெஸ் பிரஸ்; சென்னை; iii. ஜூன், 1917; iv. உ. ப. 64; v. 22×14 செ. மீ.; vi. 0–8–0; vii. "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" என்ற பழமொழியை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பெற்ற நாடகமாகும். நாடகப் பாத்திரப் பட்டியல் ஒன்றும் உள்ளது. மூன்று அங்கங்கள் கொண்டது இந் நாடகம். viii. 92/1917/III.

O31,2

1892. i. விரும்பிய விதமே : இரண்டாம் பதிப்பு; ii. மூர்த்தி அண்டு கம்பெனி, சென்னை; கபாலி பிரஸ், சென்னை; iii. ஜூலை, 1920; iv. உ. ப. 128; v. 22×15 செ. மீ.; vi. 1–0–0; vii. ஷேக்ஸ்பியரின் 'ஆஸ் யூ லைக் இட்', (As you like it) என்ற நாடகத்தின் மொழி பெயர்ப்பான "விரும்பிய விதமே" என்னும் தமிழ் நாடகம். இது ஐந்து அங்கங்களைக் கொண்டது. viii. 462/1920/III.

O31,2

1893. i. விஜயரங்கம் அல்லது தோன்றிற் புகழொடு தோன்றுக : முதற் பதிப்பு; ii. டௌடன் அண்டு கம்பெனி, பீர்லெஸ் பிரஸ், சென்னை; iii. செப்டெம்புர், 1916; iv. உ. ப. 114; v. 21×14 செ. மீ.; vi. 0–12–0; vii. 'விஜயரங்கம் அல்லது தோன்றிற் புகழொடு தோன்றுக' என்ற இந் நாடகம் ஐந்து அங்கங்களைக் கொண்டதாகும். இதில் புகழோடு கூடிய வாழ்க்கையைப் பற்றியும் தென்னிந்திய வாழ்க்கை யின் நிலைமைகளைப் பற்றியும் ஆசிரியர் நன்கு விளக்கியுள்ளார். viii. 734/1916/IV.

O31,2

1894. i. வேதாள உலகம் : மூன்றும் பதிப்பு; ii. ப. சம்பந்த முதலியார், சென்னை; கபாலி பிரஸ், சென்னை; iii. ஆகஸ்டு, 1916; iv. உ. ப. 77; v. 21×14 செ. மீ.. vi. 0–8–0; vii. மூன்று அங்கங்களைக் கொண்டது, இந்நாடகம். இதில் பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிதலையும், பணிவினால் ஏற்படுகின்ற நன்மையினையும் பற்றி நன்கு விளக்கியுள்ளார். viii. 835/1916/III.

O31,2

1895. i. ஹரிச்சந்திரன் : முதற் பதிப்பு; ii. டௌடன் கம்பெனி யார், சென்னை; பீர்லெஸ் பிரஸ், சென்னை; iii. அக்டோபர், 1918; iv. உ. ப. 131; v. 22×14 செ. மீ.; vi. 1–0–0; vii. புகழ்பெற்ற புராணக்கதையான அரிச்சந்திரன் கதையை ஆசிரியர் ஐந்து அங்கங்கள் அடங்கிய ஓர் அழகிய நாடகமாகப் படைத்துத் தந்துள்ளார். viii. 682/1918/IV.

O31,2

சிவசாமி, சிவகங்கை

1896. i. அரிச்சந்திர நாடகம்; ii. கோல்டன் அச்சியந்திரசாலை, சென்னை; iii. 1919; iv. உ. ப. + செ. மூ. ப. 288; v. 20×14 செ. மீ.; vi. 1–8–0; vii. அரிச்சந்திரனது வரலாறு நாடகவடிவில் இதன்கண் தரப்பட்டுள்ளது. இந்நூலை அச்சிட்ட அச்சக உரிமையாளர் நிழற்படம் ஒன்றும் இதன்கண் உண்டு. இந்நூலை அச்சிடுவதற்குப் பொருளுதவி

செய்தவர்களின் பட்டியல் ஒன்றும், மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், கோட்டாம்பட்டி எம். கருப்பையாப் பாவலர் அவர்கள் இயற்றிய சிறப்புப் பாயிரச்செய்யுள் ஒன்றும் இதன்கண் அமைந்துள்ளன. படவிளக்கங்களுடன் கூடியது. viii. 102/1920/I.

O31,2

சிவஷண்முகம் பிள்ளை, ஏகை

1897 i. ஸம்பூரண ராம நாடகம்: திருத்திய இரண்டாம் பதிப்பு; ii. வி. ஜி. பார்த்தசாரதி நாயுடு, சென்னை; ஆதிலக்ஷ்மி நாராயண பிரஸ் & பிரஸிடென்ஸி பிரஸ், சென்னை; iii. பிப்ரவரி, 1917; iv. செ. மூ. ப. 372; v. 21×14 செ. மீ.; vi. 2-8-0; vii. இராமாயணக் கதை நாடகமாக நடிக்கும் முறையில் இந்நூலில் அமைந்துள்ளது. பெரும் பகுதி பாடலாக இருக்கிறது. இது வி. நாராயணசாமி பிள்ளை, சி. கன்னையா முதலியோர்களால் நாடகமாக நடிக்கப்பெற்ற தாகத் தெரிகிறது. கதைத்தொடர்புக்கான வசனங்களும் இடையிடையே உள. பாலகாண்டம் முதல் யுத்தகாண்டம் ஈறுன ஆறு காண்டப் பாகுபாடுகள் இதில் உள. viii. 600/1917/I.

O31,2

சின்னையா, எஸ்.

1898 i. ஜெயபாலன் அல்லது அரசாளப் பிறந்தோன்: முதற் பதிப்பு; ii. ஈ. என்மேன், தரங்கம்பாடி; சி. எஸ். எம். பிரஸ், தரங்கம்பாடி; iii. ஏப்ரல், 1920; iv. உ. ப. 121; v. 22×14 செ. மீ.; vi. 1-0-0; vii. வில்லியம் மாரீஸ் என்பவரின் 'எர்த்தலி பாரடைஸ்' (Earthly Paradise) என்ற நூலின் தமிழாக்கம். இது ஆறு அங்கங்கள் கொண்ட ஒரு நாடகம். viii. 322/1920/II.

O31,2

சுந்தராச்சாரியார், சி. சி.

1899 i. ஜெயவிஸ்வசிம்மன்: முதற் பதிப்பு; ii. கே. கன்னையப்பா ஆசாரி, சென்னை; விஸ்வ குலோத்தாரண அச்சுக்கூடம், சென்னை; iii. செப்டம்பர், 1919; iv. உ. ப. 82; v. 22×14 செ.மீ.; vi. 0-8-0; vii. ஐந்து அங்கங்களாகவும் இருபத்து மூன்று காட்சிகளாகவும் பிரித்துத்தக்க வர்ணமெட்டுகளமைத்துச் செந்தமிழ் நடையில் இயன்ற ஓர் இனிய தமிழ் நாடகம். இந்து தியாலாஜிகல் உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் திரு கோ. வடிவேலு செட்டியார், சென்னை கிறித்துவக் கல்லூரித் தமிழாசிரியர் திரு. வா. மகாதேவ முதலியார் ஆகியோர் இந்நூலுக்குச் சிறப்புப் பாயிரம் தந்துள்ளனர். viii. 413/1919/IV.

O31,2

சுப்பராயலுநாயுடு, ஆர்.எம்

1900. i. கற்புக்கரசி யென்னும் பார்வதி விரத பூஷணி: முதற் பதிப்பு; ii. தி. அ. முனுசாமி பிள்ளை, சென்னை; ஸ்ரீ பத்மநாப விலாச அச்சுக்கூடம், சென்னை; iii. அக்டோபர், 1917; iv. உ. ப. 70; 21×14 செ. மீ.; vi. 0-6-0; vii. இது கற்பின் சிறப்பை விளக்கும் ஐந்து அங்கங்கள் கொண்ட ஒரு நாடகம். உலக முறைக்கும் நம் நாட்டு நிலைக்கும் ஏற்பப் பெண்பாலாரின் ஒழுக்கம் சிறந்தோங்க ஆசிரியர் இதன் மூலம் வழிகாட்டுகின்றார். இசைப் பாடல்களும் இடையிடையே உள. viii. 459/1917/IV.

031,2

சுப்பிரமணிய சர்மா, நெ.ரா., பசுமலை

1901. குமணன்: முதற் பதிப்பு; ii. இ. மா. கோபாலகிருஷ்ண கோன், மதுரை, ஸ்ரீ ராமச்சந்திர விலாஸ் பிரஸ், மதுரை; iii. 1916; iv. உ. ப. 56; v. 21×14 செ.மீ.; vi. 0-6-0; vii. தமிழ் இலக்கியத்தில் வரும் குமணனைப் பற்றிய கதையை நாடக வடிவில் இந்நூல் தருகிறது. ஐந்து அங்கங்கள் கொண்டது. முன் வழங்கும் கதை சிறிது மாறுபாட்டுடன் நாடகத்திற்கேற்ற முறையில் வரையப்பெற்றுள்ளது. இது முதன் முதலில் மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தாரால் நாடக உருவாய் நடிக்கப் பெற்றது. viii. 368/1917/II.

031,2

சுப்பிரமணிய பாரதி, அ. வரகவி

1902. i. சுந்தர காண்டம் அல்லது மாருதி விஜயம்; முதற் பதிப்பு; ii. ஆர். வெங்கடாசலம் அண்ட் கம்பெனி, சென்னை; பி. ஆர். ராமய்யர் அண்டு கம்பெனி, சென்னை; iii. பிப்ரவரி, 1919; iv. உ. ப. 126; v. 19×13 செ. மீ.; vi. 0-12-0; vii. மாருதி விஜயம் என்பது இராமாயணத்தில் சுந்தர காண்டக் கதையைக் கூறுவது. இதில் நட்பு, ஒப்புரவு, அன்பு, இரக்கம், கற்பு, கணவன் மேல் அன்பு, சூழ்ச்சி, வீரம் முதலிய நற்குணங்கள் பொலிந்து விளங்குகின்றன. உடுமலை, கே. வி. சந்தானகிருஷ்ண நாயுடு, கே. எஸ். அனந்த நாராயண அய்யர் முதலியோர் சாற்றுக்கவிகள் தந்துள்ளனர். திரு. வி. கலியாணசுந்தர முதலியார் இதற்குப் பாயிரம் எழுதியுள்ளார். "ஆக்கியோன் கூற்று" என்னும் பகுதியில் ஆசிரியர் தாம் நாடகம் அமைப்பதற்குரிய காரணங்களைக் குறித்து விளக்கம் தந்துள்ளார். viii. 947/1919/I.

031,2

1903. i. பரதன் அல்லது கடமையின் மேன்மை: முதற் பதிப்பு; ii. பாலசுப்பிரமணியம் அண்டு கோ., திருவல்லிக்கேணி; சென்னை; சச்சிதானந்தம் பிரஸ், சென்னை; iii. ஆகஸ்ட், 1916; iv. உ. ப. 124; v. 18×13 செ. மீ.; vi. 0-10-0; vii. இராமாயணக் கதையில் வருகின்ற பரதன் சரித நிகழ்ச்சியினை, ஆசிரியர் அழகுற ஐந்து அங்கங்கள் கொண்ட நாடகமாக விளக்குகின்றார். இராமனின் பாத ரட்சைகளைப் பரதன் சுமந்து சென்று அவைகளை வைத்து நாடாண்ட தன்மையினை இந்நூல் விளக்குகின்றது. இயற்றமிழும், நாடகத் தமிழும், ஒருங்கே இதில் அமையப் பெற்றுள்ளன. முதல் நூலுக்குச் சற்றும் மாறுபாடின்றி இந்நாடகச் செய்திகள் அமைந்துள்ளன. viii. 953/1916/III.

O31,2

1904. i. பிதுர் வாக்கிய பரிபாலனம். முதற் பதிப்பு; ii. ஆர். வெங்கடாசலம் அண்டு கோ., சென்னை; iii. டிசம்பர், 1918; iv. உ. ப. 57; v. 18×13 செ. மீ.; vi. 0-4-0; vii. இராமன் தன் தந்தையின் வாக்கைக் காப்பாற்றும் பொருட்டுச் சீதையுடனும் இலக்குமணனுடனும் 14 வருடம் வனவாசத்திற்குப் புறப்பட்ட நிகழ்ச்சியைப் பொருளாகக் கொண்ட நாடகம். இந் நாடகத்தில் அருணாசலக் கவிராயரின் கீர்த்தனைகள் சிலவும் கம்பராமாயணச் செய்யுட்கள் சிலவும் ஆசிரியரால் இயற்றப்பெற்ற சில விருத்தங்களும் இடையிடையே காணப்படுகின்றன. இது நான்கு அங்கங்களைக் கொண்டதாகும். viii. 431/1919/I.

O31,2

1905. i. மரியாதை ராமன்: முதற் பதிப்பு: ii. பாலசுப்பிரமணியம் அண்டு கோ. சென்னை; iii. செப்டம்பர், 1917; iv. உ. ப. 62; v. 19×13 செ.மீ.; vi. 0-6-0; vii. மூன்று அங்கங்கள் கொண்ட ஒரு சமூக நாடகம் இதில் அடங்கியுள்ளது. நாடகப் பாத்திரப்பட்டியல் தரப்பட்டுள்ளது. ஒரு சில பாடல்களும் இடையிடையே உள. viii. 9/1017/IV. O31, 2

1906 i. வள்ளிநாயகி: முதற் பதிப்பு; ii. ஸ்ரீ பாலசுப்ரமண்யம் கம்பெனி, இராயப்பேட்டை, சென்னை; கார்டியன் பிரஸ், சென்னை; iii. மார்ச், 1918, iv. உ. ப. 74, v. 21×14 செ.மீ.; vi 0—12—0; vii. முருகப் பெருமான் வள்ளியை மணம் செய்து கொண்ட வரலாற்றை விளக்கும் புராணக்கதையை மூன்று அங்கங்களாகப் பிரித்து நாடகமாக எழுதியுள்ளார். பாடல்களும் இடையிடையே கலந்து வருகின்றன. இந்நூலாசிரியரால் இயற்றப்பெற்ற பிற நூல்கள், ஆனந்த ராமயணம், தத்துவ ஸங்கிரக ராமாயணம், பானுமதி, அரிச்சந்திரன், பரதன் நாடகம், வன சாட்சி முதலியன. viii 471/1918/II.

O31,2

சுப்பையாபிள்ளை, விரகாலூர்

1907 i. பார்வதி சற்குண ஞானசவுந்தரி சரித்திரம்—முதல் பாகம்: முதற் பதிப்பு; ii கு. ஆ. கிருஷ்ணசாமி முதலியார், கும்பகோணம், இராஜ ராஜேஸ்வரி பிரஸ், கும்பகோணம்; iii. செப்டெம்பர், 1917; iv. செ. மூ. ப. 3 ; v. 21×14 செ.; மீ. vi; 0—4—0, vii. இந்நூல் மாற்றுந்தாயின் கொடுமைகள் அனுபவித்த ஞானசவுந்தரி என்ற பெண்ணை மையமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. பாட்டும் உரையும் விரவிய நடை. ஆலந்தூர் சங்கீத நடன சபா வித்வான் வேலூர் நாராயணசாமிப் பிள்ளை என்பாரின் விருப்பின்படி ஆக்கப்பெற்றது, சென்னை விஜயவிகடன் பத்திராதிபர் க. ச. கதிர்வேல் என்பார் இதற்குச் சாற்றுக் கவி பாடியுள்ளார். viii. 309/1917/IV.

O31,2

1908. i பார்வதி சற்குண ஞான சவுந்தரி சரித்திரம்—முதல் பாகம்; முதற் பதிப்பு; ii. இ. ராமசாமிக்கோனார், மதுரை எக்ஸெல்சியர் பிரஸ், மதுரை, iii. டிசம்பர், 1917; iv. செ. மூ, ப. 31 v. 21×14 செ.மீ. vi. 0—3—0; vii.....; viii 188/1918/ 1.

O31,2

1909. i பார்வதி சற்குண ஞான சவுந்தரி சரித்திரம்: முதற் பாகம்; iii. 1919; iv......; v......; vi.....; vii.....; viii. 297/ 1920/I. O31,2

1910. i. பார்வதி சற்குண ஞான சவுந்திரி சரித்திரம்— இரண்டாம் பாகம்: திருத்திய மூன்றும் பதிப்பு ; ii. இ. ராமசாமிக் கோனார், மதுரை ; எக்ஸெல்ஸியர் பிரஸ், மதுரை ; iii. மே, 1919 ; iv. உ.ப.+செ.மூ.ப. 48 ; v. 22×14 செ.மீ. ; vi. 0–3–0 ; vii........; viii. 673/1919/II.

O31,2

சுவாமிநாத பிள்ளை, வி. ஏ.

1911. i. மனோரஞ்சித மகாராஜன் நாடகம்: முதற் பதிப்பு ; ii. எஸ்.ஜே. ஜோஸப் ஐயர், திருச்சிராப்பள்ளி ; செயிண்ட் ஜோசப்ஸ் இண்டஸ்ட்ரியல் ஸ்கூல் பிரஸ், திருச்சிராப்பள்ளி ; iii. ஜூலை 1917 ; iv. உ.ப. 56 ; v. 22×14 செ.மீ. ; vi. 0-5-0 ; vii. 'கெடுவான் கேடு நினைப்பான்' என்னும் நீதி மொழியை அடிப்படையாகக் கொண்டு எழுதப் பெற்ற நாடகமே இந்நூல். நாடகப் பாத்திரப் பட்டியல் ஒன்றும் உள்ளது. மூன்று அங்கங்களைக் கொண்டது இந்நாடகம். சிற்சில பாடல்களும் நாடக மாந்தருக்குப் பொருந்தும் வகையில் கொடுக்கப்பட்டுள்ளன. viii. 457/1917/III.

O31,2

டி'சாமி, டி.எஸ்.

1912. i. அநீதப் பழியும் மத காந்தியின் கர்வ பங்கமும்: முதற் பதிப்பு; ii. ராம அய்யர் அண்டு கோ., சென்னை; iii. ஆகஸ்ட், 1919; iv. உ.ப. 45+40; v. 18×13 செ.மீ.; vi. 0–6–0; vii. இதில் அநீதப் பழி, மத காந்தியின் கர்வபங்கம் என இரு நாடகங்கள் அமைந்துள்ளன. 'சிறுவர் சிறுமியர் நாடகக் கொத்து' என்னும் தலைப்பில் அமைந்த வெளியீடுகளில் இது ஒன்று. இதன் ஆசிரியர் 'கருங்குன்றத்துக் கொலை' முதலிய நாவல்களை எழுதிப் பெயர் பெற்றவர். viii. 945/1919/III.

O31,2

திருமலைக் கொழுந்து பிள்ளை, எஸ்.ஏ.

1913. i. தேவபோகம் அல்லது சோமப்பிரபா விலாசம்: முதற் பதிப்பு; ii. திருமலைக் கொழுந்து பிள்ளை, ஸ்ரீவில்லிபுத்தூர்; ஸ்ரீ வாணி விலாஸ் பிரஸ், ஸ்ரீரங்கம்; iii. டிசம்பர், 1917; iv. உ.ப. 164; v. 19×13 செ.மீ; vi. 0–12–0; vii. ஐந்து அங்கங்களைக் கொண்ட ஓர் இனிய தமிழ் நாடகம். 'பிருகத்தோ' என்னும் பெரு நூலினைத் தழுவி எழுதப் பட்டுள்ளது. 'சோமப் பிரபை' என்பாள் இந்நாடகத்தின் கதா நாயகி ஆவள். ஆகையால் இதற்குச் 'சோமப் பிரபா விலாசம்' என்னும் பெயரும் தரப்பட்டுள்ளது. இந்நாடகத்துள் வந்துள்ள கதாபாத்திரங்களை ஆடவர், மகளிர், தேவர் முதலியோர் எனப் பாகுபாடு செய்து தந்துள்ளார். viii. 722/1918/IV.

O31,2

திருவேங்கட முதலியார், கா.ர.

1914. துருவன் சரித்திரம்: முதற் பதிப்பு; ii. சரஸ்வதி சங்கத்தார், சென்னை; வி.எஸ்.வி. பிரஸ், சென்னை; iii. மார்ச், 1917; iv. உ.ப.+செ.மூ.ப. 36; v. 21×14 செ.மீ., vi. 0–2–0; vii. திருமால் பக்தனை துருவன் என்பவனின் விடா முயற்சியைக் குறித்து எழுதப்பெற்ற நாடக வடிவில் அமைந்த நூல். "விடாமுயற்சி அல்லது சிறு வயதில் பேறு பெற்ற துருவன் சரித்திரம்" என்பது இந்நூலின் முழுப் பெயர். சரஸ்வதி சங்கப் பிரசுரங்கள் வரிசையில் இது முதல் மலர் ஆகும். viii. 877/191/II.

O31,2

துரைசாமி அய்யங்கார், பா.ஸ்ரீ.

1915. i. ப்ரஹலாதன் அல்லது உத்தம பக்தன்: முதற் பதிப்பு; ii. பா. ஸ்ரீ. துரைசாமி அய்யங்கார், சென்னை; ஹோா கார்த். பிரஸ், சென்னை; iii. பிப்ரவரி, 1919; iv. உ.ப. 140; v. 19×13 செ.மீ.; vi. 1-0–0; திருமால் பக்தரான

பிரகலாதனின் வரலாறு இதில் அடங்கியுள்ளது. இது ஒரு புராணக் கதையினைத் தழுவிய ஐந்து அங்கங்களைக் கொண்ட நாடகமாகும். நூலாசிரியரின் நிழற்படம் ஒன்றும் இதில் உண்டு. இவ்வாசிரியரால் எழுதப் பெற்ற பிற நாடகங்கள் "வள்ளி, யுத்த லோலன்" முதலியனவாம். viii. 953/1919/I.

O31,2

துரைஸாமி அய்யங்கார், கி. வடுவூர்

1916. i. இராஜேந்திர மோகன: முதற் பதிப்பு ; ii. துரைசாமி அய்யங்கார், சைதாப்பேட்டை ; பி. ஆர். ராம ஐயர் அண்டு கம்பெனியார், சென்னை ; iii. பிப்ரவரி, 1917 ; iv. உ.ப. 202 ; v. 18×13 செ.மீ. ; vi. 0-12-0 ; vii. ஓர் அரசனைப் பற்றிய கதை. நாடக வடிவில் தரப்பட்டுள்ளது. ஐந்து அங்கங்களுடன் கூடியது. இடையே சில பாடல்களும் உண்டு. நாடகப்பாத்திரப் பட்டியல் நூன் முதலில் தரப்பட்டுள்ளது. viii. 1091/1917/I.

O31,2

1917. i. வஸந்த கோகிலம்: முதற் பதிப்பு ; ii. எஸ். எஸ். மணியா அண்டு கம்பெனி, சென்னை ; கம்மெர்ஷியல் அச்சுக் கூடம், திருவல்லிக்கேணி ; iii. ஜனவரி, 1919 ; iv. உ.ப. 180 ; v. 18×13 செ.மீ. ; vi. 0–12–0 ; vii. வடமொழி ஆசிரியரான சூத்திரகன் எழுதிய 'மிருச்சகடி' என்ற நாடகத்தின் தழுவலாகும் இந்நாடகம். இது மூன்று அங்கங்களைக் கொண்டது. சைதாப்பேட்டையில் உள்ள தமது நண்பர்கள் விருப்பத்தின்படி நடிக்கத்தக்க முறையில் இதை ஆசிரியர் எழுதியுள்ளார். தென்னிந்தியப் பண்பாடுகளுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் ஏற்ற முறையில் ஒரு சில மாறுதல்களை ஆசிரியர் மேற்கொண்டுள்ளார். தமக்கு முன் இவ்வடமொழி நூலைப் பண்டித நடேச சாஸ்திரியார் உரைநடையில் ஆக்கி யிருத்தல் பற்றியும் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். viii. 636/1919/I.

O31,2

துரைசாமி சமஷ்டியார், வன்னியகுல.

1918. i. பழனியாண்டவர் திருவிளையாடலாகிய மாங்கனி சரித்திர நாடகம்: முதற் பதிப்பு ; ii. முத்து வடிவேலு முதலியார், அமரம்பேடு ; பூமகள் விலாச அச்சுக்கூடம் ; சென்னை ; iii. டிசம்பர். 1918 ; iv. செ.மூ.ப. 64 ; v. 21×14 செ.மீ. ; vi. 0–4–0 ; vii. பழனியில் கோயில் கொண்டுள்ள சுப்பிரமணிய சுவாமி மாம்பழத்திற்காக உலகைச் சுற்றி வந்த நிகழ்ச்சி, பாடல்கள் மூலமாக நாடக வடிவில்

எழுதப்பட்டுள்ளது. இந்நாடகம் சிறப்புப் பொருந்திய நல்லாத்தூரில் சிவத்தோடு கலந்த சிவப்பிரகாச சுவாமிகளுடைய ஆதாரத்தாலும், பழனித் தல புராண ஆதாரத்தாலும் செய்யப்பட்டது. viii. 286/1919/I.

O31,2

துரைசாமி படையாச்சியார்

1919. i. அரிச்சந்திர நாடகம்—மயான காண்டம் : முதற் பதிப்பு ; ii. ஆர். நாராயணசாமி பிள்ளை, கும்பகோணம் ; தையநாயகியம்மன் பிரஸ், கும்பகோணம் ; iii. ஏப்ரல், 1918 ; iv. செ.மூ.ப. 24 ; v. 22×14 செ.மீ. ; vi. 0-3-0 ; vii. அரிச்சந்திரன் என்னும் அரசன் உண்மையே கூறி வாழ்ந்து வருகின்றான். அதனால் பல்வேறு இன்னல்களை அடைகின்றான். அவன் வாழ்க்கையின் இறுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியினைப்பற்றிக் கூறுகின்ற மயான காண்டம் மட்டும் இதில் விளக்கப்பட்டுள்ளது. இந்நூலாசிரியர் செந்தமிழ்ச் சரபம் விரகாலூர் சுப்பையா பிள்ளை அவர்களின் மாணவர் எனத் தெரிகிறது. viii. 192/1918/II.

O31,2

துரைசாமி முதலியார், அ. மயிலம், மதுராம்பாளையம்

1920. i. கமலவல்லி நாடகம் : முதற் பதிப்பு ; ii. முத்து வடிவேலு முதலியார், அமரம்பேடு ; பூமகள் விலாசம் அச்சுக்கூடம், சென்னை ; iii. செப்டெம்பர், 1918 ; iv. உ.ப.+செ.மூ.ப. 72; v. 21×14 செ.மீ.; vi. 0–4–0; vii. கமலவல்லியின் திருமணத்தினைப்பற்றி எழுதப்பட்ட நாடகமாகும். இடையிடையே செய்யுட்களும் இசைப் பாடல்களும் உள்ளன. பத்மாவதி மாலையிட்ட நாடகம், சிங்கிசர் கலியாண நாடகம் முதலியன இவ்வாசிரியரால் எழுதப்பட்டன. viii. 1088/1918/III.

O31,2

1921. i. சிங்கிசர் கலியாண நாடகம் : முதற் பதிப்பு ; ii. முத்துவடிவேலு முதலியார், அமரம்பேடு ; பூமகள் விலாச அச்சுக்கூடம், சென்னை; iii. செப்டெம்பர், 1918 ; iv. உ.ப.+செ.மூ. ப. 68 ; v. 21×14 செ. மீ. ; vi. 0–5–0; vii. சிங்கிசராகிய சிவனுக்கும் பவானி அம்மைக்கும் நடந்த திருமண வைபவத்தை ஆசிரியர் நாடகமாக எழுதியுள்ளார். இந்நாடகத்தை 'சிவபெருமான் விவாக கதை' என்று காப்புச் செய்யுளில் குறிப்பிடுகின்றார். உரைநடையும் பாட்டும் கலந்த நடையில் இந்நாடகம் அமைந்துள்ளது. viii. 1087/1918/III.

O31,2

1922. i. பத்மாவதி மாலையிடு நாடகம்: முதற் பதிப்பு; ii. முத்துவடிவேலு முதலியார், அமரம்பேடு; பூமகள் விலாச அச்சுக்கூடம், சென்னை; iii. செப்டெம்பர், 1918; iv. உ. ப.+செ. மூ. ப. 64; v. 21×14 செ.மீ.; vi. 0—6—0; vii. பத்மாவதியின் திருமணத்தைப்பற்றிய கதை இந்த நாடகத்தில் கூறப்பட்டுள்ளது. இடையிடையே பாடல்கள் வருகின்றன. viii. 1089/1918/III;

O31,2

தேவநாத அய்யங்கார், வி. வி.

1923. i. ராம லீலா: முதற் பதிப்பு; ii. வைத்யா அண்டு கோ., சென்னை; கார்டியன் பிரஸ், சென்னை; iii. செப்டெம்பர், 1917; iv. உ. ப. 99; v. 22×14 செ. மீ.; vi 0—12—0; vii. ராமனின் கதை ஆறு அங்கங்களைக் கொண்ட நாடகமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. அப்பொழுது ஜில்லா முன்சீப்பாகவிருந்த கே. எஸ். ராமசாமி சாஸ்திரியார் இதற்கு ஆங்கிலத்தில் முகவுரை வரைந்துள்ளார்; viii. 175/1918/I.

O31,2

1924. i. ராஜலக்ஷ்மி அல்லது விதியும் மதியும்: முதற் பதிப்பு; ii. வி. வி. தேவநாத அய்யங்கார், சென்னை; கார்டியன் அச்சுக்கூடம், சென்னை; iii. பிப்ரவரி, 1919; iv. உ. ப. 106; v. 19×13 செ. மீ.; vi. 0—5—0; vii. இது விதவை விவாகத்தை வலியுறுத்தும் நான்கு அங்கங்களைக் கொண்டதோர் நாடகம். இதன்கண் நாடகப் பாத்திரப் பட்டியல் ஒன்றுண்டு. இவ்வாசிரியர் ராமலீலே, ஹரிச்சந்திரன், ஜயலக்ஷ்மி என்னும் நூல்களையும் எழுதியுள்ளார்; viii. 305/1919/II.

O31,2

1925. i. ஜயலக்ஷ்மி அல்லது காதலின் இடையூறுகள்: முதற் பதிப்பு; ii. வி. வி. தேவநாத அய்யங்கார், சென்னை; கார்டியன் அச்சுக்கூடம், சென்னை; iii. ஜனவரி, 1919; iv. உ. ப. 96; v. 19×13 செ. மீ.; vi. 0—8—0; vii. ....; viii. 303/1919/II.

O31,2

1926. i. ஹரிச்சந்திரன் அல்லது ஸத்திய ஸ்தாபனம்: முதற் பதிப்பு; ii. வி. வி. தேவநாதன், பாளையங்கோட்டை; பாளையங்கோட்டை பிரிண்டிங் பிரஸ், பாளையங்கோட்டை; iii. டிசம்பர், 1918; iv. உ. ப. 144; v. 18×12 செ. மீ.; vi. 0—10—0; vii. புராணத்தில் மிகச் சிறப்பாகப் பேசப்படும் அரிச்சந்திரன் வரலாற்றை ஐந்து அங்கங்கள் கொண்ட

நாடகமாக ஆசிரியர் அளித்துள்ளார்கள். இதன் மறுபெயர் 'ஸத்திய ஸ்தாபனம்' என்பது. எளிமையான இசைப்பாடல்கள் சிலவும் அங்கங்கே சேர்க்கப்பட்டிருக்கின்றன; viii. 175/1919/I.

O31,2

நடேசபிள்ளை, ஆர். எஸ்.

1927. i. நாடக ரத்தினங்கள் : இரண்டாம் பதிப்பு ; இராமசாமிக் கோனார் ; எக்ஸெல்சியர் பிரஸ், மதுரை ; iii. ஆகஸ்ட், 1918 ; iv. உ. ப. + செ. மூ. ப. 410; v. 21×14 செ. மீ. ; vi. 1—8—0 ; vii. பன்னிரண்டு நாடகங்கள் இந்நூலில் உள்ளன. இவைகள் பழைய கால இலக்கியங்களிலிருந்தும், புராணத்திலிருந்தும் எடுக்கப்பட்டவைகளாகும். அவையாவன : பார்ஸி இராமாயண சூர்ப்பநகை பங்கம், பார்ஸி இராமாயண லெங்காதகனம், பார்ஸி நல்லதங்காள் சரித்திரம், பார்ஸி அரிச்சந்திர நாடகப்பதம், பார்ஸி அல்லி அரசாணி சரித்திரம், பார்ஸி துரௌபதை வஸ்திராடகரணம், பார்ஸி விராடபர்வ கீசக சம்ஹாரம், மயிலிராவணன் சரித்திரம், பார்ஸி மதுரை வீரன் சரித்திரம், பார்ஸி மார்க்கண்டேயர் சரித்திரம், பார்ஸி உருக்குமாங்கதன் சரித்திரம், பார்ஸி வள்ளியம்மை சரித்திரம் என்பனவாம்; viii. 341/1919/I.

O31,2

நடேச பிள்ளை, சௌராம்பட்டு

1928. i. நரம்பு சிலந்தி நாடகம் : முதற் பதிப்பு; ii. பா. நடேச இராமணி, தூக்கணாம்பாக்கம் ; வரலட்சுமி விலாசம் அச்சுக்கூடம், நெல்லிக்குப்பம் ; iii. ஆகஸ்ட், 1916. iv. செ. மூ. ப. 68 ; v. 21×14 செ. மீ.; vi. 0-5-0 ; vii. மக மாரியம்மன் திருவிளையாடலில் ஒன்றாகிய நரம்பு சிலந்தியைப் பற்றிய நாடகமாகும் இது. வேடிக்கையான உரையாடல்களும் காட்சிகளும் இதில் உள்ளன; viii. 889/1916/III.

O31,2

நமச்சிவாய முதலியார், கா.

1929. i. நாடக மஞ்சரி—முதற் புத்தகம் : திருத்திய பதிப்பு ; ii. வி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ், சென்னை ; காக்ஸ்டன் பிரஸ், சென்னை ; iii. நவம்பர், 1917; iv. உ. ப. 146 ; v. 18×13 செ. மீ.; vi. 0-12-0 ; vii. இந்நூலில் பத்துச் சிறு நாடகங்கள் அடங்கியுள்ளன. தெனாலிராமன் கதை உள்ளிட்ட நகைச்சுவை நாடகங்கள் உண்டு. ஆசிரியப்பா, விருத்தம், கீர்த்தனை முதலிய பாடல்களும் இடையிடையே

விரவி வந்துள்ளன. காஞ்சி மகாவித்துவான் இராமசாமி நாயுடுவின் சிறப்புக்கவியும், எல். எஸ். வில்லியம்ஸ் பிள்ளை என்பாரின் ஆங்கில முகவுரையும் முதற்கண் உள; viii. 741/1917/IV.

031,2

நாகரத்தின முதலியார், ப., ரிங்காரெட்டிபாளையம்

1930. i. கம்ச சம்மார நாடகம்: முதற் பதிப்பு; ii. முத்து வடிவேலு முதலியார், அமரம்பேடு; பூமகள் விலாச அச்சுக்கூடம், சென்னை; iii. செப்டெம்பர், 1918; iv. செ. மூ. ப. 76; v. 21×14 செ. மீ; vi. 0—4—0; vii. ஸ்ரீ கிருஷ்ணன் கம்சனை அழிக்கின்ற நிகழ்ச்சியைப் பற்றிப் பாடல்கள் மூலமாக விளக்குகின்ற நாடகம் இது. இப்புராண வரலாறு மகாபாகவதத்தினின்றும் எடுக்கப்பெற்றது. உரை நடையும் பாட்டும் கலந்த நடையில் அமைந்தது; viii. 62/1918/IV.

031,2

நாராயணசாமி பிள்ளை, வே.

1931. i. சகுந்தலா சரித்திரமென்னும் துஷ்யந்த நாடகக் கும்மி: திருத்திய இரண்டாம் பதிப்பு; ii. கிருஷ்ணசாமி முதலியார், குன்னத்தூர்; ii. இராஜராஜேஸ்வரி அச்சுக்கூடம், சென்னை; iii. 1915; iv. செ. மூ. ப. 23; v. 13×11 செ.மீ.; vi. 0—2—0; vii. சகுந்தலைக்கும் துஷ்யந்தனுக்கும் நடந்த திருமண விழாவைக் கும்மி வடிவில் அமைத்த நூல் இது. 15 பகுதிகளாக இந்நாடகக் கதை அமைக்கப்பட்டிருக்கிறது. புதிய மெட்டுகளில் அமைந்த பாடல்கள் இதில் உள்ளன; viii. 389/1916/I.

031,2

1932. i. சத்ய சாவித்திரி; ii. எம். ஏ. கிருஷ்ணசாமி முதலியார்; ஸ்ரீ சுப்ரமணிய விலாசம் பிரஸ், சென்னை & சன் ஆப் இந்தியா பிரஸ், சென்னை; iii. 1916; iv. உ. ப.+ செ. மூ. ப. 54; v. 22×14 செ. மீ.; vi. 0—4—0; vii. சத்தியவான் சாவித்திரி என்னும் புராணக் கதை நாடக வடிவில் அமைந்துள்ளது. பார்ஸி வர்ண மெட்டு களும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. இது சகல நாடகக் கம்பெனியாரும் ஆடிவரும் நாடகமாகும்; viii. 552/1916/III.

031,2

1933. i. சாவித்திரி சத்தியவந்தன்: முதற் பதிப்பு; ii. என். தியாகராய முதலி, நாகப்பட்டினம்; முரஹரி அச்சுக்கூடம், சென்னை; iii. ஏப்ரல், 1917; iv. உ. ப.+செ. மூ. ப. 51; v. 21×14 செ. மீ.; vi. 0—4—0; vii. சத்தியவந்தன்

சாவித்திரி புராணக் கதையை ஒட்டிய நாடகம். உரையும் பாட்டும் கலந்துவரும் நடையில் வந்தது. சகல நாடகக் கம்பெனியாரும் நடத்திவருவது; viii. 53/1917/II.

O31, 2

1934. i. பார்ஸி ஸாவித்ரி : முதற் பதிப்பு ; ii. ஈ. சக்ரபாணி நாயுடு, சென்னை ; சக்கரவர்த்தி அச்சுக்கூடம், சென்னை; iii. ஏப்ரல், 1917; iv. செ. மூ. ப. 80; v. 21×14 செ.மீ.; vi. 0–4–0; vii. புராணக்கதையான சத்திய வந்தன் சாவித்திரி கதையை நாடக வடிவில் இந்நூல் தருகிறது. "ஆலந்தூர் ஒரிஜினல் இந்து டிரமாடிக் கம்பெனி" என்ற நாடக மன்றம் இக்கதையை நாடகமாக்கி நடித்து வந்ததாகத் தெரிகிறது; viii. 505/1917/II.

O31,2

நாராயணசுவாமி நாயுடு, பி.பி., சிந்துபூந்துறை

1935 i. நசரேயன் திருவவதார நாடகம் : முதற் பதிப்பு ; ii. பி.பி. நாராயண சுவாமி நாயுடு, சிந்துபூந்துறை ; ஜஸ்டிஸ் அச்சியந்திர சாலை, சென்னை ; iii. பிப்ரவரி, 1918 ; iv. செ.மூ.ப. 73 ; v. 18×13 செ,மீ. ; vi. 0–8–0 ; vii. இயேசுநாதர் நாசரேத்தில் பிறந்த செய்தியினைப் பற்றிய கதை, நாடக நடையில் பாடல்களாக இப்புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது. வித்வான் மேலப்பாவூர் ஸ்ரீ கோபால் நாயுடு, திருச்செந்தூர் ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி சந்நிதி கட்டியம் அட்டாவதானம் மகாதேவ ஐயர் முதலியோர் சாற்றுக்கவிகள் தந்துள்ளனர். டி. அருளானந்தம் என்பாரின் விருப்பப்படி இந்நூல் இயற்றப்பெற்றது என்பது தெரியவருகிறது. நூலிறுதியில் 'துதி சந்தம்' என்னும் தலைப்பில் திருப்புகழ் பாடல் அமைப்பில் சில பாடல்கள் உள்ளன; viii. 333/1918/IV.

O31,2

நாராயணஸாமி ஐயர் (மொ. து.)

1936. i. ஸத்ய ஹரிச்சந்திரன் — ஒரு நாடகம் : முதற் பதிப்பு; ii. ஸ்ரீ பாலசுப்பரமண்யம் கம்பெனி, சென்னை ; பி. ஆர். ராமய்யர் அண்டு கம்பெனி ; iii. 1915 ; iv. உ. ப. 96; v. 18×13 செ. மீ.; vi. 0—6—0 ; vii. வாய்மைக்கு அரசனாகிய அரிச்சந்திரனின் வாழ்க்கையை ஆறு அங்கங்கள் கொண்ட நாடகமாகத்தரும் நூல் இடையிடையே சிற்சில இசைப்பாடல்களும் இடம் பெற்றுள்ளன. இந்நூல் 'ஸம்ஸ்கிருதத்தினின்று மொழி பெயர்த்தமைத்தது' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது; viii. 101/1916/I.

O31,2

பக்தவத்சலம், டி. சென்னை

1937 i. சுக்ரீவர் ஆஜ்ஞை: முதற் பதிப்பு; ii. டி. பக்தவத்சலம்; விவேகானந்தா பிரஸ், சென்னை; iii. செப்டம்பர், 1916; iv. உ.ப. 136; v. 22×14 செ.மீ., vi. 0–10–0; vii. இராமாயணக்கதையில் வருகின்ற சுக்ரீவனுடைய ஆச்ஞைப் பற்றி ஐந்து அங்கங்களைக்கொண்ட நாடகமாக எழுதப் பட்டுள்ளது. இது ஆசிரியரால் இயற்றப்பட்டுள்ள ராமாயண நாடகத்தின் இரண்டாவது பாகம் ஆகும். இசைப்பாடல்களும் இடையிடையே வந்துள; viii. 1146/1916/III.
O31,2

1938 i. ராமர் பட்டாபிஷேகம்: முதற்பதிப்பு; ii. டி. பக்தவச்சலம், சென்னை; விவேகானந்தர் பிரஸ், சென்னை; iii. டிசம்பர், 1917; iv. உ.ப. 167; v. 21 14 செ.மீ.; vi. 0 12–0; vii. இராமாயணக் கதையின் ஒரு பகுதியான இராமர் முடிசூட்டுவிழா நிகழ்ச்சி ஆறு அங்கங்களில் நாடகமாக்கித் தரப்பட்டுள்ளது. பாத்திரங்களுக்கு ஏற்ற முறையில் கொச்சையான பேச்சு நடைகளையும் ஆசிரியர் கையாண்டுள்ளார்; viii. 906/1917/IV.

O31,2

பலராமையர், ந.

1939 i. தசரதன் தவறு: இரண்டாம் பதிப்பு; ii. கணேஷ் கம்பெனி, சென்னை; தாம்ஸன் அண்டு கோ., சென்னை; iii. பிப்ரவரி, 1919; iv. உ.ப.+செ.மூ.ப. 99; v. 18×13 செ.மீ.; vi. 0–8–0; vii. தசரதன் கானகத்திற்கு வேட்டையாடச் சென்றபொழுது, தவறுதலாக யானை ஒன்று தடாகத்தில் நீர் அருந்துவதாக நினைத்து, அம்பெய்ததில் கண்ணில்லாத சலபோசனர் என்னும் முனிவரின் மகனைக் கொன்றமையால் நேரிட்ட சாபத்தால் இராமன் பதினான்கு ஆண்டுகள் காட்டிற்குச் சென்றதும், தான் மகனைப் பிரிந்ததால் வருந்துவதும், தான் செய்த தவறு என்பதும் பற்றி அமைந்தது இந்நாடகம். இதில் நான்கு களங்கள் உள. இடையிடையே உள்ள செய்யுளுக்கு அரும்பதவுரையும் விளக்க உரையும் அமைந்தள்ளது. இது ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் பயிற்சிக்கான 1920 ஆம் அண்டுத் தேர்வுக்குப் பாடமாக வைக்கப்பட்டது; viii. 498/1919/I. O31,2

பார்வதி அம்மாள், எம்.

1940 i. சீதா கல்யாணம்: முதற்பதிப்பு; ii. எஸ். மூர்த்தி; அண்ட் கம்பெனி, சென்னை; கபாலீ பிரஸ், சென்னை; iii. ஆகஸ்ட், 1918; iv. உ.ப. 26; v. 17×11 செ.மீ.; vi.......; vii. இராமர் சீதை ஆகியோருடைய

திருமணத்தைப் பற்றி விளக்கக்கூடிய ஒரு சிறு தமிழ் நாடகமாகும் இது. ஒரே அங்கம், எட்டுக்காட்சிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இடையிடையே பாடல்களைக் காணலாம். இந்நூலின் ஏழாங்காட்சியில், நாரதர் இலங்கை சென்று, இராவணனைப் பார்த்துச் சனகன் மகளுக்குத் திருமணம். வில்லை வளைப்போர்க்கு மணஞ்செய்து கொடுப்பதாக சனகன் முடிவு செய்திருக்கிறான் என்று கூறுகிறார். எட்டாங் காட்சியில் இராவணன் மிதிலை வந்து வில்லை வளைக்க முயன்று தோல்வியுற்றுத் திரும்புகிறான். இச்செய்தி கம்பராமாயணத்தில் இல்லை; viii. 759/1918/III.

O31,2

பாலன்

1941. i. துரோபதை குறவஞ்சி நாடகம்: முதற் பதிப்பு; ii. முனுசாமி முதலியார், சென்னை; சண்முகம் பிரஸ்; சென்னை; iii. நவம்பர், 1918; iv. செ.மூ.ப. 75; v. 21×13 செ.மீ.; vi. 0-5-0; vii. வனத்தில் பஞ்சபாண்டவரோடு துரௌபதி வாசம்செய்யும் காலத்தில் ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சி குறவஞ்சி நாடகமாக எழுதப்பட்டுள்ளது. படங்களுடன் கூடியது. உரை நடையும் பாட்டும் கலந்த நடையில் அமைந்தது. கதைப் போக்கிற்கு ஏற்ற தலைப்புக்கள் இடையிடையே உண்டு; viii. 354/1918/II.

O31,2

பாஷ்யம், டி. எம்.

1942. i. பங்கஜாக்ஷி: ஐந்தாம் திருத்திய பதிப்பு; ii. லலிதா விலாஸ் புக் டிப்போ, திருவல்லிக்கேணி; கமர்ஷியல் பிரஸ், சென்னை; iii. மார்ச், 1917; iv. உ.ப. 113; v. 18×12 செ.மீ.; vi. 0-8-0; vii. இளவரசி பங்கஜாக்ஷி பல இன்னல்களுக்குட்பட்டு, முடிவில் அவளது காதலனைக் கடிமணம் புரியும் வரலாற்றினை நாடக முறையில் மிகவும் அழகாகவும், தெளிவாகவும் ஆசிரியர் எழுதியுள்ளார். ஐந்து அங்கங்கள் கொண்டது. பொருத்தமான பாடல்களும் அங்கங்கே சேர்க்கப் பட்டுள்ளன; viii. 154/1918/II.

O31,2

பாஷியம் அய்யங்கார், தி. ம.

1943. i. லீலாதரன்: முதற் பதிப்பு; ii. பென்ரோஸ் கம்பெனி சென்னை; பென்ரோஸ் அண்டு கம்பெனி பிரிண்ட்டர்ஸ், சென்னை; iii. அக்டோபர், 1917; iv. உ. ப. 145; v. 18×13 செ.மீ.; vi. 0-12-0; vii. 'அறம் வெல்லும்' என்ற கருத்தினை அடிப்படையாகக் கொண்டு எழுதப் பெற்ற நான்கு அங்கங்கள் கொண்ட நாடகம். சென்னை 'ஷெரீப்', 'ராவ்சாகிப்' கல்வல ராமானுஜம் செட்டியாரின் புகைப்படம் ஒன்று இதில் இடம் பெற்றுள்ளது. இதற்குப் பண்டிதரத்தினம்

புலவர் திருநாவுக்கரசு முதலியாரவர்கள் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளார். நாடகப் பாத்திரப் பட்டியலொன்றும், பிழை திருத்தப் பட்டியலொன்றும் உண்டு; viii. 572/1917/IV.

O31,2

பிரகதாம்பாள்

1944. i. ஜானகி: முதற் பதிப்பு; ii. வெட்னஸ்டே ரிவியூ பிரஸ், திருச்சிராப்பள்ளி; iii. 1915; iv. உ. ப. 127: v. 22×14 செ.மீ.; vi. 0—12—0; vii. மேற்கத்திய நாடுகளின் ஆதிக்கத்தால் இந்து சமூகம் எவ்வாறு மாற்றமடைகிறது என்பதை விளக்கும் ஒரு நவீன நாடகம்; ஐந்து அங்கங்கள் கொண்டது. சம்பவம் நிகழிடம், உறுப்பினர் பற்றிய குறிப்புக்கள் ஒவ்வொரு காட்சியின் தொடக்கத்திலும் உள்ளன; viii. 37/1916/I.

O31,2

பொன்னையாசாரியார், ந., பாப்பம்பட்டி

1945. i. நாலு மந்திரி நாடகம்: முதற்பதிப்பு; ii. விஸ்வ பிரம்ம குலாபிமானர்கள், கோயம்புத்தூர்; எலக்டிரிக் பிரிண்டிங் ஒர்க்ஸ் அச்சாபீஸ், கோயம்புத்தூர்; iii. மார்ச், 1918; iv. செ.மூ.ப. 132; v. 21×14 செ.மீ.; vi. 0—8—0; vii. பாடல்களும் வசனங்களும் கலந்து நாலு மந்திரிகளின் கதையினை நாடகமாக ஆசிரியர் விளக்கியுள்ளார். இந்நாலு மந்திரி நாடகம் முதலில் நாலு மந்திரி கும்மியாக இருந்ததென்றும் பின்னர் தான் நாடகமாக எழுதப்பட்டது என்றும் முகவுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இசைக் கீர்த்தனைகளோடு கொச்சகம், விருத்தம் முதலிய பாக்களும் இதில் உள. இசைப் பாக்களுக்கு இராக தாளக் குறிப்புக்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன; viii. 818/1918/IV.

O31,2

1946. i. மங்களம்: முதற் பதிப்பு; ii. யங்மென்ஸ் அமெச்சூர் அஸோஸியேஷன், மதுரை; பத்மாலயா பிரஸ், மதுரை; iii. டிசம்பர். 1917; iv. உ. ப. 36; v. 21×14 செ.மீ.; vi. 0—4—0; vii இதில்மூன்று அங்கங்கள் கொண்ட ஒரு சமூக நாடகம் உள்ளது. திருமணச் சீர்திருத்தங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இதற்கு மதுரை கல்லூரித் தமிழாசிரியரும் விவேகோதயப் பத்திராதிபருமான ம. கோபாலகிருஷ்ணையர் சாற்றுக்கவி பாடியுள்ளார்; viii. 952/1917/IV.

O31,2

மதனகோபால தீக்ஷிதர், அ. கு., திரிசிரபுரம்

1947 i. ஹரிணீ: முதற் பதிப்பு; ii. அ. கு. மதன கோபாலதீக்ஷிதர், திருச்சிராப்பள்ளி; டௌடன் பிரஸ், திருச்சிராப்பள்ளி; iii. ஜூன், 1920; iv. உ.ப.+செ.மூ.ப. 104 v. ; 13×18. செ.மீ.; vi. 1—0—0; vii. காளிதாச மகாகவியின் 'ரகுவம்ச' காவியத்தினுள்ளடங்கிய அஜ மகாராஜனின் சரித்திரத்தை ஆதாரமாகக் கொண்டு இச்சிறுநாடகம் அமைந்துள்ளது. விநோதம் என்ற பெயரில் ஏழு காட்சிகளைக் கொண்டது. viii. 782/1920/II.

O31,2

மன்னர் பெருமாள் புலவர்

i. நொண்டி நாடகம்: (தொ. எ. 2465 பார்க்க) ii. பி.சி.சி. பாண்டியன் அண்டு பி.வி.சி. பாண்டியன்; மதுரைத் தமிழ்ச் சங்கம் பவர் பிரஸ், மதுரை; iii. 1916; iv. செ.மூ.ப. 53; vii. திருமலையதிபன் பேரில் மன்னர் பெருமாள் புலவர் பாடிய நொண்டி நாடகம் என்னும் பிரபந்தம் சிந்து, விருத்தம் முதலியவற்றால் பாடப் பெற்றது. வேசியர் வலைப்பட்டுப் பொருளிழந்து மானம் போய் திருடுந் தொழிலிலும் முனைய முற்பட்டதை மொழிகிறது. தெய்வத்தலங்கள் தரிசித்துப்பின் திருந்தி வாழ்ந்த தன்மையும் பிற்பகுதியில் விளக்கப்பட்டிருக்கிறது; viii. 49/1916/II.

O31,2

மாணிக்க முதலியார், பி.வி.

1948 i. பாரீஸ் சாகுந்தளா; இரண்டாம் பதிப்பு; ii. ப.கு. தாமோதர முதலியார்; தொண்டைமண்டலம் அச்சியந்திரசாலை, சென்னை; iii. செப்டம்பர், 1916; iv. உ.ப.+செ.மூ.ப. 64; v. 21×14 செ.மீ.; vi. 0—10—0 ; vii. மகாபாரதத்தில் வருகின்ற 'சகுந்தலை துஷ்யந்தன், வரலாற்றை நாடக வடிவில் செய்யுள் மூலமாக இப்புத்தகத்தில் எழுதியுள்ளார். இது பம்பாய் பாரீஸ் கம்பெனியாரும், சென்னை ஹிந்து விநோத சபைக்குத் தலைவராகிய திருநாராயணசாமிப் பிள்ளையும் பிறரும் இன்னும் பல வித கம்பெனியார்களும் நடத்தி வந்த நாடகம். இசைப்பாட்டும் கீர்த்தனைகளும் இடையிடையே உரைநடையும் கலந்து அமைந்தது; viii. 420/1916/IV.

O31,2

மாதவையர், அ.

1949 i. உதயலன் என்கிற கொற்கைச் சிங்களவன்: முதற் பதிப்பு; ii. சுதேசமித்ரன், சென்னை; சுதேசமித்திரன் பவர் பிரஸ், சென்னை; iii. அக்டோபர், 1918 ; iv உ.ப. 156 ; v. 19×13

செ.மீ.; vi. 0—12—0 ; vii. ஷேக்ஸ்பியரின் நாடகமான 'ஒதெல்லோ' வின் தமிழாக்கம் இந்நூல். நாடகப்பாத்திரப் பட்டியலொன்று இதில் இடம்பெற்றுள்ளது. தமிழ்மொழிக்கேற்ற முறையில் நாடகப் பாத்திரத்தின் பெயர்கள் அமைக்கப்பட்டுள்ளன, ஐந்து அங்கங்கள் கொண்டது. viii. 9/1919/II.

O31,2

முத்துக்கிருஷ்ண பிள்ளை

1950. i. குசேலமாமுனிவர் சரித்திரம் : முதற் பதிப்பு; ii. முனிசாமி முதலியார், சென்னை; ஸன் ஆப் இந்தியா பிரஸ், சென்னை ; iii. செப்டெம்பர், 1917; iv. உ.ப.+செ.மூ.ப. 120; v. 22×14 செ.மீ.; vi. 0—8—0; vii. இதில் பாகவதத்தில் வரும் குசேலரின் கதை விளக்கப்பட்டுள்ளது. இந்துஸ்தான், பார்சி, ஜாவளி இசைகளில் பாடல்கள் உள்ளன. ஆரணி, சமஸ்தானம் திருமலை சமுத்திரம் ச.ப. அண்ணாமலைச் செட்டியார், கொ. மு. சுப்பராய செட்டியார் என்போர் இதற்குச் சாத்துக் கவிகள் பாடியுள்ளனர். viii. 59/1917/IV.

O31,2

முத்துசாமிக் கவிராயர், உடுமலை

1951 i. வள்ளியம்மை சரித்திரம்: முதற் பதிப்பு ; ii. கல்யாண சுந்தரம் பிள்ளை, மதுரை ; ஷண்முக விலாசம் பிரஸ், மதுரை ; iii. 1 16; iv. செ.மூ.ப. 56; v. 21×14 செ.மீ. ; vi. 0–4–0; vii. இதற்கு பார்ஸி அதி நூதன வள்ளி சரித்திரம் என்னும் பெயருமுண்டு. வள்ளியம்மைக்கும் சுப்பிரமணிய சுவாமிக்கும் நடந்த திருமண வைபவத்தை விளக்கும் கதை. இது நாடக வடிவில் உள்ளது. இதில் சிருங்காரச் சந்தப் பாடல்கள் அமைந்துள்ளன. பாடல்களுக்கு இராகதாளக் குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. viii. 285/1916/II.

O31,2

முத்துசாமி பிள்ளை

1952. i. தமிழறியும் பெருமாள் நாடகம் : முதற் பதிப்பு ; ii, முனிசாமி முதலியார், சென்னை ; ஸன் ஆப் இந்தியா பிரஸ். சென்னை ; iii. ஆகஸ்ட், 1919 ; iv. உ. ப.+ செ. மூ. ப. 48 ; v. 21×14 செ.மீ ; vi. 0—5—0 ; vii. தமிழறியும் பெருமாள் என்னும் பெண்ணை ஒரு விறகு வெட்டி

மணந்த கதை நாடக ரூபத்தில் அமைந்துள்ளது. தரு, விருத்தம் முதலிய பாடல்களும் உரைநடையும் கலந்து அமைந்தது இந் நாடகம். viii. 988/1919/III.

O31,2

முத்து சுப்ப பாரதி, பு. வ. அரிகேசநல்லூர்

1953. i. சுபத்திரா பரிணய நாடகம்: முதற் பதிப்பு; ii. சுத பெத்தாச்சி செட்டியார், ஆண்டிப்பட்டி; தமிழ்ச் சங்க முத் திரா சாலை, மதுரை; iii. மார்ச், 1917; iv. உ. ப. 207; v. 21×14 செ.மீ.; vi. 1—8—0; vii. அர்ஜுனன் சுபத் திரையை மணந்த கதையினை நாடகமாக ஆசிரியர் தருகின் றார். ஆண்டிப்பட்டி ஜமீன்தார் பெத்தாச்சி செட்டியாரவர் களுக்கு ஆசிரியரின் நன்றியுரையும் அ. இராமஸ்வாமி பாரதி முதலியோர் இயற்றிய சாற்றுக் கவிகளும் இதில் அடங்கி யுள்ளன. இந் நாடகம் பாடல்களும் உரை நடையும் விரவி இயற்றப் பெற்றதாகும். ஐந்து அங்கங்கள் கொண்டது. viii. 63/1917/II.

O31,2

மைக்கேல், எஸ். எம்.

1954. i. சிங்களப் பெண்: முதற் பதிப்பு; ii. எஸ். எம். மைக்கேல், சென்னை; பி. ஐ. பிரஸ், சென்னை; iii. செப்டெம்பர், 1919; iv. உ. ப. 80; v. 18×12 செ. மீ., vi. 0—8—0; vii. மூன்று அங்கங்களைக் கொண்ட ஓர் அழகிய சிறு நாடகமாகும் இது. அநுராதபுரத்திலே சிங்கள நாட்டு அரசன், மந்திரிகளோடு தொடர்புடைய நாடகம். நாடகப் பாத்திரங்களின் பட்டியல் முதலில் தரப்பெற்றிருக்கிறது. இதனை, ஆசிரியர், நவீன நாடகத் தமிழின் பிதா எனத் தக்க ராவ்சாகிப் பி. சம்பந்த முதலியார் அவர்களுக்கு அர்ப்பணம் செய்துள்ளார். viii. 399/1919/I.

O31,2

ராகவாசாரியன், சருக்கை

1955 i. வேணீஸம்ஹாரம் அல்லது தர்ம விஜயம்; ii. கபாலி பிரஸ், சென்னை; iii. 1919; iv. உ. ப. 56; v. 22×14 செ.மீ.; vi. 0—8—0; vii. மகா பாரதக் கதையைத் தழுவி எழுதப்பட்ட ஓர் அரிய நாடகமாகும் இந் நூல். வடமொழியில மஹாகவி பட்ட நாராயணன் என்பார் இயற்றியுள்ள வீரச்சுவை மிகுந்த வேணி ஸம்ஹாரம் என் பதனைத் தமிழில் நாடக ரூபமாய் அமைத்துத் தந்துள்ளார் ஆசிரியர். ஐந்து அங்கங்களில் இந்நாடகம் அமைக்கப் பட்டுள்ளது. viii. 327/1920/I.

O31,2

ராகவாச்சாரியார், தூ. கோ.

1956. i. நந்தனர்: முதற் பதிப்பு; ii. மூர்த்தி அண்ட் கம்பெனி, சென்னை; கபாலீ பிரஸ், சென்னை; iii. டிசம்பர், 1917; iv. உ. ப. + செ. மூ. ப. 124; v. 18×13 செ. மீ.; vi. 0—12—0; vii. இதில் சிவத் தொண்டனை நந்தனரின் வாழ்க்கை வரலாறு ஐந்து அங்கங்களைக் கொண்ட நாடகமாகப் புனையப்பட்டுள்ளது. இசைப் பாடல்களும் விருத்தப் பாடல்களும் இடையிடையே வந்துள்ளன. இந்த இசைப் பாடல்கள் கோபால கிருஷ்ண பாரதியாரின் நந்தனர் சரித்திரக் கீர்த்தனைகளிலிருந்து எடுக்கப்பட்டனவாம். viii. 973/1917/IV.

O31,2

ராமனுத அய்யர், டி. எஸ்., திருநெல்வேலி

1957. i. பாதுகா பட்டாபிஷேகம்: முதற் பதிப்பு; ii. டி. எஸ். ராமனுத அய்யர், திருநெல்வேலி; பாளையங்கோட்டை பிரிண்டிங் பிரஸ், பாளையங்கோட்டை; iii. ஜூன், 1920, iv. உ. ப. 77; v. 22×14 செ. மீ.; vi. 1-0-0; vii. பரதன் இராமனின் பாதுகைகளுக்குப் பட்டாபிஷேகம் செய்த கதை இதில் நாடக வடிவில் தரப்பட்டுள்ளது. ஐந்து அங்கங்களைக் கொண்டு அமைந்தது இந்நாடகம். viii. 352/1920/III.

O31,2

ராமஸ்வாமி ஐயர், எஸ்., திருச்சிராப்பள்ளி

1958. i. ஸ்ரீமதி: முதற் பதிப்பு; ii. எஸ். ராமஸ்வாமி அய்யர், திருச்சிராப்பள்ளி; டாட்ஸன் பிரஸ், தெப்பக்குளம்; iii. 1916; iv. உ. ப. 155; v. 22×14 செ. மீ.; vi. 0-12-0; vii. இது சமூக நாடகம்; ஐந்து அங்கங்கள் கொண்டது. திருச்சிராப்பள்ளி ரஸிக ரஞ்சனி சபையாரின் ஊக்கத்தால் இது அச்சிடப்பெற்றது. viii. 529/1916/I.

O31,2

ராமவாமி அய்யர், எஸ்., திருத்தம்பூண்டி

1959. i. பாதுகா பட்டாபிஷேகம் என்ற நாடக சிந்தாமணி: முதற் பதிப்பு; ii. எஸ். ராமஸ்வாமி அய்யர்; ஸ்காட்டிஷ் பிராஞ் பிரஸ், நாகப்பட்டினம்; iii. 1915; iv. உ. ப. 60; v. 21×14 செ.மீ.; vi. 0-4-0; vii. ராமர் வன வாசத்தின் போது ராமர் அணிந்த காலணிகளுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்ததை விளக்குவது. பத்து அங்கங்கள் கொண்டது. ஒவ்வோர் அங்கத்திலும் இடம் பெறும் நடிகர்களைப் பற்றிய குறிப்பு அவ்வவ்வங்கம் தொடங்கும் இடத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. viii. 334/1916/I.

O31,2

வில்லியம்ஸ், ஜி., மதுரை

1960. i. தேவதாசன் நாடகம்: முதற் பதிப்பு ; ii. டி. எம். செல்லையா பிள்ளை. பரமக்குடி; மாணிக்கம் பிரஸ், பரமக்குடி ; iii. ஜுன், 1919; iv. செ. மூ. ப. 49; v. 21×14 செ.மீ. vi. 0-4-0; vii. ஏசுவின் சீடரான டேனியலின் வாழ்க்கை வரலாறு இதில் நாடகப் பாணியில் அமைத்து பாடல் வடிவில் தரப்பட்டுள்ளது. பாடல்களுக்கு மெட்டும் இராக, தாளக் குறிப்புக்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. viii. 885/1919/II.

O31,2

வெங்கட்ராம சர்மா, கெ. ஆர்., திருவள்ளூர்

1961. i. குஸ்மா முதற் பதிப்பு; ii. என். வெங்கடருயலு அண்டு ஸன், சென்னை; கார்டியன் பிரஸ், சென்னை; iii. ஆகஸ்டு 1920; iv. உ.ப. 65; v. 19×13 செமீ.; vi. 0–8–0; vii. முடியிழந்த தன் தந்தைக் காகப் பெருஞ்சிரமப்பட்டு இறுதியில் தன் தந்தையின் ஆட்சியைக் காப்பாற்றிய குசுமா என்னும் பெண்ணின் கதை நான்கு அங்கங்கள் கொண்ட புதிய நாடகமாக இயற்றப்பட்டுள்ளது. viii. 1008/1920/III.

O31,2

வெங்கடசுப்ரமண்ய பாரதி, ஜெ., சென்னை

1962. அர்ஜுன சன்யாசி: முதற் பதிப்பு; ii. ஜெ. வெங்கட சுப்ரமணிய பாரதி, சென்னை; இண்டியா பிரிண்டிங் ஒர்க்ஸ், சென்னை; iii. அக்டோபர், 1920; iv. உ. ப. 100; v. 18×13 செ.மீ.; vi. 0–12–0; மகாபாரதத்தில் வருகின்ற நிகழ்ச்சியான அர்ச்சுனனுடைய சந்நியாசத்தை விளக்கும் ஐந்து அங்கங்களைக் கொண்ட நாடகமாகும் இந்நூல். காட்டுப்புத்தூர் உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் திரு. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்கள் தந்த சாத்துக் கவியுடன் கூடியது. viii. 613/1920/IV.

O31,2

1963. **வெங்கடேசப் பெருமாள் நாடகம்**: திருத்திய பதிப்பு; ii. மு. னுசாமி முதலியார், சென்னை; ஸன் ஆப் இந்தியா பிரஸ், சென்னை ; iii. மே, 1919; iv. உ.ப.+ செ. மூ. ப. 60; v. 20×14 செ. மீ.; vi. 0-4-0; vii. இது திருப்பதிமலையில் விளங்கும் வெங்கடேசப் பெருமாளைப் பற்றிய நாடகம். பட விளக்கங்களுடன் கூடியது. கீர்த்தனை, தரு முதலிய இசைப்பாடல்களால் ஆகியது; வசனப் பகுதியும் இடை யிடையே உண்டு. viii. 209/1919/III.

O31,2

வெங்கிடசாரி, கே., காஞ்சிபுரம்

1964. i. ஆந்தரிய கூட்டுறவு: முதற் பதிப்பு; ii. வி. வெங்கிடாசாரி, காஞ்சீபுரம்; விக்டோரியா ராயல் அச்சுக்கூடம், காஞ்சீபுரம்; iii. நவம்பர், 1918; iv. உ. ப. 35; v. 21×14 செ.மீ.; vi. 0-4-0; vii. செங்கல்பட்டு மாவட்டக் கூட்டுறவு மகாநாட்டிற்காகத் தயாரிக்கப்பட்டது இந்நாடகம். மூன்று அங்கங்களைக் கொண்ட இந்நாடகத்தில் கூட்டுறவு முறையின் கொள்கைகள், நன்மைகள் முதலியன பற்றி மக்களுக்கு எளிதில் புரியும் வண்ணம் விளக்கப்பட்டுள்ளன. viii. 663/1918/IV.

O31,2

வேங்கடகிருஷ்ண பாகவதர், மதுரை

1965. i. வீத கல்யாணம்; ii. கே.சி.கே. இராமசுவாமி அய்யர்; பிரசன்ன வெங்கடேஸ்வர பிரஸ், மதுரை; iii. 1919; iv. செ.மூ.ப. 112; v. 21×14 செ.மீ.; vi. 0-10-0; vii. பலவித இசைகளில் இராமாயணக் கதை விளக்கப்பட்டுள்ளது. சௌராஷ்டிர மொழியில் உள்ளது. ஆயினும் தமிழ் எழுத்துக்களால் அச்சிடப்பட்டிருக்கிறது. கம்பராமாயண வசன காவியத்திற்கு இணங்க இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாசிரியருக்குப் பாருண்டான் அய்யங்கார் என்னும் ஒரு பெயருமுண்டு. viii. 258/1919/II.

O31,2

வேங்கடராம சாஸ்திரிகள், வாழ்குடை

1966. i. ஸத்ய விஜயம்: திருத்திய இரண்டாம் பதிப்பு; ii. ஆர். கணபதி அண்டு கம்பெனி, பெரம்பூர், சென்னை; மினர்வா பிரஸ், சென்னை; iii. பிப்ரவரி 1920; iv. உ.ப. 173; v. 19×13 செமீ.; vi. 0-10-0; vii. இதில் அரிச்சந்திரனின் கதை நாடக வடிவில் தரப்பட்டுள்ளது. ஏழு அங்கங்கள் கொண்ட ஓர் நாடகமிது. கதைச் சுருக்கத்துடன் கூடியது. viii. 302/1920/II.

O31,2

வேங்கடராமையர், கி.

1967. i. மீனாட்சி சுந்தரம்: முதற் பதிப்பு; ii. தமிழ்ச்சங்க முத்திராசாலை, மதுரை; iii. 1017; iv. உ.ப. 27; v. 21×14 செ.மீ.; vi. 0-6-0; vii. பிராமண குடும்பத்தில் ஒரு கன்னிகையை வாழ்க்கைப் படுத்துமிடத்து

அக்கன்னிசையின் தாய், தகப்பன், உடன் பிறந்தோர் முதலானோர் இன்றியமையாது கவனிக்க வேண்டிய கடமைகளை உணர்த்துகிறது இந்நாடகம். நாடகப் பாத்திரப் பட்டியல் இந்நூன் முதலில் உண்டு. 'கைப் பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி' என்னும் உண்மையை அடிப்படையாகக் கொண்டது. திராவிட வித்யாமலர் வரிசையில் இது முதல் இதழாகும். viii. 897/1917/II.

O31,2

வேலு முதலியார், செ.மு.

1968. i. கிருஷ்ணன் தூது: முதற் பதிப்பு; ii. தமிழ்க் கல்வி வளர் சங்கம், சென்னை; கணேசர் பிரஸ், சென்னை; iii. மே. 1917; iv. உ.ப. 64; v. 19×13 செ.மீ.; vi 0–5–0; vii. துரியோதனன் சபையில் கண்ணன் கூறிய தூதினை இந்நூலில் நாடக வடிவில் காணலாம். நாடகப் பாத்திரப் பட்டியல் இதில் உள்ளது. 'இது தமிழ் மகள் அணி' வரிசையில் மூன்றுவது வெளியீடு. இதற்கு முன் வந்தவை ஸ்ரீசுந்தர மூர்த்தி, காரைக்கால் அம்மையார் என்னும் இரு அழகிய நூல்களாம். viii. 650/1917/II.

O31,2

1969. i. சுந்தர மூர்த்தி: முதற் பதிப்பு; ii. தமிழ்க் கல்வி வளர் சங்கம், சென்னை; கணேசர் பிரஸ், சென்னை; iii. அக்டோபர், 1916; iv. உ.ப. 32; v. 18×13 செ.மீ.; vi. 0–2–6; vii. பெரிய புராண வரலாற்றில் வருகின்ற சுந்தரமூர்த்தி நாயனரின் வாழ்க்கை வரலாற்றில் தடுத்தாட் கொண்ட புராணப் பகுதியில் வரும் செய்திகள் நாடகமாக இந்நூலில் விளக்கப் பட்டுள்ளன. இத்தகைய சிறு நாடகங்கள் பாடசாலை மாணவர்களுக்குத் தெய்வ பக்தியை ஊட்டும் எனக்கருதி அமைக்கப் பெற்றன. viii. 475/1916/IV.

O31,2

ஸ்ரீநிவாஸன், ஆர்.

1970. i. மீராபாய்: திருத்திய இரண்டாம் பதிப்பு; ii. கல்வி பப்ளிஷிங் ஹவுஸ், மதுரை; மாடர்ன் பிரிண்டிங் ஒர்க்ஸ், சென்னை; iii. மார்ச், 1920; iv. உ. ப. 166; v. 18×13 செ.மீ.; vi. 0–12–0; vii. இராஜபுத்திரப் பெண்மணியான மீராபாயைப் பற்றிய நாடகம். நாடகப் பாத்திரப் பட்டியல் ஒன்றும் பல சித்திர விளக்கங்களும் அடங்கியுள்ளன. viii. 854/1920/I.

O31,2

ஸ்ரீநிவாஸாச்சாரியார், கெ. கெ.

1971. i. இன்ப லதா அல்லது ஏக்லிங்காதிவான்: முதற் பதிப்பு; ii. கெ. கெ. ஸ்ரீநிவாஸாச்சாரியார், திருவாரூர்; பிரம்மா வித்தியா பிரஸ், திருமீயச்சூர்; iii. ஆகஸ்ட், 1920; iv உ. ப. 88; v. 22×14 செ.மீ.; vi. 0-12-0; vii. ராஜஸ்தானத்தின் தலைநகரான சித்தூரில் அரசு புரிந்து வந்த சைலாதீசன் அல்லது பாப்பாரவுல் என்ற ராஜடத்ர ரத்தினத்தின் சரித்திரம். டாட் என்ற ஆங்கிலேயரால் ராஜஸ்தான் சரித்திரத்தில் மேவார் வைபவத்தில் எழுதப் பட்டிருந்ததனையொட்டி எழுதப்பட்டது இந்நூல். viii. 1001/1920/III. O31,2

1972. i. மாலதீ அல்லது ஒரு கோடீஸ்வரியின் பிதுர்வாத்ஸல்யம்' முதற் பதிப்பு; ii. பிரம்மா வித்யா பிரஸ், திருமீயச்சூர்; iii. அக்டோபர், 1920; iv. உ. ப. 85; v. 21×14 செ.மீ.; vi. 0-12-0; vii. ஐந்து அங்கங்களைக் கொண்ட நாடகமாகும் இந்நூல். தந்தையாருக்கும் மகளுக்கும் உள்ள அன்பினைப் பற்றி இந்நூல் விளக்குவதோடு கடவுள் பக்தியைப் பற்றியும் தெளிவாகக் கூறுகிறது. viii. 220/1920/IV. O31,2

ஷண்முகதாஸர், எம். எஸ். எஸ்., மதுரை

1973. i. சிறுத்தொண்டன்: முதற் பதிப்பு; ii. எம். எஸ். எஸ். ஷண்முக தாஸர், மதுரை; மீனுண்மணி விலாச அச்சியந்திரசாலை, மதுரை; iii. டிசம்பர், 1920; iv. உ. ப. 80; v. 21×14 செ.மீ.; vi. 0-8-0; vii. சிறந்த சிவ பக்தரான பரஞ்சோதி என்று அழைக்கப்படுகின்ற சிறுத்தொண்டரின் வாழ்க்கை வரலாறு நாடக வடிவில், இனிய பாடல்களோடு இந்நூலில் விளக்கப்பட்டுள்ளது. வெள்ளியம்பல வித்வான், சந்தச்சரப ராஜா சண்முகதாஸ் அவர்களின் நிமற்பட மொன்றும் இதன்கண் உண்டு. viii. 929/1920/IV.

ஷேக்குத்தம்பி பாவலர், சதாவதானி O31,2

1974. i. வேதாந்த விவகாரக் கிரிமினல் கேஸ்: இரண்டாவது பதிப்பு; ii. எம். ஆதி அண்டு கம்பெனி, சென்னை; சந்திரா பிரஸ், சென்னை; iii. அக்டோபர், 1917; iv. உ. ப.+செ.மு.ப. 312; v. 18×12 செ.மீ.; vi. 1-8-0; vii. 'தன்னைத் தானறிதல்' என்னும் வாக்கியத்தை மேற் கோளாகக் கொண்டு ஆன்மா, சரீரமாகிய இவைகளை வாதி பிரதிவாதிகளாக்கி மண், தண்ணீர் முதலிய தத்துவங்கள் தொண்ணூற்றாறையுஞ் சாட்சிகளாக்கி, அவைகளுக்குத் தக்க வக்கீல்களையுமேற்படுத்தி மாயையைய நீதிபதியாக்கி, நீதி மன்றத்தில் நடக்கும் வழக்குகள் போல வழக்கு உருவமாக எழுதப் பெற்ற நூலிது. வேதாந்தக் கருத்துக்கள் இதில் விளக்கப்பட்டுள்ளன. செம்பூர் ஆறுமுகஞ் சேர்வையர்கள் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளார். நாடக முறையில் நிகழ்ச்சிகள் சித்தரிக்கப்பட்டுள்ளன. viii. 318/1917/II. O31,2

894.8113 கதைப் பாட்டு

இராமசாமி பிள்ளை, வாகைக்குளம்

1975. i. செழுகையம்மானை: முதற் பதிப்பு; ii. இ. சங்கர சுப்புப் பிள்ளை, தூத்துக்குடி; சைவப்பிரகாச அச்சியந்திர சாலை, தூத்துக்குடி; iii. ஜூன், 1918; iv. செ.மூ.ப. 10; v. 21×14 செ.மீ.; vi. 0–1–0; vii. வேளாள குலத்தின் உட்பிரிவினராகிய கோட்டை நான்குநேரி வேளாள குலத்தினர் தோற்றமும் வரலாறும் இதில் அடங்கியுள்ளன. பழைய சுவடியை ஆதாரமாகக் கொண்டு பதிப்பிடப் பெற்றது. தூத்துக்குடி சுதேச வர்த்தகக் கமிஷன் ஏஜண்டு கோ. மாணிக்கவாசகம் பிள்ளையின் பொருளுதவியால் இந்நூல் அரங்கேறியதாகத் தெரிகிறது. இந்நூலாசிரியர் ஆயிரத்து முந்நூறு ஆண்டுகட்கு முற்பட்டவர் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. நூற் சுருக்கம் உரைநடையில் நூல் முகப்பில் தரப்பட்டுள்ளது. viii. 911/1918/II.

O31,3

இராமஸ்வாமி அய்யர், பாலக்காடு

1976. i. ஸந்தான கோபாலம்: முதற் பதிப்பு; ii. வி. வெங்கட்டாசல சாஸ்திரி, பாலக்காடு; வித்யா கல்பதரு அச்சுக்கூடம், பாலக்காடு; iii. மார்ச், 1918; iv. செ.மூ.ப. 24; v. 17×11 செ.மீ.; vi. 0–12–0; vii. புராணத்திலிருந்து எடுக்கப்பட்ட கோபால கிருஷ்ணனுடைய அவதார வரலாற்றினைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இருபது கட்டங்களாகப் பிரிக்கப்பட்டுச் செய்யுள் நடையில் எழுதப்பட்டுள்ளது. viii. 15/1918/II.

O31,3

1977. i. இராமாயண சங்கிரகம்: முதற் பதிப்பு; ii அருணாசலஞ் செட்டியார்; எஸ்டேட் பிரஸ், தேவக்கோட்டை; iii. 1916; iv. செ.மூ.ப.6; v. 16×11 செ.மீ.; vi.....; vii. ராமாயணத்தைச் சுருக்கமாகச் செய்யுள் வடிவில் சொல்லுகிறது இந் நூல். இராமாயண நிகழ்ச்சிகள் யாவும் சுருக்கமாகப் பாடல் வடிவில் வடித்துத் தரப்பட்டுள்ளன. 'இஃது பூர்வீகப் புலவரொருவரால் இயற்றப் பெற்றது', என்னும் குறிப்பு நூல் முதற்கண் உள்ளது. viii. 451/1916/I.

O31,3

இலக்குமி நாராயணப் புலவர்

1978. i சோழனம்மானை; ii. பி. அழகு நம்பிக் கவிராயர், சாவிச் சந்தை; தமிழ்ச் சங்கம் முத்திரா சாலை, மதுரை; iii 1920; iv. செ.மூ.எ. 133; v 22×15 செ.மீ.; vi......; vii. இளவரசன் தேரூர்ந்து செல்லுங்கால் ஆவின்

கன்றென்று தேர்க்காலில் வீழ்ந்திறந்த பழிக்கஞ்சித் தன் அருமந்த மைந்தனைத் தேர்காலிலிட்டுக் கொன்று முறை செய்த மனுநீதிச் சோழனின் வரலாறு அம்மானை வடிவில் இங்கு அறையப்படுகின்றது. "ஆரூரச் சோழ மன்னனு விளங் கன்றினுக்காய்த் தேரூரும் பாடல் சிறந்த தமிழ்" என்கிறார் ஆசிரியர். இது பெரிய புராணத்தில் வரும் "மனுநீதிச் சோழன்" சரிதையைப் பின்பற்றி அமைந்தது. viii. 405/1920/I.

O31,3

1979. i. **கதிஜா நாயகி திருமண வாழ்த்து**: முதற் பதிப்பு; ii. ஷேக் மீரான் மொய்தீன், சென்னை; முஹம்மதியாப் பிரஸ், சென்னை; iii. மே, 1917; iv. செ.மூ.ப. 50; v. 22×14 செ.மீ.; vi. 0–4–0; vii. முஸ்லீம் பெரியார் முகமது நபியின் முதல் மனைவியான கதீஜா நாயகியின் திருமணம் பற்றியும், அவரின் மகள், அவருடைய இரண்டாம் மனைவி ஆகியோரின் திருமணம் பற்றியும் கூறப்பட்டுள்ளது. காசிம் புலவரின் பேரர் அப்துல் காதிறுப் புலவர் பாடிய நகசிலா நாட்கவியும், செய்தப்துற் றகுமானைத்தனூசுத் தங்கள் பேரில் முன்னோர்கள் இயற்றிய ஞானக்கொம்மிப் பாட்டும் இதில் உள. viii. 36/1918/I.

O31,3

கந்தசாமிக் கவிராயர், அ., விருதுப்பட்டி

1980. i. அருணசல சுவாமிகள் அம்மானை [அருணசலசாமி காவடிச் சிந்து] முதற் பதிப்பு; ii. கொ. சி. பச்சையப்ப நாடார், விருதுப்பட்டி; சச்சிதானந்த அச்சியந்திரசாலை, விருதுப்பட்டி; iii. ஜனவரி, 1917; iv. செ.மூ.ப. 94; v. 21×14 செ.மீ.; vi. 0–8–0; vii. எரலைச் சார்ந்த அருணசல சுவாமி என்பவரின் தவககோலத்தைப் பற்றிப் பாடப்பெற்ற பாடல்களைக் கொண்டது. அருணசல சுவாமி உருவப் புகைப்படமும் இதில் உள்ளது. அம்மானைப் பாட்டு நடையில் அமைந்தது. ஈற்றில் சுவாமிகளின் மேல் துதியாக அமைந்த காவடிச் சிந்துப்பாடல்கள் சிலவும் உள்ளன. viii. 444/1917/I.

O31,3

1981. i. கதா மாலை: முதற் பதிப்பு; ii. என். எஸ். மாணிக்க வாசக நாடார், விருதுப்பட்டி; டார்லிங் பிரிண்டிங் பிரஸ், பாளையங்கோட்டை; iii. நவம்பர், 1917: iv. செ.மூ.ப. 46; v. 18×11 செ.மீ.; vi. 0–4–0; vii. இந்நூல் பள்ளிச் சிறுவர்களுக்கேற்ற சிறு கதைகளின் கவிதைத் தொகுப்பு. குழந்தைகளுக்கு ஏற்ற பாடல்கள் இல்லாத குறைபாட்டை நீக்கும் கருத்துடன் இயற்றப் பெற்றது. விருதுப்பட்டி

க்ஷத்திரிய வித்தியாசாலைத் தலைமையாசிரியர் என். எஸ். மாணிக்கவாசகம் என்பார் இதற்கு முகவுரை எழுதியுள்ளார். viii. 1038/1917/IV.

O31,3

கருப்பையாதாஸ்

1982. i. நந்தனார் சரித்திரம்—முதற் பாகம்; முதற் பதிப்பு; ii. கே. கருப்பையா பிள்ளை, சென்னை; எக்ஸெல்சியர் பிரஸ், மதுரை; iii. அக்டோபர், 1920; iv. உ.ப.+செ.மூ.ப. 39; v. 21×14 செ.மீ.; vi. 0-8-0; vii. அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான நந்தனாரின் வாழ்க்கை வரலாற்றினை உரைநடை விரவிவரச் செய்யுள் நடையில் ஆசிரியர் நன்கு விளக்கியுள்ளார். கோபாலகிருஷ்ண பாரதியாரின் பாடல்களைத் தழுவி இந்நூல் செய்யப்பட்டிருக்கிறது. viii. 459/1920/IV.

O31,3

கவிக் களஞ்சியப் புலவர்

1983. i. வேதாள கதை; ii. பி. அழகுநம்பிக் கவிராயர்; தமிழ்ச் சங்கம் முத்திராசாலை, மதுரை; iii. 1919; iv. செ.மூ.எ. 865; v. 22×14 செ.மீ.; vi. . . . . ; vii. வேதாளக் கதையென்னும் இந்நூல் 25 கதைகளையும், 865 விருத்தங்களையும் உடைத்து. ஒவ்வொரு கதையின் தொடக்கத்திலும் முருகப்பிரான் துதியாக அமைந்த ஒரு பாடல் உள்ளமை இவருடைய முருகபக்திக்கு அறிகுறியாகும். இந்நூல் கேட்பவர் மனத்திற்கு மிக இனிமையைத் தருவதாயும், செம்பாகமாகவும் சொன்னடை பொருணடை அழகுள்ளதாயும், உலக வழக்கச் சொல் விரவி வருவதாயும் அமைந்துள்ளது. பொன்மயபுரம் திரு. இலக்கண முத்துக் கவிராயர் புத்திரர் திரு. சிவப்பிரகாசர் இந்நூலுக்குச் சாத்துக் கவி ஒன்று தந்துள்ளார். viii. 403/1920/I.

O31,3

கிருஷ்ணமாச்சாரியார், வி.

1984. i. சிறுவர்க்காகும் நீதிகதா கிருதிகள்: முதற் பதிப்பு; ii. மாக்மில்லன் அண்டு கம்பெனி லிமிடெட், சென்னை; எஸ். பி. ஸி. கே பிரஸ், சென்னை; iii. ஜூலை, 1918; iv. செ. மூ. ப. 26; v. 25×19 செ. மீ.; vi. 0—8—0; vii. இப்புத்தகத்தில் சிறுவர்களுக்கான நீதி மொழிகளை விளக்கக் கூடிய இருபத்தாறு சிறுகதைகள் படத்துடன் விளக்கப்பட்டுள்ளன. கதைகள் தலைப்புக்கள் ஆங்கிலத்திலும் தரப்பட்டுள்ளன. கதைகள் அனைத்தும் இசைப்பாடல்களால் இயன்றன. viii 329/1918/III.

O31,3

கோமளத்தம்மாள்

1985. i. காமதேனுவின் சரித்திரம்; ii. கோமளத்தம்மாள்; சுதேசி பிரஸ், கும்பகோணம்; iii. 1916; iv. செ. மூ. எ. 192; v. 21×14 செ. மீ.; vi. 0—2—0; vii. பாகவதத்திலுள்ள காமதேனுவின் சரித்திரத்தைக் கூறுவது; அம்மானைப்பாடல் அமைப்பில் உள்ளது. இச்சரித்திரம் பாகவதத்தில் எட்டாவது ஸ்கந்தத்தில் உள்ளது. viii. 850/1916/I.

O31,3

சண்முக சுந்தர முதலியார், ம. (தொ. து.)

1986. i. செய்யுட் கதைகள்: முதற் பதிப்பு; ii. ம. சண்முக சுந்தர முதலியார், சென்னை; பி. ஆர். ராம அய்யர் கம்பெனி, சென்னை; iii. ஜூலை, 1920; iv. உ. ப. 137; v. 19×13 செ. மீ.; vi. 0—12—0; vii. இ∴து உயர்தாப்பள்ளிகளுக்கேற்ற தமிழ்க் கட்டுரைப் பயிற்சி நூல். பலதரப்பட்ட நூல்களிலிருந்து தொகுக்கப்பெற்ற செய்யுட் கதைகள் இதில் அடங்கியுள்ளன. viii. 266/1920/III.

O31,3

சபாபதி பிள்ளை, வெ. நா., விஜயபுரம்

1987. i. பக்காத் திருடன் பாட்டு; ii. கு. ஆ. கிருஷ்ணசாமி முதலியார்; இராஜராஜேஸ்வரி பிரஸ், கும்பகோணம்; iii. 1916; iv. செ. மூ. ப. 10; v. 21×14 செ. மீ.; vi. 0—2—0; vii. சதார திருப்புகழ் காவடிச் சிந்து மெட்டில் அமைந்தது. திருடன் தன் சாமர்த்தியத்தை வெளியிடும் படியாக அமைந்த நூல். இப்பாடல்கள் நடராஜாச்சாரி என்பாரால் பாடிப் பிரசித்தி பெற்றனவாம். ஒரு சில காதற் பாட்டுகளும் இதில் உள. viii. 590/1916/III.

O31,3

சாமி நாயுடு, எம்., தாராபுரம்

1988. i. மறையவன் மகளை மகமதியனுக்கு விற்ற இன்பரச அலங்காரம்: முதற் பாகம்; ii. விக்டோரியா பிரஸ், பாலக்காடு; iii. 1920; iv. செ. மூ. ப. 8; v. 22×14 செ. மீ.; vi. 0—0—6; vii. மறையவனொருவன் பணத்தாசை காரணமாகத் தன் மகளை ஒரு மகமதியனுக்கு விற்ற செய்தியை வர்ணித்துக்கூறும் பாடல்களைக் கொண்டது இந்நூல். viii. 232/1920/I.

O31,3

சாலமோன் மேஷாக், சென்னை

1989. i. பகவத் பரீக்ஷை அல்லது சிரோபெனீக்யாளாகிய நீதிபதி சரித்திரம்: முதற் பதிப்பு; ii. மேஷாக் சாலமேன், சென்னை; ஹோகார்த் பிரஸ், சென்னை; iii. ஜனவரி, 1918; iv. செ. மூ. ப. 35; v. 18×13 செ. மீ.; vi. இலவசம்; vii. இயேசு கிறித்துவுக்கும் அவருடைய சீடரான ஜுடாஸுக்கும் நடந்த உரையாடல் பற்றிய செய்திகள் பாடல்கள் மூலமாக விளக்கப்பட்டுள்ளன. மயிலாப்பூர்ச் சபையில் இச் சரித்திரம் காலட்சேபமாக உரைக்கப் பெற்றதாம். தமிழிசை பற்றி முகவுரையில் சில செய்திகளை ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். viii. 952/1919/I.

O31,3

1990. i. **சாவித்திரி பாடம்:** திருந்திய நான்காம் பதிப்பு; ii. ஆர். எஸ். சுப்புலக்ஷ்மி அம்மாள், சென்னை; கமர்ஷியல் பிரஸ், சென்னை; iii. ஆகஸ்ட், 1919; iv. செ. மூ. எ. 295; v. 21×14 செ. மீ.; vi. 0—1—6; vii. இதில் சத்தியவான் சாவித்திரி கதை பாடல்கள் மூலம் விளக்கப் பட்டுள்ளது. சாவித்திரி செய்த கௌரி பூஜையே பங்குனி முதல்நாள் கொண்டாடப்பெறும் 'காரடையான் நோன்பு' என்று குறிக்கப்பட்டிருக்கிறது. பாடல்களின் இடையிடையே தக்க தலைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. viii. 1056/1919/III.

O31,3

சீனிவாசக நாடார், கே. எஸ். கீளக்கடையம்

1991. பொன்னிறத்தம்மன் அந்தாதி—முதற்பாகம்: முதற் பதிப்பு: ii. சிவனு பாண்டிய நாடார், அம்பாசமுத்திரம்; கோமாதி விலாசம் பிரஸ், தென்காசி; iii. ஜூன், 1918; iv. செ. மூ. ப. 39; v. 20×14 செ.மீ; vi. 0—3—0; vii. இதில் உள்ள பாடல்கள் அந்தாதித் தொடையாக அமையவில்லையெனினும் இந்நூலுக்குப் பொன்னிறத்தம்மான் அந்தாதி எனப் பெயரிடப்பட்டுள்ளது. வடுகர் குலத்தில் தோன்றிப் புகழ்பட வாழ்ந்த பொன்னிறத்தம்மையின்மேற் பாடப்பட்ட ஒரு போற்றிப் பாமாலையாகும். இந்நூல் அம்பா சமுத்திரம் சிவனு நாடாரால் பரிசோதிக்கப் பெற்று திருமலையப்புரம் சங்கரலிங்க ஆசிரியரவர்களின் பொருளுதவி யால் அச்சிடப் பெற்றது. viii. 112/1918/III.

O31,3

1992 i. **சுந்தரர் வேடுபறி;** ii. ஸ்ரீ வித்தியா விநோதினி பிரஸ் தஞ்சாவூர்; iii. 1916; iv. செ. மூ. ப. 135; v. 21×14 செ. மீ.; vi............; vii. **சுந்தரமூர்த்தி**

நாயனார் சேரமான் பெருமாள் நாயனாரிடத்தில் பெற்றுக் கொண்டு வந்த செல்வங்களை வழியில் திருமுருகன் பூண்டி என்னும் தலத்தில் பறிமுதல் செய்தனர். அப்பொழுது சுந்தரர் திருமுருகன்பூண்டியில் உள்ள சிவபெருமானை வணங்கி, அந்தச் செல்வங்களை மீண்டும் பெற்றனர். இந் நிகழ்ச்சியைக் கலிவெண்பாவினால் தருகிறது இந்நூல். viii. 193/1916/IV. O31,3

சுப்புலக்ஷ்மி அம்மாள், ஆர். எஸ்., சென்னை

1993. i. குசலவ வாக்கியம் : ஐந்தாம் பதிப்பு; ii. இ. இராமசாமி நாயுடு அண்ட் சன்ஸ், சென்னை ; கமர்ஷியல் பிரஸ், சென்னை; iii. பிப்ரவரி, 1919 ; iv. செ. மூ. எ. 870 ; v. 22×14 செ. மீ. ; vi. 0—3—6 ; vii. இராமனுடைய பிள்ளைகளான இலவ குசன் ஆகியவர்களின் வரலாற்றினை மக்களுக்கு எளிதில் புரியும் வண்ணம் நாட்டுப்பாடலில் எழுதப் பட்டுள்ளது. இராமாயண உத்தர காண்டம் முழுமையும் இதில் விளக்கப்பட்டுள்ளது. இந்தக் குசலவ வாக்கியம் என்பது நமது தமிழ்நாட்டுப் பெண்களால் வெகுகாலமாய்க் கர்ணபரம்பரையாகச் சொல்லிக்கொண்டு வரப்பட்டது என்றும் இந் நூலாசிரியர் இதனைச் செப்பஞ் செய்து வெளியிட்டதாக வும் தெரியவருகின்றது. வால்மீகி இராமாயணப் பாட் டொன்றும் இவ்வாசிரியையால் செப்பஞ் செய்து வெளி யிடப்பட்டதாகத் தெரிகிறது. viii. 916/1919/I. O31,3

திருவடிதாசர்

1994. i. கஜேந்திர மோட்சம் : முதற் பதிப்பு ; ii. எஸ். சிவசங்கர செட்டியார், சென்னை ; மதருஸ் ரிப்பன் பிரஸ், சென்னை ; iii. செப்டம்பர், 1919 ; iv. செ. மூ. எ. 118; v. 16×12 செ. மீ. ; vi. 0—2—0 ; vii. இது திருவடி தாசர் அருளிச்செய்த கஜேந்திர மோக்ஷம் என்னும் கவிதை நூல். அறுசீர், எழுசீர் ஆசிரியவிருத்தங்களால் ஆனது. இதில் செய்யுள் முதற்குறிப்பகராதியும் சரித்திரச் சுருக்கமும் அடங்கியுள்ளன. viii. 571/1919/IV. O31,3

நமச்சிவாய முதலியார், கா.

1995. i. செய்யுளில் கதைகள்: திருத்திய பதிப்பு; ii. வி. குமாரசாமி நாயுடு அண்டு ஸன்ஸ், சென்னை; காக்ஸ்டன் பிரஸ், சென்னை; iii. செப்டம்பர், 1917; iv. செ.மூ.உ.எ. 76+35; v. 18×13 செ.மீ.; vi. 0—6—0; vii. இந்நூலில் காணும் பேராசைப் பேயன், குணவான் தன் குற்றம் உணர்வான் இரு கதைகளும் 'செய்யுட் கதைகள்' என்னும் நூலினின்று எடுக்கப்

பெற்றவை. 'லோயர் எலிமெண்டரி கிரேட்' தேர்வுக்குப் பாடமாக வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு பாட்டிற்கும் அருஞ்சொற் குறிப்புக்கள் உள்ளன. viii. 1168/1917/III.

O31,3

1996. i. பொற்கைப் பாண்டியன்: முதற் பதிப்பு; ii. சி. குமார சாமி நாயுடு அண்டு சன்ஸ், சென்னை; காக்ஸ்டன் பிரஸ், சென்னை; iii. பிப்ரவரி, 1918; iv. செ.மூ.எ. 39; v. 22×14 செ.மீ.; vi. இலவசம்; vii. இந்நூலில் பொற்கைப் பாண்டியனைப் பற்றிய கதை, வெண்பா வடிவில் விவரிக்கப் பட்டுள்ளது. எளிய இனிய ஐம்பத்திரண்டு வெண்பாக்களா லாகியது இந்நூல். viii. 972/1918/I.

O31,3

நாராயணியம்மாள், அ.

1997. i. கௌரியம்மையார் சரித்திரம்: முதற் பதிப்பு; ii. செல்லப்ப முதலியார், சென்னை; ஜீவகாருண்ய விலாச அச்சுக்கூடம், சென்னை; iii. ஜனவரி, 1917; iv. செ.மூ.எ. 11+3+32; v. 18×11 செ.மீ.; vi. இலவசம்; vii. திருவிளையாடற் புராணத்தில் விவரிக்கப்பட்டுள்ள சிவ பக்தையான கௌரி யம்மையைப் பற்றி எழுதப் பெற்ற சிறு சரித்திர நூல். அகிலாண்ட நாயகியம்மாள், ஜெயலட்சுமியம்மாள் முதலியோர் சாற்றுக்கவிகள் பாடியுள்ளனர். viii. 1027/1917/I.

O31,3

பகவந்தராவ், வி.

1998. i. துரை ஜான் கில்பின் கதை: முதற் பதிப்பு; ii. வி. பகவந்தராவ், தஞ்சாவூர்; கமர்ஷியல் பிரஸ், தஞ்சாவூர்; iii. பிப்ரவரி, 1920; iv. உ.ப.+செ.மூ.ப. 30; v. 15×11 செ.மீ.; vi. 0—1—6; vii. கூப்பர் என்பவர் இயற்றிய 'ஜான் கில்பின்' என்ற நூலின் தமிழாக்கமே இச்சிறு வெளியீடு. viii. 830/1920/III.

O31,3

பத்மாசனி அம்மாள், இராமநாதபுரம்

1999. அனுசூயை சரித்திரக் கும்மி [கோராக்கும்பர் சரித்திரக் கும்மி]: முதற் பதிப்பு; ii. பத்மாசனி அம்மாள், இராமநாத புரம்; இலட்சுமி விலாசம் பிரஸ், இராமனுதபுரம். iii. டிசம்பர், 1916; iv. செ.மூ.ப. 19; v. 21×16 செ.மீ.; vi. 0—2—0; vii. அனுசூயையின் சரித்திரத்தைப் பற்றியும் சிறப்பைப் பற்றியும் கூறுகிறது. 23 கட்டங்களாகப் பகுத்து இச்சரித்திரம் தரப்பட்டுள்ளது. viii. 146/1917/I.

O31,3

i. கோராக்கும்பர் சரித்திரம் (தொ.எ.1999 பார்க்க): முதற் பதிப்பு; ii. பத்மாசனி அம்மாள், இராமநாதபுரம்; இலட்சுமி விலாசம் பிரஸ், இராமநாதபுரம்; iii. டிசம்பர், 1916; iv. செ.மூ.ப. 4; v....; vi....; vii. கோராகும்பர் என்ற பக்தரைப் பற்றியது இந்நூல். ஏழு கட்டங்களாகப் பகுத்து இச்சரித்திரத்தை அமைத்துள்ளார். viii. 146/1917/I.

O31,3

பத்மாசனி அம்மாள், கண்ணனூர்

2000. i. பிரகலாத சரித்திரம்: முதற் பதிப்பு; ii. பத்மாசனி அம்மாள், கண்ணனூர்; டைமண்ட் பிரஸ், சென்னை; iii. ஆகஸ்ட், 1920; iv. செ.மூ.ப. 31; v. 21×14 செ. மீ. vi. 0—6—0; vii. பாகவதத்தில் வரும் பிரகலாதன் என்னும் திருமால் பக்தனின் கதை கீர்த்தனை வடிவில் விளக்கப்பட்டுள்ளது. 45 கட்டங்களாகப் பாகுபடுத்தி இக்கதை அமைக்கப்பட்டிருக்கிறது. viii. 691/1920/III.

O31,3

பார்த்தசாரதி நாயுடு, ஆ. சி. சு., சிதம்பரம்

2001. i. இராமாயணத் திருப்புகழ்—முதற்பாகம்: முதற் பதிப்பு ii. ஸ்ரீரஞ்சன விலாச அச்சுக்கூடம், சென்னை; iii. அக்டோபர், 1917; iv. செ. மூ. எ. 48; v. 21×14 செ.மீ.; vi. 0—2—0; vii. இராமாயணக் கதை காவடிச் சிந்துப் பாடல்களில் விளக்கப்பட்டுள்ளது. இங்கே திருப்புகழ் என்றது இராமாயணத்தின் பெருமையைக் குறித்ததாகும். விருத்தம், கீர்த்தனை முதலிய சந்த முறையிலும் பாடல்கள் உள. viii. 251/1917/IV.

O31,3

புகழேந்திப் புலவர்

i. ஏணியேற்றம் (தொ. எ. 748 பார்க்க); ii. டைமண்ட் பிரஸ், சென்னை; iii. செப்டம்பர், 1920; iv. செ.மூ.ப. 90; v. 19×13 செ.மீ.; vi. 1—0—0; vii. கிராம வாழ்க்கையில் இது போன்ற கதைப் பாட்டுக்களை அவசியம் படித்தல் வேண்டும் என்று காட்டும்பொருட்டு இது கொடுக்கப்பட்டுள்ளது. திருத்திய முறையில் பதிப்பிடப் பெற்றிருக்கிறது. viii. 815/1920/III.

O31,3

2002. i. கோவிலன் கதை: புதிய பதிப்பு; ii. தங்கவேலு முதலியார், பூவிருந்தமல்லி; சங்க நிதி விளக்க அச்சுக்கூடம், சென்னை; iii. அக்டோபர், 1917; iv. செ. மூ. ப. 84; v. 21×14 செ.மீ.; vi. 0—2—0; vii. சிலப்பதிகாரத்திற்

காண்பதற்குச் சற்று மாறுபட்ட முறையில் கோவலன், கண்ணகி, மாதவி முதலியோர் வரலாறு அம்மானை நடையில் வரையப்பட்டுள்ளது.
viii. 57/1918/IV.

O31,3

2003. i. நல்ல தங்காள் கதை : முதற் பதிப்பு; ii. கோபால கிருஷ்ணகோனார்; எக்ஸெல்ஷியர் பிரஸ், மதுரை; iii. எப்ரல், 1917; iv. செ.மூ.ப. 55; v. 21×14 செ.மீ.; vi. 0—3—0; vii. நல்லதங்காளின் வாழ்க்கை செய்யுள் வடிவமாக அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கிறது. இந்நூலினைப் பாடினார் புகழேந்திப் புலவர் என்பதற்குரிய ஆதாரங்கள் எதுவுமில்லை. பிற்காலத்து வந்த புலவர் ஒருவரால் பாடப்பட்டிருக்கலாமென ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். கதைப்போக்கினை விளக்கும் தலைப்புக்கள் இடையிடையே உள. viii. 310/1918/II.

O31,3

2004. i. நல்லதங்காள் கதை: முதற் பதிப்பு; ii. தங்கவேலு முதலியார், பூவிருந்தமல்லி; சங்கநிதி விளக்க அச்சுக்கூடம், சென்னை; iii. எப்ரல், 1919; iv. செ.மூ.ப. 48; v. 21×13 செ.மீ.; vi. 0—2—0; vii....; viii. 921/1919/IV.

O31,3

2005. i. பஞ்ச பாண்டவர் வனவாசம்: முதற்பதிப்பு; ii. இ. மா. கோபால கிருஷ்ண கோனார், மதுரை; எக்ஸெல்சியர் பிரஸ், மதுரை; iii. எப்ரல், 1918; iv. செ.மூ.ப. 260; v. 22×15 செ.மீ.; vi. 0—12—0; vii. பஞ்ச பாண்டவர் வனவாசம் செய்யுள் வடிவமாக இந்நூலில் கூறப்பட்டுள்ளது. படங்களுடன் கூடியது. இந்நூலாசிரியர் புகழேந்திப் புலவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நளவெண்பாப் பாடிய புகழேந்திப் புலவரும் இந்நூலாசிரியரும் ஒருவரா என்பது ஆராய்ச்சிக்குரியது. viii. 311/1918/II.

O31,3

லக்ஷ்மி அம்மாள், தி.

2006. i. காவேரி உற்பத்தியும் கல்யாண வைபவமும் அடங்கிய சரித்திரம் : முதற் பதிப்பு; கிருஷ்ண விலாஸ் அச்சுக்கூடம், திருப்பாதிரிப்புலியூர்; iii. ஜனவரி, 1916; iv. செ.மூ.ப 24 ; 22×14 செ.மீ; v. .... ; vi ..... ; vii. காவேரித்தாயின் பிறப்பு, வளர்ப்பு, திருமணம், வாழ்க்கை ஆகியவை பாடல்கள் மூலமாக இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. இசைக்கீர்த்தனைக் கவிகளால் அமைந்த நூல். viii. 1042/1916/III.

O31,3

வாலாம்பாள், எஸ்.

2007. i. மகா பாரத வாக்கியம்: முதற் பதிப்பு; ii. ஆர். எஸ். சுப்பலக்ஷ்மி அம்மாள், சென்னை; கமர்ஷியல் பிரஸ், சென்னை; iii. 1916; iv. செ.மூ.ப 188; v. 21×14 செ.மீ.; vi. 0-10-0; vii. பாரதத்திலுள்ள விராட பர்வம், உத்தியோக பர்வம் ஆகிய இரண்டு பர்வமும் பாட்டு வடிவில் விளக்கப்பட்டிருக்கின்றன. அம்மானை வடிவில் அமைந்தது இந்தப் பாடல். பாடலின் பொருட் போக்கிற்கு ஏற்ப இடையிடையே தக்க தலைப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இதனை அச்சேற்றி வெளியிட்டவர் நூலாசிரியையின் மகள் ஆர்.எஸ். சுப்புலக்ஷ்மி அம்மாள் ஆவர்; viii. 265/1916/II.

O31,3

வையப்ப ரெட்டியார், எஸ். சுந்தரேஸ்வரபுரம்

2008. i. சீதா கல்யாண மங்களம்: முதற் பதிப்பு ; ii. எஸ். வையப்ப ரெட்டியார், சுந்தரேஸ்வரபுரம் ; நூருல் இஸ்லாம் பிரஸ், திருநெல்வேலி ; iii. 1916 ; iv. செ. மூ. எ. 153 ; v. 21×14 செ. மீ.; vi. 0-4-0 ; vii. இராமனுக்கும் சீதைக்கும் நடந்த திருமண விழாவை விளக்கும் பாட்டு வடிவமாக அமைந்த கதை. வால்மீகி, கம்பர் ஆகியோர் தந்த பெருங் காவியங்களைக் கற்று அனுபவிக்கும் திறனிலாரும் எளிதாக உணர்ந்து மகிழும் வண்ணம் இந்நூலை ஆக்கியுள்ளார். viii. 358/1916/II.

O31,3

894·8113 கதைகள், நவீனங்கள்

அரங்கசாமி நாயுடு, தி., காஞ்சிபுரம்

2009. i. தலைவெட்டி தயாபர சுந்தரி: முதற் பதிப்பு ; ii. என். துரைசாமி முதலியார், கீழ்க்கட்டளை ; பி. ஆர். ராமய்யர் கம்பெனி, சென்னை ; iii. மார்ச், 1920 ; iv. உ. ப. 260 ; v. 19×13 செ.மீ.; vi. 0-12-0 ; vii. ஓர் அரச குமாரி தான் கேட்கும் கேள்விகளுக்குப் பதிலளிப்பவனையே மணம் செய்வதென்றும் பதிலளிக்காதவன் தலையை வெட்டிவிடுவது என்றும் சபதம் செய்கிறாள். அதன்படி பலரை வெட்டி விடுகின்றாள். முடிவில் அவள் தோல்வியடைவதைக் காட்டும் ஓர் அழகிய புதினம் இது. viii. 36/1920/II.

O31,3

2010. i. தாலி கட்டித் தடுமாறின தளபதி: இரண்டாம் பதிப்பு ; ii. எஸ். துரைசாமி முதலியார், கீழ்க்கட்டளை ; ஸன் ஆப் இந்தியா அச்சுக்கூடம், சென்னை ; iii. ஜுன், 1920;

iv. உ. ப. 159 ; v. 19×13 செ.மீ.; vi. 0–8–0; vii. மிருத்தியு தேவதையின் சரித்திரம் முதலியன விளக்கப்பட்டுள்ளன. சாதகம் பொய்யாகாதென்பதும், ஊழ்வினையையொட்டிப்பயன்கள் அனுபவிக்கவேண்டி வருகிறதென்பதும் இக்கதையின் முழுப் பிழிவாகும். பூவை, கலியாணசுந்தர முதலியார், காஞ்சீபுரம் பச்சையப்ப முதலியார் கலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் தி. க. வேலுசாமிப் பிள்ளை முதலியோர் தந்த சாத்துக் கவிகளுடன் கூடியது. viii. 140/1920/II.

O31,3

2011. i. பூபாலன் புவன சுந்தரி: முதற் பதிப்பு; ii. எஸ். துரைசாமி முதலியார், கீழ்க்கட்டளை; ஆட்லிட் அச்சுக்கூடம், சென்னை ; iii. ஜூன், 1918 ; iv. உ. ப. 128 ; v. 18×13 செ. மீ.; vi. 0–6–0 ; vii. இது ஓர் இனிய செந்தமிழ்ப் புதினம். ஸ்ரீராமபராக்கிரமம், தனபதி, வாயாடிவம்பன் முதலிய நாவல்கள் இந்நூலாசிரியரால் எழுதப்பட்டன. இந் நூலை ஆசிரியர் எழுதியதன் நோக்கம் படிப்போரை நன்னெறிக்கண் செலுத்துவதேயென முகவுரையில் குறிப் பிடப்பட்டுள்ளது. இது பதினொரு அத்தியாயங்கள் கொண்டது. viii. 867/1918/II.

O31,3

2012. i. பூபாலன் புவன சுந்தரி: இரண்டாம் பதிப்பு; ii. எஸ். துரைசாமி முதலியார், கீழ்க்கட்டளை ; ஸ்ரீ பாரதி அச்சுக்கூடம், சென்னை ; iii. நவம்பர், 1920 ; iv. உ. ப. 124 ; v. 18×12 செ. மீ.; vi. 0–6–0 ; vii.........; viii. 825/1920/IV.

O31,3

2013. i. ராம பராக்கிரமம்: இரண்டாம் பதிப்பு; ii. எஸ். துரைசாமி முதலியார், கீழ்க்கட்டளை ; ஆட்லிட் அச்சியந்திர சாலை, சென்னை ; iii அக்டோபர், 1918 ; iv. உ. ப. 124 ; v. 19×12 செ. மீ.; vi. 0–6–0 ; vii. இராமருடைய பராக்கிர மத்தையே சற்று விவரித்து, மாருதியின் பெருமைகளையும் சேர்த்துத் தெள்ளிய உரை நடையில் பெண்கள், சிறுவர்கள் முதல் யாவரும் எளிதில் படித்துத் தெரியக்கூடிய வகை யில் எழுதப்பட்ட புத்தகமாகும் இது. நாலாயிரப் பிரபந்தம், கம்பராமாயணம், பாகவத புராணம் ஆகியவைகளிலிருந்து சில மேற்கோள்கள் காட்டப்பட்டுள்ளன. இராம சரிதத்தின் சுருக்கமாக அமைந்துள்ளது இந்நூல். viii. 327/1918/IV.

O 31,3

2014. i. வாயாடி வம்பன்: முதற் பதிப்பு; ii. எஸ். துரைசாமி முதலியார், கீழ்க்கட்டளை; ஆட்லிட் அச்சியந்திரசாலை, சென்னை; iii. மே, 1918; iv. உ. ப. 76; v. 18×13 செ. மீ.; vi. 0-4-0; vii. இது ஓயாத நகைப்பைத் தரும் ஓர் இனிய செந்தமிழ் நாவல். மேலும் அரிய நீதிகளையும், கற்பின் மேன்மையையும், பிறர்மனை நயவாமை, காதல், கவருடல், கள்ளுண்ணல், பொய் மொழிதல், ஈதல் மறுத்தல் போன்ற வைகளைச் செவ்வனே விளக்குகிறது. பல நூல்களினின்றும் செய்யுட்கள் மேற்கோள்களாக இந்நூலில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. viii. 534/1918/II.

O31,3

2015. i. வாயாடி வம்பன்: இரண்டாம் பதிப்பு; ii. எஸ். துரைசாமி முதலியார், கீழ்க்கட்டளை; ஸன் ஆப் இந்தியா அச்சியந்திரசாலை, சென்னை; iii. 1919; iv. உ. ப. 76; v. 18×12 செ. மீ.; vi. 0-4-0; vii. ....; viii. 1040/1920/I

O31,3

2016. i. வாயாடி வம்பன்: மூன்றும் பதிப்பு; ii. பாரதி பிரஸ், சென்னை; iii. நவம்பர், 1920; iv. உ. ப. 72; v. 18×12 செ. மீ.; vi. 0-4-0; vii. ....; viii. 826/1920/IV.

O31,3

2017. i. அருணோதயம்: முதற் பதிப்பு; ii. சங்கை லாகோம்பு, திருச்சிராப்பள்ளி, செயிண்ட் ஜோசப்ஸ் இண்டஸ்டிரியல் ஸ்கூல் பிரஸ், திருச்சிராப்பள்ளி; iii. ஜூலை, 1920; iv. உ. ப. 36; v. 19×13 செ. மீ.; vi. 0-2-0; vii. இது உரோமன் கத்தோலிக்கக் கிருத்துவ சமயத்தை ஒட்டிய நூல். சமயக் கருத்துக்களை இருவர் வாழ்க்கையோடு இணைத்துக் கதை போல எழுதப்பட்டுள்ளது. viii. 561/1920/III.

O31,3

ஆராவமுது அய்யங்கார், டி. ஆர்.

2018. i. திலோத்தமை அல்லது கெடுவான் கேடு நினைப்பான்; ii. இராஜேஸ்வரம் முதலியார், பரங்கிமலை, கார்டியன் பிரஸ், சென்னை; iii. 1919; iv. உ. ப. 96; v. 19×13 செ. மீ.; vi. 0-8-0; vii. கெடுவான் கேடு நினைப்பான் என்னும் உண்மையினை விளக்கும் ஓர் இனிய தமிழ்ப் புதினம். viii. 182/1920/I

O31, 3

2019. i. தென்மலை பட்டி: முதற் பதிப்பு; ii. பிரிமியர் அச்சுக் கூடம், சென்னை; iii. ஆகஸ்ட், 1918; iv. உ.ப. 175; v. 19×13 செ.மீ.; vi. 0-10-0; vii. தென்னிந்திய சமுதாய வாழ்க்கையைப்பற்றி விரிவாகக் கூறக் கூடிய ஓர்

இனிய தமிழ்ப் புதினம். இது டி. எஸ். சுப்பிரமணிய அய்யர் தந்த ஆங்கில முகவுரையுடன் கூடியது. கிராமிய வாழ்க்கை நிகழ்ச்சிகள் பல இடம் பெற்றுள்ளன. திருத்திய செம்மையான உரைநடையில் அமைந்துளளது. பத்து அத்தியாயங்கள் கொண்டது. viii. 743/1918/III.

O31,3

2020. i. ஜயதேவன்: முதற் பதிப்பு; ii. ஆர். சுப்ரமணிய அய்யர், சென்னை; மதுகரவேணி விலாசம் அச்சுக்கூடம், சென்னை; iii. செப்டம்பர், 1917; iv. உ.ப. 130; v. 19×13 செ.மீ.; vi. 0—8—0; vii. இது ஒரு துப்பறியும் நவீனம். ஐந்து அத்தியாயங்களில் அமைந்தது. மதுகரவேணி விலாசம் புக் டிபோவில் வெளியிடப்பெற்ற வேறு பதிய நாவல்களின் பட்டியல் பின் அட்டையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. viii. 235/1917/IV.

O31,3

2021. i. ஆரிய சரித்திரம்; ii. கணேஷ் கம்பெனி, சென்னை, கேம்பிரிட்ஜ் பிரஸ், சென்னை; iii. 1916; iv. உ.ப. 64; v. 18×12 செ.மீ.; vi. 0—8—0; vii. இந்நூல் 1918-ஆம் வருடம் இண்டர்மீடியட் வகுப்பு மாணவர்களுக்கென்று எழுதப்பட்டது. இதில் சாவித்திரி சரிதம், சத்திய பரிபாலனம், பிரகலாத சரிதம, குசேலர் சரிதம் ஆகியவைகள் அடங்கியுள்ளன. viii. 618/1916/II.

O31,3

ஆலென், ஜே. சி.

2022. i. தென்னிந்தியக் கதைகள்—கிரேடு III: திருந்திய பதிப்பு; ii. லாங்மன்ஸ் கிரீன் அண்ட் கோ., சென்னை, கபாலி பிரஸ், சென்னை; iii. மே, 1918; iv. உ.ப. 56; v. 18×13 செ.மீ.; vi. 0-3-6; vii. நீதிகளை விளக்கும் ஒன்பது சிறு கதைகள் அடங்கியுள்ளன. இப்புத்தகம் தென்னிந்தியாவில் உள்ள மக்களுக்கேற்ப எழுதப்பட்டதாகும். இவைகள் மக்களிடையே வாய்மொழியாக வழங்கி வரும் கதைகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பெற்றனவாம். viii. 661/1918/II.

O31,3

ஆறுமுகஞ் சேர்வை, வீ., செம்பூர்

2023. i. மலையை விழுங்கிய மகாதேவன் கதை, முதற்பாகம்; முதற் பதிப்பு; ii. தருமசிலன் பிரஸ், சென்னை; iii. ஜுலை, 1919; iv. உ.ப. 98; v. 15×12 செ.மீ.; vi. 0—6—0; vii. மக்களை ஏமாற்றிப் பிழைப்பவரின் போக்கினைக் கண்டித்து எழுதப்பட்ட ஒரு நகைச்சுவைக் கதையாகும்.

2 3 AUG 1977

இக்கதையின் முதற்பாகம் மட்டும் இந்நூலில் வெளி வந்துள்ளது. உரைநடை பாத்திரங்களுக்கு ஏற்பத் தெளிவுற அமைக்கப்பட்டுள்ளது. viii. 808/1919/IV.

O31,3

2024. i. ஆனந்தக் கண்ணடி: திருத்திய பதிப்பு; ii. ஸி. குமாரசாமி நாயுடு சன்ஸ், சென்னை; காக்ஸ்டன் பிரஸ், சென்னை: iii. அக்டோபர், 1916; iv. உ.ப. 32; v. 19×13 செ.மீ.; vi. 0-1-0; vii. துப்பறியும் கதைகளான ஒன்பது விநோதக் கதைகளைக் கொண்டது இப்புத்தகம். கீழ் வகுப்பில் படிக்கும் மாணவர்களுக்கு வீட்டுப் பாடமாக வைக்கத்தக்கது இந்நூல். viii. 443/1916/IV.

O31,3

இராமச்சந்திரன், ஜி.

2025. i. துரியோதனன் மோஹம் முதற் பதிப்பு; ii. ஜி. இராமச்சந்திரன், கும்பகோணம்; ஆரியன் அச்சாபீஸ், கும்பகோணம்; iii. ஜூலை, 1917; iv. உ.ப. 100; v. 13×10 செ.மீ.; vi. 0—6—0; vii. ஆடவர் தங்கள் மோக வியாதியால் கற்புடைய மங்கையர்மீது இச்சைகொண்டு உலகப் பழிப்புக்காளாகாமல் இருப்பதைக் குறித்து புகழேந்திப் புலவர் இயற்றிய ஏணியேற்றமென்னும் ஒரு நூலினை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பெற்றது. viii. 194/1917/III.

O31,3

2026. i. விஷ ஸரஸ்: முதற் பதிப்பு; ii. டி. கிருஷ்ணசாமி அய்யர், கும்பகோணம்; கிருஷ்ண விலாச பிரஸ், கும்பகோணம்; iii. 1919; iv. உ.ப. 39; v. 16×11 செ.மீ.; vi. 0—4—0; vii. இதில் மகாபாரதத்தின் ஒரு கிளைக் கதை இடம் பெற்றுள்ளது. இது தரும புத்திரருடைய குணங்களைக் கூறுமுகத்தாற் பொறுமை, தன்மறுப்பு, சகோதர வாஞ்சை, உறுதியுடைமை, பரோபகாரம் ஆகிய குணங்களை விரித்துரைக்கும் வகையில் அமைந்துள்ளது. viii. 714/1920/I.

O31,3

இராமசுவாமி அய்யர், ஸி. எஸ்.

2027. i. இந்திய மாயா விநோதக் கதைகள்: முதற் பதிப்பு; ii. மாக்மில்லன் அண்ட் கம்பெனி, சென்னை; எஸ்.பி.ஸி.கே. பிரஸ், சென்னை; iii. ஜனவரி, 1918; iv. உ.ப. 80; v. 18×13 செ.மீ.; vi. 0-5-0; vii. இந்திய மாயா விநோதக் கதைகள் ஐந்து இப்புத்தகத்தில் அடங்கியுள்ளன.

அவையாவன: இரண்டு இராஜ புத்திரிகள், லிங்கோவும் ராக்ஷதனும், மத்ஸ்யராஜன், பேசும் ஆமை, ஜோதிமதி என்பனவாம். பட விளக்கங்களும் உள்ளன. viii. 993/1919/I.

O31,3

2028. i. குரு பக்தி: முதற் பதிப்பு; ii. ஸி. குமாரசாமி நாயுடு அண்டு ஸன்ஸ், சென்னை; காகஸ்டன் பிரஸ், சென்னை; iii. 1919; iv. உ.ப. 26; v. 18×13 செ.மீ., vi. 0-1-6; vii. இதில் பல நீதிகளைப் போதிக்கும் மூன்று சிறுகதைகள் அடங்கியுள்ளன. குரு பக்தியிற சிறந்த உபமன்னியு, உதங்கன், ஏகலைவன் ஆகியோர் வரலாறு இதன்கண் தெளிந்த நடையில் விளக்கப்பட்டுள்ளன. viii. 810/1920/I.

O31,3

இராமய்யா பிள்ளை, எம். எஸ். ஏ., திருநெல்வேலி

2029. i. ஜெக சுந்தரி: முதற் பதிப்பு; ii. எம். எஸ். ஏ. இராமய்யா பிள்ளை, திருநெல்வேலி; பாளையங்கோட்டை பிரிண்டிங் பிரஸ், பாளையங்கோட்டை; iii. செப்டம்பர், 1918; iv. உ.ப. 234; v. 18×13 செ.மீ.; vi. 0-12-0; vii. இஃது ஒரு காதல் புதினமாகும். சமூகத்தில் உள்ள பொது மகளிர் நடத்தை குறித்தும், அங்கு செல்லும் ஆடவர்களால் அவர்தம் குடும்பங்களுக்கு நேரும் இன்னல்கள் குறித்தும் விவரிக்கின்றது. இதில் சாதாரண வழக்குப் பேச்சு நடை பெரிதும் விரவி வருகின்றது. இருபத்து நான்கு அத்தியாயங்கள் கொண்டது. viii. 884/1918/III.

O31,3

இராமலிங்க முதலியார், திருமயிலை

2030. i. அந்தப்புர ரகசியம் அல்லது இராஜேஸ்வரி: முதற் பதிப்பு; ii. எம். மாசிலாமணி முதலியார், சென்னை; அமெரிக்கன் டைமண்ட் பிரஸ், சென்னை; iii. பிப்ரவரி; 1919; iv. உ.ப. 180; v. 22×14 செ.மீ.; vi. 0-12-0. vii. இந்நாவல் வங்க மூலக் கதையினைக் கொண்டது. கன்னட மொழியிலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. மூன்று பாகங்களைக் கொண்டது. இதனைப் படிப்போர்க்குக் கற்பினேற்றம், சினேக பாத்திரம், உபகாரச் சிந்தை தீக்குணத்தாலுண்டாம் தீமை, அன்பு, அடக்கம் முதலியன இனிது விளங்கும். தமிழ் நாட்டினர் வாழ்க்கைக்கு ஏற்ப மூலக் கதையினின்றும் ஒரு சில மாற்றங்களையும் ஆசிரியர் மேற்கொண்டுள்ளார். viii. 1134/1919/I.

O31,3

2031. i. பங்கஜவல்லி கதை: திருத்திய பதிப்பு; ii. எஸ். பி; இராஜாராம், சென்னை; சன் ஆப இந்தியா பிரஸ், சென்னை. iii. ஏப்ரல், 1916; iv. உ.ப. 96; v. 21×14 செ.மீ.; vi. 0–8—0; vii. இளம் பெண் ஒருத்தி தன் கல்வி அறிவையும் கருதாது இளமையின் மோகத்தால் அடைந்த விபரீதத்தை விளக்குகின்ற கதையாகும் இந்நூல். 'படுக்கை யறையிற் பாசாங்கு செய்த பங்கஜவல்லி கதை' என்பது இதன முழுப்பெயர். இதனை வாசிப்போர்க்கு உலக விவகாரத்திலும், சாஸ்திரக் கருத்திலும் தெளிவுண்டாக வேண்டும் என்னும் கருத்தால் இக்கதையில் பிரசங்கம் என்ற பகுதியில் பல செய்திகளை வெளியிட்டுள்ளார். viii. 7.8/1916/III.

O31,3

இராமஸ்வாமி அய்யர், எஸ். ஏ., மாயவரம்

2032. i. உட்டாணி அல்லது கற்பின் வெற்றி: முதற் பதிப்பு; ii. தி. இராஜேஸ்வரி முதலியார், ஆலந்தூர்; கபாலி அச்சியந்திரசாலை, சென்னை; iii. ஜுன், 1918; iv. உ.ப. 80; v. 19×13 செ.மீ.; vi. 0-6-0; vii. பெண்ணினுடைய அன்பைப் பற்றியும் கற்பின் வெற்றியைப் பற்றியும் இந்தக் கதையில் சிறப்பாக எடுத்துச் சொல்லப்பட்டுள்ளன. ஆனந்த சுந்தரி, அமீர்ஸிங், லீலாவதி, பத்மநாபன்; சரஸா, சிவானந்தன், புருஷோத்தமன், மாலிகா பூஷணி, வத்சலா, வஸந்தசேனை முதலியபு தினங்கள் இவ்வாசிரியரால் எழுதப்பட்டன. viii. 10/1918/III.

O31,3

இராஜம் அய்யங்கார், எம் கே.

2033. i. மனோரஞ்சித மணி: முதற் பதிப்பு; ii. ஆர் வெங்கடாசலம் அண்டு கம்பெனியார், சென்னை; பி. ஆர். ராமய்யர் அண்டு கம்பெனி; சென்னை; iii. ஏப்ரல். 1918; iv. உ.ப. 90; v. 22×14 செ.மீ.; vi. 0–10–0. vii. பெண்களின் கற்பை அழிப்பதை எதிர்த்து எழுதப்பட்ட ஓர் அரிய துப்பறியும் நாவல். 17 அதிகாரங்கள் கொண்டது. viii. 694/1918/II.

O31,3

இராஜு செட்டியார், செ

2034. i. அன்பானந்தன் அல்லது அருஞ்செல்வன் விழைந்த பெருஞ்செல்வம்; ii. செ. இராஜு செட்டியார், சென்னை; கபாலி பிரஸ், சென்னை; iii. மே, 1917; iv. உ.ப. 240; v. 18×13 செ.மீ.; vi. 1-0-0; vii. ஒரு செல்வந்தர், ஆத்ம செல்வத்தைத் தேடியதை ஒட்டி அமைந்த புதினம்.

ஆசிரியரின் புகைப் படமும், ஆண்டிப்பட்டி ஜமீந்தார் பெத்தாச்சி செட்டியாரின் புகைப்படமும் இதில் உள்ளன. எல்லாரிடத்தும் அன்பு பாராட்டி ஒற்றுமையுடன் மக்கள் வாழ அறிவுறுத்துவது. 22 அத்தியாயங்கள் கொண்டது. இவ்வாசிரியர் இந் நூலைத் தம் நட்பின் அறிகுறியாக ஆண்டிப்பட்டி ஜமீன்தார் பெத்தாச்சி செட்டியார் அவர்களுக்கு உரிமை செய்துள்ளார். இவர் எழுதிய வேறு நவீனங்களாவன: ஞான காந்தி, காதலி, குசாவதி என்பனவாம். viii. 623/1917/II.

O31,3

2035. i. **உதயணன்**: முதற் பதிப்பு; ii. தரும சீலன் ஆபீஸ், சென்னை; தரும சீலன் பிரஸ், சென்னை; iii. டிசம்பர், 1920; iv. உ.ப. 86; v. 18×13 செ.மீ.; vi. 0–8–0; vii. உதயணன் கதையை விளக்குவதாகும் இந்நூல். படிப்பார்க்கு எளிதாக விளங்குவதோடு பண்டைக் காலத்தவரின் பழக்கவழக்கங்களையும், அரச நீதிகளையும், மந்திரிகளின் கடமைகளையும், குலமாதர் இலக்ஷணங்களையும், இல்லறவியல்புகளையும், துறவற மேன்மைகளையும் தெற்றென விளக்குகிறது. viii. 968/1920/IV.

O31,3

உலகநாத பிள்ளை, எல்.

2036. i. **கன்றுங்கனியுதவும்**: முதற் பதிப்பு; ii. எல். உலகநாத பிள்ளை, தஞ்சாவூர்; லாலி எலக்டிரிக் அச்சுக் கூடம், தஞ்சாவூர்; iii. ஜூலை, 1917; iv. உ.ப. 71.; v. 18×13 செ.மீ.; vi. 0-6-0; vii. இந்நூல் தமிழகக் கடையெழுவள்ளல்களில் ஒருவரான பாரி வள்ளலைப் பற்றிய கதை. பல எடுத்துக்காட்டுக் கவிதைகள் இடம் பெற்றுள்ளன. சிற்சில கிளைக் கதைகளும், நீதியும், பழைய வழக்க ஒழுக்கங்களும் பிறவும் இடையிடையே விரவி வரப் பெரும்பான்மையும் பிறசொற்கலவாமல் எழுதப் பெற்றது. கல்லூரியிற் பயிலும் மாணவர் பொருட்டாக எழுதப் பெற்றது இந்நூல். viii. 168/1917/III.

O31,3

எக்ஞசாமி, எஸ்.

2037. i. **மூன்று சகோதரர்கள் அல்லது உழைப்பின் சிறப்பு**: ii. எஸ். எக்ஞசாமி, சென்னை; சுதேசமித்திரன் பவர் பிரஸ், சென்னை; iii. மே, 1916; iv. உ.ப. 48; v. 99×13 செ.மீ.; vi. 0–4–0; vii. உழைப்பின் சிறப்பினைக் குறித்து எழுதப்பெற்ற கதை இந்நூலில்.

உள்ளது. 12 அத்தியாயங்களாகப் பாகுப்படுத்தப் பெற்றுள்ளது. குழந்தைகளுக்கான கதைகளின் வரிசை வெளியீட்டில் இது இரண்டாவதாகும். ஒவ்வோர் அத்தியாயத்தின் தொடக்கத்திலும் திருக்குறட் பாடல் ஒன்று பொருத்தமாக எடுத்துச் சேர்க்கப்பட்டிருக்கிறது. viii. 41/1917/III.

O31,3

2038. i. மூன்று சகோதரர்கள் அல்லது உழைப்பின் சிறப்பு ; திருத்திய பதிப்பு ; ii. எஸ். எக்ஞசுவாமி, கும்பகோணம் ; கார்டியன் அச்சுக்கூடம், சென்னை ; iii. ஆகஸ்ட், 1917 ; iv. உ.ப. 52 ; v. 18×13 செ.மீ. ; vi. 0-4-0 ; vii.......... ; viii. 1141/1917/III.

O31,3

2039. i. லளிதா : திருத்திய இரண்டாம் பதிப்பு ; ii. எஸ். எக்ஞசாமி, சென்னை ; சுதேசமித்திரன் பிரஸ், சென்னை ; iii. மே, 1916 ; iv. உ.ப. 48 ; v. 19×13 செ.மீ. ; vi. 0-4-0 ; vii. 'பொறுத்தார் பூமி யாள்வார்' என்ற கருத்தினை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பெற்ற கதையே இந்நூல். 12 அத்தியாயங்கள் கொண்டது. குழந்தைகளுக்கான கதைகளின் வரிசை வெளியீட்டில இது முதலாவது புத்தகம் ஆகும். viii. 40/1917/III

O31,3

2040. i. லளிதா அல்லது பொறுத்தார் பூமியாள்வார். திருத்திய மூன்றும் பதிப்பு ; ii. எஸ். எக்ஞசாமி, கும்பகோணம் ; கார்டியன் பிரஸ், சென்னை ; iii. 1917 ; iv. உ.ப. 50 ; v. 18×13 செ.மீ. ; vi. 0-4-0 ; vii.......... ; viii. 467/1918/II.

O31,3

2041. i. ஷராப்கான் : முதற் பதிப்பு ; ii. எஸ். எக்ஞசாமி ; சென்னை ; சுதேசமித்திரன் பவர் பிரஸ், சென்னை ; iii. 1916 ; iv. உ.ப. 39 ; v. 19×13 செ.மீ. ; vi. 0-4-0 ; vii. குடியினுல் வரும் கேட்டை விளக்கும் கதையை இந்நூல் கொண்டுள்ளது. 'ஷராப்கான் அல்லது குடியினுல் வரும் கேடு' என்பது இதன் முழுப் பெயர். குழந்தைகளுக்கான கதை வரிசையில் இது மூன்றுவது வெளியீடாகும். viii. 42/1917/III.

O31,3

ஐயாசாமி, ப. வி., மதுரை

2042. i. கஜேந்திர மோட்சம்: முதற் பதிப்பு; ii. ப.வி. ஐயாசாமி அய்யர், மதுரை; தமிழ் சங்கம் பவர் பிரஸ், மதுரை; iii. செப்டெம்பர், 1918; iv. உ.ப. 16; v. 18×14 செ.மீ.; vi. 0–3–0; vii. பாகவத புராணத்தில் காணப்படும் கஜேந்திர மோட்சம் என்ற பகுதியினை ஆசிரியர் அழகிய, இனிய, எளிய முறையில் உரைநடைப் படுத்தியுள்ளார். இது திருவடி தாசர் என்பார் இயற்றிய 'கஜேந்திர மோட்சம்' என்னும் செய்யுள் நூலின் வழி நூலாகும். 'சக்கர வர்த்தனி' என்னும் திங்கள் இதழில் முதலில் வெளியிடப்பட்டுப் பின்னர்த் தனி நூலாக அச்சிடப் பெற்றது. இது திராவிட வித்தியா மலரின் இரண்டாவது இதழாகும். viiii. 956/1918/III.

O31,3

கணேச முதலியார், பி., சென்னை

2043. i. வசீகரன்: முதற் பதிப்பு; ii. பி. கணேச முதலியார், சென்னை; ஜுபிடர் பிரஸ், சென்னை; iii. அக்டோபர், 1919; iv. உ.ப. 196; v. 18×12 செ.மீ.; vi. 0–12–0; vii. இது பேராசையில் விளையும் தீமை, பெண்கள் கற்பைக் காத்துக் கொள்ளுந்திறமை, சினேகத்தின் பெருமை, சிநேகிதனைப்போல் நடித்துப் பொருள் பறித்துண்ணும் துரோகியின் கொடுமை, முதலிய பல செய்திகளைத் தெளிவாய் எல்லோரு மறிந்துய்ய ஆன்றோர்களெழுதிய நூல்களிலுள்ள நல் வாக்கியங்களை யிடையிடையே அமைத்து எழுதப்பட்டுள்ள கதையாகும். 15 அத்தியாயங்கள் கொண்டது. "வசீகரன் அல்லது அடிமையால் அடைந்த அரசின் சுதந்திரம்" என்பது இந்நூலின் முழுப் பெயர். viii. 650/1919/IV.

O31,3

கணேசய்யர், கி. ரெ.

2044. i. ஸச்சிதானந்தம்; ii. ப. லெ. வெங்கட்ராம சாஸ்திரி; ஸ்காட்டிஷ் பிரான்சு பிரஸ், நாகப்பட்டினம்; iii. 1919; iv. உ.ப. 58; v. 21×14 செ.மீ.; vi. 0–6–0; vii. இஃதோர் இனிய தமிழ்ப் புதினம். பத்து அத்தியாயங்களில் அமைந்தது. கர்ண பரம் பரையாக வழங்கும் ஒரு பழங்கதையை அடியொற்றி யமைந்தது. viii. 320/1920/I.

O31,3

2045. i. கதா கதம்பம் ; ii. பெண்ட் லெண்ட் பிரஸ், திருநெல்வேலி பாலம் ; iii. 1916 ; iv. உ.ப. 30 ; v, 21×14 செ.மீ. ; vi.......... ; vii. உலக நடப்பான பல நிகழ்ச்சிகளைக் கதைபோலப் புனைந்து கூறுவது. இந்த நூலின் இரண்டாவது இதழ் அமைந்துள்ளது. **viii.** 133/1916/IV.

O31,3

2046. i. கதாசிந்தாமணி என்று வழங்கும் மரியாதை ராமன் கதை; ii. நற்றமிழ் விலாச அச்சியந்திரசாலை, சென்னை; iii. 1916; iv. உ. ப. 88; v. 21×14 செ.மீ.; vi. 0-4-0; vii. மரியாதைராமன் கதை 21. இராயர் அப்பாஜி கதை 18, தென்னாலிராமன் கதை 19, கோமுட்டி கதை 12, வேடிக்கைக் கதைகள் 38, கட்டு வாக்கியக்கதைகள் 14, மூடர்கள் கதை 3 இத்தொகுதியில் உள. இறுதியில் அறிவுரைகளின் சிறு தொகுப்பு ஒன்றும் உண்டு. viii. 745/1917/III.

O31,3

2047. i. கதாமாலிகா: முதற் பதிப்பு; ii. சுதேசமித்திரன் ஆபீஸ்; சுதேசமித்திரன் பிராஞ்சு பிரஸ்; iii. நவம்பர், 1920; iv. உ. ப. 256; v. 16×11 செ. மீ.; vi. 1-0-0; vii. இது பல்வேறு செய்திகளைப்பற்றி விளக்கும் பல கதைகளைக் கொண்ட புத்தகமாகும், சி. சுப்பிரமணிய பாரதியார் பாடிய ஸரஸ்வதி தோத்திர நொண்டிச்சிந்து நூலின் முகப்பில் உண்டு. எல். சுந்திராம்பாள் எழுதிய 'நதியில் கப்பல் பிரயாணம்' டி. எஸ். வைத்தியநாதன் எழுதிய 'சந்நியாசிக் கலகம்' என்பவை தவிர ஏனையவை சி. சுப்பிரமணிய பாரதியாராலும், அவர் மனைவியார் செல்லம்மா என்பவராலும் எழுதப் பெற்றவைகளே. 'சக்திதாஸன்', 'காளிதாஸன்' என்னும் புனைப்பெயர்களில் பாரதியார் எழுதியவைகளை இதில் காணலாம். viii. 874/1920/IV.

O31,3

கந்தசாமிபிள்ளை, கவிராஜ, மதுரை மாநகரம்

2048. i. அதிரூப மோகனவல்லி; ii. எஸ். துரைசாமி முதலியார்; ஸன் ஆப் இந்தியா அச்சுக்கூடம், சென்னை; iii. 1916; iv. உ.ப.76; v. 21×14 செ.மீ.; vi. 0-5-0, vii. நல்வினை தீவினை செய்தவர் அதனதன் பலனை அனுபவிப்பர் என்பதனை உட்பொருளாகக் கொண்டு அமைந்த புதிய கதை. பாடல்களும் இடம் நோக்கி இடையிடையே அமைக்கப்பட்டிருக்கின்றன. சாதாரண மக்களின் பேச்சுநடை இயல்பில் உரையாடல்கள் செல்கின்றன. **viii.** 245/1916/IV.

O31,3

2049. i. கீர்த்தி சிங்கனென்னும் கண்டிராஜன்: மூன்றாம் பதிப்பு; ii. த. துரைசாமி முதலியார், சென்னை; அமெரிக்கன் டைமண்ட் பிரஸ், சென்னை; iii. 1919; iv. உ.ப. 131; v. 16×11 செ. மீ.; vi.0-8-0; vii. இஃதோர் சிறந்த புதினம். முதற் பக்கத்தில் ஒரு படம் அமைந்துள்ளது. இது மூன்று அங்கங்களாகவும் அவற்றுள் ஒவ்வொன்றும் சில காட்சிகளாகவும் பாகுபடுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு காட்சியிலும் இடம்பெறும் கதாநாயகர்பற்றிய குறிப்புக்களும் சேர்க்கப்பட்டுள்ளன. viii. 2041/1920/I.

O31,3

2050. i. பூலோக இன்ப துன்பம்; ii. ஆர். கே. ராஜு அண்ட் கம்பெனி, சென்னை; ஸ்ரீ சுப்பிரமணிய விலாசம் பிரஸ், சென்னை ஸ்ரீ வேணுகானம் அச்சுக்கூடம், சென்னை; iii. 1915; iv. உ. ப. 96; v. 21×14 செ. மீ.; vi. 0-6-0; vii. உலக நிகழ்ச்சிகள் பலவற்றைக் குட்டிக் கதைகளாகக் கூறும் நூல். நீதி நெறிகளைப் புலப்படுத்தும் பாடல்களும் அங்கங்கே சேர்க்கப்பட்டிருக்கின்றன. தத்துவச் செய்திகளும் ஒரு சில கதையிடையே விளக்கப்பட்டுள்ளன. அதர்மத்தின் அநீதி, சம்சார துன்பம், பெண்களால் பங்கமடைந்தவர், தாசியால் தனநாசம், மதுபானம் விலக்கல் என்பன போன்ற தலைப்புக்களில் கதைகளும் அறிவுரை விளக்கங்களும் தரப்பட்டுள்ளன. viii. 47/1916/IV.

O31,3

2051. i. விகட மோகனா: முதற் பதிப்பு; ii. என். ரங்கநாத முதலி, சென்னை; பெரியநாயகியம்மன் அச்சுக்கூடம், சென்னை; iii. ஜூலை, 1919; iv. உ. ப. 78; v. 21×14 செ. மீ.; vi. 0-8-0; vii. விகடமோகனா என்பவள் தீய நட்புக் கொண்டதனால் அடைந்த இன்னல்களை விளக்கி இறுதியில் அவள் காப்பாற்றப்படுகிற விதமும் கூறப்பட்டுள்ளது. வேடிக்கையான பலவகை உரையாடல்களும் நிகழ்ச்சிகளும் அடங்கிய கதை இதன்கண் உள.viii. 279/1919/III.

O31,3

2052. i. ஜகஜாலப் புரட்டன்: மூன்றாம் பதிப்பு; ii. டி. ஆர். பாலகிருஷ்ண முதலியார்; ஸ்ரீ ராமாநுஜம் பிரஸ், சென்னை; iii. அக்டோபர், 1920; iv. உ. ப. 63; v. 18×13 செ.மீ. vi. 0-4-0; vii. ஜெகஜாலப்புரட்டன் என்பவனின் வாழ்க்கை வரலாற்றினையும், அவனுடைய அகடவிகட வேலைகளைப் பற்றியும் இந்நூல் விவரமாக விளக்குகின்றது. நல்லோர்போல் தோற்றமளித்து நயவஞ்சகம் புரியும் தீயவர்களிடம் கவனமாக நடந்து கொள்ள வேண்டும் என்பதனைக் கற்பனை உருவகக் கதைகள் மூலம் தெளிவு படுத்துகின்றார். viii. 278/1920/IV.

O31,3

2053. i. கற்பகச்சோலை; ii. அ. லெயுன் பிரேன்ஸ், காரைக்கால்; சேயின்ட் ஜோசப்ஸ் இண்டஸ்ட்ரியல் ஸ்கூல் பிரஸ், திருச்சி ராப்பள்ளி; iii. 1917; iv. உ. ப. 87; v. 18×13 செ.மீ.; vi. . . . . . . ; vii. பிரெஞ்சு மொழியில் அமைந்ததொரு நவீனக் கதையின் தமிழ் மொழிபெயர்ப்பு. மனமொத்த அன்புடைய மணமக்கள் விவாகம் செய்துகொண்டு சுகமாய் வாழ வழிகாட்டுவது. வெளி ஆடம்பரத்தை விட்டுப் பண்புடைமையைப் போற்றிப் பாராட்டுவது. viii. 699/1917/III.

O31,3

கஜாம்பாள்

2054. i. ஸ்ரீமதி அல்லது அம்பரீஷோபாக்கியானம்; திருத்தமான மூன்றும் பதிப்பு; ii. ஸ்ரீ பாலசுப்பிரமண்யம் கம்பெனி, இராயப்பேட்டை; சச்சிதானந்தம் பிரஸ், சென்னை; iii. ஆகஸ்ட், 1917; iv. உ.ப.+செ.மூ.ப. 22+6; v. 18×12 செ.மீ., vi. 0-1-6; vii. இறைவன்பால் செலுத்தும் அன்பின் சிறப்பை இக்கதை விளக்குகிறது. 'பக்தி சந்திரிகா' என்னும் தொடர் வெளியீட்டில் இது முதலாவது ஆகும். அரும் பதங்களுக்கு உரைக்குறிப்பும் சேர்க்கப்பட்டிருக்கிறது. நூலிறுதிப் பகுதியில் வரகவி திரு. அ. சுப்பிரமணிய பாரதியார் இயற்றிய 30 பாடல்களைக் கொண்ட கற்பிலக்கணக் கும்மி என்னும் செய்யுள் நூலும் உளது. viii. 1071/1917/III.

031,8

கிருஷ்ணசாமி அய்யர்.

2055. i. கதையும் அபிநயப்பாட்டும்; முதற் பதிப்பு; ii. நீலகண்டம் புக் டிப்போ புரோப்ரைட்டர், கயத்தாறு; வெட்னெஸ்டே ரிவ்யு பிரஸ், திருச்சி; iii. ஜூலை, 1919; iv. உ.ப.+செ.மூ. ப. 23; v. 18×11 செ. மீ.; vi. 0-2-0; vii. இந்நூல் பெண் பாடசாலைகளின் சிறுமிகளுக்குப் பயன்படும்படியாக எழுதப்பட்டது; இடையிடையே பாட்டுக்கள் உள்ளன. இதில் உள்ள சிறு கதைகளும் பாட்டும் மாணவிகளுக்கு அறிவு புகட்டுவனவாயுள்ளன. viii. 473/1919/III.

O31,3

கிருஷ்ணசாமி சர்மா, ஆர்.

2056. i. மனோரமா; இரண்டாம் பதிப்பு; ஆர். கே. சர்மா, சென்னை; கார்டியன் பிரஸ், சென்னை; iii. அக்டோபர், 1917; iv. உ. ப. 110; v, 18×13 செ. மீ.; vi. 0-8-0; vii. இது ஒரு துப்பறியும் புதினம்; பெரும்பகுதி நாடக பாணியில் அமைந்துள்ளது. இக்கதைக்கு 'ஆநந்த குடீர அதிசயங்கள்' என்னும் பெயர் உண்டு. viii. 755/1917/IV.

O31,3

கிருஷ்ணசாமிபாவலர், தே. சதாவதானம்

2057. i. பதிவிரதைகள் சரித்திரம்: முதற் பதிப்பு; ii. ஆர். வெங்கடாசலம் அண்டு கம்பெனி, சென்னை; டைமண்ட், பிரஸ், சென்னை; iii. ஏப்ரல், 1919; iv. உ. ப. 124; v. 19×13 செ. மீ.; vi. 0-8-0; vii. பாரதம் இராமாயணம், பாகவதம் போன்ற கதைகளில் வரும் சில பதிவிரதைகளின் கதைகள் தொகுத்து இந்நூலில் வெளியிடப்பட்டிருக்கிறது. 16 கதைகள் அடங்கியுள்ளன. viii. 542/1919/II.

031,3

2058. i. மனம் போல மாங்கல்யம்; முதற் பதிப்பு; ii. பி.வி. கண்ணன் கம்பெனியார், சென்னை; டைமண்ட் பிரஸ் சென்னை; iii. ஜூலை, 1920; iv. உ. ப. 44; v. 19×13 செ. மீ.; vi. 0-4-0; vii. இதில் தன்மனம் விரும்பியவனையே மாலையிட்டு மணந்த மங்கையைப் பற்றிய கதை அடங்கியுள்ளது. viii. 370/1920/III.

031,3

2059. i. கிருஷ்ண பகவானுடைய இளம்பருவம்: இரண்டாம் பதிப்பு; ii. லாங்ஸ்மன்ஸ் கிரீன் அண்ட் கம்பெனி, சென்னை; ஜி. ஆர். வி. சென்னை.; iii. ஆகஸ்ட், 1918; iv. உ. ப. 35, v. 18×13 செ. மீ.; vi. 0-3-0 vii. கண்ணனின் இளம்பருவ வாழ்க்கையினைக் குறித்து உரைநடையில் எழுதப்பட்டுள்ளது. இராட்சசனைக் கொல்லுதல், கம்சனை அழித்தல், காளியன் என்கிற நாகத்தின் கொடிய நஞ்சை அழித்தல் போன்ற நிகழ்ச்சிகள் இங்கு கூறப்பட்டுள்ளன. பட விளக்கங்களும் தரப்பட்டுள்ளன. viii. 940/1918/III.

031,3

கிருஷ்ணமாசாரியார், பு., கடாம்பி

2060. i. கிருஷ்ண விஜயம் அல்லது அரசியல் வெற்றி; முதற் பதிப்பு; ii. ஆர். வெங்கடாசலம் கம்பெனி, சென்னை; டயமண்ட் பிரஸ், சென்னை; iii. ஜூன், 1920; iv. உ. ப. 202; v. 18×13 செ. மீ.; vi. 1-0-0; vii. இதில் மகா பாரதத்தில் வரும் கண்ணன் என்ற பாத்திரம் குறித்து விவரமாக கூறப்பட்டுள்ளது. பாண்டவர்களோடும், கௌரவர்களோடும் கண்ணன் கொண்ட தொடர்பு முக்கிய இடம் பெற்றுள்ளது. மகாபாரத நிகழ்ச்சிகளைத் தழுவி எழுதப்பட்டது. viii. 32/1920/III.

031,3

2061. i. பதிவிரதாலங்காரம்--சுகன்யா சரித்திரம்: முதற் பதிப்பு; ii. ஆர். வெங்கடாசலம் அண்டு கம்பெனியார், சென்னை; மதராஸ் டைமண்டு பிரஸ், திருவல்லிக்கேணி. சென்னை; iii. எப்ரல், 1919; iv. உ. ப. v. 36; v. 18×13 செ.மீ.; vi. 0—3—0; vii. புராணத்தில் வரும் சியவன என்ற முனிவரின் மனைவியான சுகன்யாவின் கற்பின் பெருமை இதில் விளக்கப்பட்டுள்ளது. இந்நூலின் இறுதியில் கற்பின் மாண்பு என்ற தலைப்பில் பத்துச் செய்யுட்கள் காணப்படுகின்றன. அவைகள் வேறு நூல்களிலிருந்து எடுக்கப்பட்டன. அரும்பதவுரை ஈற்றில் சேர்க்கப்பட்டிருக்கிறது. viii. 79/1919/II.

031,3

2062. i. மனோன்மணி: முதற் பதிப்பு; ii. ஸி. குமாரசாமி நாயுடு அண்டு ஸன்ஸ், சென்னை; காக்ஸ்டன் பிரஸ், சென்னை; iii. அக்டோபர், 1916; iv. உ. ப. 71; v. 18×12 செ.மீ.; vi. 0—3—0; vii. பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள் இயற்றிய மனோன்மணிய நாடகத்தினை உரைநடையாகப் பதினைந்து அத்தியாயங்களாகப் பிரித்து இந்நூலில் ஆசிரியர் எழுதியுள்ளார். முதனூலிலிருந்தும் ஏனைய நீதி நூல் களிலிருந்தும் மேற்கோள் காட்டப்பட்டிருக்கிறது. இடையிடையே காணப்படும் கடினமான பதங்களுக்கும் தொடர்மொழி களுக்கும் பொருள் இனிது விளங்குமாறு அரும்பதவுரையும் இந்நூலின் இறுதியில் சேர்க்கப்பட்டிருக்கிறது. viii. 450/1916/IV.

031,3

கிருஷ்ணசாரியார், டி. ஆர்.-(மொ. து.)

i. அமிருத மதனம் (தொ. எ. 206 பார்க்க): முதற் பதிப்பு; ii. வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரி & டி. ஆர். கிருஷ்ணசாரியார்; கமர்ஷியல் பிரஸ், சென்னை; iii. மார்ச், 1917; iv. உ. ப. 23; vii. தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் அமிர்தத்தைக் குறித்து ஏற்பட்ட சண்டையின் முடிவில் பாற்கடலைக் கடைந்து அமுதத்தைத் தேவர்கள் பெற்ற கதையை இந்நூலில் காணலாம். viii. 245/1917/II.

031,3

2063. i. சித்திர கேது: முதற் பதிப்பு; ii. டி. ஆர். கிருஷ்ணசாரியார் & வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரி, சென்னை கமர்ஷியல் பிரஸ், சென்னை; iii. மார்ச், 1917; iv. உ.ப. 23; v. 18×12 செ.மீ. vi. 0-2-0; vii. பாகவதத்திலிருந்து எழுதப்பட்ட நீதி யும், வைராக்கியமும் விளங்குகின்ற கதை; இது வடமொழி பாகவத புராணத்திலிருந்து மொழிபெயர்த்து அமைக்கப் பெற்றது. viii. 244/1917/II.

031,3

2064. i. பாரிஜாதாபஹரணம் — அமிருதமதனம்: முதற் பதிப்பு, ii. வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரி & டி. ஆர். கிருஷ்ணசாரியர்; கமர்ஷியல் பிரஸ், சென்னை; iii. மார்ச், 1917; iv. உ.ப. 39; v. 18×13 செ. மீ.; vi. 0—4—0; viii. சத்தியபாமாவின் விருப்பத்திற்கிணங்க கண்ணன் பாரிஜாத மரத்தைக் கொண்டுவந்த புராணக் கதை இதில் உள்ளது. பாகவதம் முதலிய புராணங்களிலிருந்து எடுத்தெழுதப்பெற்றது. viii. 245/1917/II.

031,3

2065. i. ஸீமந்தினி: முதற்பதிப்பு; ii. டி. ஆர். கிருஷ்ணசாரியார், சென்னை & வை.மு. கோபாலகிருஷ்ணமாசாரியார், சென்னை; கமர்ஷியல் பிரஸ்; சென்னை; iii. ஏப்ரல், 1917; iv. உ. ப. 36; v. 18×13 செ. மீ.; 0-2-0; vii. இது சிவசக்தியின் பக்தையான ஸீமந்தினி என்னும் அரசகுமாரியைப் பற்றியது. ஸ்கந்த புராணம் முதலியவற்றிலிருந்து எடுக்கப்பெற்றது. கதைப்போக்கினை விளக்கும் சிறுதலைப்புகள் இடையிடையே உள. viii. 885/1917/II.

031,3

குப்புசாமிமுதலியார், ஆரணி

2066. i. கற்கோட்டை: இரண்டாம் பதிப்பு; ii. நா. முனிசாமி முதலியார், சென்னை; ஆனந்தபோதினி பிரஸ், சென்னை; iii. நவம்பர், 1919; iv. உ. ப. 528; v. 18×13 செ.மீ.; vi. 1-12-0; vii. 'ஒருவர் ஒரு பெரிய குற்றத்தைச் செய்துவிட்டால், அதை மறைப்பதற்காகப் பின்னால் அதிலும் பெரும்பாலான பல குற்றங்களைச் செய்யவேண்டியவராகிறார்' என்ற கருத்தினை உள்ளடக்கிய ஓர் உயர்ந்த கதையாகும் இது. ஆங்கில முறையினைப் பின்பற்றி இக்கதை எழுதப் பட்டுள்ளது. ஆனந்தபோதினிப் பத்திரிகையில் தொடர்சசி யாக வெளியிடப்பெற்றுப் பின் புத்தக வடிவு பெற்றது. இதில் வரும் கதா பாத்திரம் ஒவ்வொன்றும் உலக வாழ்க்கைக்கு அவசியமான ஒரு நீதியைப் புலப்படுத்து வதாக அமைந்துள்ளது. viii. 971/1919/IV.

O31,3

2067. i. தாக்ஷாயணி அல்லது காதலன் வெற்றி: இரண்டாம் பதிப்பு; ii. தி. இராஜேஸ்வரம் முதலியார், சென்னை; கார்டியன் பிரஸ், சென்னை; iii. 1919; iv. உ.ப. 99; v. 18×13 செ.மீ.; vi. 0-6-0.; vii. இஃதோர் இனிய துப்பறியும் புதினம். எட்டு அத்தியாயங்களில் அமைந்துள்ளது. viii. 184/1920/I.

O31,3

2068. i, பூங்கோதை: முதற்பதிப்பு; ii. நா. முனிசாமி முதலியார், சென்னை ஆனந்தபோதினி பிரஸ், சென்னை; iii, மார்ச், 1920; iv. உ.ப. 162; v. 19×13 செ.மீ,; vi. 0–10–0; vii. ஆங்கில மூலத்தினின்று எடுத்து எழுதப் பெற்ற ஒரு நவீனம். சத்தியத்தையும் நீதியையும் பொறுமையையும் கடைப்பிடித்துப் பரம்பொருளை நம்பி வாழ்வோர் நலம் பெறுவர் என்பதனை இக்கதை விளக்கும். viii 194/1920/II.

O31,3

குப்புசாமி முதலியார், சி.நா.

2069. i. தங்கவேணி: திருத்திய இரண்டாம் பதிப்பு; ii. தி. அரங்கசாமி நாயுடு, காஞ்சிபுரம் & துரைசாமி முதலியார், சூளை; ஆட்லிட் அச்சியந்திர சாலை, சென்னை; iii. 1918; iv. உ.ப. 68; v. 18×13 செ.மீ., vi. 0–4–0; vii. இக்காலப் புதிய நாகரிகத்துக்குத் தக்கப்படி நல்ல எளிய தமிழ் நடையில் எழுதியதோடல்லாமல் பல நூல் களினின்றும் மேற்கோள்களாகப் பல செய்யுள்களையும் ஆசிரியர் கையாண்டிருக்கிறார். இதில் கற்பின் மேன்மையைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இனிய செந்தமிழ் நாவல்கள் என்னும் தலைப்பில் சில நாவல்களைப்பற்றிய சிறு குறிப்பு களும் நூலிறுதியில் உள. viii. 796/1918/II.

O31,3

2070. i. மதியானந்தவல்லி என்னும் அற்புத நவநீதாம்பை: திருத்திய இரண்டாம் பதிப்பு; ii. முனிசாமி முதலியார், நாகவேடு; ஆனந்தபோதினி அச்சுக்கூடம், சென்னை; iii. ஜூன், 1919; iv. உ.ப. 247; v. 21×14 செ.மீ.; vi. 1–0–0; vii. ஒரு பெண் தன் சாகசத்தாலும் புத்திக்கூர்மையாலும் நேர்ந்த இன்னல்களைக் கடந்து இறுதியில் வெற்றியடைந்ததை விளக்கும் கதை இது. மக்களுக்கு நல்லறிவு உண்டாக்கும் நோக்கத்துடன் இக்கதை எழுதப்பெற்றது. viii. 206/1919/III.

O31,3

குமாரசுவாமிப் பிள்ளை, அ.

2071. i. இதோபதேசம்: முதற் பதிப்பு; ii. வி. குமாரசாமிநாயுடு அண்டு சன்ஸ், சென்னை; காக்ஸ்டன் பிரஸ், சென்னை; iii. எப்ரல், 1920; iv. உ.ப. 98; v. 19×13 செ.மீ.; vi. 0–8–0; vii. இது சுன்னாகம் அ. நாகநாதபண்டிதர் மொழிபெயர்ப்பினின்று அ. குமாரசுவாமிப்பிள்ளையால் சுருக்கி இயற்றப்பெற்றது. இதோபதேசம் வடமொழியில வல்லுநராய் விளங்கிய விட்டுணு சர்மா என்ற

வேதியர் சுதர்சனன் என்னும் அரசனுடைய குமாரனுக்கு அரசியலுணருமாறு உபதேசிக்கப் பட்ட நீதி சுலோகங்களும் அவற்றிற்கியைந்த கதைகளும் அமைந்த நூல். viii. 317/1920/II.

O31,3

கேதாரிராவ், என். ஆர். (மொ.து.)

2072. i. சுகிர்லாபம் அல்லது நட்பின் மேன்மை: முதற் பதிப்பு ; ii. கல்வி பப்ளிஷிங் ஹவுஸ், மதுரை ; தமிழ்ச் சங்கம் பவர் பிரஸ், மதுரை ; iii. ஜனவரி, 1919 ; iv. உ. ப. 14 ; v. 16×11 செ.மீ. ; vi. 0–2–0 ; vii. சுகிர்லாபம் அல்லது நட்பின் மேன்மை ஆகியவற்றை விளக்கும் மூன்று மொழி பெயர்ப்புக் கதைகள் இப்புத்தகத்தில அடங்கியுள்ளன. இக்கதை பஞ்ச தந்திர நூலிலிருந்து எடுக்கப் பெற்றது, 'கல்வி மாலை' வரிசையில் இது ஐந்தாவது வெளியீடு. viii. 589/1919/I.

O31,3

கோபால கிருஷ்ண ஐயர், வி.ஏ.

2073. i. குணசீலன்: திருத்திய மூன்றும் பதிப்பு ; ii. எஸ். ஜி. ஐயர் அண்டு கோ., திருவல்லிக்கேணி, சென்னை ; சிவரகசியம் பிரஸ், சென்னை ; iii. டிசம்பர், 1917 ; iv. உ. ப. 120 ; v. 21×14 செ.மீ. ; vi. 0–10–0 ; vii. குணசீலன், சாந்தை இவர்களின் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள நிகழ்ச்சியினைப் பற்றியும், நல்லொழுக்கத்தைப் பற்றியும் ஆசிரியர் மிகவும் நல்ல முறையில் விளக்கியுள்ளார். 25 அத்தியாயங்கள் கொண்டது. தமிழ்த் தோன்றல் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் அவர்களின் சிறப்புரையுடன் கூடியது. இச் சிறப்புரையில் புதுமையான கதை வெளியீடுகளின் அக்கால நிலை பற்றிய ஒரு சில குறிப்புகளையும் சுட்டியுள்ளார். viii. 931/1918/II.

O31,3

கோபால கிருஷ்ணமாசாரியர், வை. மு.

2074. i. இந்திய புராதன கதைகள்: முதற் பதிப்பு ; ii. வை. மு. கோபால கிருஷ்ணமாச்சாரியர், சென்னை ; கமர்ஷியல் பிரஸ், சென்னை ; iii. ஜூன், 1917 ; iv. உ. ப. 88 ; v. 18×13 செ.மீ. ; vi. 0–5–0 ; vii. இந்நூலில் இந்தியப் புராதனக் கதைகள் இடம் பெற்றுள்ளன. வீரவரன், பாடலி புத்திரம், சிருங்க புரன், சீமூத வாகனன், கடல் வீரன் ஆகிய ஐந்து கதைகள் உண்டு. viii. 1019/1917/II.

O31,3

2075. i. இந்திய புராதனக் கதைகள்: திருத்திய மூன்றும் பதிப்பு; ii. வை. மு. கோபால கிருஷ்ணமாச்சாரியார், சென்னை; கமர்ஷியல் பிரஸ், சென்னை, iii. ஜூலை, 1918; iv. உ. ப. 88; v. 19×13 செ.மீ.; vi. 0–6–0; vii. இராஜ விசுவாசம், நீதி, கற்பு, தேசபக்தி, கடவுள் பற்று போன்ற நற் போதனைகளை இக்கதைகளில் காணலாம். 1919 ஆம் ஆண்டு இந்நூல் பள்ளியிறுதித் தேர்வுக் குரியப் பாட புத்தகமாக இருந்தது. viii. 426/1918/III.

O31,3

கோபாலசாமி ஐயங்கார், ஆ. & ஆராவமுத ஐயங்கார், கோ.

2076. i. நந்தன்: முதற் பதிப்பு; ii. ஸ்ரீநிவாஸ வரதாச்சாரி அண்டு கோ., சென்னை; iii. ஆகஸ்ட் 1917; iv. உ. ப. 124; v. 18×12 செ.மீ.; vi. 0–10–0; vii. இந்நூல் ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த நந்தன் என்ற சிவபக்தனைப் பற்றி விவரிக்கின்றது. பக்தி நெறியின் மேன்மையை விளக்குவது இச்சரிதம். கோபாலகிருஷ்ண பாரதியார் பாடி யுள்ள நந்தன் சரித்திரக் கீர்த்தனைகளிலிருந்து சிற்சில கீர்த்தனைகளையும் இதில் எடுத்தாண்டுள்ளார். தவிரவும் கதைப் போக்கும் இக்கீர்த்தனை நூலைத் தழுவியே அமைக்கப் பட்டிருக்கிறது. viii. 1062/1917/III

O31,3

கோபாலசாரியர், கா., ஸ்ரீ.

2077. i. குணமணி: முதற் பதிப்பு; ii. எம். ஆதி அண்டு கோ; சென்னை; சந்திரா பிரஸ், சென்னை; iii. ஜூலை, 1920; iv. உ. ப 95; v. 19×13 செ.மீ.; vi. 0–8–0; vii. ஒரு மன்னன் குடிகளிடம் எந்த விதத்தில் நடந்து கொள்ள வேண்டு மென்பதை விளக்கும் கதை இதில் அடங்கியுள்ளது. viii. 300/1920/III.

O31,3

2078. i. தேவ மணி: முதற் பதிப்பு; ii. வி. குமாரசாமி நாயுடு அண்ட் சன்ஸ், சென்னை; காக்ஸ்டன் பிரஸ், சென்னை; iii. அக்டோபர், 1918; iv. உ. ப. 207; v. 18×13 செ.மீ.; vi. 0–14–0; vii. இது ஒரு மொழி பெயர்ப்புக் கதையாகும். ராவ்ஸாகெப் தோட்டக்காடு இராமகிருஷ்ண பிள்ளை என்பார் எழுதிய தி டைவ் பார் டெத் (The Dive for Death) என்னும் ஆங்கில நூலே இதற்கு மூலமாகும். மூந்நூறு ஆண்டு களுக்கு முன் நிகழ்ந்த ஒரு செய்தியை முக்கிய ஆதார மாகக் கொண்டு இந்நூலைப் பிள்ளையவர்கள் 1911 ஆம் ஆண்டு வெளியிட்டனர். அக்காலத்தில் வாழ்ந்த மக்களது வாழ்க்கை நிலைமையை இதன் மூலம் நாம் நன்கு அறியலாம். படிப் போர்க்கு நல்லுணர்வையும், நல்லொழுக்கங்களையும் இக்கதை அளிக்கின்றது. 19 அதிகாரங்கள் கொண்டது. ஆங்காங்கு

உயர்ந்த மேற்கோள்களும் பழமொழிகளும் சில திரி சொற்களும் காட்டப்பட்டுள்ளன. அரும்பதவுரை செய்யுட் குறிப்புரைகளும் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளன. viii. 52/1919/I.

O31,3

கோவிந்த அய்யங்கார், ஈ. எஸ்.

2079. i. புஷ்ப வல்லி: முதற் பதிப்பு; ii. ஆர். எம். வி. வி. ராமகிருஷ்ண அய்யர் & கோ., உசிலம்பட்டி; ஸ்ரீகிருஷ்ண விலாசம் பிரஸ், திருமங்கலம்; iii. மே, 1920; iv. உ ப. 28; v. 21×14 செ.மீ.; vi. 0-3-0; vii. புஷ்பவல்லி என்னும் ஓர் அரச குமாரியை அடைய வேண்டி இரு வீரர்கள் போரிட்டு இறுதியில் போரில் தோற்ற வீரனே அவளையடைந்த கதை இதில் விவரிக்கப்பட்டுள்ளது. viii. 71/1920/III.

O31,3

கோவிந்தசாமி படையாச்சி, கே. ஆர். & சிவப்பிரகாச படையாச்சி, பி.ஏ.

2080. i. பூலோக ரோஜா: முதற் பதிப்பு; ii. எஸ். மாணிக்கம் பிள்ளை, சிதம்பரம்; ஆரியன் பிரஸ், கும்பகோணம்; iii. ஜூன், 1920; iv. உ. ப. 113; v. 21×14 செ.மீ.; vi. 0-10-0; vii. இது ஓர் இளவரசனின் வீரத்தைப் பின்னணியாகக் கொண்டு அமைந்த புதினம். viii. 853/1920/II.

O31,3

கோவிந்தசாமி பிள்ளை, வே. ந.

2081: i நீல ரேகை; ii. வே. ர. வெங்கடாசல முதலியார்; ஜூபிலி பிரஸ், வேலூர்; iii. 1920; iv. உ. ப. 248; v. 18×13 செ.மீ.; vi. 1-0-0; vii. இதில் ஒரு துப்பறியும் நவீனம் அடங்கியுள்ளது. இது, பண ஆசையால் உண்டாகும் தீங்குகளும் தீயர் கூட்டுறவால் ஏற்படும் துயரங்களும், குற்றம் புரிபவர் முடிவில் தண்டனை பெறுதலுமாகிய செய்திகளை விளக்குகிறது. viii. 676/1920/III.

O31,3

கோவிந்தரெட்டி, நா., வேலூர்

2082. i. சிறுவர்களுக்குரிய 50 சிறு கதைகள்: முதற் பதிப்பு; ii. தாம்ஸன் கம்பெனி, சென்னை; மினர்வா அச்சுக் கூடம், சென்னை; iii. அக்டோபர், 1919; iv. உ. ப. 23; v. 19×13 செ.மீ.; vi. 0-2-0; vii. ஈசாப் கதைகளிலிருந்து எடுக்கப்பெற்ற 50 சிறுகதைகள் இதில் அடங்கியுள்ளன. சிறுகதைகள் மூலமாகச் சிறுவர்களுக்குப் புத்தி கற்பிப்பது மிக எளிது என்பதை விளக்கும் வகையில் இதிலுள்ள கதைகள் அமைந்துள்ளன. viii. 429/1920/I.

O31,3

சங்கரலிங்கம் பிள்ளை, அ.

2083. i. சுந்தரன்: திருத்திய பதிப்பு ; ii. வி. குமாரசாமி நாயுடு & சன்ஸ், சென்னை ; காக்ஸ்டன் பிரஸ், சென்னை ; iii. ஜூலை, 1917 ; iv. உ. ப. 240 ; v. 19×13 செ.மீ. ; vi. 0–12–0 ; vii. திருமணம் செய்வது பற்றி நம் நாட்டுப் பெண்களுக்குத் தரத்தக்க சுதந்திரம் பற்றி விளக்கும் வகையில் அமைந்த கதையைக் கொண்டதே இந்நூல். நமது நாட்டுப் பெண்கள் ஐரோப்பிய நாட்டுப் பெண்களைப் போல உரிமை பெற்றவர்களாய் நடக்கும் வண்ணம் நமது ஆசாரங்களைத் திருத்த வேண்டும் என்று இவ்வாசிரியர் கருதுகிறார். viii. 638/1917/III.

O31,3

சடகோபாச்சாரியர், எம். ஏ., கும்பகோணம்

2084. i. கீர்வாணி: திருத்திய இரண்டாம் பதிப்பு; ii. எம். ஏ. சடகோபாச்சாரி, கும்பகோணம்; லக்ஷ்மி விலாஸ அச்சாபீஸ், கும்பகோணம்; iii. மார்ச், 1917; iv. உ. ப. 61; v. 21×14 செ. மீ.; vi. 0–6–0; vii. இந்நூல் பெண்களுக்கு நல்ல குணங்கள் அமைவதற்கான பழக்கங்கள், கல்வி இவைகளின் அவசியத்தை வலியுறுத்தும் கதையைக் கொண்டது. பெண்டிர் இசை, கல்வி என்னும் இரண்டினை மட்டும் பெற்றால் போதாது. குணம், சீலம், தர்மம், தயாளம், கற்பு, வணக்கம் முதலிய குணங்களையும் உடையராயிருத்தல் வேண்டும் என்பதனை எடுத்துக் கூறுவது. viii. 1177/1917/I.

O31,3

2085. i. லக்ஷ்மி காந்தன்: முதற் பதிப்பு; ii. எம். ஏ. சடகோபாச்சாரி; கும்பகோணம்; லக்ஷ்மி விலாச பிரஸ், கும்பகோணம்; iii. 1917; iv. உ. ப. 192; v. 18×13 செ. மீ.; vi. 0–12–0; vii. 'வினையிட்டோன் வினையறுப்பான், தினையிட்டோன் தினையறுப்பான்' என்ற பழமொழியை வலியுறுத்தும் வகையில் அமைந்த ஒரு புதினம். வடமொழிக் கலப்பும், எழுத்துப்பிழையும் மலிந்துள்ளன. தமிழை ஜீரணோத்தாரணம் பண்ணவேணும் என்பதே தமது நோக்கம் என முகவுரையில் குறிப்பிடுகிறார். இன்னும் இவர் வனரோஜா, மோஹனலீலா, ஸுமதி, கீர்வாணி, வனமல்லிகா, தனஞ்செயன், சந்தனவதி, ஸுலோச்சனா உபாக்கியானம், காலவரிஷி, மிதுலா, வாஸந்திகா முதலிய நூல்களையும் வெளியிட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. viii. 557/1918/I.

O31,3

2086. i. வனமல்லிகா: முதற் பதிப்பு; ii. எம். ஏ. சடகோபாலாச்சாரி, கும்பகோணம்; லக்ஷ்மி விலாச பிரஸ், கும்பகோணம்; iii. ஜூலை, 1917; iv. உ. ப. 136; v. 19×13 செ. மீ.; vi. 0–10–0; vii. கற்பு நெறி தவறுவதால் ஏற்படும் இழுக்குகளைக் குறித்தும், இன்னல்களைக் குறித்தும் எழுதப்பெற்ற துப்பறியும் கதை. viii. 203/1917/III.

O31,3

2087. i. வனரோஜா; திருத்திய இரண்டாம் பதிப்பு; ii. எம். ஏ. சடகோபாச்சாரியர், கும்பகோணம்; லக்ஷ்மி விலாச பிரஸ், கும்பகோணம்; iii. 1916; iv. உ. ப. 152; v. 21×14 செ. மீ.; vi. 0–12–0; vii. இது ஒரு துப்பறியும் புதினம். இதில் கல்வியின் மதிப்பும், பெண்ணின் கற்பும் பற்றிக் கூறப்படுகின்றன. சிற்சில தமிழ் நூல்களிலிருந்து சிறந்த நெறிகளை உணர்த்தும் பாடல்களை அங்கங்கே எடுத்தாண்டுள்ளார். ஒரு சில படங்களும் இடம் பெற்றுள்ளன. viii. 434/1916/III.

O31,3

சண்முக சுந்தரம் பிள்ளை, டி. வி., திருநெல்வேலி

2088. i. மதுசூதனன்: முதற் பதிப்பு; ii. எஸ். கோபால் பிள்ளை; ஸ்ரீராமச்சந்திர விலாஸ் அச்சியந்திரசாலை, மதுரை; iii. 1915; iv. உ. ப. 84; v. 22×14 செ. மீ.; vi. 0–8–0; vii. மாணவ மாணவிகளுக்குக் கல்வியினால் ஆய பயனை விளக்குவது. இல்லறத்தார்க்கும் பயன்படுமாறு பற்பல செய்திகள் இதில் விவரிக்கப்பட்டுள்ளன. பெண் கல்வியின் இன்றியமையாமையை இந்நவீனம் நன்கு விளக்குகிறது. கணபதியாபிள்ளை, மு. வ. கலியாணசுந்தரம் பிள்ளை, சுந்தரமாணிக்கம் பிள்ளை என்னும் மூவரும் இதற்குச் சாற்றுகவி பாடியுள்ளனர். viii. 26/1916/I.

O31,3

சண்முகசுந்தர முதலியார், ம.

2089. i. பொறாமைப்பேய்: முதற் பதிப்பு; ii. பி. ஆர். ராமய்யர் & கோ., சென்னை; iii. ஜூன், 1920; iv. உ. ப. 63; v. 19×13 செ. மீ., vi. 0–6–0; vii. பொறாமையினால் வரும் கேடு பற்றி விளக்கப்பட்டுள்ள கதை. viii. 265/1920/III.

O31,3

சர்வ கோபால பிள்ளை, தி.

2090. நவீன சம்பாஷணை பாட்டுக் கதைகள்—முதற் பாகம்: முதற் பதிப்பு; ii. வ. குமாரசாமி அண்டு கோ., திண்டிவனம்; iii. 1916; iv. உ. ப.+செ. மூ. ப. 12; v. 21×14 செ. மீ.; vi. 0–1–0; vii. வினாவிடை முறையில் உரையாடலாகப் பாட்டும், உரை நடையுமாக அமைந்தது. முதலாவது இரண்டாவது வகுப்புகளுக்குப் பயனுள்ளது. viii. 154/1916/IV.

O31,3

சாமிநாத முதலியார், பி.

2091. i. வாமாக்ஷி அல்லது வெண்கலைக் கோதை—இரண்டாம் பாகம்: முதற் பதிப்பு; ii. பி. ஆர். ராமய்யர் அண்டு கோ., சென்னை; iii. மார்ச், 1920; iv. உ. ப. 277; v. 19×13 செ. மீ.; vi. 1–0–0; vii. உண்மைக்காதலின் சிறப்பு பற்றிக் கூறப்பட்டுள்ளது. இந்நூல் இக்கதையின் இரண்டாம் பாகம். 25 ஆம் அத்தியாயம் முதல் 41 ஆவது அத்தியாயம் வரை நூல் முடிய உள்ளது. viii. 37/1920/II.

O31,3

சிதம்பர புன்னைவனநாத முதலியார், பு.

2092. i. அற்புதக் கணையாழி; ii. பி. நா. சிதம்பர முதலியார், மதுரை; ஸ்ரீ ராமச்சந்திர விலாஸம் அச்சியந்திர சாலை, மதுரை; iii. ஜூன், 1918; iv. உ. ப. 48; v. 18×13 செ. மீ.; vi. 0–5–0; vii. வங்காள மூலக் கதை ஆங்கிலத்தில் (Two Rings) 'இரட்டைக் கணையாழி' என்று எழுதப்பட்டதிலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. இப்புத்தகம் 7, 8, 9 ஆவது வகுப்பு மாணவர் களுக்குத் துணைப்பாடப் புத்தகமாக வைக்கக்கூடிய தகுதி யுள்ளதென்பதை முகவுரையில் காணலாம். சில அபிப் பிராயங்கள் என்ற தலைப்பில் மதுரை அமெரிக்கன் மிஷன் உயர்நிலைப்பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் திருவாளர் ஆ. ப. முத்துசாமிக் கவுண்டர் முதலிய சில அன்பர்கள் இந்நூலைப் பாராட்டியுள்ளனர். இவ்வாசிரியர் 'பாண்டிய நேசன்' என ஒரு பத்திரிகை நடத்தியதாகவும் தெரிய வருகிறது. viii. 942/1918/II.

O31,3

2093. i. கங்காபாய் சுயம்வரம்; முதற் பதிப்பு; ii. பி. என். சிதம்பர முதலியார் கம்பெனி, மதுரை; மீனாட்சி விலாஸ் பிரஸ், மதுரை; iii. ஜூலை, 1919; iv: உ. ப. 39; v. 18×23

செ. மீ.; vi. 0-4-0; vii. இதில் சனகனின் தனகர்த்தராகிய யக்ஞதத்தரின் மகள் கங்காபாயின் சுயம்வர கதை அடங்கியுள்ளது. இடையிடையே சில பாடல்கள் உண்டு. இது 'லெட்சுமிராம் கோவை' என்னும் தொடர் வெளியீட்டில் நான்காவது மணியாகும். மூன்றாவது மணியாக வெளிவந்துள்ள 'யாக்ஞவல்கியம்' என்னும் சிறந்தத் தத்துவ விளக்க சாதுரியக் கதையின் இரண்டாம் பாகமாகும். பண்டைக் காலத்தியப் பழக்க வழக்கம், மன்றல் முறை, குருகுலவாசம் முதலியவற்றைத் தக்க மேற்கோளுடன் விளக்குவது. viii. 745/1919/III.

O31,3

2094. i. யாக்ஞ வல்கியம்: முதற் பதிப்பு; ii. பி. என். சிதம்பர முதலியார், சென்னை; மீனாட்சி விலாசம் பிரஸ், மதுரை; iii. ஜூலை, 1919; iv. உ. ப. 39; v. 18×13 செ. மீ.; vi. 0-9-0; vii. இது ஒரு தத்துவ விளக்கச் சாதுரியக் கதை. இது பண்டைய பழக்க வழக்கங்களை நன்கு விளக்கிக் காட்டுவது. சென்னை வாசியும், கதாரத்னாகரம் பத்திரிகாசிரியருமாகிய நெல்லையப்பர் அவர்கள் இந்நூலுக்குப் பாயிரம் ஒன்று தந்துள்ளார்கள். 'லெட்சுமிராம் கோவை' என்னும் தொடர் வரிசையில் இது மூன்றாவது வெளியீடு. viii. 744/1919/III.

O31,3

சிவராஜா, ஏகை

2095. i. சுந்தரி மணவழகன்: முதற் பதிப்பு; ii. டி. எஸ். ராமாநுஜ அய்யங்கார், திருவொற்றியூர்; ஸ்ரீ ராமாநுஜம் அச்சுக்கூடம், சென்னை; iii. அக்டோபர், 1920; iv. உ. ப. 104; v. 16×12 செ. மீ.; vi. 0-6-0; vii. சுந்தரி மணவழகன் ஆகிய இரு காதலர்களின் வாழ்க்கை முறையினை இக்கதை விளக்குகின்றது. viii. 277/1920/IV.

O31,3

2096. i. சிவாநந்தன்; ii. சி. குமாரசாமிநாயுடு அண்டு சன்ஸ்; எம்ப்ரஸ் ஆப் இண்டியா பிரஸ், சென்னை; iii. 1914; iv உ. ப. 234; v. 19×13 செ. மீ.; vi. 0-10-0; vii. 'உண்மை எப்பொழுதும் வெல்லும், பொய்ம்மை எப்பொழுதும் வீழ்ச்சி அடையும்', என்ற கருத்தை விளக்குவது இந்தப் புதினம். ஐந்து பேரத்தியாயங்கள் கொண்டது. 'சிவானந்தன் சரித்திரம் முற்றிற்று' என நூலிறுதியில் குறிப்பிடப்படுதலின் இதற்குச் 'சிவானந்தன் சரித்திரம்' என்பதும் ஒரு பெயர் என்பது போதரும். ஸி. குமரசாமி நாயுடு ஸன்ல கம்பெனியார்

வெளியிட்ட தமிழ் நவீன கதைகள். சிறுவர்களுக்கான கதைகள் ஆகியவற்றின் விவரம் நூலிறுதியில் உளது. viii. 617/1916/I.

O31,3

சீதாராமய்யர், டி. எஸ்.

2097. i. திருப்புத்தூர் வேதியர் சரித்திரம் : முதற் பதிப்பு ; ii. டி.வி. வெங்கடேசுவர ஐயர்; திருநெல்வேலி ; ஸ்ரீ வாணி விலாசம் பிரஸ், திருநெல்வேலி ; iii. மார்ச், 1917 ; iv. உ. ப. 26 ; v. 16×10 செ. மீ. ; vi. 0–2–0 ; vii. இந்நூல் திருவிளையாடற்புராணத்தில் காணப்பெறும் ஒரு கதையினை விளக்கிக் கூறுகிறது. 'பழியஞ்சின திருவிளையாடல்' சரிதம் உரைநடையில் நாடகச் சுவைபட எழுதப்பட்டிருக்கிறது. viii. 773/1917/II.

O31,3

சுப்பிரமணிய அய்யர், ஆர்.

2098. i. கிருஷ்ண தீக்ஷதர் ; ii. ஆர். சுப்பிரமணிய அய்யர் ; மதுகரவேணி விலாசம் அச்சுக்கூடம், சென்னை, iii. 1916 ; iv. உ. ப. 115 ; v. 18×13 செ. மீ. ; vi. 0–8–0 ; vii. இதில் சமூகச் சீர்திருத்தத்தைக் கண்டிப்பதும், பழைய மதாசாரங்கள் பரம்பரைப் பழக்க வழக்கங்களை ஆதரிப்பதும் இவை போன்றவைகளும் இந்நூலிற் கூறப்பட்டுள்ளன. எழு அத்தியாயங்கள் கொண்டது. viii. 201/1916/III.

O31,3

2099. i. சத்ய விஜயன் : முதற் பதிப்பு ; ii. ஆர். சுப்ரமணிய ஐயர், சென்னை ; எம். வி. பிரஸ், சென்னை ; iii. செப்டம்பர், 1917 ; iv. உ. ப. 174 ; v. 19×13 செ. மீ. ; vi 0–10–0 ; vii. இந்நூலில் ஒரு துப்பறியும் கதை விவரிக்கப் பட்டுள்ளது. இடையிடையே உரையாடல்கள் விரவி வருகின்றன. கதைப் பாத்திரங்களுக்குத் தக்கபடி பேச்சு நடை நூலில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. viii. 236/1917/IV.

O31,3

2100. i. பத்மநாபன் : முதற் பதிப்பு, ii. எம். வீ. புக் டெப்போ, சென்னை ; மதுகரவேணி விலாச அச்சுக்கூடம், சென்னை, iii. 1916 ; iv. உ. ப. 14 ; v. 19×13 செ. மீ. ; vi. 0–8–0 ; vii. இது ஒரு துப்பறியும் புதினம். இதில் கீழோரோடு உறவு கொள்ளுவதால் ஏற்படும் தீமைகள் இவை எனக் கூறப்பட்டுள்ளது. எட்டு அத்தியாயங்கள் கொண்டது. viii. 200/1916/III.

O31,3

2101. i. பாஸ்கரன்: முதற் பதிப்பு ; ii. எம். பி. புக் டிப்போ, சென்னை ; மதுரவேணி பிரஸ், சென்னை ; iii. மார்ச், 1916 ; iv. உ. ப. 144 ; v. 18×13 செ.மீ. ; vi. 0–10–0 ; vii. தீமை செய்வோர்க்கும் நன்மை செய்பவர்களுக்கு எப்பொழுதும் நன்மையே உண்டாகும் என்னும் உண்மைக்கு இலக்கானது இந் நவீனம். வடநாட்டுப் பழக்கவழக்கச் சூழ்நிலைகளை நிலைக்களமாகக் கொண்டு அமைந்தது. viii. 114/1916/II.

O31,3

2102. i. வன மாலிகா : முதற் பதிப்பு ; ii. எம். வி. புக் டிப்போ, சென்னை ; மதுகரவேணி பிரஸ், சென்னை ; iii. பிப்ரவரி, 1916 ; iv. உ. ப. 128 ; v. 18×13 செ. மீ. ; vi. 0–8–0 ; vii. உண்மையான காதலின் பாதை எப்பொழுதும் 'கரடு முரடானது' என்னும் கருத்தை விளக்கும் புதினம். எட்டு அத்தியாயங்கள் கொண்டது. சுப்பிரமணிய ஐயர் இதனைத் திருத்திப் பதிப்பித்துள்ளார். viii. 113/1916/II.

O31,3

சுப்பிரமணிய சர்மா, என். ஆர்.

2103. i. கிருஷ்ணன் தூது : முதற் பதிப்பு ; ii. இ. எம். கோபால கிருஷ்ண கோன், மதுரை ; கிருஷ்ண விலாஸ் பிரஸ், மதுரை ; ஷண்முக விலாசம் பிரஸ், மதுரை ; iii. 1916 ; iv. உ. ப. 31 ; v. 19×13 செ. மீ. ; vi. 0–1–6 ; vii. வில்லிபுத்தூரார் பாரதத்தின் ஒரு பாகமாகிய கிருஷ்ணன் தூது பற்றி இந்நூல் விவரிக்கிறது. எளிய உரைநடை பள்ளி மாணவரும் விரும்பிக் கற்கத் தக்க வகையில் அமைந்துள்ளது. viii. 155/1916/III.

O31,3

சுப்பிரமணிய சாஸ்திரி, பாண்டுர்

2104. i. மணிப்பிரவாள கஞ்சாட் சோபாக்கியாணம் ; ii. தி. சுவாமி நாத சாஸ்திர ஸஞ்சீவினி முத்ராக்ஷர சாலை, சென்னை ; iii. நவம்பர், 1916 ; iv. உ. ப. 24 ; 14×11 செ. மீ. ; vi. 0–1–0 ; vii. பிரம்மகைவர்த்த புராணத்திலிருந்து எடுக்கப் பெற்று மணிப்பிரவாள நடையில் எழுதப் பெற்ற புராணக் கதை. viii. 9/1917/I.

O31,3

சுப்பிரமணிய சாஸ்திரியார், வி. கே.

2105. i. தர்மாம்பாள்: முதற் பாகம் ; ii. ஸ்ரீவித்யா புத்தகசாலை, சென்னை ; எம். வி. பிரஸ், சென்னை ; iii. ஜனவரி, 1917 ; iv. உ. ப. 150 ; v. 19×13 செ. மீ. ; vi. 0–8–0 ; vii. துன்பம் வந்த போதும் நிலை தவறாமல் அறத்தைக் கைக்கொண்டு நிற்பவர்கட்கு முடிவிலே இன்பமும், அறம் தவறுகின்றவர்கட்குத்

துன்பமும் ஏற்படும் என்பதை இந்நூல் கதை வடிவில் உணர்த்துகின்றது, எட்டு 'ஆச்வாஸம்' என்னும் பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. வரகவி திரு. அ. சுப்பிரமணிய பாரதி இதற்கு முகவுரை எழுதியுள்ளார். viii. 226/1917/I.

O31,3

2106. i. தர்மாம்பாள்; ii. ஷண்முக விலாஸ புஸ்தகசாலை, மதறாஸ், கபாலி பிரஸ், சென்னை ; iii. 1917 ; iv. உ. ப. 64 ; v. 18×13 செ. மீ. ; vi. 1–2–0 ; vii. தமிழ் நாட்டுப் பழக்க வழக்கங்களை விவரிக்கும் புதிய கதை. இதன் உட்பகுதிகள் 'ஆச்வாசம்' எனக் குறிக்கப்பட்டுள்ளன. viii. 974/1917/III.

O31,3

சுப்பிரமணிய சிவா

2107. i. நளின சுந்தரி அல்லது நாகரிகத் தடபுடல்: முதற் பதிப்பு ; ii. ஞான பானு ஆபீஸ், சென்னை ; சச்சிதானந்தா பிரஸ், சென்னை ; iii. 1914 ; iv. உ. ப. 170 v. 18×12 செ. மீ. ; vi. 0–8–0 ; vii. மேல்நாட்டினரது வெளி வேடமாகிய பயனற்ற நாகரிகத்தினால் பெறும் பயன் இன்னதென்றும் அந்நாகரிகம் ஒத்தகையது என எடுத்து காட்டுவதும் இப்புதினத்தின் கருத்தாகும். பெரியோர்கள் தமது ஒரே பார்வை, ஒரே எழுத்து, ஒரே மொழி இவற்றால் பெறும் அற்புதங்களைச் செய்யவல்லவர் என்னும் பெருமை யையும் இந்நூல் எடுத்துக்காட்டுகிறது. viii. 109/1917/IV.

O31,3

சுப்ரமணிய பாரதி, அ, வரகவி

2108. i. அரிச்சந்திரன் : முதற் பதிப்பு ; ii. ஆர். வெங்கடாசலம் & கோ., சென்னை ; சச்சிதானந்தா பிரஸ், சென்னை ; iii. செப்டம்பர், 1917 ; iv. உ. ப. 150 ; v. 18×13 செ. மீ. ; vi. 0–10–0 ; vii. அரிச்சந்திர புராணத்தின் உரை நடையே இந்நூல். பள்ளி மாணவர்களுக்கேற்ற வகையில் எழுதப் பெற்றது. இடையிடையே பாடல்களும் கொடுக்கப் பெற்றுள்ளன. 'சத்திய விஜயம்' அல்லது 'அரிச்சந்திரன்' என்பது இதன் முழுப்பெயர். 15 அத்தியாயங்களில் இச்சரிதம் அமைக்கப்பட்டுள்ளது. நூலிறுதியில் திருக்குறளில் உள்ள 'வாய்மை' என்னும் அதிகாரத்திலுள்ள பத்துப்பாடல்களும் கருத்துரையுடன் கொடுக்கப்பட்டுள்ளன. நூலுட் பயின்று வரும் பாடல்களுக்கு ஓர் உரைக் குறிப்பும் அநுபந்தப் பகுதியில் தரப்பட்டிருக்கிறது. viii. 238/1917/IV.

O31,3

2109. i. அரிச்சந்திரன் : திருத்திய இரண்டாம் பதிப்பு ; ii. ஆர். வெங்கடாசலம் அண்டு கம்பெனி, சென்னை ; மெட்ராஸ் டைமண்ட் பிரஸ், சென்னை ; iii. ஆகஸ்ட், 1919 ; iv. உ. ப. 136 ; v. 18×13 செ.மீ. ; vi. 0–10–0 ; vii. ....; viii. 756/1919/III.

O31;3

2110. உத்தரன் : முதற் பதிப்பு ; ii. ஆர். வெங்கடாசலம் அண்டு கம்பெனி, சென்னை ; கமர்ஷியல் பிரஸ், சென்னை ; iii. ஜூன், 1917 ; iv. உ. ப. 44 ; v. 18×13 செ.மீ. ; vi. 0–3–0 ; vii. மகாபாரதக் கதையினில் வரும் உத்தரன் என்பவனைப் பற்றிய கதையே இந்நூல். உரையாடல் நடையில் இது அமைந்துள்ளது. 'டம்பம் பேசி வெம்பி விழித்தவன்' என்னும் ஒரு பெயரையும் இதற்கு ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். இந்நூலகத்து வரும் அரும்பதங்களுக்கு விளக்கமும், செய்யுள்களுக்கு விளக்கமும் தனிப்படச் சேர்க்கப் பட்டிருக்கின்றன. viii. 886/1917/II.

O31,3

11. i. கஜேந்திர மோக்ஷமும் கண்ணப்பனும் : முதற் பதிப்பு; ii. பாலசுப்ரமணியம் கம்பெனி, சென்னை ; கபாலி பிரஸ், சென்னை ; iii. ஜூலை, 1919 ; iv. உ. ப. 46 ; v. 19×13 செ.மீ. ; vi 0–3–0 ; vii. புராணக் கதைகளான கஜேந்திர மோட்சம், கண்ணப்பன் ஆகியவை இதில் அடங்கியுள்ளன. இவை கடவுள் நம்பிக்கையையும் பக்தியையும் ஊட்டும் சரித்திரங்களாம். சிறுவர்கள் எளிதில் கற்கும் வண்ணம் பல பழமொழிகளுடனும் நீதி வாக்கியங்களுடனும் எழுதப் பட்டுள்ள நூல். அநுபந்தமாக அரும்பதவுரையும் கொடுக்கப் பட்டிருக்கிறது. இது 'பக்தி சந்திரிகா' என்னும் தொடர் வரிசையில் இரண்டாவது வெளியீடாகும். viii. 121/1919/III.

O31,3

2112. i. சரித்திர சந்திரிகை : முதற் பதிப்பு ; ii. வெங்கடாசலம் அண்டு கோ., சென்னை ; கார்டியன் பிரஸ், சென்னை ; iii. டிசம்பர், 1918 ; iv. உ. ப. + செ. மூ. ப. 181 ; v. 18×12 செ.மீ. ; vi. 0–12–0 ; vii. இந்நூலில் ஐந்து பகுதிகள் தன் சரித்திரம், நாவல், கதை, நாடகம், பாடல் ஆகிய ஐந்து முறைகளில் விளக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றும் படிப்பவர்க்கு இனிமையும் அவாவும் ஊக்கமும் மொழி அறிவும், உயர்ந்த கருத்துக்களும், உண்மை விளக்கமும், நீதிப்புலமையும் உண்டாகுமாறு உள்ளது. புஸ்தகம் (தன் சரித்திரம்), தங்கக்கொடி (நாவல்), ஹைமவதி (கதை), பிதுர்வாக்கிய பரிபாலனம் (நாடகம்), பஞ்சதந்திரத்தில் மித்திர பேதம்—ஒரு பாகம் (பாட்டு) என ஐந்து எடுத்துக் காட்டுகள் தருவது இந்நூல். viii. 426/1919/I.

O31,3

2113. சாவித்திரி அல்லது மனைவியின் கடமை : முதற் பதிப்பு ; ii. பாலசுப்ரமண்யம் கம்பெனி, சென்னை ; கார்டியன் பிரஸ், சென்னை ; iii. ஜூன், 1917 ; iv. உ.ப. 54 ; v. 18×13 செ.மீ. ; vi. 0–4–0 ; vii. இந்நூல் புராணக் கதையில் வருகின்ற சாவித்திரியினைப் பற்றி விவரிக்கின்றது. 10 அத்தியாயங்களில் யாவரும் எளிதில் உணரும் வண்ணம் செவ்விய நடையில் அமைந்தது. உண்மையான கற்புடைய மனைவியின் நிலைமையினை விளக்குவது. viii. 1139/1917/III.

O31,3

2114. சாவித்திரி அல்லது மனைவியின் கடமை : திருத்திய இரண்டாம் பதிப்பு ; ii. பாலசுப்ரமணியம் அண்டு கோ., சென்னை ; iii. ஜூலை, 1918 ; iv........; v.........; vi.........; vii........; viii. 605/1918/III.

O31,3

2115. i. தங்கக் கொடி : முதற் பதிப்பு ; ii. வெங்கடாசலம் கம்பெனியார், சென்னை ; கார்டியன் பிரஸ், சென்னை ; iii. டிசம்பர், 1918 ; iv. உ. ப. 47 ; v. 18×13 செ.மீ. ; vi. 0–3–0 ; vii. ஆங்கிலக் கவிஞன் ஷேக்ஸ்பியர் எழுதிய பெர்டிட்டா என்ற கதையின் தழுவலாகும் இக்கதை. நம் தேசத்திற்குரிய ஒழுக்கங்களுக்கேற்றபடி சில இடங்களிலே வேறுபடுத்திப் பெயர்களையும் அவ்வாறே மாற்றி அமைத்துள்ளார். 'இதில் மனத்தை வேறுபடுத்தும் வர்ணனையாவது வார்த்தையாவது சிறிதும் காணப்படமாட்டா' என்று ஆசிரியர் தமது பின்னுரையுள் குறிப்பிட்டுள்ளார். viii. 433/1919/I.

O31,3

2116. i. துருவன் : முதற் பதிப்பு, ii. எ. ஸ்ரீராமுலு செட்டி, சென்னை ; கமர்ஷியல் பிரஸ், சென்னை ; iii. பிப்ரவரி, 1917 ; iv. உ. ப. 43 ; v. 18×13 செ.மீ. ; vi. 0–2–6 ; vii. திருமால் அடியவனை துருவனைப் பற்றிய புராணக் கதையை விளக்குகிறது இந்நூல். சிறுவர் சிறுமியரும் பயிலத்தக்க எளிய நடையில் உள்ளது. துருவனுக்குத் திருமால் காட்சி தரும் செய்தியைக் குறித்து ஒரு படமும் இதில் உண்டு. viii. 1056/1917/I.

O31,3

2117. i. துருவன் : புதிய பதிப்பு ; ii. ஸ்ரீராமுலு செட்டி அண்டு கோ., சென்னை ; டைமண்ட் பிரஸ், சென்னை ; iii. ஆகஸ்ட், 1920 ; iv........; v........; vi. 0–3–0 ; vii........; viii. 650/1920/III.

O31,3

2118. i. பரதன் : திருத்திய ஐந்தாம் பதிப்பு ; ii. ஸ்ரீபால சுப்ரமணியம் அண்டு கோ., சென்னை ; சச்சிதானந்தம் பிரஸ், சென்னை ; iii. ஜூலை, 1917 ; iv. உ. ப. + செ மூ. ப. 98+4 ; v. 16×22 செ.மீ. ; vi. 0–5–0 ; vii. இராமாயணத்தில் வரும் பரதனைப்பற்றிய முழுக்கதையும் இதில் விளக்கப்பட்டுள்ளன. கௌசல்யாவிடம் பரதன் கூறிய உறுதிமொழிகள் பாடல் வடிவில் இறுதியில் இடம்பெற்றுள்ளன. viii. 659/1917/III.

O31,3

2119. i. பால விநோதினி: முதற் பதிப்பு; ii. ஸ்ரீ பாலசுப்ரமணியம் கம்பெனி, சென்னை; கார்டியன் பிரஸ், சென்னை; iii. மார்ச், 1918; iv. உ. ப. 29; v. 18×13 செ. மீ.; vi. 0–2–0; vii. குழந்தைகளுக்கு நீதி புகட்டும் முறையில் சிறுகதைகளைக் கொண்டது இந்நூல். நீதி உரைகள் பல ஒவ்வொரு பக்கத்திலும் அடிக்குறிப்பாகத் தரப்பட்டுள்ளன. மதுவிலக்குக்கும்மி என்னும் பாட்டு (8) நூலிறுதியில் உள்ளது. குழந்தைகளின் அன்பன் என்னும் பெயரும் இதற்கு உண்டு. viii. 466/1918/II.

O31,3

2120. i. பால விநோதினி—புத்தகம் மூன்று: முதற் பதிப்பு; ii. ஸ்ரீ பாலசுப்பிரமணியம் கம்பெனி, சென்னை; கார்டியன் பிரஸ், சென்னை; iii. ஏப்ரல், 1918; iv. உ. ப. 32; v. 18×13 செ.மீ.; vi. 0–2–0; vii......; viii. 379/1918/III.

O31,3

2121. i. பால விநோதினி—நான்காம் புத்தகம்: முதற் பதிப்பு; ii. ஸ்ரீ பாலசுப்ரமணியம் கம்பெனி, சென்னை; கார்டியன் பிரஸ், சென்னை; iii. மே, 1918; iv. உ. ப. 32; v. 18×13 செ.மீ.; vi. 0–2–0; vii......; viii. 380/1918/III.

O31,3

2122. i. பால விநோதினி—புத்தகம் ஐந்து: முதற் பதிப்பு; ii. ஸ்ரீ பாலசுப்ரமணியம் கம்பெனி, சென்னை; கார்டியன் பிரஸ், சென்னை; iii. ஜுன், 1918; iv. உ. ப. 32; v. 18×13 செ.மீ.; vi. 0–2–0; vii......; viii. 381/1918/III.

O31,3

2123. i. பால விநோதினி—புத்தகம் ஆறு: முதற் பதிப்பு; ii. பாலசுப்ரமணியம் கம்பெனி, சென்னை; கார்டியன் பிரஸ், சென்னை; iii. ஆகஸ்ட், 1918; iv. உ. ப. 32; v. 19×13 செ.மீ.; vi. 0–2–0; vii......; viii. 424/1919/I.

O31,3

2124. i. பால விநோதினி—புத்தகம் ஏழு: முதற் பதிப்பு; ii. பாலசுப்ரமணியம் அண்டு கோ., சென்னை; கார்டியன் பிரஸ், சென்னை; iii. அக்டோபர், 1918; iv. உ. ப. 31; v. 18×13 செ.மீ.; vi. 0–2–0; vii.....; viii. 425/1919/I.

O31,3

2125. i. பால விநோதினி—புத்தகம் பத்து: முதற் பதிப்பு; ii. ஸ்ரீ பாலசுப்ரமணியம் கம்பெனி, சென்னை; கபாலி அச்சுக்கூடம், சென்னை; iii. ஜூன், 1919; iv. உ. ப. 32; v. 20×13 செ.மீ.; vi. 0–2–0; vii.....; viii. 964/1919/II.

O31,3

2126. i. விபீஷணன்: முதற் பதிப்பு; ii. ராமா அண்டு கோ; சென்னை; சுதேசமித்திரன் பிரஸ், சென்னை; iii. ஜூன், 1917; iv. உ. ப. 32; v. 19×13 செ. மீ.; vi. 0–2–0; vii. இராமாயணக்கதையில் வரும் 'விபீஷணன்' என்பவனின் கதை இதில் விளக்கப்பட்டுள்ளது. சிறுவர் சிறுமியரின் பொருட்டு எழுதப்பெற்றது. இச்சரித்திரம் சரணமடைந்தவர்களைக் காப்பது ஆண்மகன் கடமை என்பதையும் பெரியவர்களை அடைவதே புத்திமானுக்கு அழகாகும் என்பதையும் விளக்குவது. viii. 256/1917/IV.

O31,3

2127. i. ஜடாவல்லபர்: முதற் பதிப்பு; ii. ஸ்ரீ பாலசுப்ரமணியம் கம்பெனி, சென்னை; சச்சிதானந்தம் பிரஸ், சென்னை; iii. ஆகஸ்ட், 1917; iv. உ. ப. 340; v. 18×12 செ. மீ.; vi. 1–4–0; vii. இந்நூல் சமூகத்தில் நிலவிவரும் மூடப்பழக்கங்கள், அறியாமை, ஆகியவற்றால் நேரிடும் தீமைகளை விளக்கும் ஒரு கதையைக்கொண்டது. 24 அத்தியாயங்கள் கொண்டது. ஒவ்வோர் அத்தியாயத்தின் தொடக்கத்திலும் திருக்குறள், விவேகசிந்தாமணி முதலிய நூற்செய்யுள் ஒன்றைக் கதைக் கருத்திற்கு ஏற்ப அமைத்துள்ளார். தவிரவும் நூலினுள்ளேயும் பல செய்யுட்கள் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளன. viii. 1072/1917/III.

O31,3

2128. i. ஜடாவல்லவர்: திருத்திய பெரிதாக்கப்பட்ட இரண்டாம் பதிப்பு, ii.......; iii. 1915; iv. உ. ப. 366; v. 22×14 செ. மீ.; vi. 1–10–0; vii. பல கருத்துக்களை உணர்த்தும் ஒரு சமூகக் கதை. இச்சரிதம் பெற்றோர், மக்கள், மாற்றாந்தாய், மருமகன், மருமகள், சகோதரர், சிநேகர், பெரியவர், நீதியதிபர், ஊர்காப்போர் முதலாயினோர் நற்குணத்தினராயின் நேரும் நலங்களையும் துர்க்குணத்தினராயின் நேரும் சஞ்சலங்களையும், கடவுளை நம்பினோர்க்கு வரும் மேம்பாட்டையும்,

மற்றும் இவை போன்ற பல அறங்களையும் உணர்த்துவதாக உள்ளது. படிப்போர் மனத்தை நல்வழிப்படுத்த வல்ல வழியில் எளிய சொற்களால், இனிய தெள்ளிய நடையில் எழுதப் பெற்ற பெருநூல். viii. 108/1917/IV.

O31,3

2129. i. ஹைமவதி: முதற் பதிப்பு; ii. வெங்கடாசலம் அண்டு கோ., சென்னை; கார்டியன் பிரஸ், சென்னை; iii. டிசம்பர், 1918; iv. உ. ப. 54; v. 18×12 செ. மீ.; vi. 0-3-0; vii. ஆங்கிலேயக் கவிஞன் ஷேக்ஸ்பியர் எழுதிய புகழ்பெற்ற நாடகமாகிய 'சிம்பிலின்' என்பதனைத் தழுவி எழுதப்பட்ட தாகும் இக்கதை. ஆங்கிலம் பயிலாதவர்களும், பள்ளிச்சிறுவர் களும் அந்த அருமையான சரித்திரத்தின் அமைப்பையும், சுவையையும் எளிதிலுணர்ந்து பயன்பெறுமாறு கருதி இது எழுதப்பட்டுள்ளது. பாடபுத்தகமாக வைக்கக் கூடிய தகுதி பெற்றதாகும் இது என்று ஆசிரியர் தமது முகவுரையில் கூறுகிறார். viii. 429/1919/I.

O31,3

செல்லப்ப சாஸ்திரியார், டி. வி.

2130. i. ஆரிய சரித்திர மாலை: ஸ்ரீ ராமசரித்திரம் மலர் 1, பாகம் 1: முதற் பதிப்பு; ii. டி. வி. செல்லப்ப சாஸ்திரி அண்டு சன்ஸ், சென்னை; டி. வி. ஸி. பிரஸ், சென்னை, iii. 1916; iv. உ. ப. 94; v. 19×13 செ. மீ.; vi. 0-8-0; vii. இராமனுடைய சரித்திரத்தை விளக்குவது. அழகிய படங்கள் பல இதில் உள்ளன. இம்முதல் மலரில் பால காண்டம், அயோத்தியா காண்டம் பகுதிகளில் உள்ள கதைகள் அடங்கி யுள்ளன. viii. 654/1916/III.

O31,3

2131. ஆரிய சரித்திர மாலை: ராமர்கதை மலர் 1, பாகம் 2: முதற் பதிப்பு; ii. டி. வி. செல்லப்ப சாஸ்திரி அண்டு சன்ஸ், சென்னை; டி. வி. ஸி. பிரஸ், சென்னை; iii. 1916; iv. உ. ப. 60; v. 19×13 செ. மீ.; vi. 0-6-0; vii. இரண்டாம் பாகமாகிய இப்பகுதியில் ஆரணிய, கிஷ்கிந்தா காண்ட நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன. viii. 655/1916/III.

O31,3

2132. i. ஆரிய சரித்திரமாலை: ராமசரித்திரம்—மூன்றாம் பாகம்; ii. டி. வி. செல்லப்ப சாஸ்திரி அண்டு சன்ஸ், சென்னை; டி. வி. ஸி. பிரஸ், சென்னை; iii. 1917; iv. உ. ப. 98; v. 18×12 செ. மீ.; vi. 0-6-0; vii. அனுமான்

சமுத்திரத்தைத் தாண்டி இலங்கையை அடைந்ததிலிருந்து இராமர் முடி சூட்டல் வரையுள்ள கதையைப் படவிளக்கங்களோடு ஆசிரியர் விளக்குகின்றார். இது இராமர் சரித்திரத்தின் மூன்றாவது பகுதியாகும். viii. 192/1917/II.

O31,3

2133. i. ஆரிய சரித்திர மாலை: மலர் 2, பாண்டவ சரித்திரம்—முதற் பாகம்: முதற் பதிப்பு; ii. டி. வி. செல்லப்ப சாஸ்திரி அண்டு சன்ஸ், சென்னை; டி. வி. சி. பிரஸ், சென்னை; iii. பிப்ரவரி, 1918; iv. உ. ப. 249; v. 18×13 செ. மீ.; vi. 1–0–0; vii. இதில் பாரதக்கதையான பாண்டவர்களின் சரித்திரம் கூறப்பட்டுள்ளது. பாண்டவர்கள் சூதாடித் தோற்றுக் காடு செல்லுவது வரை உள்ள செய்திகள் இதில் கூறப்பட்டுள்ளன. கதைகளைச் சிறுவர்கள் நன்கு உற்றுக் கற்பதன் பொருட்டு அங்கங்கே ஏற்ற படங்களும் அமைக்கப்பட்டுள்ளன. viii. 1025/1918/I.

O31,3

2134. i. ஆரிய சரித்திர மாலை: பாண்டவ சரித்திரம்—இரண்டாம் பாகம்: முதற் பதிப்பு; ii. டி. வி. செல்லப்ப சாஸ்திரி அண்டு சன்ஸ், சென்னை; டி. வி. சி. பிரஸ், சென்னை; iii. மார்ச், 1919; iv. உ. ப. 286; v. 19×13 செ. மீ.; vi. 1–4–0; vii. ஆரிய சரித்திர மாலையின் இரண்டாம் இதழ். பஞ்சபாண்டவர் சரித்திரம் இதில் விவரிக்கப்பட்டுள்ளது. இதில் இரண்டாம் பாகம் அடங்கியுள்ளது. ஆரண்ய பர்வம், விராட பர்வம், உத்தியோக பர்வம் ஆகிய மூன்றும் இதன்கண் அடங்கியுள்ளன. சிறுவர்களும் படிக்கத்தக்கவாறு எளிய நடையில் இந்நூலை ஆக்கியுள்ளார். சித்திரப் படங்களும் அங்கங்கே சேர்க்கப்பட்டிருக்கின்றன. viii. 965/1919/I.

O31,3

2135. ஆரிய சரித்திர மாலை: மலர்—2, பாண்டவர் சரித்திரம்—மூன்றும் பாகம்: முதற் பதிப்பு; ii. டி. வி. செல்லப்ப சாஸ்திரி அண்டு சன்ஸ், சென்னை; டி. வி. சி. பிரஸ், சென்னை; iii. ஜனவரி, 1920; iv. உ. ப. 278; v. 18×13 செ. மீ. vi. 1–4–0; vii. இதில் மகாபாரதத்தில் வரும் பாண்டவர்களின் சரித்திரம் கூறப்பட்டுள்ளது. முதல் நாள் போர் தொடங்கிப் பின்னர் பாரதம் முழுவதும் மூன்றும் பாகமாகிய இதன்கண் கூறப்படுகிறது. viii. 548/1920/I.

O31,3

2136. i. ஆரிய சரித்திர மாலை: மலர்—4 நள சரித்திரம்: முதற் பதிப்பு; ii. டி. வி. செல்லப்ப சாஸ்திரி அண்டு சன்ஸ், டி. வி. சி. பிரஸ், சென்னை; iii. 1916; iv. உ. ப. 25; v. 19×13 செ. மீ.; vi. 0–3–0; vii. நளன் தமயந்தி

கதையைப் பட விளக்கத்துடன் விளக்குவது. சூதாட்டத்தின் தீமையையும் கற்பின் மேன்மையையும் விளக்கும் நூல். பாடசாலைச் சிறுவர் சிறுமியர்க்கு ஏற்றவகையில் எழுதப் பெற்றது. viii. 625/1916/III.

O31,3

செல்லையாபிள்ளை, கே. எம். வல்லுவெட்டி & ராஜா, வீ. என்., பருத்தித்துறை

2137. விகட துரிதமும் வீண் கல்வியும்: முதற் பதிப்பு; ii. சாமுவேல் தேவர், முகவை; கிருஷ்ண விலாஸ் பிரஸ், இராமநாதபுரம்; iii. மே, 1916; iv. உ. ப. 115; v. 20×14 செ. மீ.; vi. 0-12-0; vii. இளம்பெண் ஒருத்தி தன் வாழ்க்கையில் உண்டான பல இடையூறுகளையும் ஆபத்துக்களையும் தன் கற்பின் மேன்மையாலும் நிலையான திடநம்பிக்கையாலும், அறிவு நுட்பத்தாலும் வென்று முடிவில் நல்வாழ்வை அடைந்ததைப் பற்றிய வரலாற்றைக் கூறுவதாகும் இந்நூல். ஈழநாட்டுப் பேச்சுத்தமிழில் இப்புதினம் உள்ளது. viii. 1164/1916/III.

O31,3

செல்வகேசவராய முதலியார், தி.

2138. i. அராபியக் கதைகள்: முதற் பதிப்பு; ii. மாக்மில்லன் அண்டு கம்பெனி, சென்னை; எஸ். பி. ஸி. கே. பிரஸ், சென்னை; iii. ஆகஸ்ட், 1918; iv. உ. ப. 90; v. 18×12 செ. மீ.; vi. 0-5-0; vii. இஃது உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கான தமிழ்த் துணைப்பாடப் புத்தகமாகும் நோக்கத்துடன் எழுதப்பெற்றது. அராபிய நாட்டுக்கதைகளின் தமிழ் மொழி பெயர்ப்பே இந்நூல். இதில் அலிபாபாவும் நாற்பது திருடரும், கோஜியா இபேன் அல்லாபால், அபான் அசேன் என மூன்று கதைகள் அடங்கியுள்ளன. கதைகள் மிகவும் விறுவிறுப்பானவை. சில படங்களும் இடம் பெற்றுள்ளன. viii. 907/1918/III.

O31,3

2139. i. குசேலர்: திருத்திய இரண்டாம் பதிப்பு; ii. தி. செல்வ கேசவராய முதலியார், பெரம்பூர்; எஸ். பி. சி. கே. பிரஸ், சென்னை; iii. 1917; iv. உ. ப. 35; v. 18×13 செ. மீ.; vi......; vii. பழங்கதையான குசேலர் சரித்திரம் இதில் சுருக்கிச் சொல்லப்பட்டுள்ளது. வல்லூர் தேவராஜப் பிள்ளையினால் பாடப்பட்ட குசேலோபாக்கியானம் என்ற செய்யுள்நூலை அடியொற்றி எழுந்தது. viii. 385/1918/I.

O31,3

சேஷாத்ரி ஐயங்கார், கீழ் வீதி, பிரயாகை

2140. i. சரோஜா—காதலே சாதல்; ii. ஸ்ரீ ரங்கா பிரஸ், சென்னை; ஆர். ராம ஐயர் அச்சுக்கூடம், சென்னை, iii. 1916; iv. உ. ப. 52; v. 22×14 செ. மீ.; vi. 0–5–0; vii. இது காதல் நவீனம். பூவுலகில் மாதர் சிறப்புடை ஒழுக்கமுடைய வராய் விளங்கவேண்டும் என்பதை அறிவுறுத்துகிறது. நீதி நெறி காட்டும் பெரியோரின் செய்யுட்களும் அங்கங்கே எடுத்தாளப் பட்டிருக்கின்றன. viii. 722/1916/III.

O31,3

2141. i. நளினாக்ஷி: முதற் பதிப்பு; ii. கே.பி. சேஷாத்திரி ஐயங்கார்; பி. ஆர். ராம ஐயர் அச்சுக்கூடம், சென்னை; iii. 1916. iv. உ. ப. 68; v. 19×13 செ. மீ.; vi. 0–5–0; vii. இளநங்கையரை வயோதிகனுக்குத் திருமணஞ்செய்விப்பதால் உண்டாகும் கேடுகளை விவரிப்பது. இடையிடையே பொருத்தமான பல மேற்கோள் செய்யுட்கள் இடம்பெற்றுள்ளன. இந்நூலா சிரியர் சென்னைச் செந்தமிழ்ச் சங்கத்தைச் சேர்ந்தவராவர். 'ராஜா மணி' என்னும் துப்பறியும் புதினத்தையும் இவ்வாசிரியர் இயற்றியிருக்கிறார். viii. 98/1916/I.

O31,3

சோமசுந்தரம்பிள்ளை, எஸ். ஏ., சாத்தூர்

2142. i. சிறுமணிச்சுடர்—முதல் பாகம்: திருந்திய இரண்டாம் பதிப்பு; ii. மனோன்மணி விலாசம் அச்சியந்திரசாலை, மதுரை; iii. ஏப்ரல், 1920; iv. உ. ப. 32; v. 19×13 செ. மீ.; vi. 0–3–0; vii. இந்நூலின் முழுப்பெயர் மனோரம்மியம் என்ற சிறுமணிச்சுடர். இதில் 16 சிறு கதைகள் அடங்கியுள்ளன. ஆண் பெண் இரு பாலருள் இளைஞரும் முதியரும் படித்து மகிழத் தக்கது. viii. 94/1920/II.

O31,3

சோமசுந்தரம் பிள்ளை, சி.

2143. i. அஞ்சனாக்ஷி—பாகம் 2: முதற் பதிப்பு; ii. வி. குமார சாமி நாயுடு அண்டு சன்ஸ், சென்னை; காக்ஸ்டன் பிரஸ், சென்னை; iii. அக்டோபர், 1917: iv. உ. ப. 439; v. 18×13 செ. மீ.; vi. 1–4–0; vii. இது இந்நவீனத்தின் இரண்டாம் பாகமாகும். 23 ஆம் அத்தியாயம் தொடங்கி 40 ஆம் அத்தியாயம் வரை நூல் முடிய உள்ளது. ஒரு சில பாடல்களும் எடுத்துக்காட்டாக அங்கங்கே சேர்க்கப்பட்டுள்ளன. viii. 739/1917/IV.

O31,3

சோமசுந்தரம்பிள்ளை, சே.

2144. i. பழங்கதைகள்: முதற் பதிப்பு; ii. மாக்மில்லன் கம்பெனி லிமிடெட், சென்னை; எஸ். பி. வி. கே. பிரஸ், சென்னை; iii. 1917; iv. உ. ப. 82; v. 18×13 செ. மீ.; vi. 0–4–0; vii. பள்ளிச்சிறுவர்களுக்கேற்ற கதைகளைக் கொண்டது இந் நூல். இதில் உள்ள இருபது கதைகளும் வாய்மொழியாக மக்களிடையே வழங்கிவரும் கதைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டனவாம். படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. viii. 1145/1918/I.

O3,13

2145. i. புதிதுரைத்த பழங்கதைகள்—முதற் பாகம்; ii. ஆர். வெங்கடேஸ்வர் அண்டு கம்பெனி, சென்னை; ஆநந்த அச்சுக் கூடம், சென்னை; iii. 1917; iv. உ.ப. 46; v. 18×13 செ.மீ.; vi. 0—3—0; vii. மாணவர்களிடையே உரைநடை வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு எழுதப்பெற்ற நூல். வேங்கை மார்பன், தங்கப்பெட்டி, தந்திரமுள்ள கவி வாணன், ஒரு பிரபுவின் கதை என நான்கு கதைகள் இதில் உள. viii. 758/1917/III.

O31,3

2146. i. புறநாட்டுக் கதைகள்: முதற் பதிப்பு; ii. வெங்கடேஸ்வர் & கம்பெனியார், சென்னை; ஆனந்த அச்சுக்கூடம், சென்னை, iii. டிசம்பர், 1917; iv. உ. ப. 31; v. 18×13 செ.மீ.; vi. 0-2-0; vii. இந்நூலில் டார்டோன் பிரிவு, பிலாயோ என்னும் இரு கதைகள் உள்ளன. பள்ளி மாணவர்களுக்குத் துணைப் பாடப் புத்தகமாய்ப் பயில் வதற்கு ஏற்ற முறையில் எழுதப்பட்டிருக்கிறது. அரும் பதங்களுக்குரிய பொருள் அடிக்குறிப்பில் தரப்பட்டிருக்கிறது. viii. 1028/1917/IV.

O31,3

ஞானப்பிரகாசப் பிள்ளை, சி. எஸ்.

2147. i. மனோகரன்: முதற் பதிப்பு: ii. சி. எஸ். ஞானப் பிரகாசப் பிள்ளை, பெங்களூர்; மெர்குரி பிரஸ், சென்னை; iii. ஆகஸ்ட், 1917, iv. உ. ப. 54; v. 22×14 செ. மீ.; vi. 0—4—0; vii. இந்நூலில் மதுவருந்துவதால் ஏற்படும் தீமைகளை விளக்கும் கதையொன்று உள்ளது. "மதுவிலக்கு மான்மியம்" என்றும் இதற்கொரு பெயருண்டு. viii. 3/1917/IV.

O31,3

டோமணி, ஜே. எல்.

2148. i. தாமோதர மங்களமணி: முதற் பதிப்பு; ii. கொ தோட்டதம்ம நாயக்கர், சென்னை; எலெக்டிரிக் பிரிண்டிங் ஒர்க்ஸ், அச்சியந்திர சாலை, கோயம்புத்தூர்; iii. டிசம்பர், 1917; iv. உ.ப. 199; v. 20×14 செ.மீ.; vi. 1-0-0; vii. ஒரு புதினம், ஆசிரியரின் புகைப் படம் நூன் முதலில் உள்ளது. மற்றும் இருவர் இதற்கு முன்னுரை எழுதியுள் ளனர். viii. 375/1918/I.

O31,3

2149. i. டோரா; ii. வெட்னெஸ்டே ரிவியூ பிரஸ், திருச்சிராப் பள்ளி; iii. 1916; iv. உ.ப. 8; v. 17×11 செ.மீ.; vi......... ; vii. டென்னிஸன் என்பார் (1809—1892) பாடிய கவிகளில் ஒன்றிலிருந்து எடுத்தெழுதப்பட்ட சிறு கதை. கீர்த்தி வாய்ந்த ஆங்கிலக் கவிஞரின் நூல்களிலிருந்து விசித்தரமான கதையை எடுத்து விவரிக்கும் முயற்சியில் இது ஒன்று. viii. 87/1916/IV. O31,3

தண்டபாணி பிள்ளை, சொ., நாகை

2150. i. மதிமுகி—இரண்டாம் பாகம்: திருத்திய இரண்டாம் பதிப்பு; ii. லக்ஷ்மி விலாஸ் புத்தக சாலை, மதுரை; பி. ஆர். ராமய்யர் அண்டு கம்பெனி பிரஸ், சென்னை; iii. ஜூலை, 1918; iv. உ.ப 64; v. 18×13 செ. மீ.; vi. 0—4—0: vii. இது மதமுகி யென்னும் ஓர் அரிய துப்பறியும் புதினத்தின் இரண்டாம் பாகம். ஐந்தாம் அத்தியாயம் தொடங்கிப் பத்தாம் அத்தியாயம் வரை நூல் முடிய இதில் உள்ளது. viii. 864/1918/III

O31,3

தயாநந்தா, மதுரை

2151. i. ஆனந்த பதுமினி அல்லது அஞ்சனக் கோட்டையின் அதிசயங்கள்: முதற் பதிப்பு; ii. ஷம்சிய பிரஸ், மதுரை; iii. மே, 1919; iv. உ.ப. 98; v. 21×14 செ.மீ.; vi. 0-12-0; vii. இது சரித்திரம் சம்பந்தமான கதை. இக் கதையின் முதல் பாகம் ஒன்பது அத்தியாயங்கள் கொண்டது. viii. 574/1919/II.

O31,3

தருமலிங்க முதலியார், ஆ.

2152. i. சாரா சுந்தரி: முதற்பகுதி; ii. ஆ. தருமலிங்க முத லியார்; ரீட் கம்பெனி, சென்னை; iii. டிசம்பர், 1919; iv. உ.ப+ செ.மூ.ப. 71; v. 18×13 செ.மீ.; vi. 0-6-0; vii. வாய்மை யும் இறைபக்தியும் எப்பொழுதும் வாழ்க்கையில் நன்மையை

அளிப்பன என்ற கருத்தினை விளக்கக்கூடிய கதையாகுமிது. இதில் இராமாயணக் சுருக்கமும் கூறப்பட்டுள்ளது. இடையிடையே செய்யுட் பகுதிகள் மேற்கோளாகக் கொடுக்கப்பட்டுள்ளன. ஆசிரியரின் நிழற்படமொன்றும் இதன்கண் உண்டு. திருமங்கையாழ்வார் திருமொழியாகிய 'குலந்தரும், என்னும் பாசுரத்தை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பெற்றது இந்நூல். viii. 1009/1919/IV,

O31,3

தாண்டவராய முதலியார், வித்வான். (தொ. து.)

2153. i. கதா மஞ்சரி: முதற் பதிப்பு; ii. லாங்மன் ஸ்கிரீன் அண்டு கம்பெனி, சென்னை; மினர்வா பிரஸ், சென்னை; iii. மார்ச், 1918; iv. உ.ப. 78+2; v. 19×13 செ.மீ.; vi. 0-8-0; vii. இது சிறுசிறு வேடிக்கைக் கதைகளின் தொகுதி. 'மஞ்சரி' என்பது கொத்து; எனவே கதைகளை நிறையவுடைய நூலுக்குக் கதாமஞ்சரி யெனப் பெயராயிற்று. இதில் புதுமையும் பழமையுமான 81 கதைகள் உள்ளன. இவற்றுள் பல நாடோடியாக வழங்கும் வாய்மொழிக் கதைகளாம். இது 'புராதன நவீன கதாமஞ்சரி, என்னும் தொடர் வெளியீட்டில் மூன்றுவது மலர் ஆகும். viii. 261/1919/II.

O31,3

2154. பஞ்ச தந்திரம்; திருத்திய பதிப்பு, ii. வி.குமாரசாமி நாயுடு சன்ஸ், சென்னை; கார்டியன் பிரஸ், சென்னை; iii. செப்டெம்பர், 1920; iv. உ.ப. 175; v. 18×12 செ.மீ.; vi. 0-10-0; vii. இந்நூல் வடமொழியிலுள்ள பஞ்ச தந்திரம் என்பதைத் தமிழில் மொழி பெயர்த்து அழகிய நடையில் எழுதப்பட்ட ஐந்து கதைகளைக் கொண்டதாகும். இந்நூலாசிரியரின் வரலாறும் இதன்கண் அடங்கியுள்ளது. சென்னைக் கிறித்துவக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் சு. அனவரத விநாயகம் பிள்ளை அவர்களின் முன்னுரையும் அரும்பதவுரையுங் கொண்டது. முதற் பதிப்பிற்கு நூலாசிரியர் எழுதிய பாயிரமும் இதில் கொடுக்கப் பெற்றிருக்கிறது. viii. 369/1920/IV.

O31,3

திருமலைக் கொழுந்து பிள்ளை. எஸ்.ஏ.

2155. i. கிரிசல்தை சரிதம்; முதற் பதிப்பு; ii. வி. அய்யாசாமி ஐயர், சென்னை; கிச்சினர் பிரஸ், சென்னை; iii. 1915; iv. உ.ப. 28; v. 18×13 செ.மீ.; vi. 0-2-0; vii. கிரிசல்தை கதை இதில் சுருக்கமாக எழுதப்பட்டுள்ளது. மகளிர் எல்லாம் கிரிசல்தையைப் போல் பரமசாந்தத்தைப் பெறவேண்டும் என்பதை இச்சரிதம் உணர்த்துகிறது. தாழ்வையும் ஒருபடித்தாய் எண்ணி நடக்க வேண்டும் என்றும் அறிவுறுத்துகிறது. viii. 965/1916/I.

O31,3

நடராஜன், வி. சு.

2156. i. சிறுவர்க்காகும் கதைப் பூங்கொத்து: முதற் பதிப்பு ii. எம். கோபால கிருஷ்ண அய்யர், மதுரை; சூரியோதய முத்திராலயம், மதுரை; iii. டிசம்பர், 1917; iv. உ. ப. 46; v. 13×11 செ.மீ.; vi. 0-2-6; vii. இந்நூல் 'கதா குசும மஞ்சரி' என்னும் வடமொழி நூலினை ஒட்டி எழுதப்பெற்றது. மதுரையினின்று வெளிவந்த 'விவேகோதயம்' என்னும் மாத இதழ் வாயிலாக வெளி வந்த கதைகள் இவை. 30 கதைகள் உள. ஒவ்வொரு கதையினுலும் தெரிய வரும் படிப்பினைகளும் அவ்வக் கதைகளின் முடிவில் கொடுக்கப்பட்டுள்ளன. பரிதிமாற் கலைஞன் புத்தகசாலைப் பிரசுரத்தில் இது முதலாவதாகும். viii. 299/1918/I.

031,3

நடேச முதலியார், ச., சென்னை

2157. i. விவேகபுர வேதியர்: முதற் பதிப்பு; ii. கா. முனிசாமி முதலியார் அண்டு சன், சென்னை; ஜூபிடர் பிரஸ், சென்னை; iii. அக்டோபர், 1919; iv. உ. ப. 243; v. 17×11 செ.மீ.; vi. 1-0-0; vii. ஆங்கிலப் புரட்சி எழுத்தாளன்–சிந்தனைச் சிற்பி ஆலிவர் கோல்டு ஸ்மித் எழுதிய 'தி விக்கார் ஆப் வேக் பீல்ட்' என்பதைத்தழுவி எழுதப்பட்ட சிறந்ததொரு தமிழ் நாவலாகும். திரு. வி.க. முதல் பலர் இதற்குப் பாராட்டுரை வழங்கியுள்ளனர். இதன் ஆசிரியர் 'தேசபக்தன்' உதவிப் பத்திராதிபரா யிருந்தவர். இது மொழி பெயர்ப்பு நூலாயினும் நடை தெளிவாகவும் தமிழ் இயலை ஒட்டியும் அமைந்திருக்கிறது எனப்பலரும் பாராட்டியுள்ளனர். இவர் எழுதிய மற்றொரு நாவல் 'அனந்த குமரி' என்பது. தமிழ் வசன நூல்கள், அதில் மேற்கொள்ளப் பெறும் நடையமைதி குறித்து முகவுரையில் ஆசிரியர் சில கருத்துக்களைத் தெரிவித் துள்ளார். viii. 651/1919/IV.

031,3

நரசிம்ஹ அய்யர், ஜி.என்., மதுரை

2158. i. கண்ணகியும் மணிமேகலையும்: முதற் பதிப்பு; ii. எஸ். முத்தையாபிள்ளை, மதுரை; எஸ். எஸ். வி. பிரஸ், மதுரை. iii. 1916; iv. உ. ப. 16+19; v. 19×13 செ.மீ.; vi. 0-3-0; vii. பெருங்காப்பியங்களாகிய சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரண்டு நூற்களின் முக்கிய பாத்திரமான கண்ணகி மணிமேகலை ஆகிய இருவரைப்பற்றிய சரித்திரம்

இரு பெருங்காவியங்களின் கதாசாரத்தை ஆசிரியர் உரைநடையில் அமைத்துத் தருகிறூர். பள்ளியிற் பயிலும் மாணவர்க்கு என ஆக்கப்பெற்ற நூல். viii. 52/1916/III.

O31,3

நரசிம்மாச்சாரி, எஸ்.

2159. i. கண்ணப்பர்: முதற் பதிப்பு; ii. வீ. குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ், சென்னை; காக்ஸ்டன் பிரஸ், சென்னை; iii. ஜுலை, 1919; iv. உ.ப. 158; v. 18×12 செ.மீ.; vi. 0–10–0; vii. இதில் கண்ணப்பர் என்ற ஒருவரின் கதை அமைந்துள்ளது. உரையாடல்கள் நிறைந்துள்ளன. உலகயாத்திரை பற்றிய செய்திகள் இதன் கண் கூறப்பட்டுள்ளன. அதனுல் இதற்கு 'பூவலயாத்திரை' என்றும் ஒரு பெயர் உண்டு. viii. 1083/1919/III.

O31,3

2160. i. சத்தியபதி: முதற் பதிப்பு; ii. வீ. குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ், சென்னை; காக்ஸ்டன் பிரஸ், சென்னை; iii. பிப்ரவரி, 1920; iv. உ. ப. 75; v. 18×13 செ.மீ.; vi. 0–5–0; vii. இஃது அமைச்சர்களுக்கு வேண்டிய அருங்குணங்களைப் பற்றி விவரமாக எழுதப்பட்ட ஓர் அரிய கதைப் புத்தகமாகும். viii. 815/1920/I.

O31,3

நாராயண ஐயர், இ. வி.

2161. i. வேணுகோபாலன் அல்லது 'குருபக்தி தருமுக்தி'; ii. சண்முக விலாஸ் பிரஸ், சேலம்; iii. 1917; iv. உ. ப.182; v. 21×14 செ.மீ.; vi. 1–0–0; vii. இறைவனுக்குச் செய்யும் பெருந்தொண்டாக—அந்த இறைவனுடைய பிரதி பிம்பமாக விளங்கும் மக்கள் சமூகத்திற்கான தொண்டுகளை எவ்விதம் செய்யக்கூடும் என்பதனை விளக்குகிறது, 37 அத்தியாயங்கள் கொண்ட இப்பெருநூல். அங்கங்கே சிறந்த கருத்துடைய பாடல்களும் இதில் கொடுக்கப்பட்டுள்ளன. viii. 881/1917/III.

O31,3

நாராயணசாமி அய்யர், எம்.எம்.& யக்ஞசாமி, எஸ்.

2162. i. கதாரஸ மஞ்சரி: முதற் பதிப்பு; ii. எஸ். யக்ஞசாமி, கும்பகோணம்; இண்டியா பிரிண்டிங் ஒர்க்ஸ், சென்னை; iii. 1917; iv. உ. ப. 63; v. 19×13 செ.மீ.; vi. 0–4–0; vii. பல நீதிகளைப் போதிக்கும் சிறு கதைகளின் தொகுப்பே இந்நூல், பள்ளி மாணவர்க்கு ஏற்றது. viii. 242/1918/I.

O31,3

நாராயணசாமி ஐயங்கார், பி.கே., ஒலக்கூர்

2163. i. அரவிந்த லோசனி அல்லது அரசகுமாரிகளின் சாகஸம்: முதற் பதிப்பு ; ii. பி.கே. நாராயணசாமி ஐயங்கார், ஒலக்கூர் ; மினெர்வா அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1917 ; iv. உ. ப. 129 ; v. 18×13 செ.மீ. ; vi. 0–8–0 ; vii. ஒரு பெண்ணின் கற்புத் தன்மையை விளக்கும் புதினம். viii. 980/1917/I.

O31,3

நாராயணசாமி பிள்ளை, டி.பி.

2164. i. நளன் சரிதம்: முதற் பதிப்பு ; ii. டி. கிருஷ்ணசாமி ஐயர் ; ஸ்ரீ கிருஷ்ண விலாச பிரஸ், கும்பகோணம் ; iii. செப்டம்பர்; 1917 ; iv. உ. ப.+செ.மூ.ப. 286 ; v. 18×13 செ.மீ. ; vi. 1–0–0 ; vii. நளவெண்பா, நைடதம் ஆகிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற செய்யுட்கள் ஆங்காங்கே ஆளப்பெற்று எழுதப் பெற்றது இந்நூல். நளனின் சரித்திரம் படலம் படலமாக விளக்கப் பட்டுள்ளது. நல்ல தமிழில் அமைந்த வளமான உரைநடை நூல். viii. 1011/1917/III.

O31,3

நாராயணதாசர், புதுவை

2165. i. உலக விசித்திரக் கதை: நான்காம் பதிப்பு ; ii. முனிசாமி முதலியார், சிறுமணலூர் ; சிவகாமி விலாஸ அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1915 ; iv. உ. ப. 197 ; v. 21×14 செ.மீ. ; vi. 1–0–0 , vii. இருபது விசித்திரக் கதைகள் கொண்டது இந்நூல். பல்வேறுபட்ட பண்புகள் வாய்ந்த மாந்தர்தம் இயற்கைகள் வருணிக்கப்பட்டுள்ளன. நற்குணத்தைப் புகழவும் தீக்குணத்தை இகழவும், இடையிடையில் பல குணத்தார்க்கும் உபமானமாகச் சொல்லத்தக்க கதைகள் இதன்கண் உள. viii. 679/1916/I.

O31,3

2166. i. ஸ்திரிகள் பக்த விஜயமென்னும் பதிவிரதைகள் சரித்திரம்: திருத்திய மூன்றும் பதிப்பு ; ii. எஸ்.பி. இராஜாராம், சென்னை ; ஸன் ஆப் இந்தியா பிரஸ், சென்னை ; iii. டிசம்பர், 1917 ; iv. உ. ப. 403 ; v. 21×14 செ.மீ. ; vi. 0–12–0 ; vii. புராணங்களில் வரும் பதினெட்டுப் பதிவிரதைகளின் கதைகள் இதில் தொகுத்துத் தரப் பட்டுள்ளன, viii. 284/1918/I.

O31,3

நேஸ்பீல்ட், ஜே. ஸி.

2167. i. உத்தர ராமாயண கதைகள்: முதற் பதிப்பு; ii. மாக்மில்லன் அண்டு கோ., சென்னை; எஸ்.பி.ஸி.கே. பிரஸ், சென்னை; iii. மே; 1917; iv. உ. ப. 60; v. 18×13 செ.மீ.; vi. 0–4–0; vii. இராமாயணத்தின் உத்தர காண்டம் சம்பந்தப்பட்ட கதைகளை இதில் ஆசிரியர் தந்துள்ளார். 15 அத்தியாயங்களில் இராமாயணப் பின் நிகழ்ச்சிகள் விளக்கப்பட்டுள்ளன. ஆறு படங்களும் உண்டு. இளைஞர், முதியோர் முதலிய யாவரும் எளிதில் கற்று மகிழும் வகையில் ஆக்கப் பெற்ற நூல். viii. 845/1917/II.

O31,3

2168. i. கதா சரித் சாகரக் கதைகள்: முதற் பதிப்பு; ii. மாக்மில்லன் அண்டு கோ., சென்னை; எஸ்.பி.ஸி.கே. பிரஸ். சென்னை; iii. நவம்பர், 1917; vi. உ. ப. 56; v. 18×13 செ.மீ.; vi. 0–3–0; vii. இந்நூலில் பள்ளி மாணவர்களுக்கேற்ற 13 சிறுகதைகள் அடங்கியுள்ளன. படவிளக்கமும் அமைந்துள்ளது. viii. 848/1917/IV.

O31,3

2169. i. சீதாராமர்களின் பிறப்பும், வனவாசமும், சஞ்சாரமும்: முதற் பதிப்பு; ii. மாக்மில்லன் அண்டு கோ., சென்னை; எஸ். பி. ஸி. கே. பிரஸ், சென்னை; iii. மே, 1917; iv. உ. ப. 72; v. 18×13 செ.மீ.; vi. 0–4–0; vii. இராமாயணத்தில் இராமர் பிறப்பு முதல் இறுதியில் பட்டாபிஷேகம் வரை உள்ள கதை இதில் விளக்கப்பட்டிருக்கிறது. ஒரு சில படங்களும் உள. கதைப் போக்கு எளிதில் விளங்கத் தக்கபடி சிறுதலைப்புக்களும் இடையிடையே உண்டு. viii. 846/1917/II.

O31,3

2170. i. சூரபனும் ருஸ்தானும்: முதற் பதிப்பு; ii. மாக்மில்லன் அண்டு கம்பெனி லிமிடெட், சென்னை; எஸ். பி. சி. கே. பிரஸ், சென்னை; iii. மே, 1918; iv. உ. ப. 90; v. 18×12 செ.மீ.; vi. 0–4–6; vii. இஃது ஆங்கிலத்தில் உள்ள சோரப் அண்ட் ரஸ்டம் என்ற கதையின் தமிழ் மொழி பெயர்ப்பாகும். படங்களுடன் கூடியது. அஸ்ஜீது உபராஜனும் சிங்கங்களும் என்னும் மற்றொரு கதையும் இதனோடு தரப்பட்டிருக்கிறது. viii. 670/1918/II.

O31,3

2171. i. நந்தவனச் சிறு கதைகள்: முதற் பதிப்பு; ii. மாக்மில்லன் அண்டு கோ., சென்னை; எஸ். பி. சி. கே. பிரஸ், சென்னை; iii. செப்டம்பர், 1917; iv. உ. ப. 42; v. 19×13

செ. மீ. ; vi. 0–2–6 ; vii. இந்நூல் சிறுவர்களுக்கேற்றவாறு கதைகள் அடங்கிய தொகுப்பு. கதைகளில் ஏற்ற பட்டங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இவை நீதிபுகட்டுபவையாயும் நுட்பமான அறிவைக் காட்டுவதாயும், வேடிக்கை விநோத நிகழ்ச்சிகளைக் கொண்டதாயும் அமைந்துள்ளன. viii. 45/1917/IV.

O31,3

2172. i. பாரசிகக் கதைகள் : முதற்பாகம் : முதற் பதிப்பு ; ii. மாக்மில்லன் அண்டு கோ., சென்னை ; எஸ். பி. சி. கே. பிரஸ், சென்னை ; iii. அக்டோபர், 1917 ; iv. உ.ப. 53 ; v. 19×13 செ.மீ. ; vi. 0–3–0 ; vii. இது சிறுவர்களுக்கு ஏற்ற சிறுகதைகளின் தொகுப்பு. படங்களுடன் கூடியது. viii. 227/1917/IV.

O31,3

2173. i. பாரசீக கதைகள் : முதற் பதிப்பு ; iii. நவம்பர், 1917 ; iv. உ. ப. 56 ; v; vi; vii; viii. 822/1917/IV.

O31,3

2174. i. மகாபாரதக் கதைகள் : முதற் பாகம் : முதற் பதிப்பு ; ii. மாக்மில்லன் அண்டு கோ., சென்னை ; எஸ். பி. சி. கே. பிரஸ், சென்னை ; iii. மே, 1917 ; iv. உ. ப. 79 ; v. 18×13 செ. மீ. ; vi. 0–4–6 ; vii. இந்நூலில் பாரதத்தின் விஷயச் சுருக்கம், சகுந்தலையும் கன்னியாழியும் சந்தனுவும் அவர் குமாரர் பீஷ்மரும், நச்சுப்பொய்கை, சந்திரஹாஸன் என்றும் அதிருஷ்டசாலி, பெரும்பஞ்சம் என ஆறு கதைகள் உள்ளன. படங்களும் சில சேர்க்கப்பட்டிருக்கின்றன. viii. 844/1917/II.

O31,3

2175. i. மகாபாரதக் கதைகள் : —இரண்டாம் பாகம் ; ii மாக்மில்லன் அண்டு கோ. லிமிடெட், சென்னை ; எஸ். பி. சி. கே. பிரஸ், வேப்பேரி, சென்னை ; iii. 1917 ; iv. உ.ப. 79 ; v. 18×12 செ.மீ. ; vi ....; vii. சாவித்திரி கற்பினால் யமனை வென்றது, பருந்தும் புறாவும், நளனும் தமயந்தியும் என்னும் மூன்று கதைகள் இதில் உள்ளன. முதற் கதைக்கு நான்கும் இரண்டாவது கதைக்கு ஒன்றும் மூன்றாவது கதைக்கு ஆறும் படங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இளைஞர்க்கும் முதியோர்க்கும் ஏற்ற நடையில் இவை அமைந்துள்ளன. viii. 884/1917/III.

O31,3

2176. i. மன்னவனும் மாணிக்கங்களும் : முதற் பதிப்பு ; ii. மாக்மில்லன் அண்டு கம்பெனி லிமிடெட், சென்னை ; எஸ். பி. சி. கே. பிரஸ், சென்னை ; iii. மே, 1918 ; iv; உ. ப. 106 ; v. 18×12 செ. மீ. ; vi. 0–5–0 ;

vii. "The King and the Rubies" என்ற ஆங்கில மொழியில் உள்ள ரோம் நாட்டுக் கதையின் மொழிபெயர்ப்பாகும் இது. படங்களுடன் கூடியது. viii. 765/1918/II.

O31,3

2177. i. வேதாளக் கதைகள்: முதற் பதிப்பு; ii. மாக்மில்லன் அண்டு கோ; எஸ். பி. சி. கே. பிரஸ், சென்னை; iii. அக்டோபர், 1917; iv. உ. ப. 93; v. 19×13 செ.மீ.; vi. 0-5-0; vii. விக்கிரமாதித்தனைப் பற்றிய கதை இது. இளைக் கதைகள் பல இதில் அடங்கியுள்ளன. ஒரு சில படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. 15 அத்தியாயங்கள் உள. viii. 228/1917/IV.

O31,3

2178. i. ஸாதியின் விவேக விளக்கம்: முதற் பதிப்பு; ii. மாக்மில்லன் அண்ட் கம்பெனி, சென்னை; எஸ். பி. சி. கே. பிரஸ், சென்னை; iii. ஜனவரி, 1918; iv. உ.ப. 64; v. 18×13 செ.மீ.; vi. 0-4-0; vii. இதில் சிறுவர்களுக்கேற்ற சுமார் 40 சிறுகதைகள் அடங்கியுள்ளன. எளிய நடையில் நீதியைப் போதிப்பவையாயுள்ளன. கதை நிகழ்ச்சிகளை விளக்கும் ஒரு சில படங்களும் சில கதைகளில் இடம் பெற்றுள்ளன. viii. 580/1918/I.

O31,3

2179. i. ஹதீம் தாயின் அற்புதச் செயல்கள்: முதற் பதிப்பு; ii. மாக்மில்லன் கம்பெனி, சென்னை; எஸ். பி. சி. கே. பிரஸ், சென்னை; iii. ஆகஸ்ட், 1918; iv. உ. ப. 90; v. 18×12 செ.மீ.; vi. 0-5-0; vii. ஹதீம் தாய் என்பவரது அற்புதச் செயல்களைப் பற்றி இப்புதினம் விவரிக்கின்றது. மேலும், அவர் ஏழு வினாக்களுக்களித்த விடையினைப் பட விளக்கங்களுடன் தருகின்றது. அரபி தேசத்துக் கதைகளில் இவர் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறார். viii. 906/1918/III.

O31.3

2180. i. ஹிந்தோபதேசக் கதைகள்: முதற் பதிப்பு; ii. மாக்மில்லன் அண்டு கோ., சென்னை; எஸ். பி. வி. கே. பிரஸ், சென்னை; iii. மே, 1917; iv. உ.ப. 36; v. 18×13 செ.மீ., vi. 0-2-6; vii. இந்நூல் சிறுவர்களுக்கேற்ற 12 கதைகளைக் கொண்டது. பொருத்தமான படங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. viii. 817/1917/II.

O31,3

பத்மநாப பிள்ளை, பெ. ரா.

2181. i. மெய்க்காதலி: திருத்திய இரண்டாம் பதிப்பு; ii. நா. முனிசாமி முதலியார், சென்னை; ஆனந்தபோதினி அச்சியந்திர சாலை; iii. நவம்பர், 1920; iv. உ.ப. 97; v. 21×14 செ.மீ.; vi. 0–8–0; vii. ஒரு பெண் தான் மெய்யாகக் காதலித்த காதலனை மணம் முடிக்கும் நிலையினைப் பற்றியும் அவள் மணத்திற்கு முன் அனுபவித்த துன்பங்களைப்பற்றியும் சித்தரிக்கும் ஒரு நல்ல கதையாகும் இந்நூல. viii. 954/1920/IV.

O31,3

பாலம்மாள், வி.

2182. i. உண்மைக் காதல்: முதற் பதிப்பு; ii. ஸ்ரீநிவாசவரதாசாரி அண்டு கம்பெனி, சென்னை; iii. நவம்பர், 1918; iv. உ.ப. 61; v. 18×13 செ.மீ.; vi. 0–8–0; vii. உண்மையான காதல் இறுதியில் வெற்றி பெறுவதும்—ஒற்றுமை இறுதியில் வெற்றி பெறுவதும் இக்கதையின் அடிப்படை விளக்கமாகும். 12 அத்தியாயங்கள் கொண்டது இந்நூல். இது ஆசிரியரின் இரண்டாவது படைப்பாகும். viii. 78/1919/I.

O31,3

2183. i. சந்திர குப்த சரித்திரம்: மூன்றும் பதிப்பு; ii. இ.மா. கோபால கிருஷ்ணகோன், மதுரை; எக்ஸெல்சியர் பிரஸ், மதுரை; iii. செப்டெம்பர், 1918; iv. உ. ப. 219; v. 21×14 செ.மீ.; vi. 1–4–0; vii. மகத வம்சத்தின் கீர்த்திவாய்ந்த மன்னனான சந்திரகுப்த மன்னனின் வாழ்க்கை வரலாற்றையும், சாணக்கியரின் அரசியல் அறிவையும் இதன் மூலம் நாம் நன்கு உணரலாம். இது 1919ஆம் ஆண்டு பள்ளி இறுதி வகுப்புக்குத் துணைப்பாடமாக வைக்கப் பட்டிருந்தது. அறுபத்திரண்டு அத்தியாயங்கள் கொண்டது. அரும்பத விளக்கம் அகராதி அடைவில் நூலிறுதியில் கொடுக்கப்பட்டிருக்கிறது. மதுரையிலிருந்து வெளிவந்த "விவேகோதயம்" என்னும் மாதப்பத்திரிகையைப் பற்றியும் நூலிறுதியில் உளது. சாணக்கிய ஸாகஸம் அல்லது சந்திரகுப்த சரித்திரம் என்பது இந்நூலின் முழுப்பெயராகும். இது முதற் பாகம் ஆகும். இரண்டாவது பாகம் விரைவிலே வெளிவரும் என்று நூலிறுதியில் கூறப்பட்டிருக்கிறது. viii. 168/1919/I.

O31,3

பாலஸரஸ்வதி தேவ குஞ்சரியம்மாள்

2184. i. கர்நாடக மோசினிக்கதை எண் 1: நான்காம் பதிப்பு; ii. ஸ்ரீ பாலசுப்ரமண்யம் கம்பெனி, சென்னை; சச்சிதானந்தா பிரஸ், சென்னை; iii. ஜூலை, 1917; iv. உ.ப. 80; v. 19×13 செ.மீ.; vi. 0–4–0; vii. சிறுவர்களுக்கேற்ற கதைகளின்

தொகுப்பே இந்நூல். 5 கதைகள் உள்ளன. இவை நமது தேசத்தில் பரம்பரையாக வழங்கி வருகின்ற செவி வழிக் கதைகளாம். இவை பற்பல நீதிகளைப் போதிப்பனவாம். viii. 661/1917/III.

O31,3

2185. i. கர்நாடக மோகினிக்கதை—இரண்டாம் பாகம்: முதற் பதிப்பு; ii. ஸ்ரீ பாலசுப்ரமணியம் அண்டு கோ., சென்னை; சச்சிதானந்தா பிரஸ், சென்னை; iii. ஜூலை, 1917; iv. உ.ப. 69; v. 19×13 செ.மீ.; vi. 0–5–0; vii. இது மாணவர்களுக்கேற்ற வகையில் எழுதப்பெற்ற மோகினிக் கதைகள் அடங்கிய தொகுப்பு. இது செவிவழியாக நாட்டில் வழங்கும் கதைகளை ஒட்டி எழுதப்பெற்றவை. viii. 662/1917/III.

O31,3

பிரஹதாம்பாள் அம்மாள், திருவிடைமருதூர்

2186. i. ஜெயகாந்தன் அல்லது மனத்தளர்வுற்றவன்: முதற் பதிப்பு; ii. பிரஹதாம்பாள், திருவிடைமருதூர்; லக்ஷ்மி விலாஸ அச்சாபீஸ், கும்பகோணம்; iii. 1916. iv. உ.ப. 98; v. 18×13 செ.மீ.; vi. 0–10–0; vii. நல்ல மனத்துடனும் பிறர் நன்மையை நாடியும், கடவுள் பக்தியுடனும் இருந்தால் எந்தச்செயலை நினைக்கிருர்களோ அந்தச்செயல் வெற்றியாகவே முடியும். ஊழ்வினைத் தொடரால் இடையில் சங்கடங்கள் வரினும் சூரியனைக்கண்ட பனியெனப் பறந்து முடிவில் நம் எண்ணம் போல் முடியும் என்னும் கருத்தை இப்புதினம் விளக்குகிறது. கதா பாத்திரங்களைக் குறித்த 'அபிதான விளக்கம்' முதலில் சேர்க்கப்பட்டிருக்கிறது. viii. 671/1916/II.

O31,3

2187. i. பெற்றமனம் பித்து; ii. ஜி.ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி, சென்னை; தாம்ஸன் அண்டு கோ., சென்னை; iii. உ.ப. 31; iv. 18×13 செ.மீ.; v ; vi. 0–2–0; vii. கிராம வாழ்க்கையின் இயல்பை விளக்கிக்காட்டும் சிறுகதை. இது 'ஜனுபிமானி' பிரசுரங்கள் வரிசையில் மூன்ருவது. பொது மக்களிடையே அறிவை விருத்தி செய்யும் நோக்கத்துடன் வெளியிடப்பெற்றவையாகும் இவ்வரிசை வெளியீடுகள், காதல் வெற்றி, அன்புக்கும் அழிவோ, ஹாஸ்யமஞ்சரி என்பனவும் இவ்வகை வெளியீடுகளில் ஒரு சில. viii. 948/1917/III.

C31,3

பொன்னம்பலம் பிள்ளை, எஸ்.

2188. i. இலங்கா தஹனம்: முதற் பதிப்பு; ii. பெ. ஆறுமுக முதலியார், சென்னை; முரஹரி அச்சுக்கூடம், சென்னை, iii. டிசம்பர், 1918; iv. செ.மூ.ப. 24; v. 21×14 செ.மீ.; vi. 0–2–0; vii. இராமாயணம் சுந்தர காண்டத்தில், அனுமன்

இலங்கையை எரிக்கின்ற நிகழ்ச்சியினை விளக்கிக் காவடிச்சிந்து வர்ணமெட்டில் இயற்றப்பட்டுள்ள பாடல்களைக் கொண்டது இப்புத்தகம். இதற்கு 'மாருதி விஜயம்' என்று ஒரு பெயருண்டு. கதைப்போக்கிற்கு ஏற்ற வகையில் தலைப்புகள் தரப்பட்டிருக்கின்றன. கீர்த்தனைகளுக்குரிய வர்ண மெட்டுகளும் அவ்வப் பாடல்களின் முதலிற் சேர்க்கப்பட்டுள்ளன. viii. 483/1919/I.

O31,3

2189. i. பொன்னூல்: திருத்திய இரண்டாம் பதிப்பு; ii. கிறிஸ்டியன் லிட்ரேச்சர் சொஸைட்டி, சென்னை; ஸி.எல்.எஸ். பிரஸ், சென்னை; iii. அக்டோபர், 1920; iv. உ.ப. 46; v. 18×13 செ.மீ.; vi. 0–3–0; vii. டாக்டர். நார்மன் மக்லியட் என்பவர் எழுதிய ஆங்கிலக் கதையின் மொழி பெயர்ப்பாகும் இக்கதை. இறைவன் மீதுள்ள பக்தியைப் பற்றி விளக்கமாகப் பேசப் படுகின்றது. viii. 685/1920/IV.

O31,3

2190. போலி ராஜ குமாரன்: திருத்திய பதிப்பு; ii. சி. குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ், சென்னை; காக்ஸ்டன் பிரஸ், சென்னை; iii. 1916; iv. உ.ப. 48; v. 19×13 செ.மீ.; vi. 0–1–6; vii. இரண்டு விநோதக் கதைகள் அடங்கியுள்ளன. இவை ஆங்கில மொழியினின்றும் மொழிபெயர்க்கப்பட்டனவாம். viii. 406/1916/I.

O31,3

மகாதேவ முதலியார், வா., சென்னை

2191. i. வானநிதி: முதற் பதிப்பு; ii. எம். ஆதி அண்டு கோ., சென்னை; சந்திராபிரஸ், சென்னை; iii. ஜூலை, 1920; iv. உ.ப. 210; v. 19×13 செ.மீ.; vi. 0–12–0; vii. ஒரு முதிய செல்வந்தர் சுய நலமற்ற காதலை நாடி, இறுதியில் ஒரு நாட்டுப்புறப் பெண்ணை அடைந்து, அவளிடம் தன் செல்வத்தின் பெரும் பகுதியை விட்டுச்சென்ற கதை இதில் அடங்கியுள்ளது. viii. 301/1920/III.

O31,3

மாசிலாமணி முதலியார், திருமயிலை

2192. i. பிரேதக் கொலை: முதற் பதிப்பு; ii. கிச்சினர் அச்சியந்திர சாலை, சென்னை; iii. 1916; iv. உ.ப. 162; v. 21×14 செ.மீ.; vi. 0–12–0; vii. இன்ஸ்பெக்டர் இராமநுஜ நாயுடு அல்லது பிரேதக்கொலை என்பது இதன் முழுப்பெயர்; 25 அத்தியாயங்கள் கொண்டது. viii. 968/1916/I.

O31,3

மாதவராய முதலியார், அ.ரா.

2193. i. இரத்னாங்கி அல்லது இரதிவிலாச மர்மம்; ii. எம்.எ. மாசிலாமணி முதலியார்; சுதேசமித்தரன் பவர் பிரஸ், சென்னை; iii. 1917; iv. உ.ப. 168; v. 18×12 செ.மீ.; vi. 0–8–0; vii. இது ஓர் ஆங்கிலக்கவிஞர் வெளியிட்ட நாவலைப் பின்பற்றி அமைந்தது. இது ஒரு துப்பறியும் நவீனம். இவர் எழுதிய மற்றொரு நாவல் மன்மத விலாச மர்மம் என்பதாம். viii. 259/1917/IV.

O31,3

2194. i. கனகரத்தினம் அல்லது கற்பைக் காத்தும் காதலனை இழந்த கன்னி: இரண்டாம் பதிப்பு; ii. என். முனிசாமி முதலியார், சென்னை; ஆனந்த போதினி அச்சுக்கூடம்; iii. செப்டெம்பர், 1920; iv. உ.ப. 155; v. 18×13 செ.மீ.; vi. 0–8–0; vii. தமிழ் நாட்டுப் பெண்களின் கறபின் பெருமையினைப் பற்றி இக்கதையில் நன்றாகப் பேசப்படுகின்றது. கற்பைக் காத்தும் காதலனை இழந்த கன்னியின் துன்பக் கதையினை இது விளக்குகின்றது. viii. 250/1920/IV.

O31,3

2195. i, மாயத்தாமரை; ii. வி. குமாரசாமி நாயுடு சன்ஸ், சென்னை; காக்ஸ்டன் பிரஸ், சென்னை; iii. 1916; iv. உ.ப. 56; v. 18×13 செ.மீ.; vi. 0–2–0; vii. இரண்டு இளவரசர்களின் கதை. அவர்களில் ஒருவன் தன் நடத்தையாலும் வீரத்தாலும் வாழ்வில் பேரும் புகழும் செல்வமும் பெறுகிறான். மற்றொருவன் தன்கெட்ட செய்கைகளினால் அழிகிறான். தேவதையின் சக்தியும் கதைக்கு உதவுகிறது. எட்டு அத்தியாயங்கள் கொண்டது இக்கதை. இரண்டு படங்களும் உள. viii. 303/1916/II.

O31,3

2196. i. மாயப் பொம்மை; ii. வி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ், சென்னை; காக்ஸ்டன் பிரஸ், சென்னை; iii. 1919; iv. உ.ப. 63; v. 18×13 செ.மீ.; vi. 0–2–0; vii. இதில், மாயப் பொம்மைக்காரன், கருங்கூளி, பொம்மைவிற்று வந்த பணம், முத்துச் செய்யப்போன காரியம், நல்ல ஆடைகள், மறுபடியும் மாயப்பொம்மை, போகிப்பண்டிகை, மண்ணும் கல்லும், கதையின் முடிவு என்ற ஒன்பது அத்தியாயங்களைக் கொண்ட ஓர் அழகிய கதை அடங்கியுள்ளது. viii. 56/1920/I.

O31,3

மிக்கேல் சுவாமியார், எம். ஜெ.

2197. i. உடைபடா முத்திரை அல்லது பாவசங்கீர்த்தனத்தின் மகிமை: நான்காம் பதிப்பு; ii. எ. ஆர். ஜான், சென்னை; நல்ல ஆயன் அச்சுக்கூடம், சென்னை; iii. ஜுலை, 1919;

iv. உ.ப. 277; v. 19×12 செ.மீ.; vi. 0–14–0; vii. இந் நூலில் ரோமன் கத்தோலிக்க சமயத்தைச் சார்ந்த கதை ஒன்று உள்ளது. 'பாவசங்கீர்த்தனத்தின் மகிமை'யை விளக்கி உரைக்கின்றது. 20 அதிகாரங்கள் கொண்டது இக்கதை நூல். viii. 299/1919/II.

O31,3

முத்துக்குமாரலிங்கம் பிள்ளை, எஸ்.

2198 i. சோமநாதன்: முதற்பதிப்பு; ii. எஸ். முத்துக்குமாரலிங்கம் பிள்ளை, திருநெல்வேலி; மாடர்ன் பிரிண்டிங் ஒர்க்ஸ், சென்னை; iii. ஜூன், 1917; iv. உ.ப. 76; v. 18×13 செ.மீ.; vi. 0–4–0; vii. இந்நூல் நீதிகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப் பெற்ற நவீனம். ஏழு அத்தியாயங்கள் கொண்டது. தூத்துக்குடி வக்கில் எஸ். சோமசுந்தர பாரதியார் இந்நூலுக்கு ஆங்கிலத்தில் முன்னுரை எழுதியுள்ளார். viii. 1023/1917/II.

O31,3

முத்துசாமி அய்யர், வே.

2199. i. பத்மினி: மூன்றும் பதிப்பு; ii. இ. மா. கோபால கிருஷ்ணக் கோன், மதுரை; எக்ஸெல்ஸியர் பிரஸ், மதுரை; iii. செப்டெம்பர், 1918; iv. உ.ப. 148; v. 18×13 செ.மீ.; vi. 0–12–0; vii. இது ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட கதையாகும். இந்திய தேச கலாச்சாரத்திற்கு ஏறபப் புனையப்பட்டது. இது அக்கால மக்களின் மனவுறுதி, ராஜபக்தி, செய்ந்நன்றியறிதல் முதலிய நீதிகளைத் தெரிவிக்கிறது. இதில் இடையிடையே வேண்டும் இடங்களில் பதியனவும் பழையனவுமான சில செய்யுட்களும் பொருத்தமாகச் சேர்க்கப் பெற்றிருக்கின்றன. இது 1916-ஆம் ஆண்டில் இண்டர்மீடி யட்டுக்குப் பாடமாகவும், 1920-ஆம் ஆண்டு பால போதக முறைத் தேர்வுக்குப்பாடமாகவும் வைக்கப்பட்டிருந்தது. உ.வே. சாமிநாதையர், கா. நமச்சிவாய முதலியார் ஆகியோர் இதற்குச் சிறப்புரை வழங்கியுள்ளார்கள். இந்து தேச சரித்திர சம்பந்தப்பட்ட ஓர் உண்மை வரலாறு. viii. 170/1919/I.

O31,3

முத்துசாமி அய்யர், வே. & சுப்பிரமணிய அய்யர், எ. கே.

2200 i. கதையும் பாட்டும்: முதற் பதிப்பு; ii. இ. மா. கோபால கிருஷ்ணக் கோனார், மதுரை; எக்ஸெல்சியர் பிரஸ், மதுரை; iii. ஆகஸ்ட் 1916; iv. உ.ப.+செ.மூ.ப. 50; v. 18×13 செ.மீ.; vi. 0–4–0; vii. ஆரம்பப்பள்ளிக்கூட மாணவ மாணவிகளுக் கான கதையும் பாட்டுக்களும் மிகவும் எளிய முறையில் எழுதப்பட்டுள்ள புத்தகமாகும். கதையை உரைநடையிலும்

செய்யுளிலும் படித்து மகிழும் வாய்ப்பு இதனால் ஏற்படுகிறது. வாழ்த்துப் பாடல்கள் சில முதற்கண் இடம்பெற்றுள்ளன. viii. 1046/1916/III.

O31,3

2201 i. கதையும் பாட்டும்: மூன்றாம் பதிப்பு; ii. இ. மா. கோபால கிருஷ்ணக் கோன், மதுரை; எக்ஸல்சியர் பிரஸ், மதுரை; iii. ஜனவரி, 1920; iv. உ.ப.+செ.மூ.ப. 63; v. 18×12 செ.மீ.; vi. 0-4-0; vii. ....; viii. 662/1920/I.

O31,3

முத்துநாடார், சூ. ஆ., அருப்புக்கோட்டை

2202 i. மஹாமாயன் அல்லது மனம் போல மாங்கல்யம் பெற்ற மங்களானந்தம்; ii. சூ.ஆ.முத்து நாடார், அருப்புக்கோட்டை; கார்டியன் பிரஸ், சென்னை; iii. மார்ச், 1919; iv. உ.ப. 107; v. 19×13 செ.மீ.; vi. 0-12-0; vii. உடுமலைச்சரபம் ஸ்ரீமான் முத்துச்சாமிக் கவிராயர், மணவை வெங்கடராம சாஸ்திரி முதலியோர் சாற்றுக்கவிகள் தந்துள்ளனர். இந்நவீனம் ஓர் அரச குடும்பத்தைப் பற்றியதாகும். உலக வாழ்வில் நேரும் பல நிகழ்ச்சிகளின் அடிப்படையில் பல உண்மைகளை உலகிற்குக் காட்டுகிறது. இதற்கு மதிப்புரை எழுதிய ச. சு. சங்கரலிங்க நாடார் என்பார் இதனை 'இல்லறப் பொக்கிஷம்' என்று போற்றுகின்றார். viii. 310/1919/II.

O31,3

முஹமது இஸ்மாயில் சாஹெப்—(மொ. து.)

2203. i. ஆாயஷ் மஹபில் என்னும் ஹாத்திம் - தையுடைய கிஸ்ஸா: திருத்திய ஐந்தாம் பதிப்பு; ii. ஹக்கீம் குலாம் முஹையத்தீன் சாஹெப், சென்னை; பிரசிடென்சி அச்சியந்திர சாலை, சென்னை; iii. நவம்பர், 1916; iv. உ.ப. 454; v. 21×14 செ.மீ.; vi. 1-0-0; vii. எமன் நாட்டு அரபு மன்னனாகிய ஆதிம் தாய் என்பவன்செய்த சிறந்த, தன்னலமற்ற அறச்செயல்களைப் பற்றிய கதையே இந்நூல். அரபு மொழியிலிருந்து பார்சி, உருது ஆகிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இத்தமிழாக்கம் உருது மொழியிலிருந்து செய்யப் பெற்றது. viii. 277/1917/I.

O31, 3

முஹம்மது யூசுபு லெப்பை, வா.மு., கோட்டாறு

2204. i. மான் கதை வசனம் என்னும் மான் ஈமான் கொண்ட கிஸ்ஸா: முதற் பதிப்பு; ii. வா.மு. முகமது யூசுப் லெப்பை, கோட்டாறு; அமெரிக்கன் டைமண்ட் பிரஸ், சென்னை; iii. செப்டம்பர், 1917; iv. உ.ப. 40; v. 22×14 செ.மீ.;

vi. 0–5–0 ; vii. முஸ்லீம் பெரியாரான முகமதுவுக்கும் ஒரு மானுக்கும் இடையே ஏற்பட்ட கதையை இந்நூல் கொண்டுள்ளது. முருகேச நாயகரவர்கள், ஷண்முகானந்த சுவாமிகள் முதலியோர் இதற்குச் சாற்றுக் கவிகள் பாடியுள்ளனர். viii. 248/1917/IV.

O31,3

மூர்த்தி முதலியார், ச. தா.

2205. i. நீல அறையின் அதிசயம் அல்லது காணமற் போன மாணிக்கம்: முதற் பதிப்பு ; ii. நவீன கதை புக் டிப்போ, ரங்கூன், சென்னை ; கணேச அச்சுக்கூடம், சென்னை ; iii. செப்டம்பர், 1917 ; iv. உ.ப. 92 ; v. 19×13 செ.மீ. ; vi. 0–6–0 ; vii. இது ஒரு துப்பறியும் புதினம். பிறர் பழக்க வழக்கத்தை ஆராய்ச்சியின்றிப் பின்பற்றுவதனைக் கண்டித்து ஒரு பிரசங்கத்தைக் கதையுள் புகுத்தியுள்ளார். நவீன கதைகளின் மூலம் சிறந்த போதனைகளை உணர்த்த வேண்டும் என்கிறார். இந்நூலாசிரியர் எழுதிய பிற நூல்களாவன: அம்பிகாபதி, நாகரத்தினம் அல்லது விஷக் குண்டூசி, சிவகாமி அல்லது தப்பியோடின பெண், தியாகராஜன், கூடாவொழுக்கச் சகோதரன் என்பனவாம். viii. 14/1917/IV.

O31,3

2206. i. மூராது என்னும் துர்ப்பாக்கியசாலியின் சரித்திரம் திருத்திய பதிப்பு; வி. குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ், சென்னை; காக்ஸ்டன் பிரஸ், சென்னை ; iii. 1919 ; iv. உ.ப. 63 ; v. 18×13 செ.மீ. ; vi. 0–2–0 ; vii. இதில் நான்கு அத்தியாயங்களைக் கொண்ட கதையொன்றுண்டு. "அசட்டுத்தனம் எப்பொழுதும் அல்லலுக்கு இடம் கொடுக்கும்" என்பது போன்ற சில உண்மைகளை விளக்கும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது. viii. 1008/1920/I.

O31,3

2207. i. மூன்று குமாரர்கள், அஞ்சா நெஞ்சன் பொறுமையுள்ள சகோதரர்கள் ; வி. குமாரசாமி நாயுடு அண்டு ஸன்ஸ், சென்னை ; காக்ஸ்டன் பிரஸ், சென்னை; iii. ஜூலை, 1917 ; iv. உ. ப. 32 ; v. 18×13 செ.மீ. ; vi. 0–1–0 ; vii. இது மூன்று கதைகளைக் கொண்ட சிறு தொகுப்பு நூல். சிறுவர்களுக் கேற்றது. சிறுவர்களுக்கான விநோதக் கதைகள் வரிசையில் இது இரண்டாவது. viii. 854/1917/II.

O31,3

மைக்கேல், எம். ஜே.

2208. i. ஞானமணி—முதற் பாகம்: முதற் பதிப்பு ; ii. ஜான் ஐயர், சென்னை ; நல்ல ஆயன் அச்சுக்கூடம், சென்னை ; iii. ஜனவரி, 1918 ; iv. உ.ப. 42 ; v. 18×13 செ.மீ. ; vi. 0–4–0 ; vii. மதக்கொடுமையினால் விளைந்த துன்ப

நிகழ்ச்சிகளை விளக்கும் ஒரு கிருத்துவக் கதையாகும் இது. முதல் பாகம் மட்டும் இதில் உள்ளது. ரோமன் கத்தோலிக்கர், புரொடெஸ்டண்டுகள் ஆகியோரின் வழிபாட்டு முறை, மதப்பிரச்சாரம் பற்றிய செயல்களை விவரிப்பது. நூலிறுதியில் ரோமன் கத்தோலிக்க மதச்சார்புடைய சில நூல்களைப் பற்றிய விவரங்கள் உள. viii. 186/1919/I.

O31,3

ரங்கராஜா, ஜே. ஆர்.

2209. i. ஆநந்த கிருஷ்ணன்: நான்காம் பதிப்பு; ii. ஜே. ஆர். ரங்கராஜா, சென்னை; ஜஸ்டிஸ் பிரிண்டிங் பிரஸ், சென்னை; iii. டிசம்பர், 1917; iv. உ.ப. 172; v. 21×14 செ.மீ.; vi. 0–12–0; vii. இது கெட்ட எண்ணம் கொண்டுள்ள ஒரு பெண்ணின் நடவடிக்கைகளைப் பற்றிய ஒரு துப்பு அறியும் இனிய தமிழ்ப் புதினம். இல்லற வாழ்க்கைக்கு வேண்டிய அறவொழுக்கங்கள் பற்றியும், குறிப்பாக மகளிர்க்குரிய பண்பு நலன்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளன. மூன்று படங்கள் இப்புத்தகத்தில் வரும் முக்கிய நிகழ்ச்சிகளைச் சுட்டிக் காட்டுகின்றன. இவ்வாசிரியரால் எழுதப்பட்ட வேறு புதினங்கள்: சந்திரகாந்தா, மோஹன சுந்தரம் முதலியன. viii. 334/1918/IV.

O31,3

2210. i. ஆநந்த கிருஷ்ணன்: திருத்திய ஐந்தாம் பதிப்பு; ii. டிரஸ்டீஸ், ரங்கராஜூ நாவல் அக்கௌண்ட் பண்டு, சென்னை; கார்டியன் பிரஸ், சென்னை; iii. 1919; iv.....; v......; vi...... ;vii......; viii. 309/1919/II.

O31,3

2211. i. இராஜேந்திரன்: மூன்றும் பதிப்பு; ii. ரங்கராஜூ அண்டு பிரதர்ஸ், சென்னை; கார்டியன் பிரஸ், சென்னை; iii. ஜூன், 1920; iv. உ.ப. 216; v. 22×14 செ.மீ.; vi. 1–0–0; vii. இது ஒரு துப்பறியும் நாவல். வரதட்சணையின் கொடுமையால் பெண்கள் எவ்வாறு தம் கற்பையும் பறிகொடுக்க நேரிடுகின்றது என்பது மிகவும் தெளிவாக இந்நூலில் கூறப்பட்டுள்ளது. viii. 408/1920/III.

O31,3

2212. i. மோஹன சுந்தரம்: எட்டாம் பதிப்பு; ii. ரங்கராஜாவின் நாவல் கணக்கு பண்டின் டிரஸ்டிகள்; கார்டியன் பிரஸ், சென்னை; iii. செப்டம்பர், 1920; iv. உ.ப. 168; v. 22×14 செ.மீ.; vi. 0–12–0; vii. இது ஒரு துப்பறியும் இனிய தமிழ்ப் புதினம். மூன்று படங்களுடன் கூடியது. viii. 366/1920/IV.

O31,3

2213. i. ரஞ்சித்சிங் ; ii. வி. குமாரசுவாமி நாயுடு அண்டு சன்ஸ், சென்னை ; காக்ஸ்டன் பிரஸ், சென்னை ; iii. 1914 ; iv. உ.ப. 238 ; v. 18×13 செ.மீ. ; vi. 0–10–0 ; vii. கொள்ளைக் கூட்டத்தையொழித்த ஒரு வீரனின் தீரச்செயலை விளக்குவது. இப்பதிப்பகத்தார் வெளியிட்டுள்ள தமிழ் நவீன கதைகளின் பட்டியல் ஒன்று நூலிறுதியில் சேர்க்கப்பட்டிருக்கிறது. viii. 842/1916/I.

O31,3

ரவீந்திரநாதர்

2214. i. ரவீந்திரநாதர் சிறுகதைகள் : முதற் பதிப்பு; ii. சி. குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ், சென்னை; காக்ஸ்டன் பிரஸ், சென்னை; iii. பிப்ரவரி 1919; iv. உ.ப. 48; v. 19×13 செ.மீ; vi. 0–4–0; vii. வங்கக் கவிஞன் தாகூர் எழுதிய கதையின் மொழிபெயர்ப்பாகும் இந்நூல். தாகூர் அவர்களின் நிழற்படம் இதில் உண்டு. வங்க மூலத்திலிருந்து தமிழில் இதனை மொழிபெயர்த்தவர் ரா. ராஜசூடாமணியாவர். 'கண் பார்வை' என்னும் கதைமட்டும் இதில் உளது. தாகூரின் வரலாறும் பிற சிறப்புக்களும் குறித்து மொழிபெயர்ப்பாசிரியர் முகவுரையில் விளக்கியுள்ளார். viii. 1054/1919/I.

O31,3

ராகவாசாரி, ஆர்.

2215. i. விஜயபாலன் : முதற் பதிப்பு ; ii. ஆர். ராகவாசாரி, தஞ்சாவூர் ; வர்த்தக மித்திரன் பிரஸ், தஞ்சாவூர் ; iii. டிசம்பர், 1917 ; iv. உ. ப. 112 ; v. 16×12 செ. மீ. ; vi. 0—6—0 ; vii. குடும்பத்தில் அன்றாடம் நடக்கும் தொல்லைகளைக் கூறி பொதுவான முன்னேற்றத்திற்கு அவசியமான கல்வியின் சிறப்பையும் குறிப்பிடுகிறது இப் புதினம். viii. 251/1918/I.

O31,3

ராமச்சந்திரன், பி.

2216. i. ராஜபுத்திர ரத்தினம் ; முதற் பதிப்பு ; ii. வி. சூ. நடராஜன், மதுரை ; எக்ஸெல்சியர் பிரஸ், மதுரை ; iii. செப்டம்பர், 1919 ; iv. உ. ப. 55 ; v. 16×11 செ. மீ.; vi. 0—5—0 ; vii. பிருதிவிராஜனுக்கும் சம்யுக்தைக்கும் ஏற்பட்ட காதல் நிகழ்ச்சியினை விவரிக்கின்ற கதையாகும் இது. சரித்திர நிகழ்ச்சிகளும் இக்கதையில் இடம் பெறுகின்றன. கும்பகோணம் கல்வி இலாகா துணை ஆய்வாளராக இருந்த வே. முத்துச்சாமி அய்யர், எம். ஏ., எல்.டி. அவர்கள் அளித்துள்ள அணிந்துரையுடன் கூடியது. பரிதிமாற் கலைஞனின் பரிசீலனை பெற்றது இந்நூல். viii.3 51/1919/IV.

O31,3

ராமசுவாமி ஐயர், வி. எஸ்.

2217. i. ஆங்கில மாயா விநோதக் கதைகள் ; ii. வி. குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ், சென்னை ; காக்ஸ்டன் பிரஸ், சென்னை; iii. 1917 ; உ. ப. 116 ; v. 18×13 செ. மீ. ; vi 0—6—0 ; vii. குழந்தைகள் பொருட்டாக எழுதப்பெற்ற மாயா விநோதக் கதைகளின் தொகுதி. ஏழு கதைகள் இதில் உள. ஒரு சில படங்களும் இடம் பெற்றுள்ளன. இந் நூல் போலவே 'இந்திய மாயா விநோதக் கதைகளையும்' இவ்வாசிரியர் முன்பே எழுதி வெளியிட்டிருக்கிறார் என்று தெரிகிறது. viii. 877/1917/III.

O31,3

2218. i. பெர்டிட்டா : முதற் பதிப்பு ; ii. சி. எஸ். ராமசுவாமி ஐயர் சென்னை; கம்மர்ஷியல் பிரஸ், சென்னை; iii. ஜுன், 1917; iv. உ.ப, 31; v. 18×13 செ.மீ.; vi. 0-2-0; vii. ஓர் ஆங் கிலக் கதையின் தமிழாக்கமே இந்நூல். இடையிடையே படவிளக்கங்கள் உண்டு. 'பெர்டிட்டா அல்லது காணமற்போன அரச குமாரத்தியின் கதை' என்பது இதன் முழுப் பெயர். viii. 586/1917/III.

O31,3

ராமஸ்வாமி அய்யர், கே. ஜி.

2219. i. கோபாலன் : முதற் பதிப்பு; ii. ஸ்ரீவாணீபூஷணம் அச்சுக்கூடம், சென்னை; iii. மே, 1918; iv. உ.ப. 103; v. 18×13 செ. மீ. ; vi. 0—8—0 ; vii. இருபத்திரண்டு அத்தியா யங்களைக் கொண்ட ஓர் இனிய துப்பறியும் புதினம் இது. 232/1918/III.

O31,3

ராமாநுஜம், என்.. திருவையாறு

2220. i. ஜெகன் மோஹன ஜானகிராம் ; ii. இரத்தின முதலி யார் அண்டு ஸன், திருப்பதி ; கலைக்கியானம் பிரஸ், சென்னை ; iii. 1915 ; iv. உ. ப. 71 ; v. 18×11 செ. மீ. vi. 0—5—0 ; vii. பிரிந்த காதலர்களின் துன்ப நிலையைப் பற்றி விளக்குவது. பதினைந்து அத்தியாயங்கள் கொண்டது. உரையாடல்களும் இரண்டோர் இடங்களில் பொருத்தமான பாடல்களும் இதில் கலந்து வருகின்றன. பேச்சு வழக்கான எளிய நடையில் அமைந்த நூல். viii. 260/1916/I.

O31,3

ராஜகோபால ஐயங்கார், வி.

2221. i. உத்தம சேவகன் : முதற் பதிப்பு ; ii சி. குமார சாமி நாயுடு அண்டு சன்ஸ், சென்னை ; காக்ஸ்டன் பிரஸ், சென்னை ; iii மார்ச், 1917 ; iv. உ. ப. 47 ; v. 18×13 செ. மீ.; vi. 0—2—6 ; vii. உத்தம சேவகன்

ஒருவனின் வரலாறு இதன்கண் கூறப்படுகிறது. பன்னிரண்டு அத்தியாயங்களைத் தன்பால் கொண்டது. சிறுவர்களுக்காக இப்பதிப்பகத்தார் வெளியிட்ட ஓரணா வாசக வரிசை. நீதி கதா மாலை, விநோதக் கதைகள் ஆகியவற்றில் வெளிவந்த நூல் விவரங்களும் தெரியவருகின்றன. viii. 479/1918/II.

O31,3

2222. i செங்கைவளவன்; ii. வி. குமாரசாமி நாயுடு அண்டு ஸன்ஸ், சென்னை; காக்ஸ்டன் பிரஸ், சென்னை; iii. 1917; iv. உ. ப. 40; v.18×13 செ. மீ.; vi 0—1—6; vii. சிறுவரும் கற்பதற்குத் தகுந்தபடி எழுதப் பெற்ற புதினம். 'முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்' என்னும் உண்மையை எடுத்துக் காட்டுவது; பதினோர் அத்தியாயங்களில் இக்கதை அமைந்துள்ளது. 'பால பக்ஷணீயம்' என்னும் தொடர் வெளியீட்டில் இது பதினொன்றுவது. viii. 876/1917/III.

O31,3

2223. i. தங்க மோதிரம்; முதற் பதிப்பு; ii. வி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ், சென்னை; காக்ஸ்டன் பிரஸ், சென்னை; iii. ஆகஸ்ட், 1920; iv. உ. ப. 48; v. 19×13 செ.மீ.; vi. 0—2—6. vii. இதில் பள்ளி மாணவர்களுக்கான கதையொன்று உள்ளது. படவிளக்கங்களுடன் கூடியது. 'சிறுர் கதாமாலை' வரிசையில் இது இரண்டாம் புத்தகம். viii. 938/1920/III.

O31,3

2224. i. பொன் ஆடு: முதற் பதிப்பு; ii. வி. குமாரசுவாமி நாயுடு அண்டு சன்ஸ், சென்னை; காக்ஸ்டன் பிரஸ், சென்னை; iii. ஜனவரி, 1917; iv. உ. ப. 48; v. 19×13 செ. மீ.; vi. 0—1—6; vii. சுவையான கற்பனைக் கதை ஒன்றினைக் கொண்டது இந்நூல். 10 அத்தியாயங்கள் அமைந்துள. கதை நிகழ்ச்சிகளை விளக்கும் படங்களும் உள. இந்நூல் கதைக்கொடி வரிசையில் முதல் மலரின் முதல் இதழ் ஆகும். viii. 459/1917/I.

O31,3

2225. i. மந்திரமணி: முதற் பதிப்பு; ii. வி. குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ், சென்னை; காக்ஸ்டன் பிரஸ், சென்னை; iii. ஜனவரி, 1920; iv. உ. ப. 40; v. 18×13 செ. மீ.; vi. 0—2—0; vii. சிறுவர் தம் விருப்புக் கேற்றபடி கதைகள் அமைவது இன்றியமையாததாதலின் அதன்படி இச்சிறுர் கதாமாலை எழுதப்பெற்றுள்ளது. இது 'சிறுவர் கதாமாலை' என்னும் தொடர்வரிசை வெளியீட்டில் முதற் புத்தகமாகும். viii. 816/1920/I.

O31,3

2226. i. மல்லிகா என்ற மதன மனோஹரி: திருத்திய பதிப்பு; ii. வி. குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ், சென்னை; காக்ஸ்டன் பிரஸ், சென்னை; iii. 1916; iv. உ. ப. 40; v. 18×13 செ. மீ.; vi. 0—2—0; vii. இச்சிறுபுதினம் கிரேக்க மொழி நூலிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. கிரேக்கக் கதையை ஒரு சில மாறுதல்களுடன் தழுவி இத்தமிழாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. viii. 306/1916/II.

O31,3

2227. i. ஜயவீரன்: முதற்பதிப்பு; ii. எம். ஆதி அண்டு கம்பெனி, சென்னை; சந்திரா பிரஸ், சென்னை; iii. ஆகஸ்ட், 1916; iv. உ.ப. 46; v. 18×12 செ.மீ.; vi. 0—2—0; vii. நல்ல உள்ளத்திற்கு எப்பொழுதும் நன்மையே என்றும் கெடுவான் கேடு நினைப்பான் என்றும் கூறப்படுகின்ற நீதி மொழிகளை அடிப்படையாகக் கொண்ட கதைகளடங்கியது இந் நூல். பத்து அத்தியாயங்கள் கொண்டது. viii. 1241/1916/III.

O31,3

2228. i. ஸூக்ஷ்ம தரிசி: திருத்திய பதிப்பு; ii. வி. குமாரசாமி நாயுடு சன்ஸ், சென்னை; காக்ஸ்டன் பிரஸ், சென்னை; iii. 1916; iv. உ.ப. 70; v. 18×13 செ.மீ.; vi. 0—4—0; vii. தம்மிடத்திற்கு வரும் இருதிறத்து வழக்காளிகளும் மகிழத் தீர்ப்பளித்து வந்த "மரியாதை ராமன்" என்னும் நீதிபதியைப் பற்றிய கதை. ராமனது இளமைப் பருவத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் ஐந்தும், அவனது காளைப் பருவ நிகழ்ச்சிகள் 33-ம் ஆக 38 கதை நிகழ்ச்சிகள் இதில் உள. ஒவ்வொரு கதையின் தொடக்கத்திலும் அக்கதை உணர்த்தும் உண்மையைக் காட்டும் நீதி மொழிகள் தரப்பட்டுள்ளன. viii. 307/1916/II.

O31,3

ராஜம், எம். கே.

2229. i. ஜீவ காந்தாமணி: முதற்பதிப்பு; ii. வெங்கடாசலம் அண்டு கம்பெனி, சென்னை; கே. ஆர். பிரஸ், சென்னை; iii. அக்டோபர், 1917; iv. உ.ப. 88; v. 21×14 செ.மீ.; vi. 0—8—0; vii. இது ஒரு துப்பறியும் புதினம். 19 அதிகாரங்கள் கொண்டது. நடை மிகவும் விறுவிறுப்பாக இருக்கின்றது. 'ஜீவ காந்தாமணி அல்லது மைந்தரின் காட்சி' என்பது இந்நூலின் முழுப் பெயர். viii. 723/1917/IV.

O31,3

ராஜம்மாள் ராஜப்பன்

2230. i. மங்களேஸ்வரி: முதற்பதிப்பு; ii. இராஜம்மாள் இராஜப்பன், முகவை; எஸ். பி. ஜி. மிஷன் பிரஸ், ராமநாதபுரம்; iii. மே, 1918; iv. உ.ப. 111; v. 21×14 செ.மீ.; vi.

0—8—0; vii. நாகரிகம் முன்னேற்றமாகியும் பரம்பரை வழக்கங்கள் ஒழிக்கப்படவில்லை என்பதைப் பற்றியும், திருமணம் செய்கையில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைக் கலந்து ஆலோசிக்க வேண்டும் என்பதைப் பற்றியும் ஆசிரியர் நன்கு விளக்கியுள்ளார். இது 18 அத்தியாயங்களைக் கொண்டது. viii. 893/1918/IV.

O31,3

ராஜா சாஸ்திரியார், எஸ்.

